உ

பரமபதி துணை.

பதினெண்சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

பெரிய

ஞானக்கோவை.

மூன்றாம்பாகம்.

இஃது

பக்திவான்களுக்கும், ஞானவான்களுக்கும்,

உபயோக மாகும்பொருட்டு

பற்பல ஏட்டுப்பிரதி, சில அச்சுப்பிரதிகளில்

இருந்தவற்றை ஒன்றாகச் சேர்க்கப்பட்டு,

கே. பி. சிங்காரவேலு முதலியார்

அவர்களால்,

சென்னை சூளை

ஸன் ஆப் இந்தியா பிரேஸ்ஸிற்

பதிப்பிக்கப்பட்டது.

1907

காபிரயிட் ரிஜிஸ்டர்.

உ

பரமபதிதுணை.

—*—

சுப்பிரமணியர் ஞானம் - ருா.

காப்பு விருத்தம்.

பூரணமாய் நிறைந்தபரா பரத்தின்பாதம்
 போற்றியே சுழிமுனையிற் புகுந்துகொண்டு
காரணமாந் தேவியுட வமுதங்கொண்டு
 கங்குல்ரவி தனையறுத்துக் கருணை பெற்று
மாரணமகந் தீட்சைபத்து வகைகள் கண்டு
 மருவியேமுப்பாழுங் கடந்தேயேறி
வாரணமா மூலத்திற் கணேசன்றன்னை
 வணங்கியே யிந்நூலை வழுத்துவோமே. க

நூல்வரலாறு.

வழுற்துகிறே னிந்நூலை மனதிரங்கி
 வையகத்தோர் சித்தரெல்லாம் பிழைக்கவென்று
அழுத்தமுட னிந்நூலை மக்காள்மக்காள்
 அடிதொடுத்து முனிவரைக்கு மாராய்ந்தேபார்
பழுத்தமலைச் சாயையிலே பதுங்கியேறிப்
 பராபரத்தி னடியினுட வட்டம்பார்த்துக்
கொழுத்தியே பானமதைப் பானஞ்செய்து
 குவலயத்தில் வாதமொடு வயித்யம்பாரே. உ

பாரப்பா அஷ்டகர்ம வசியமாற்றம்
 பரிவான அஞ்சனமுந் திலதப்போக்கும்
ஆரப்பா வகாரமொடு வயித்யந்தானும்
 அடங்காத தேகசித்தி கெவுனமார்க்கம்

நேரப்பா யோகமொடு ஞானந்தானும்
நிலையான நிருவிகற்ப சமாதிமார்க்கம்
சேரப்பா இதுவெல்லாம் வெளியாய்மைந்தா
செப்புகிறே னிந்தவகைதெளிவுதானே. ௩

தானென்ற வழியறியா னிடமுங்காணான்
தானுயிரைத் தானென்று போற்றமாட்டான்
வானென்று பொழியுமந்த வமுதம்சாரான்
வாடாத மணிவிளக்கை யறியமாட்டான்
தேனென்ற திரையேழை யறுக்கமாட்டான்
தேகசித்தி மாயசித்தி செய்யமாட்டான்
கோனென்ற குருபாத மடிக்கமாட்டான்
கூறுவான் வாய்ப்பேச்சால் ஞானந்தாமே. ௪

தாமடா வாய்ஞானம் பேசிப்பேசிச்
சாவதற்குக் கல்வியெல்லா மறிந்தேனென்பான்
காமடா காமப்பேய் பிடித்துக்கொண்டு
கருத்தழிந்து போவதல்லாற் கருவைப்பாரான்
ஓமடா வுடலிறந்து போவதல்லால்
உண்மையென்று தானறியா னுறுதிபாரான்
வாமடா வெறிநீரைக் குடித்துப்பாவி
வகைகேட்டு அலையாமல் வகைதான்கேளே. ௫

கேளடா சரிதையொடு கிரிகையோகம்
கிருபையுடன் ஞானமெல்லாம் வெளியாய்ப்பாடி
வாழடா வாழ்வதற்கு வகையுங்காட்டி
வாடாத நீபமதை யறிந்தே யேற்றித்
தேளடா தேட்கொடுக்காங் குலதெய்வந்தான்
சீவநிலை சிவநிலையு மதுவேயாகிக்
கோளடா வசுரர்களைக் குலைத்துவிட்டேன்
குவலயத்தில் வாசிமயி லேறித்தானே. ௬

தானென்ற மூலமதைச் சாற்றக்கேளு
சந்திரன்றன் மண்டலத்துக் கடுக்கவேறிக்
கோனென்ற பச்சைநிற வழியுமாகிக்
குருவான பஞ்சகர்த்தா மாயைதோன்ற
வானென்ற வானிலொரு இடியுங்காற்றும்
வந்ததடா தந்தையுடன் விந்துமாகிக்
கோனென்ற பாசமொடு பார்வைதிஷ்டி
கொடுத்தவனும் மூலக்குண் டலியம்பாரே. எ

பாரப்பா குண்டலியும் வேறேயென்பான்
பதிவான சுழிமுனையை யறியமாட்டான்
ஆரப்பா பூரணகுண் டலியாமென்றும்
அண்டமென்றும் பிண்டமென்று மறியமாட்டான்
நேரப்பா பூரணமாங் கலைநாலாகி
நிஷ்டையொடு சமாதியுநிஷ் களமுமாகிக்
காரப்பா வமுதமதை யுண்டுதேறிக்
கருத்துடனே சிவயோகங் கண்டுகொள்ளே. அ

கொள்ளடா சுழினையிலே மனக்கண்ணூட்டிக்
கோளான கருவிகளைக் கூர்ந்தேதள்ளி
அள்ளடா அங்கெனடிப் படையைக்கட்டி
ஆதாரம் ஆறுமே யேகமென்று
நள்ளடா சுழிக்காற்றி லலைந்திடாமல்
நாற்பத்து முக்கோண நடுவேசென்று
விள்ளடா வில்விசையி லுண்டையேற்றி
வெற்றிமயி லேறிவிளை யாடுவாயே. கூ

விளையாடப் பூரணத்தை யறியச்சொன்னேன்
வீணான மாயைகளை மறக்கச்சொன்னேன்
குலையான குலதெய்வ மறியச்சொன்னேன்
குண்டலியாம் வட்டமதன் கூறுஞ்சொன்னேன்

மலையாமல் வெறுவாயை மென்றிடாமல்
மனதுறுதி யாகவும்நீ கெவனம்வைத்துக்
கலையான பூரணத்திற் கலந்துநீயுங்
காவலர்க ளவரையுமொன்றுய்ச்சேரே. ௰

சேரடா [illegible]னமென்ற வூமைமூலஞ்
செகத்தோர்க ளறியாம லிருந்துபோனார்
ஆரடா வூமைதனை யறிந்தாற்றேகம்
அழியாது நீடூழி காலமட்டும்
நேரடா நின்றநிலை மவுனந்தன்னை
நீங்காம லிம்மென்ற நிலையிற்சாற்றிப்
பாரடா வனுதினமும் விடாமல்நின்று
பராபரமாங் குலதெய்வந் தன்னைப்பாரே. கக

பாரப்பா இம்மென்ற மவுனத்தாலே
பல்லாயி ரங்களண்டம் படைக்கலாச்சு
ஆரப்பா நவசித்த ரதுதானச்சு
அருளான மறைநான்கு மதற்குள்ளாச்சு
நேரப்பா நிஷ்டையொடு சமாதியாச்சு
நீணிலத்தி லுயிர்களெல்லா மதனுலாச்சு
மேரப்பா மேருவென்று மதற்குப்பேராம்
விஞ்சையென்றும் ஞானமென்று மதற்குப்பேரே ()

பேரான வீசனுக்கு இதுதான்சொல்லிப்
பேசாத வெழுத்தினுட வகையுங்காட்டிச்
சீரான ஆறுவரை வீடுங்காட்டித்
தேவிபரா சத்தியுட மகிமைகாட்டிக்
காரான அஷ்டாங்க முடிவுஞ்சொல்லிக்
கலந்தெழுந்த யாகாதி முடிவுங்காட்டி
நேரான குலதெய்வ மிதுதானென்று
நின்றநினுற் சிவன்றனும் நிலைத்தார்பாரே. கங

பாரப்பா சிவன்றனு மதுதான்கண்டு
 பன்னிருகை வேலனென்றே பகர்ந்தார்நாமம்
ஆரப்பா அறிந்துசிவ சத்திபென்று
 அருளான குமாரனென்றே அழைத்துத்தானும்
நேரப்பா திருமுலைப்பா லமுதமூட்டி
 நீங்காத நிஷ்டையிலே யிருத்திவைத்தாள்
ஏரப்பா வுழுதால்வெள் ளாண்மையாகும்
 ஏரில்லா னறுத்தடித்த தன்மைதானே. கச

தன்மையுள்ள குலையல்லோ தெல்வமாகிச்
 சகலருக்குஞ் சிவனுயி ரதுதான்மைந்தா
உண்மையா தாரமெழுத் தாறுமாகி
 யுதயகிரி பருவதத்தி லொடுங்கிவாழ்ந்து
நன்மையுடன் பாழ்வீடு சுடுகாடாகி
 நானென்றும் நீயென்றும் நாவுண்டாகி
அம்மைசிவ காமிசிலம் பொலியுங்கேட்கும்
 அத்தலத்திற் றெரிசனைக ளநேகம்பாரே. கரு

பாரப்பா சதகோடி ரவிபோல்வீசும்
 பனிரண்டு கலமுமங்கே பாய்ந்துகாணும்
ஆரப்பா அயனோடு மாலுங்காணும்
 அழகான சதாசிவன்ருத் திரனுமங்கே
நேரப்பா மயேஸ்வரத்தின் கூருமங்கே
 நிலையான கணேசனுட பீஜமங்கே
தேரப்பா நினைப்போடு மறைப்புமங்கே
 தேறாத கருவியங்கே தெளிந்துகாணே. கசு

காணடா வழலையென்ற முப்பூவங்கே
 கலந்தெழுந்த வெங்காயக் கருவுமங்கே
தானடா அஞ்சனத்தின் நிலையுமங்கே
 தாரணையுஞ் சாரணையுஞ் சமாதுமங்கே

ஊணடா நீட்சைபத்து முடிவுமங்கே
 முருமித்து வுடலுயிருந் தரிப்பதெங்கே
கோணடா குருபாதங் காண்பதெங்கே
 கூருவேன் பேசாத வெழுத்தாய்ப் போச்சே. கஎ

போச்சடா ஆறுதலம் வேறிதென்று
 புகுந்தெழுந்த மூலமதைப் பார்ப்பார்கோடி
ஆச்சடா மால்வீடு பிரமன்வீடு
 அப்புறந்தான் ருத்திரன்வீ டென்பான்பாவி
வாச்சடா மகேஸ்சதா சிவன்றனென்று
 வாதாடித் திரிவர்பல வண்டர்கோடி
காச்சடா லாடஞ்சாம் பவிதானென்றுங்
 கண்மூக்கு மத்தியென்று மலைவான்றனே. கஅ

தானென்று மிதுவென்று மலைந்துசெத்துச்
 சாகாம லுறைகின்ற தலமுங்காணன்
வானென்றும் முடிவென்றுங் கால்தானென்றும்
 மணிபூரந் தனையறிந்து வணங்கமாட்டான்
தோனென்றுற் றேரூது மனம்வேறுகச்
 சுடுபொட்ட விடுகாடு சுவறிப்போகுங்
கோனென்றும் ஆறுபடை வீடாமென்றுங்
 கூறியே யசுரர்களைக் கொன்றேன்பாரே. கசு

பாரப்பா அறுபத்து நான்குயோகம்
 பார்தனிலே வீணாக வளர்ந்துபார்த்து
ஆரப்பா ராஜாங்க யோகந்தன்னை
 யறியாம லலைந்தவர்க ளனந்தங்கோடி
நேரப்பா நின்றநிலை கண்டுமைந்தா
 நினைவிருத்தித் தவசுபண்ணி நிலையைப்பார்த்து
வேரப்பா எழுத்துகளைச் சேர்த்துச்சேர்த்து
 விண்ணெண்று மண்ணெண்று மறந்திடாயே. உ0

மறந்திடா திருந்திடவே யெழுத்தைச்சொல்வேன்
மனமல்லோ மனோன்மணியம் மணியைப்போற்றி
இறந்திடா திருந்திடரீங் காரந்தன்னை
யீஸ்வரியாள் பீடமென்று நிலையிற்சாற்றப்
பறந்திடாக் குருவிகளும் பொசுங்கிப்போகும்
பாரடா 'அஞ்செழுத்தின் பயனைமைந்தா
நிறந்திடாச் சிம்மொன்று நினையாயொட்டி
நீங்காமல் நம்மென்றே நினைவிற்றுக்கே. ௨௧

தாக்கவே மகாரமல்லோ மவுனமாகுந்
தயங்காம லனுதினமும் நினைவாய்ப்போற்றி
வாக்கினாற் சொல்லாதே வம்மென்றேதான்
வைத்திவொ யொருநிலையாய் வணங்கிமைந்தா
தாக்கியே யம்மன்றே யூதியாகச்
சாற்றுமஞ் செழுத்தைத்தா ரணையேசெய்து
நாக்கினாற் சொல்லவுந்தான் கூடாதப்பா
நாதாக்கள் சாபமுந்தான் சபித்திட்டாரே. ௨௨

சபித்திட்ட சாபமதை நிவர்த்திசெய்து
சந்திரபுஷ் கரணியெனுஞ் சார்பிற்சென்று
அவித்திடாத் தீபமனு தினமுமேற்றி
அங்கென்றுஞ் சிங்கென்று மறிந்தேபோற்றிக்
குவித்திடவே உங்கென்றுங் கூடச்சேர்த்துக்
குண்டலியர்ம் நந்திவட்டக் குறியிற்சென்று
தவித்திடா மூன்றெழுத்துந் தன்னைக்கண்டேன்
தந்திமுக னுக்கிளைய சாமிநானே, ௨௩

நானாகி நீயாகி யேகமாகி
நல்வினையுந் தீவினையுங் கடந்துமைந்தா
தானாகி மூன்றெழுத்து வாலைவிஞ்சை
தவறாதே தீட்சையிலே மறந்திடாதே

வாணாகி வீணாகக் கொடுத்திடாதே
  வாய்ப்பான அஷ்டாங்க தீட்சைசொல்வேன்
கோணாகி அங்கிலியு மென்றேவோதிக்
  குருபாதந் தனையறிந்து குவிந்துநில்லே. ௨௪

நில்லடா ஓமென்றும் ஸ்ரீயுமென்றும்
  நிறுத்தடா பூரணத்தின் நிலையைப்பார்த்து
அல்லடா வதினுடைய மகிமைசொல்ல
  அரனாலு முடியாது மற்றோர்க்கேது
சொல்லடா வாய்ப்பேச்சு முனக்குமேது
  சொல்லாதே யிம்மூலந்திறவுகோலாம்
வில்லடா கீழ்மேலாராய்ந்துபாரு
  விந்துவட்டம் பளீரென்வே வீசும்பாரே. ௨௫

பாரப்பா யின்னமொரு மகிமைசொல்வேன்
  பாலகனே வாவென்று மலியென்றோதி
ஆரப்பா முன்தீட்சை மார்க்கம்போலே
  அடிதொடுத்து நுனிவரைக்கா ராய்ந்துபார்த்துச்
சேரப்பா சிவயோக மிதுவாமென்றுந்
  தீர்க்கமுட னந்திசந்தி தெளிந்துபார்த்துக்
கோரப்பா பராபரனை வாவாவென்று
  குவிந்தநிலை தனைப்பார்த்துக் கூடுவாயே. ௨௬

கூடுவது லகுவல்ல வாய்ப்பேச்சல்ல
  கோடியிலே யொருவனடா குறியைக்காண்பான்
ஆடுவது தில்லையிலே காலைத்தூக்கி
  யம்பரமா மம்பலத்தி லாட்டைப்பார்த்து
நாடுவது சதாகாலம் நாட்டம்பாரு
  நமனேது நமனேது நாசமாகும்
பாடுவது அனுராக மனந்தங்கேட்கப்
  பச்சைமயி லேறியுந்தான் பாய்ந்தேன்பாரே. ௨௭

பாரப்பா இங்கென்றே குறியிற்சாதி
　பராசத்தி மூலமிது பாருபாரு
ஆரப்பா இம்மூல மார்தான்சொல்வார்
　அகத்தியமர் முனியேகே ளுனக்காச்சொன்னேன்
நேரப்பா நீமகனே நினைவாய்நின்று
　நிருவிகற்ப சமாதியிலே நீஞ்சியேறு
வீரப்பா வெறும்பேச்சுப் பேசிடாமல்
　வெட்டவெளி தனைநாடி விந்தைகாணே. உஅ

காணுவது பராசத்தி தீட்சைக்கெல்லாம்
　கலந்திருந்த தனுடைய கனல்தானென்மைந்தா
பூணுவது இதையன்றிப் புலன்வேறில்லை
　பூமியுட நாதமென்று மிதற்குப்பேரு
வாணுலகிற் றிரியாதே மயங்கிடாதே
　வாய்பேசாப் பூரணத்தை வணங்கிப்போற்றித்
தோணுவதெல் லாமுனக்குத் தோணும்பாரு
　துரியாதீ தம்மதனைத் தொடர்ந்துபாரே. உகூ

பாரப்பா வின்னமொரு மவுனங்கேளு
　பராபரத்தி னடியினுட பாதம்போற்றி
ஆரப்பா நசியென்று மசியென்றோதி
　யடங்காத தேவிதனை யர்ச்சித்தேற்றிக்
கூரப்பா குவிந்துமன மொன்றாய்நின்று
　கூடுகையி லம்பலவர் கூத்துந்தோணும்
சேரப்பா விம்மூன்று எழுத்தினாலே
　சிவனுடைய கயிலைவரை தெரியலாச்சே. ௩0

ஆச்சடா மூன்றெழுத்தி னாலேமைந்தா
　ஆறுவரை யூடுருவி யடுக்கத்தோணும்
மூச்சடா மூச்சடங்கி மேலேநோக்கு
　மூச்சந்தி யுதயகிரி யுச்சிதோணும்

வாச்சடா வாயுசா ரணையாம்வேகம்
வாரியுனை யுயரவினித் தூக்கியோடும்
காச்சடா கருவிகளைத் தள்ளிபோடுங்
காரணமுணம் பூரணமுங் கலந்துபோமே. ௫௧

போமடா இரியென்றுங் கிரியென்றோதிப்
பொருத்தமுடன் பூரணத்தைக்கலந்துபாரு
ஆமடா சகலசித்து மதிகமாகும்
அடங்காத பூதமைந்து மொன்றாய்ச்சேரும்
வாமடா வாமமுந்தான் கசிந்துபாயும்
வடவரையிற் றுருவனுட சூட்சங்காட்டும்
காமடா காமப்பால் திரண்டோணுங்
காணாத காட்சியெல்லாங் காணும்பாரே. ௫௨

பாரப்பா வங்குசிங்கு என்றேவாங்கிப்
பராபரமாங் குலதெய்வந் தன்னைப்பார்த்து
நேரப்பா நிலையறிந்து பிதுங்கொட்டாமல்
நீமகனே பூசைநிறை வேற்றிக்கொண்டு
ஏரப்பா பூரணத்தின் மனக்கண்ணூட்ட
இடகலையும் பின்கலையி டழிந்துபோகும்
வேரப்பா சுழிமுனையில் நினைவாய்நின்று
வேதாந்த பராபரையை வேண்டிநில்லே. ௫௩

நில்லடா சற்புத்ர ஞானல்மைந்தா
நிற்கையிலே நின்றநிலை யுனக்குத்தோணும்
சொல்லடா சுழிக்காற்று நிலைக்கொட்டாது
சொன்னதெல்லா மெய்யாகும் நினைந்தபோதே
அல்லடா வெனைப்போலே யார்தான்சொன்னார்
ஆதியந்த மனாதியந்த மிரண்டுமைந்தா
கொல்லடா மாயைதனை யொழித்ததாலே
குமரகுரு பரனென்று நவக்குப்பேரே, ௫௪

பேரிட்டாள் சிறுபிள்ளை வயதோகொஞ்சம்
பெற்றபிள்ளை தந்தையுந்தான் பேணிப்பாரான்
சீரிட்டாள் சமையுமுன்னமே யென்னைப்பெற்றாள்
தேசமெல்லா மவுசாரி யாடிக்கொண்டாள்
ஏரிட்டுப் பார்த்தாலுங் கண்தான்கூசும்
இவளுடைய மாயையல்லோ வுலகமாச்சு
நேரிட்ட ஐவருக்குந் தாயுமாகி
நிறைந்தாளே யாவருக்கும் பெண்டீர்தானே. ௩௫

தானென்ற நாமமதை மவுனம்வைத்து
தமர்வாசல் தனிலிருத்தி மைந்தாமைந்தா
கோனென்ற இம்மூல வெழுத்தினாலே
குருபாதந் தன்னிலேயுங் கூட்டிவைக்கும்
வானென்ற வாசியுந்தா னடங்கிப்பாயும்
வஸ்தான வஸ்துவென்று வணங்கவைக்கும்
கோனென்ற குண்டலியின் குறியைக்காட்டும்
கூசாமல் மவுனத்திற் கூட்டும்பாரே. ௩௬

பாரப்பா இம்மூலந் தன்னைப்பார்த்துப்
பராபரத்தில் மூவருந்தான் முத்தியானார்
ஆரப்பா விதையறியாப் பாவிதன்னை
யடித்தடித்தே அப்புறமுந் தள்ளவேண்டும்
நேரப்பா நிறைந்தபரா பரத்தினாலே
நீங்காமல் நீகிறுத்து நினைவாய்ச்சேர்க்கும்
பேரப்பா விதனாலே முத்திபெற்றார்
பெரியோர்க ளனந்தம்வெகு கோடிதானே. ௩௭

கோடான கோடிசித்தர் முனிவரெல்லாங்
குணமறிந்து தசதீட்சை தன்னால்மைந்தா
பாடான பாடுபட்டுப் பிழைத்தோர்கோடி
பாழிலே மாண்டவர்கள் கோடாகோடி

வீடான வீட்டையுந்தா னறிந்துநீயும்
மேலாறு தலத்தினுட விலாசங்கண்டு
வாடாத தீபமதை யறிந்துகொண்டு
வந்தவர்க்கே பேரின்பங் காட்டுவேனே. ௩அ

காட்டுகிறேன் தசதீட்சை யறியாப்பாவி
கழுதையவன் கரையேற மாட்டான்பாரு
நாட்டுகிறே னகத்தியமா முனியேகேளு
நன்மையுட னுனக்காகச் சொன்னேன்மைந்தா
பூட்டுகிறேன் திரையேழுங் கிழிந்துபோகப்
பூரணத்தின் யோகமதை யறிந்துநீயும்
சூட்டுமணி பூரஞ்சு வாதிட்டானம்
சொல்லாத விஞ்சையுடன் சுருதிபாரே. ௩௯

பாரப்பா பூசைவிதி யறியாமற்றான்
பரமசிவ தீட்சையென்றே அலைவான்பாவி
ஆரப்பா முழுகியனுஷ் டானஞ்செய்து
அஞ்செழுத்தா மூன்றெழுத்தெட்டெழுத்தாமென்று
நேரப்பாதீட்சைவைத்த குருக்களுந்தான்
நீணிலத்தில் மணியுருட்டிப் பூசைசெய்து
வேறப்பா வெறிபிடித்துத் திரிவான்பாவி
வேரற்ற மரமென்று வீசுவேனே. ௪௦

வீசுவேன் பூரணத்தை யறியாப்பேர்க்கு
விண்ணிலிடி தான்வீழ்ந்து நரகில்வீழ்வான்
காசிநதி தனிலேதான் தீர்த்தமாடிக்
கரைகாணு மந்திரங்க டன்னையோதி
வாசிநிலை யறியாமற் றெய்வமென்று
வணங்கியவ னலைந்திடுவான் வருவதேது
தேசிகளுக் கெத்தனையோ சொன்னாலுந்தான்
தோற்றாது அலைந்திடுவான் கண்டுபாரே. ௪௧

பாரப்பா ஆலயத்தில் நெய்விளக்குப்
பலபூசை செய்துமவ னலைந்திட்டாலும்
ஆரப்பா அன்னதானம் பூமிதானம்
அப்பனே மாதானஞ் செய்திட்டாலும்
நேரப்பா குளங்கிணறு வெட்டினாலும்
நீமகனே கரையேற மாட்டாய்பாவி
தேரப்பா தேட்கொடுக்காங் கொடுக்காங்தேளு
திரையேழை யறுத்துமினிக் கண்டுதேரே. சஉ

தாடா தேளிருக்குஞ் சிவசாலைக்குள்
செங்தேளுங் கருங்தேளுங் திடமாய்ப்பாயும்
ஆரடா கருங்தேளை யறிவாருண்டோ
அறிந்தாலு மதினிலையை யறியப்போமோ
ஏரடா நிலையறிந்து மவுனம்பெற்று
என்மகனே புலியூருச் சாலைதன்னில்
நேரடா நேர்நிலையு ம நீயேபார்த்து
நின்றுகொண்டு அரவுவிஷ நிலைக்காணே. சங

காணடா அரவுவிஷங் கடித்தாலுந்தான்
கைநொடிக்கும் நேரமதி லிருந்துபோகுங்
தானடா அரவுதனைப் பிடித்தேமைந்தா
சத்திசிவ லிங்கமதிற் சார்பாய்ச்சேர்த்து
நானடா அதையறிந்து மவுனங்கண்டு
ரவியினுட கற்பத்தில் நாடியேறிக்
கோனடா வானவர்கோன் றனக்கேயானுங்
கொடுத்தனடா தெய்வபதி கூர்ந்துபாரே. சச

பாரடா சாகரமு முடிவதாச்சு
பன்னிருகைப் புயமிலங்க வுரைக்கலாச்சு
ஆரடா அஷ்டாங்க முடிவுமாச்சு
ஆதிவஸ்து அனாதிவஸ்து வொன்றாய்ப்போச்சு

கூரடா சடாட்சரமு மிதுவேயாச்சு
குவிந்தெழுந்த வைந்தெழுத்து மிதுவேயாச்சு
நேரடா பராசத்தி வேலுமாச்சு
நிலையான தாரணையை நிறுத்துவேனே. ௨௫

நிறுத்துவேன் தாரணைதான் மகாரமாச்சு
நின்றிலங்கும் வாசியல்லோ சாரியாச்சு
கருத்தான தேவிமனோன் மணியுமாச்சு
காமதேன் கற்பகமு மதுவேயாச்சு
மருத்துமலைச் சார்புநடு வட்டத்துள்ளே
மாருத வாசனைதா னனேகமுண்டு
திருத்தமுடன் துவாபரபா லகருமுண்டு
தெரிசித்தேன் அடிபணிந்து தெரிந்துகொள்ளே. ()

கொள்ளடா சத்திகை வசமதாகக்
கூறுகிறேன் கும்பமுனி யுனக்காய்மைந்தா
தள்ளாதே யாறுபடை வீடுகட்டிச்
சடாட்சரமா மாறெழுத்தை யதிலேநாட்டி
விள்ளாதே யாறுபடை வீட்டுக்கெல்லாம்
விபரமுடன் சொல்லுகிறேன் விந்துவட்டந்
துள்ளாதே விந்துவிலோங் காரஞ்சாத்திச்
சுருதியுட னாற்கோணம் மேலேசாற்றே. ௨௭

சாற்றுகிறேன் நாற்கோணந் தன்னில்மைந்தா
தற்பரமாய் நகாரமிட்டு சார்ப்பாய்நின்று
ஏற்றுகிறே னதன்பேரிற் பிறைதானிட்டு
என்மகனே மகாரமென்ற மவுனஞ்சாத்தி
போற்றுகிறே னதன்மேன்முக் கோணமிட்டுப்
பூரணமாஞ் சிகாரத்தை நடுவேசாத்தி
காற்றிலையு மதிகமடா வறுகோணத்திற்
கலந்தெழுந்த வகாரமதைக் கனிவாய்ப்பூட்டே. ௨௮

பூட்டடா சிரசிட்டு விந்துவிட்டுப்
புத்திரனே அகாரமதைப் புருவமேவி
நாட்டடா இடதுபுறங் கிலீயைவைத்து
நாதனே வலதுபுறம் ஐயுமென்றே
வாட்டடா சௌவுமென்றே சிரசுமேவி
வளமான ஸ்ரீயென்றே காதிலிட்டு
சூட்டடா இறீயுமென்றே பாதந்தன்னைச்
சொகுசான நமஸ்தெனவுங் கூடவையே. ௨௯

வையென்ற வைம்பத்தோ ரட்சரத்தை
வளமான மூலவரை சிரசுமட்டும்
மெய்யென்ற விலக்கமுந்தான் மேவிக்கட்டி
மேலான குகைவாச லடுக்கேறி
ஐயென்றுங் கிலியென்றுஞ் சௌவென்றோதி
யடுக்கடுக்க ஓங்காரம் ஸ்ரீயுமென்றும்
பொய்யென்றே யெண்ணாமல் இறீயுமென்றும்
புத்திரனே நமஸ்தெனவே போற்றுவாயே. ௩௰

போற்றுகிறேன் பஞ்சசத்தி மூலமந்த்ரம்
போட்டடா சக்கரத்தில் வரைந்துகட்டி
ஏற்றுகிறே னாறுவரை வீடுமைந்தா
என்வாக்காற் சொல்லவுந்தான் முடியாதையா
சாற்றுகிறேன் சிதம்பரமென் றிதற்குப்பேரு
சத்தியமாய்ச் சொல்லுகிறேன் மைந்தாமைந்தா
ஏற்றுகிறே னாறுவரை வீட்டுக்கெல்லாம்
இருவளையம் வாசலிலே யிட்டுக்கட்டே. ௩௰௧

கட்டியே ஓங்காரஞ் சுத்திலிட்டுக்
காரணியே பூரணியே கபாலியென்று
சுட்டிகளே வெறும்பேச்சுப் பேசிடாமற்
சூட்டடா பச்சரிசி யாலேபீடம்

மட்டிகளே வடுகனையுங் கூடவைத்து
மாட்டுமறு கோணச்சக் கரந்தான்கீறி
மூட்டியே திரியாம லஞ்செழுத்தை
மூட்டுமோங் காரநடு வரையிற்றானே. ௫௨

தானவாறு யாவதற்கு அரியுமிட்டுத்
தப்பாமற் சித்தறியும் ஸ்ரீயுஞ்சேர்த்து
வானவர்கோன் போற்றிசெய்ய விஞ்சைவாலை
மைந்தனே மசியென்றும் நசியென்றோதி
மானதமாம் பூசைசெய்து மைந்தாமைந்தா
மறக்காதே யிருவளையம் வாசலிட்டுக்
கோணருளால் வாலையுட பீஜமிட்டுக்
கும்மென்றே யோகியுந்தான் குறியைப்பாரே. ௫௩

பாரப்பா வடுகனுக்குக் கும்பம்வைத்துப்
பாலகனே நசியென்றே அடியிற்சாத்தி
ஆரப்பா தேவியுட கும்பத்துக்கு
அப்பனே மசியென்றே அடியிற்சாத்தி
நேரப்பா பஞ்சகர்த்தா ளைந்துபேரை
நீமகனே மானதமாய் நினைத்துப்போற்றி
ஏரப்பா பூரணமே தெய்வமென்று
இரவிமதி தனையடுத்துப் பூசைபண்ணே. ௫௪

பண்ணுவது பூசையுந்தான் செய்யும்போது
பாலகனே கும்பமெல்லாம் வஸ்த்ரங்கட்டி
கண்ணுமனக் கண்ணறிந்து விண்ணைப்பார்த்துக்
கபாலிக்கும் வடுகனுக்கும் வஸ்த்ரங்கட்டி
எண்ணமய ராமல்நீ புஷ்பம்வாங்கி
யிஸ்வரியும் வடுகனையும்ரூபமாக்கித்
தண்ணுட்டா னிருந்துபாத் திரங்களைந்துஞ்
சத்தியமாய்ப் பானமிட்டுச் சரியாய்நில்லே. ௫௫

நில்லடா வொருமனதாய் நிலையில்நின்று
நிருத்தியே திருவாத்தி மலர்தான்சாத்தி
அல்லடா சூலமுஞ்சக் கரங்கள்சாத்தி
யப்பனே நெய்விளக்குத் தீபம்வைத்துச்
சொல்லடா பூரணத்தை நினைத்துநீயுஞ்
சூட்டுமிரு பக்கங்கற் பூரமேத்தி
வில்லடா தேவியுட குறியைப்பார்த்து
வேண்டியதோர் பலகாரம் வடையும்வையே. ரூசு

வையப்பா சாதமொடு மதுமாம்ஸங்கள்
மைந்தனே பாலொடுசர்க் கரையுந்தேனும்
செய்யப்பா•தேங்காயும் பலிதானிட்டுத்
தித்திக்குங் கனிவகைக ளெல்லாம்வைத்துப்
பொய்யப்பா சொல்லாமல் விஞ்சையோதிப்
புத்திரனே சவ்வாதும் புனுகுஞ்சாத்து
மெய்யப்பா வாடைபரி மளங்களெல்லாம்
வேண்டியே தேவிக்கு வைத்துப்போற்றே. ரூஎ

போற்றுகின்ற போதிலேதான் மைந்தாநீயும்
பூரணத்திற் பிரமமென்ற ரூபங்கொண்டு
ஏற்றுகின்ற போதெல்லா மவுனவிஞ்சை
யெண்ணியே மனதொன்றா யிருத்திக்கொண்டு
மாற்றுகின்ற போதேமுன் னிலையைப்பார்த்து
வாடாத தீபமதை தூண்டியேற்றிக்
காற்றினிலு மதிகமடா மூன்றெழுத்தை
கண்டுகொள்ளக் காட்சியடா கண்டுகொள்ளே. ரூஅ

கொள்ளுதற்கு நவக்கிரக சித்திவேணுங்
கொடியதொரு நவகலசம் வைக்கவேணும்
தள்ளுதற்கு முன்சொன்ன படிதானப்பா
தவறாமற் றுரணையை யேற்றவேணும்

சொல்லுதற்குக் கிரகவட் சரங்கள்கீறிச்
சுத்தமுடன் தருப்பையுமா விலையுங்கட்டி
மல்லுத்தம் பண்ணுமல் மக்காள்மக்காள்
மனோன்மணியை யர்ச்சித்து தேங்காய்சாத்தே. ()

சாத்தென்று சொன்னபடி நினைவாய்ச்சாத்தி
தவறுமற் பலகாரம் வடையும்வைத்துப்
போத்தென்று சொன்னபடி விஞ்சையோதிப்
புகழ்ந்திடுவாய் சாபமெல்லாம் நிவர்த்திசெய்து
ஏத்தென்று சொன்னபடி சமிதைப்போட்டு
என்மக்கா ளாவினெய்யா விலையாற்சாத்தி
வாழ்த்தென்று வாழ்த்திடுவாய் வாலைபூசை
மறவாமலனுதினமும் பண்ணிக்கொள்ளே. ௩0

கொள்ளையிலே நரித்தோலைத் தரித்துமைந்தா
கூறுவா யுத்தளமாய் விபூதியிட்டுச்
சொல்லையிலே வோர்துரியா தீதம்பார்த்துச்
சொரூபமணி ரூட்சமணி தன்னைப்பார்த்து
எல்லையில்லாப் பேரொளியைப் போலேவீசும்
இமயகிரி பருவதத்தி லிருந்திவைக்கும்
தொல்லையெல்லாந் தீருமினிப் பாசம்போகுந்
துன்பமற்றுப் பேரின்பந் தொடரும்பாரே. ௩௧

பாரப்பா பஞ்சசத்தி தீட்சையாலே
பரலோகமுழுவதுமே தனதாய்ப்போகும்
ஆரப்பா அஷ்டகர்ம வாலையாலே
யாகாதி யொன்றுக்கு வயதுநூறு
நேரப்பா யாகாதி செய்யவுந்தான்
நிலைதவறு திருந்துமனம் நிறுத்தவேணும்
பேரப்பா இப்படியே பேருபெற்றேன்
பேசாத மவுனத்திற் கூடினேனே. ௩௨

கூடினே னஷ்டாங்க முடிவுமாச்சு
குண்டலியாஞ் சத்திபுட குணமிதாச்சு
ஆடினே னானந்தம் பாடிப்பாடி
அஷ்டகர்ம வாலையுட வருளும்பெற்றுக்
கூடினேன்.சிவயோகக் குறியைப்பாடிக்
கொண்டேண்டா மூன்றெழுத்தைக்குவித்தேயாலும்
தேடினேன் மூன்றெழுத்தா மகாரமோடு
சேர்ந்தெழுத்து நகாரமொடு சிகாரமாச்சே. சுரு

ஆச்சடா யிதனாலே மௌனசித்தி
யம்பலவ ரனுதினமு மாட்டைப்பாரு
பேச்சடா வாய்திறந்து பேசிடாதே
பேய்போலே யிருந்துமன் தறிவில்நில்லு
ஏச்சடா திரியாதே யிந்தப்பேச்சு
யெட்டிரண்டு மறியாத சவங்கல்தானும்
மூச்சடா பிறந்திடத்தில் முனையைப்பாரு
முவுலகுந் தனதாச்சு மோதுமோதே. சுசு

மோதென்ற வென்குருவு மெனக்குச்சொல்ல
மூன்றெழுத்தை யானறிந்து முருகனானேன்
சூதொன்று மில்லையடா விந்தப்பேச்சு
சுக்கிலமுஞ் சுரோணிதமு மொன்றாய்ப்போச்சு
வாதொன்றும் வாய்திறந்து பேசிடாதே
வருகுமடா பேரிடியுந் தலையில்வீழ்கும்
ஏதொன்றுங் கேளாத பிள்ளைபோலக்
கருத்தில்வைத்துப் பூரணத்தைக் கருவாப்பாரே. [illegible]

பாரப்பா பரமசிவ னென்னைப்பார்த்துப்
பாலகனே யென்குருவே யென்றேபோற்றித்
தேரப்பா மூன்றெழுத்து மூலமந்த்ரஞ்
செப்பென்றே தெண்டனிட்டு மப்பாவென்றார்

வேறப்பா தெரியாதென் றவற்குச்சொன்னேன்
வேண்டினரென்னையுந்தான் விபரமாக
ஏரப்பா இம்மூன்று மூலங்காட்டி
யென்னாளுஞ் சிரஞ்சீவி யிருமென்றேனே. ௬௬

இருமென்று பரமசிவன் றனையிருத்தி
யிம்மூல மதிகமென்று சிவன்றான்கேட்கத்
திருமந்த்ர மூன்றெழுத்து அதிகமென்றே
ஜெகமதனைப் படைப்பதற்குச் சிவன்றான்வேண்ட
குருமந்த்ர மவுனமதாய்ப் பரைதான்வந்து
குணமான மூவரையும் படைக்கும்போது
மருமந்த்ரம் வேறில்லை யென்றுசொல்லி
மவுனமதாய்ச் சிகாரமதை நினைத்தாள்பாரே. ௬௭

பாரப்பா வுருத்திரனும் பிறந்துவந்து
பராபரையே யென்றுசொல்லிப் பணிந்துநிற்க
ஆரப்பா சங்கரா வுருத்திராவென்றாள்
அவருக்குச் சிகாரமதை யருளிச்செய்தாள்
நேரப்பா யிதைநினைத்துப் போற்றச்சொன்னாள்
நேசமுடன் வாழ்ந்திருக்க நிலையுஞ்சொன்னாள்
மேரப்பா மேரிலிட்ட தீபம்போல
மேதினியில் நீயிருந்து மேவென்றாளே. ௬௮

மேவென்று ருத்திரனை மைந்தாவென்று
மெஞ்ஞான விஞ்சைதனை விடுகாதென்றாள்
தாவென்று எனுதினமும் நினைக்கச்சொன்னாள்
சங்காரஞ் செய்வதற்குப் பாசமீந்தாள்
கூவென்றாள் பூரணத்தை நினைத்தேஆத்தாள்
கோரியே மகாரமென்ற மவுனந்தன்னை
ஆவென்றே நிலைதனையு மவள்தான்பார்த்தாள்
அச்சுதனும் வந்துமினிப் பணிந்தான்பாரே. ௬௯

பாரப்பா பச்சைநிற வடிவுகொண்டு
 பராபரையே பராபரனே யென்றுபோற்றி
ஆரப்பா வென்றுயே ஆத்தாளென்று
 ஆனந்தக் கூத்தாடி யவளைப்பார்த்து
நேரப்பா வெனையழைத்த மாதேமாதே
 நிலைத்திருக்க நிலைதனையும் நிறுத்துமென்றார்
மேரப்பா மகாரமென்ற மவுனங்காட்டி
 மேலான பதவியிலே யிருமென்றாளே. ௭0

இருவென்று பூரணமே மைந்தாவென்று
 எவ்வுயிரும் ரட்சித்து மிடுக்கந்தீர்த்தும்
திருவென்றும் பெயரிட்டு அழைத்துமாலைத்
 திருஷ்டிக்கு மொளிவாகித் தீர்க்கம்பெற்று
உருவென்று தோணும லுயிராய்நின்று
 உத்தமனே யோகாதி யோகியாகித்
தருவென்று தருக்களையு மவருக்கீந்து
 சங்கோடு சக்கரமுங் கொடுத்திட்டாளே, ௭௧

கொடுத்திட்டா ளொளிவாலே மாயைதோன்றிக்
 குருவான தேசியென்று பேருமிட்டு
அடுத்திட்டா ளென்மகனே வாவாவென்று
 ஆதார மாயிருக்கும் படியாய்நின்று
தடுத்திட்டாள் தாரணையை யவற்குக்காட்டித்
 தானுனே யென்றுமுறைத் தருவிலேறி
விடுத்திட்டாள் பூரணமே விஞ்சைநாதா
 வேண்டியே விண்ணிலிரு மென்றாள்பாரே. ௭௨

பாரப்பா அச்சுதா னந்தநிலா
 பச்சைவர்னம் பூண்டிருந்த பரனேஅய்யா
ஏரப்பா மகாரமல்லோ வுனக்குப்பீட
 மிருந்துமுந்தன் மகாரமென்ற மவுனந்தன்னைத்

தேரப்பா சதாகாலம் நினைத்துப்போற்றித்
தேசாதி தேசமெல்லாம் நிறைந்தென்னாளும்
வேரப்பா வெறும்பேச்சுப் பேசிடாமல்
வேதாந்த பூரணத்தின் விபரங்காணே, எங

காணுவது பூரணமே வெளியாய்ப்போகுங்
கருத்துடனே மவுனமதைக் கண்டுகொண்டு
தோணுவதெல் லாமுனக்குச் சூட்சங்காணுஞ்
சொல்லாதே யென்மகனே யென்றுசொல்லிக்
கோணாமல் நிலைதவறிப் போய்விடாமற்
கூர்ந்துமன தொன்றாகக் குறியைப்பார்த்து
வாணுலகி லுயிர்தோறும் நீயாய்நின்று
வருத்துயிரை ரெட்சித்து மிருமென்றாளே. எச

இருமென்று நகாரமென்ற விஞ்சைதன்னை
யெண்ணியே பூரணத்தி லிருத்தியோதித்
திருமந்த்ர மூலமென்ற செபந்தான்செய்து
சேர்ந்தெழுந்த பராபரனை நினைத்துப்போற்றிக்
குருமந்த்ர நகாரமென்ற விஞ்ஞைசயாலே
கொடியதொரு மறையோனுங் குதித்தேவந்து
உருவொன்றுந் தெரியாத தேவிபாத
மோடிவந்து மகிழ்வுடனே பணிந்தான்பாரே. எரு

பாரப்பா வென்மகனே விஞ்சைநாதா
பாணிகலை வாணியென்றும் பரனேயென்றும்
ஆரப்பா மறைநான்குஞ் சிரசதான
அயனுக லோகமெல்லா மருளிச்செய்ய
நேரப்பா வுதித்துவந்த மைந்தாநீயும்
நிறைந்தபரா பரத்தினுட நிலையினின்று
வேரப்பா வேதாந்த வேதவேதா
விஞ்சைதனை யுன்றனக்குக் காட்டுவேனே, எசு

காட்டுகிறே னண்டபிண்டம் படைத்துநீயுங்
கலந்தெழுந்த வெண்பத்து நான்குயிர்க்கும்
பூட்டுகிறே னவரவர்க்குப் புசிப்புத்தானும்
புகழ்ந்தெழுந்த தெய்வமொடு பூதந்தானும்
நாட்டுகிறேன் பூமிநடு மத்திதன்னில்
நடுவாக மேருவென்று நலமுண்டாக
வாட்டுகிறேன் சமுத்திரமுஞ் சகலவித்தும்
மானிடரைப் படைத்துநித்தம் வாழ்வாய்பாரே. எஎ

பாரப்பா நகரமென்ற விஞ்ஞைதன்னைப்
பார்த்துவுன்றன் நிலையறிந்து பதியில்நின்று
ஆரப்பா சுடுகாடு பாழ்வீட்டுக்குள்
அமர்ந்தொடுங்கிப் பூரணத்தி லறிவில்நின்று
நேரப்பா நிஷ்டையொடு சமாதிபார்த்து
நின்னிலையும் நின்னுயிரும் நீதான்கண்டு
ஏரப்பா மணிவிளக்கைத் தூண்டித்தூண்டி
யெவ்வுயிருந் தான்படைத்து மிருமென்றாளே. எஅ

இருமென்றாள் நகாரமென்ற விஞ்ஞையாலே
என்மகனே மறைநான்குஞ் சேரலாச்சு
உருவென்றுஞ் செகமெல்லாம் படைக்கலாச்சு
ஓம்முடிந்த பட்டணத்தி லொடுங்கலாச்சு
தருவென்ற தருக்களெல்லாந் தோணலாச்சு
தமர்வாசற் குள்ளேயுந்தான் தரிக்கலாச்சு
குருவென்ற குருபாதங் காணலாச்சு
கும்மென்று தப்பித்துக் கூடுவாயே. எகூ

கூடுவாய் தம்பனமு மிதுவேயாகுங்
கோடிரவி தனைக்காட்டிக் குறியில்நிற்கும்
ஆடுவா யிதையறிந்து மவுனங்கொண்டு
அஷ்டமா சித்தியெட்டு மாட்டிவைக்கும்

நாடுவாய் நாற்பதின்மூக் கோணந்தோன்றும்
நந்திகுரு வாசாலைப் பேசவைக்கும்
பாடுவாய் பரவெளியைக் கண்டுகண்டு
பாவமதை யகற்றிடுவாய் பாருபாரே. ௮0

பாரென்றே யிந்தமுறை சொன்னபேச்சு
பழுதில்லை பழுதில்லை மூன்றெழுத்தை
ஆரென்று கேட்டாலுஞ் சொல்லிடாதே
அயன்படைப்பு வித்தையெல்லா மிதுதான்மைந்தா
கூறென்றுங் கூடழிந்து போய்விடாது
குமரிகற்ப மென்றுசொல்லி யிதற்குப்பேரம்
நாரென்று பூவாலே வாசமாச்சு
நகாரத்தின் மகிமையெல்லாம் நாட்டினேனே. ௮௧

நாட்டியே பரமசிவன் றன்னைப்பார்த்து
நானுரைத்தேன் பூரணத்தின் நிலமைதன்னைக்
கூட்டியே பரமசிவ னென்னைப்பார்த்துக்
குருவென்றுஞ் சிவனென்றுங் குறித்தார்மைந்தா
ஆட்டியே பூரணத்தி லடங்கிவாழ்ந்தேன்
அரனென்றுஞ் சிவனென்று மருளச்செய்தேன்
கூட்டியே யெனையெடுத்து முகந்துகொண்டு
குமரகுரு பரனென்றே கூறினாரே. ௮௨

கூறியதோர் மயேஸ்பரனுஞ் சதாசிவனுங்
குணமாக வந்தவகை கூறுமென்றே
மாறியே பரமசிவ னென்னைக்கேட்க
வழுத்தினேன் பராபரையாள் பதத்தில்நின்று
தேறியே வகாரமென்ற மவுனந்தன்னைச்
சென்றெழுந்து பூரணத்திற் றெளிவாய்வைத்து
ஏறியே லாடத்தி லவள்தான்பார்த்தே
யென்மகனே மயேஸ்பரா வென்றாள்பாரே. ௮௩

பாரடா மயேஸ்பரனும் பரையைப்பார்த்துப்
பாதமதில் நமஸ்காரம் பண்ணிநிற்க
ஆரடா செகத்திலுள்ள வுயிர்கட்கெல்லாம்
அண்டபிண்ட சராசரங்க ளளாவிநின்று
தேரடா நடையுடையுஞ் சீவசெந்து
தெளிந்திருந்து லோகாதி லோகமெல்லாம்
ஏரடா நீயிருந்து வாழுமென்றே
யெடுத்துரைத்து மயேஸ்பரனை வாவென்றாளே. அச

வாவென்றா னந்தனுக்கு விஞ்சைதானும்
வகாரமென்ற மவுனத்தை வைத்தாளாத்தாள்
ஆவென்றாள் பூரணத்தை யடுக்கச்சொன்னாள்
அதிலடங்கி வாசியென்றே யிருக்கச்சொன்னாள்
ஊவென்றாள் மனதடங்கி யறிந்துகொண்டாள்
ஊறுகின்ற மனக்கண்ணா லொளியைப்பார்த்துத்
தாவென்று தமர்வாசற் குள்ளேசென்று
சங்கற்ப தாரணையு மானாள்பாரே. அரு

பாரப்பா மயேஸ்வரத்தின் கூறுசொன்னேன்
பராபரமாஞ் சதாசிவத்தின் கூறைக்கேளு
ஆரப்பா யகாரமென்ற மவுனந்தன்னை
ஆனந்த மானபரா பரத்திற்சேர்ந்து
நேரப்பா நிலையறிந்து மவுனங்கொண்டு
நிற்கையிலே சதாசிவனா முதிக்கலாச்சு
தேரப்பா சதாசிவனும் பரையின்பாதந்
தெண்டனிட்டுப் பணிந்திடவே யழைத்தாள்காணே

காணடா சதாசிவமே மகனேயென்று
கண்மணியே கருத்தினடு வுதித்தவையா
தானடா லோகாதி லோகமாகத்
தானான யகாரமதை மவுனங்கொண்டு

கோடான குலதெய்வந் தன்னைப்பார்த்துக்
கூறுவான் பராபரனே யென்றுபோற்றி
தேனடா தேனமுதந் தினமூம்பாயச்
சிவநிலை சிவநிலையாய்த் தேறென்றாளே. ௮௭

தேறென்ற தேவிதிருப் பாதம்போற்றித்
தெளிவான யகாரமந்தச் சுழினைச்சேர்று
கூறென்றகூர்விழியால் மனக்கண்ணூட்டிக்
கோடிரவி யொளியுடைய குறியைப்பார்த்து
வேறொன்றும் பேசாமல் வெளியைப்பார்த்து
வெட்டவெளி யாகவுந்தான் விபரமானார்
ஆறொன்று மறியாம லரூபமாகி
யடங்கலுக்குந் தானாகி யிருந்தாள்பாரே. ௮௮

பாரடா வாங்கார கோபமாகிப்
பார்தனிலே யனலாகி மாயைதோன்றி
ஆரடா சுழிமுனையி லவர்தானின்று
ஆதியென்றும் அனாதியென்றும் ஏகமானார்
நேரடா விதையறியாத் தவத்தோர்தானும்
நிஷ்டையிலே யணுவளவு நிலைக்கொட்டாது
ஏரடா யிதையறிந்து பூசைசெய்தால்
என்றைக்கு மிறக்காம லிருத்தும்பாரே. ௮௯

பாரப்பா இவர்களுட நிலையுஞ்சொல்லப்
பரமசிவன் றான்கேட்டுப் பாவம்நீக்கி
ஆரப்பா குண்டலியாஞ் சத்திமூலம்
அடுத்தெனக்குத் தெரியவுமே அருளுமென்றார்
நேரப்பா மனதிரங்கிச் சிவன்றனக்கு
நினையான வோங்காரக் கம்பமீதில்
ஏரப்பா யேறிவினை யாடுந்தேவி
யெட்டிரண்டுங் கூட்டுமினி யிருந்தாள்பாரே. ௯௦

பாரடா இப்படியே சுவன்றனக்குப்
பனிரண்டு தலத்தினுட கூறுஞ்சொல்லி
ஆரடா அஷ்டாங்க வெக்யங்காட்டி
யருள்பெருகுஞ் சதாநந்தி யருளைக்காட்டி
வேரடா வேரில்லாக் கனியைக்காட்டி
வேதாந்த ரசக்கிணறு மிகவுஞ்சொல்லிச்
சேரடா சிந்தைதனில் கவனம்வைத்துச்
செவிசாய்ப்பா யகத்தியனே செப்பத்தானே. சுக

தானாகிச் சானவனு யாவதற்குச்
சத்தியமாய் அகாரமென்ற மவுனம்வேணும்
ஊனாகி புடலாகி யுயிருமாகி
யோங்கார மானதுவு மதுவேயாகிக்
கோனாகிக் குருவாகிக் குமரியாகிக்
கோடிவரை காலமெல்லா மிருத்திவைக்கும்
ஆனாதிவெளியாகி யலியுமாகி
யார்தனக்கு மெட்டாது இந்தப்பேச்சே. சுஉ

பேச்சென்ன இந்தமுறை பேசிப்பேசி
பிராணைபந் தெரியாமற் பிசகிப்போனால்
ஆச்சென்ன வதினாலே வருவதேது
அந்தரங்க மானதுறை யறியாப்பேர்க்குக்
காச்சென்று காச்சுமடா யிந்தயோகம்
காலாந்தக் கனலெழும்பிக் கொதித்துப்போவான்
வீச்சென்று வீசாதே யிந்தப்பேச்சு
வேதாந்த சாரணையை வெளிவிட்டேனே. சுா

விட்டகுறை தொட்டகுறை தொடர்ந்துகூடி
வெட்டவெளி பராபரத்தின் வெளியிற்சென்று
அட்டகிரி பருவதமுங் குலுங்கியாட
ஆறுவரை தான்கடந்தே அகண்டமேவித்

ஆட்டரணக் கருவிகளைத் தொடர்ந்துவெட்டி
அருவனிட சக்கரத்தின் சூட்சங்கண்டு
வட்டமூலை மாதுடைய பாதம்போற்றி
வந்தவர்க்கே பேரின்பங் காணுங்காணே. ௬௪

காணொன்று சொல்லிவிட்ட மார்க்கப்போச்சு
கடிகையடா வரைநொடிக்குள் நிலையிற்சென்று
தானென்ற கயிலைமலைச் சார்பிலேறிச்
சந்திரன்றன் பானமதைத் தானேவுண்டு
கோனென்ற திரிகோண முப்பாழ்தாண்டிக்
கொடியதொரு சீவநிலை தன்னைப்பார்த்தால்
மானென்ற மான்மழுவுந் தரித்தவீசன்
மருவியே யுனதிடத்தில் வருகுவானே. ௬௫

வருகுவா னமுதரச மூட்டியுன்னை
வந்தவினை நீக்கியினி வாழ்விப்பானே
தருகுவான் நினைத்தபடி யுனக்கேமைந்தா
சாம்பவியாள் பாதமதை க்ஷணத்திற்காட்டி
யுருகுவா யனுதினமு மெழுகுபோலே
யுரைத்திடுவாய் மவுனத்தை யுறுதியாக
மருகுவாய் மாயைவினை யதனைத்தள்ளி
மாறாத வாசனையைத் தட்டித்தள்ளே. ௬௬

தள்ளுவது யாரையென்றால் மைந்தாகேளு
சங்கற்ப மறியாத சமயத்தோரைக்
கள்ளுடனே யபினறக்குக் கலந்தவோரைக்
கஞ்சாவுங் குடுகுடுக்கை கொண்டபேரை
உள்ளுடைந்து வாய்ப்பேச்சா லுழன்றபேரை
உத்தமரைத் தூஷித்த வுலகத்தோரை
விள்ளுவது மவுனமதை விட்டபேரை
விண்ணொன்று சத்தியமாய்த் தள்ளிப்போடே. ௬௭

போடென்றேன் பொய்சொலிக ளுயிரைக்கொன்று
புசித்தவரை யப்புறமே தள்ளுதள்ளு
நாடென்றேன் ரவிமதியை மைந்தாநீயும்
நாதாக்கள் சாபமெல்லாம் நிவர்த்திசெய்து
தேடென்றேன் தவந்தேடி யோகம்பாரு
செம்பவளம் போலேதான் நிறமுங்காட்டும்
பாடென்ன பட்டவற்குப் பலன்றானுண்டும்
பராபரத்தி னடியினுட பாதந்தானே. ௯அ

தானவனும் நீயிருக்க வேணுமென்று
சத்தியமாய் வாடக்கண் திறந்துபாரு
கோனவன்றா னீயென்றே அழைப்பாருன்னைக்
குவலயத்தோ ரடிபணிந்து கூர்ந்துநிற்பார்
வானவர்கோ ளிதையறிந்து பூசைசெய்து
வல்லமையாள் பாதமதை வணங்கிப்போற்றி
நானவனு மென்றுநடு வணையைப்பார்த்து
ரம்மென்று பேசியுந்தா னடினேனே. ௯௯

நாடியே லோகாதி லோகமெல்லாம்
நாதாக்கள் சாபமதால் நாசமாகித்
தேடியே திரிந்தாலுங் குருவைக்காணான்
சிந்தைமந்தி ரத்தைதெரி சிக்கமாட்டான்
ஓடியே யலையாதே மக்காள்மக்காள்
ஒருநாளும் மறவாதே மவுனப்பேச்சைப்
பாடியே திரியாதே யிந்தநூலைப்
பார்த்துமனக் கண்ணாலே பணிந்துகொள்ளே. ௧00

கொள்ளடா யனுதினமும் வாடமேவிக்
குறிப்பறிந்து நித்திரையிற் சாய்ந்திட்டாலும்
அல்லடா இடக்கையைத் தலைக்குழைத்து
அருளான வாடத்தி லுறங்கவேணும்

சொல்லடா வேரிபோற் றுயின்றுநீயுஞ்
சொல்லாதே சவம்போலே யிருந்துமைந்தா
வில்லடா விற்பூட்டி யேத்தியேத்தி
விஞ்சையென்ற மூன்றெழுத்தின் விபரம்பாரே. ௧௦௧

பாரப்பா வெளிபோலே வெளியாய்த்தானும்
பார்தனிலே முனிவோர்கள் சித்தர்சொல்லார்
ஆரப்பா அஷ்டாங்க மார்தான்சொல்வார்
அருள்தந்து மவுனமணி யார்தான்காண்பார்
நேரப்பா முன்சொன்ன படியேமைந்தா
நினைவிருத்தி நிலைதனிலே நின்றாயானால்
வேரப்பா வேதனுட வெழுத்துந்தானும்
விட்டகுறை தொட்டகுறை தெரியலாச்சே ௧௦௨

ஆச்சடா பூரணத்தி னமுதமுண்டு
அப்பனே முப்பாலை யறிந்துபோற்றி
ஏச்சடா சொல்வார்கள் செடிபூடென்று
என்மக்க ளதினாலே வருவதேது
வாச்சடா வெண்சாரை பிடிக்கவென்று
வையகத்தில் மலைகாடு அலைந்தேயேறி
ஏச்சடா சாரையைத்தான் பிடித்தோமென்பார்
என்மகனே சாரையிருப் பிடத்தைப்பாரார்
மூச்சடா மூச்சற்ற விடத்தைக்காணார்
முக்கியமாய்ச் சாரையுட நிலையைகேளே. ௧௦௩

கேளடா மயேந்த்ரகிரி விஞ்சைதன்னிற்
கிருபையுள்ள குகைவாசல் நாலைந்துண்டு
ஆளடா வம்மலையிற் சாரைதானும்
அப்பனே ஐந்தாறு அதிலேயுண்டு
நாளடா வெக்கியமாமுனியேகாவல்
நரசிங்க மூர்த்தியுட நடப்போமெத்த
வாளடா வடிவிலொரு லிங்கந்தோன்றி
வாய்வழியே சாரையுந்தான் வருகும்பாரே. ௧௦௪

பாரப்பா சாரையைத்தான் பயமாய்வாங்கிப்
பதறுதே மத்தியிலே பிடித்துப்பாரு
ஆரப்பா பிடிக்கையிலே பொருதியோடும்
அடங்காத சாரையுந்தா னறியப்போமோ
நேரப்பா மயேந்திரகிரி யுச்சிமீதில்
நிறைந்தெழுந்த சந்திரன்போற் றடாகமுண்டு
தேரப்பா தடாகத்திற் சாரைமைந்தா
சிறந்துதித்துச் சென்றெழுந்து வந்தவாறே. ௧௦௫

வாறான சாரையுந்தா னதிலுதித்தே
வந்துநடா சிவலிங்கம் வழியில்மைந்தா
தாரான சாரையைத்தான் விட்டிடாமற்
சாம்பவியாள் பாதமதிற் றயவாய்க்கூடி
நேரான நசியென்றே சாபந்தீர்த்து
நீமகனே முழுவதையு முண்டுதேறி
பேரான பேரின்ப வீடுசென்று
பிசகாம லதிலடங்கிப் பேணிப்பாரே. ௧௦௬

பாரப்பா சாரையுந்தான் வரும்போதெல்லாம்
பாலகனே நீபிடித்துப் பசியுந்தீர்த்து
ஆரப்பா வணுவளவு விட்டிடாமல்
அப்பனே அப்யாச மார்க்கஞ்செய்து
நேரப்பா நிலையறிந்து குருவைப்போற்றி
நிஷ்டையொடு சமாதியிலே நினைவாய்நின்று
வேரப்பா வேறிதென்று நினைந்திடாமல்
விதிவிலகச் சாரையுந்தா னுண்டுதேரே. ௧௦௭

தேரடா திரிகூடப் பருவதத்திற்
றிருமாலு மயனோடு ருத்திரன்றானும்
ஆரடா மயேஸ்வரனுஞ் சதாசிவனும்
அப்பனே யிராகுவொடு கேதுதானும்

சேரடா மதியோடு ரவியுந்தானும்
தேவியென்னும் பராபரைசிற் பரையாள்மைந்தா
காரடா சித்தரொடு முனிவரெல்லாங்
கலந்திருப்பா ரின்னம்வெகு பெரியோர்பாரே. ()

பாரப்பா அம்மலையில் முளைத்தபூடு
பராபரையாள் சாபமதாற் பாழாய்ப்போச்சு
ஆரப்பா அதினடுவே விருட்சஜாதி
யாகாய மளாவியடா வளர்ந்துநிற்கும்
நேரப்பா விருட்சத்திற் பணூர்தானைந்து
நிலையான பூவைந்து காய்தான்மூன்று
சேரப்பா நிதங்காய்க்கும் நிதம்பழுக்குஞ்
செஞ்சுடர்போ லுதித்திருக்கும் பழந்தானகாணே.

காணடா அம்மரத்தின் பெயரைக்கேளு
கருவான கருநெல்லி யதற்குப்பேரு
தானடா நிதம்பழுத்து விழும்போதெல்லாந்
தற்பரையாள் சாபமதை நிவர்த்திசெய்து
கோனடா மசிவென்றே வோதிமைந்தா
குருவான தேசிகனை மனதிற்கொண்டு
நானடா அப்படியே யுண்டுதேற
நமனுடைய நாட்டமெல்லாம் நாசமாச்சே. ௧௧௦

ஆச்சடா கருநெல்லி மரத்தைமைந்தா
ஆரறிவா ருலகத்தி லறியமாட்டார்
மூச்சடா நற்கனியை விட்டிடாமல்
முழுவதையுங் கொண்டுவிடு முத்தியாக
ஏச்சடா சொல்லவில்லை யிந்தப்பேச்சு
எட்டிரண்டு மிதையன்றி வேறேயுண்டோ
காச்சடா காட்சிதரு முன்னைப்பாரு
கண்டுகண்டு மனந்தேறி யறிவில்நில்லே. ௧௧௧

நில்லடா வாலைசிவ காமியாகி
நிறைந்தபரா பரையாடான் சிவந்தமேனி
அல்லடா சாதியவள் முதலாய்நின்று
ஆத்தாளை நீயடுத்தே யவளைப்போற்றிச்
செல்லடா சிவநமசி வாயவென்று
செபித்துமவள் நாதம்பிந் காணில்விட்டு
அல்லடா பூரமொடு சூடன்சேர்த்தே
ஆதியுப்பு மனுதியுப்பு மதிலேசேரே. ௧௧௨

சேரடா வங்குசிங்கு என்றேவாங்கிச்
சிறந்தெழுந்த ரவிதனிலே வைத்துப்பாரு
ஆரடா முப்பூவின் சுண்ணமிட்டு
அழகாரந்தம் பூரச்செந் தூரமிட்டு
நேரடா வைத்திடவே மைந்தாகேளு
நிலையான ரவிபோலே காந்திமீறும்
ஏரடா மிதையெடுத்துப் பதனம்பண்ணி
யிஸ்வரியா னைக்கியத்தை யெடுத்துவையே. ௧௧௩

வையப்பா அறுதிவஸ்து விதுதான்மைந்தா
வாலைக்கு மிதுவல்லோ வைக்கவேணும்
செய்யப்பா சோடசோப சாரமாகச்
சிவன்கயிலை யுந்தனுக்குத் தெரியும்பாரே
மெய்யப்பா வுங்களுக்கா யறிந்துசொன்னேன
மேலாறு தலந்தனிலே மேவிக்கொள்ளும்
பொய்யப்பா சொல்லவில்லை வாமபூசை
பொறியைந்து மொன்றாகும் புகழ்ந்துபாரே. ௧௧௪

பாரடா வெண்சாரை யுண்ணும்போதும்
பாலகனே கருநெல்லி யருந்தும்போது
ஆரடா நாகமதை மைந்தாநீயும்
அப்பனே பணவிடைதா னரையேகொள்ளு

ஏரடா பதின்மூன்று வருடமைந்தா
இடைவிடா திம்மூன்றை யுண்டாயானால்
வேரடா வினையகலும் பாவம்போகும்
விஞ்சையெனு மூன்றெழுத்தை விரும்பிப்பாரே. ()

பாரப்பா முப்பாலு மிதுவாமைந்த
பராசத்தி கைவசமா மிதற்குள்ளாச்சு
ஆரப்பா முப்பாலு முண்ணும்போடா
அப்பனே கடுகொடுநல் லெண்ணெய்யாக
வேரப்பா அணுவளவு சேர்ந்தபோது
வீணாச்சு வுன்னுடம்பில் வெடித்துப்போச்சு
தேரப்பா அணுவளவப் படியேதேனுஞ்
சேர்ந்திட்டா லதைத்தீர்க்க வகைதான்காணே. ()

காணடா பாஷாணங் கௌவுரிவாங்கிக்
கருத்துவைத்து வராகனிடை நிறுத்துமைந்தா
தானடா அணுவளவே யுண்டாயானாற்
சடமிழந்து போகாது தப்பாதையா
நானடா அப்படியே யுண்டேன்மைந்தா
நசிமசியென் றேசொல்லி நாட்டம்பார்த்துக்
கோனடா கோணிருக்கு மிடமுங்காட்டிக்
குஞ்சரத்தை யஞ்சலென்று கூடினேனே. ௧௧௭

கூடியே முப்பாலு முண்ணும்போது
குணமான அன்னமுண்ணுங் குறிப்பைக்கேளு
நாடியே பச்சரிசி படியரைக்கால்
நலம்பாசிப் பயிறுபடி யதுபோற்சேர்த்துத்
தேடியே பாவின்பால் படிதானென்று
சிறந்தெழுந்த பாலிலேயரிசியிட்டு
ஒடியலை யாமற்சர்க் கரையுஞ்சேர்த்து
ஒருபோதாய்ச் சித்தமுந்தா னுண்டுகொள்ளே. ௧௧௮

கொள்ளவே ஆவின்நெய் பலந்தானென்று
   கூட்டுவாய் பூரணத்தின் குறியைநாடிச்
சொல்லவே போகாது இந்தப்பேச்சு
   சூட்சநிலை சொரூபநிலை தொடர்ந்துகாட்டும்
அல்லவே போகாதென் றேநீதானும்
   அலையாதே யலையாதே அய்யாகேளு
மெள்ளவே பூரணத்தை யடுக்கநீயும்
   மேதினியார் தான்பணிவார் மேவிப்பாரே. ௧௧௯

பாரப்பா பரமசிவ னென்னைகேட்கப்
   பராபரையாள் கிருபையினா லவரைப்பார்த்து
ஆரப்பா முப்பாலின் மகிமைதன்னை
   அதிசயமா மென்றுசொல்லி யறிந்துகேட்டு
நேரப்பாயிதையன்றி வேறேகற்பம்
   நிலையாது தேகத்தில் நிறுத்தொட்டாது
தேரப்பா சூட்சகற்பச் சுழினைவீடு
   திறக்குமே யிம்மென்றே சுழினைக்கேற்றே. ௧௨௰

ஏற்றுவது வாசிமனோன் மணியாள்தேவி
   இருதயமே யிவளிருந்தே யெட்டிரண்டாய்ச்
சாற்றுமொரு விஞ்சையெனு மூன்றெழுத்துத்
   தற்பரத்தைத் தாவியதற் கப்பால்மேவி
மாற்றுமொன்று மதிகமடா தேகமாக்கி
   மனோன்மணியாள் கறபநிலை மருவிச்சொல்வாள்
போற்றும்நிலை யறியாத சவுங்கல்தன்னைப்
   புழுக்குழியிற் றள்ளியுந்தான் போக்குவாயே. ௧௨௧

போக்கோடே பேறுதற்கு அஷ்டகர்மம்
   பூரணியே கபாலிதிரி சூலியென்று
வாக்கோடே மனம்புத்தி யறிவாஞ்சித்தம்
   வாய்வேக சாரணையில் வைத்துப்போற்றித்

தாக்கோடே அஷ்டகர்மங் கருவினாலே
சண்ணுமடா அறுபத்து நாலுசித்தும்
போக்கோடே செய்பாகங் கைபாகங்கள்
புத்திரனே தவறாமற் செய்துகொள்ளே. ௧௨௨

கொள்ளடா நிறஞ்சிவப்பாஞ் சிவந்தகன்னி
கொங்கைமின்னாள் தன்னிடத்தில் மைந்தாநீயுஞ்
செல்லடா அவளிடத்தி லருகேசென்று
செப்படா பசியென்றே அவனைப்பார்த்து
அல்லடா லெட்சமுரு வோதுவோது
அப்பனே தலைப்பிண்ட மாலைமைந்தா
கொல்லடா நிறையஞ்ச மாதந்தன்னிற்
கொடியதொரு பிண்டமுந்தான் விழுகும்பாரே. ()

பாரப்பா அவள்முகத்தை நீதான்பார்த்துப்
பாலகனே நசியென்றே யோதிப்போடு
ஆரப்பா அவள்தனக்குப் பிசகேயில்லை
அல்லட்டா லவளிறந்து போவாள்சொன்னேன்
நேரப்பா பிண்டமதை யெடுத்துவந்து
நிமலியுட அக்ஷரத்தை நீதானோதி
ஏரப்பா பாண்டத்திற் பிண்டந்தன்னை
யெடுத்துவைத்துச் சூடானந்து பலந்தான்கூடே ()

போடப்பா பாண்டத்திற் றுவாரமிட்டுப்
புத்திரனே சட்டிமேற் சட்டிவைத்து
நாட்டப்பா மண்சீலை செய்துமைந்தா
நடுவணையைச் சுத்திசெய்து ரம்மென்றோதிக்
கூடப்பா குழியிலிட்டுத் தீயைமூட்டிக்
குருவான கணபதிக்குப் பூசைசெய்து
ஆடப்பா தில்லையைத்தான் மைந்தாபார்த்து
அரகரா கணபதியென் றருளைப்போற்றே. ௧௨௫

போற்றியே பூரணியை மனத்துள்வைத்துப்
புவனைதிரி புரையாட்குப் பூசைசெய்து
ஏற்றியே பாண்டமதை யெடுத்துமைந்தா
என்மக்கா ளாறவைத்தீஸ் வரியைப்போற்றிச்
சாற்றியே தைலமதை யெடுத்துக்கொண்டு
சவாதுவிட்டுப் புனுகொடுதா ரணையேசெய்து
வாழ்த்தியே பதனமாய் வைத்துக்கொண்டு
வையகத்தில் வாதமொடு வைத்யம்பாரே. ௧௨௬

பாரப்பா அஷ்டகர்ம மிதற்குள்ளாச்சு
பாலகனே ஐங்காயக் கருவிதாச்சு
நேரப்பா அஞ்சனங்க ளிதற்குள்ளாச்சு
நிலையான மறைப்புவித்தை யிதற்குள்ளாச்சு
தேரப்பா மோடிவித்தை யிதற்குள்ளாச்சு
சிதம்பரத்தின் சக்கரமுஞ் சித்தியாச்சு
வேரப்பா வீணுகத் திரிந்திடாமல்
விதியறிந்து மதியறிந்து பூசைபண்ணே. ௧௨௭

பண்ணுவது பூரணத்தை நீதான்பார்த்துப்
பாலகனே கடுகையுந்தான் பதனஞ்செய்து
எண்ணுவது பஞ்சசத்தி வாலையென்றே
யேழையைப்போல் வாய்பேசா திருந்துகொண்டு
முன்னுரைத்த தைலமதைக் கவனமாக
மூடியே பீங்கானி லிட்டுவைத்துக்
கண்ணுமனக் கண்ணறிந்து மைந்தா நீயுங்
கருமானத் தைலமின்னங் காட்டுவேனே. ௧௨௮

காட்டுகிறேன் தலைப்பிண்ட மூன்றுதிங்கட்
கன்னியர்க டன்னிடத்திற் சைகையாக
நாட்டுகிறேன் முன்சொன்ன தியானஞ்செய்து
நாரணியே பூரணியே யென்றுமைந்தா

சூட்டுகிறேன் சுழிமுனையில் மனக்கண்ணூட்டிச்
சுருதிபர வெளிவெனவே மனதிற்றங்கி
மூட்டுகிறேன் பிண்டமதை யெடுத்துவந்து
முன்சொன்ன படிபோலப் பாகஞ்செய்யே. ௧௨௯

செய்யப்பா பராபரைக்குப் பூசைசெய்து
சிந்தையுடன் தைலமதை யெரித்துநீயும்
அய்யப்பா கிலியுமென்று சவ்வென்றோதி
யானந்தம் பொங்கியிட வருளேகொண்டு
பொய்யபபா போகாது தைலந்தன்னைப்
புத்திரனே பீங்கானி லடைத்துக்கொண்டு
மெய்யப்பா கடுகையுந்தான் பதனம்பண்ணி
மேதினியிற் சித்துவிளை யாடுவாயே, ௧௩௦

ஆடுவது மஷ்டகர்ம வித்தைக்கெல்லாம்
அப்பனே இப்பிண்ட மதிகமாகும்
நாடுவது வைத்தியத்திற் கிதுவேயாகும்
நலமான வாதமெல்லாங் கொள்ளையாகும்
மூடுவது சுழிமுனையைப் பார்த்தேயோது
சொல்லாதே தைலமதைச் சொன்னேன்சொன்னேன்
நாடுவது குலதெய்வந் தன்னைப்பார்த்து
நலமான அஷ்டகர்மம் நாடிச்செய்யே ௧௩௧

செய்யப்பா இன்னமொரு கருவுஞ்சொல்வேன்
திரண்டெடந்த தலைப்பிண்ட மதிகமப்பா
மெய்யப்பா திங்களுந்தான் பத்துமாகி
மேலான நிறைபிண்டஞ் சமூலம்வாங்கி
வையப்பா முன்சொன்ன படிபோலத்தில்
மைந்தனே சூடமொரு பலந்தான்பத்து
பொய்யப்பா போகாமற் சாபந்தீர்த்துப்
புத்திரனே தைலமதை யிறக்கிக்கொள்ளே. ௧௩௨

கொள்ளடா தைலம்பிங் காணிலிட்டுக்
  கூட்டிடுவாய் சவாதுடனே புனுகுஞ்சேர்த்து
அள்ளடா கடுகுதனைப் பதனம்பண்ணி
  யாத்தாட்கும் வடுகனுக்கும் பூசைபண்ணி
உள்ளடா தனையறிந்து சூட்சங்கண்டு
  ஒளியான முச்சுடரை யொன்றாய்ப்போற்றித்
துள்ளடா தூள் தூரியா தீதந்தன்னைச்
  சொல்லாத மந்திரத்தா லறிந்துபாரே. ௩௩

பாரப்பா கேசரியை யடுத்தடுத்துப்
  பாருலகில் அஷ்டகர்மஞ் செய்வதற்கு
ஆரப்பா சேசரியை யார்க்குமூத்தாள்
  ஆயனொடு ருத்திரனும் பிரமன்றானும்
நேரப்பா வடியணிந்து வணங்கிநிற்பார்
  நிலையான சக்கரத்தை நிறுத்தவென்றால்
தேரப்பா அறுகோண மிட்டுமைந்தா
  தெளிவான முக்கோண மதற்குட்சாத்தே. ௩௪

சாத்தடா சூலமிட்டு விந்துவிட்டுச்
  சத்தியமாய் ஓங்கார மேலேயிட்டு
ஏத்தடா சூலவரைக் கெல்லாமைந்தா
  இட்டிடுவாய் ஓங்கார மின்பமாக
வாழ்த்தடா முக்கோணத் துள்ளேதானும்
  வைத்திடுவாய் ஸ்ரீயென்று வணங்கிநீயும்
போற்றடா கிலீயுமென்று கூடவைத்துப்
  பூரணமாய் ஓம்நமசி வாயந்தானே. ௩௫

தானென்ற வில்லெழுத்தை யறுகோணத்திற்
  றவறாம லிட்டிடுவாய் சத்யமாகக்
கோனென்ற வரைவரைக்கு மொவ்வொன்றாகக்
  குவித்திடுவாய் நிலைதனிலே விந்துமைந்தா

தேனென்ற ஐயுமொடு கிலியுமென்றே
 செபித்திடுவாய் கோணத்தி னிடையில்வைத்து
நாவென்று சொல்லுகிறே னைம்பத்தொன்று
 லக்கமிட்டுச் சக்கரத்தில் நாட்டுவாயே. கரு௫

நாட்டியே வரைபுறந்த வெழுத்துக் கெல்லாம்
 நடுவில்வைத்து ஓங்காரஞ் சுற்றிக்கட்டிப்
பூட்டியே சொர்னமதாற் றகடுசெய்து
 புத்திரனே சக்கரத்தை வரைந்துகட்டிக்
கூட்டியே சந்தனத்தாற் பலகைசெய்து
 கூறுவாய் பலகையிலே தமருமிட்டுச்
சூட்டியே பலகையிலே தகடுவைத்துச்
 சொல்லுகிறே னங்காயக் கருவும்பூசே. கரு௬

பூசியே செவ்வரளிப் புஷ்பம்வாங்கிப்
 பூரணியே யென்றுமன தாறுதியாகத்
தேசியே கேசரியே தாயேயென்று
 தினந்தோறு மந்திரத்தைச் செபித்துமைந்தா
பேசியே திரியாமல் வாமம்வைத்துப்
 பேரான மாயிசமும் வடைதேன்பாலு
வாசியே கனதடங்க அன்னம்வைத்து
 மாங்கனியோ வற்கடலை பயிறும்வையே. கரு௭

வையப்பா தேங்காயும் பலிதானிட்டு
 வஸ்தான பராபரத்தை வணங்கிப்போற்றி
மெய்யப்பா சவாதோடு புனுகுஞ்சாற்றி
 மேலான சந்தனமுங் கரைத்துப்பூசி
பொய்யப்பா சொல்லவில்லை தூபதீபம்
 போற்றிடுவாய் கைமுறையாய்ப் புருவமேவி
அய்யப்பா கிலியுமென்று ஸ்ரீயுங்கூட்டி
 படங்காத வோங்காரஞ் சேருசேரே. கரு௮

சேரடா மசியென்றும் நசியென்றேதான்
சேர்த்தொன்றாய்க் கூட்டியுந்தான் தியானஞ்செய்து
ஆரடா லட்சமுறு வடுக்கவோதில்
அப்பனே அவள்வந்து யெதிரேநிற்பாள்
நேரடா வுனைப்பாரு பயந்திடாதே
நின்றிடுவாய் பூரணத்தின் நிலையைப்பார்த்து
வேரடா மனம்வேறாய் நினைத்தாயானால்
வெடித்திடுமேசிரசிரண்டாய்வெடிக்குந்தானே. கசய

தானென்ற கேசரியாள் சித்தியானாற்
சகலசித்தும் விளையாடித் தன்னைக்காட்டும்
தேனென்ற அஷ்டகர்ம மெல்லாமடுஞ்
செகமாயை சிவமாயை யெல்லாஞ்செய்வாய்
ஊனென்ற ரவிமதியு முனைக்கண்டா
லோடுமடா ரவிமதியு மொழிந்துபோகும்
கோனென்ற குருவருளா லறிந்துநீயுங்
குணமான விந்தவித்தை செய்துபாரே. கசக

பாரப்பா பூதமொடு கணங்களோடு
பார்தனிலே கரடிபுலி பணிந்துநிற்கும்
ஆரப்பா வரசரெல்லாம் பணிவார்கண்டாய்
ஆயிழைமா ருனைக்கண்டால் மயங்கிவீழ்வார்
சேரப்பா வுன்வாக்காற் சொன்னதெல்லாஞ்
செந்தீயாய்ப் பற்றுமடா தெளிவாய்மைந்தா
கூரப்பா வகத்தியமா முனியேயையா
கூறுகிறே னுனக்காகக் கூறியைக்கேளே- கசஉ

கேளடா அந்தமுறை சொல்லாரப்பா
கிருபையுட னின்னமொரு சக்கரந்தான்
ஆளடா மனோன்மணியைப் பூசைபண்ண
அப்பனே னவகோண மிட்டுமைந்தா

வாளடா விருவளையம் வாசல்நான்கு
மைந்தனே சூலமிட்டோங் காரங்கட்டித்
தேளடா பிரமனுருத் திரனும்மாலுஞ்
செப்புகிறேன் சதாசிவத்தின் கூறுதானே. ௧௪௩

தானென்ற மயேஸ்வரனு மிவர்கடன்னைச்
சாற்றடா வரையினடுக் குள்ளேமைந்தா
தேனென்ற பஞ்சசத்தி யெழுத்தைநாட்டித்
தெளிவான வசுக்களையு மருகேவைத்துக்
கோனென்ற கணேசனும்வல லையுமாகக்
குறியடா கீழ்வாசல் தன்னில்வைத்து
நானென்று சொல்லாமல் வைத்துப்போற்றி
நாதாந்தப் பூரணத்தை மன்திற்றங்கே. ௧௪௪

தங்கியே வடவாசல் வடுகன்றன்னைத்
தவறாமல் வைத்திடுதற் பரத்தைப்போற்றி
அங்கியே யெழுப்பியடா தென்வாசற்கீ
ழடங்களுக்கு மௌனயிருததி யருளைப்போற்றி
மயங்கியே போகாமல் மேல்வாசற்கீழ்
மாறாத துவாரபா லகரைவைத்துப்
பங்கியே பராபரையா ளிருப்பளென்று
பாரடா வாலைபஞ்சாட் சரமும்போடே. ௧௪௫

போடென்று சொன்னபடி பிதுங்கொட்டாமற்
போற்றடா செவ்வரளிப் புட்பத்தாலே
நாடென்று சொர்னமதாற றகடுசெய்து
நலமான சக்கரத்தை வரைந்துகட்டிக்
கூடென்றேன் பச்சரிசி யாலேமைந்தா
குருவான பீடமென்று குறியாக்காட்டித்
தேடென்று தேடுமறேன் மணியாள்வாலே
சித்தியா யிருப்பதற்கு வகைதான்கேளே. ௧௪௬

கேளப்பா இலக்கமதோ வைம்பத்தொன்று
கிருபையுடன் வரையிலேதான் மாறிப்போடு
ஆளப்பா வைங்காயந் தகட்டிற்பூசி
அம்மைபரா சத்திமனோன் மணியேயென்று
வாழப்பா அட்சரத்தை யெடுத்துக்கொண்டு
மைந்தனே பீடத்திற் றெற்வைசாற்றி
பாழப்பா போகாமல் மஞ்சணீராற்
பாலகனே சவாதையுந்தான் கரைத்துக்கொள்ளே.

கொள்ளடா சந்தனமும் புனுகுஞ்சேர்த்துக்
குருவான பீடமதிற் குணமாய்ச்சாத்தி
அல்லடா நசியென்று சாபந்தீர்க்கே
ஆதாரந் தனைப்பார்த்தவ் வருளைப்போற்றிச்
சொல்லடா கும்பநிறை கும்பம்வைத்துச்
சொகுசான தேங்காயு மேலேசாத்திச்
செல்லடா சிவானந்தி குருவாமொன்று
சேரடா பூரணத்திற் றெளிந்துபாரே. கசஅ

பாரடா தூபமொடு தீபம்வைத்துப்
பாலகனே பாணமுந்தான் கூடவைத்து
ஆரடா கனிவர்க்கம் வடைகள்வைத்து
அப்பனே தேங்காயைப் பலிதானிட்டு
நேரடா விளநீருந் திறந்துவைத்து
நேசமுட னிலுமிச்சங் கனியுஞ்சாத்தித்
தேரடா சக்கரத்திற் புட்பஞ்சாத்தித்
தெளிவான பாத்திரங்கள முன்னேவையே. கசகூ

வையப்பா பாத்திரங்கள் பனிரண்டாகும்
வஸ்துவிட்டுப் பாத்திரத்திற் றேனும்வைத்துச்
செய்யப்பா சர்க்கரையும் பாலுமிட்டுத்
தெளிவான ரசங்களையுங் கூடச்சேர்த்துப்

பொய்யப்பா போகாமல் மைந்தாமைந்தா
பூரணிக்கும் பரமானம் புகழ்ந்துவைத்து
மெய்யப்பா தற்பணங்க ளனேகஞ்செய்து
மேலான லாடமதில் விரும்பிநிலலே. ௧ரு०

நில்லடா பொரிக்கறியோ டன்னம்வைத்து
நிலையடா மாமிசமுங் கூடவைத்து
அல்லடா அண்டமுந்தான் பாதிவைத்தே
யப்பனே யவல்பயறு கடலைவைத்துச்
செல்லடா சிவகாமி தேவியென்று
செலுத்தடா மனோன்மணியே தாயேயென்று
சொல்லடா அம்மென்றுங் கிலியென்றோதிச்
சொற்பெரிய ஐயுமென்று தொழுதுபாரே. ௧ருக

பாரப்பா சிங்குவங்கு என்றேசேர்த்துப்
பாலகனே மசியெனவே பதியில்நின்று
சேரப்பா லட்சமுருத் தெளிந்தேயோதித்
தேவியுட நிலையறிந்து தீர்க்கம்பெற்று
வேரப்பாவெறும்பிலுக்கா யலைந்திடாம
லிந்துவெட்டந் தனையறிந்து விரும்பியோதி
ஏரப்பா சதாகாலம் நின்றுமைந்தா
இருதயத்தை நீநினைந்தே யெண்ணிப்போற்றே ()

போற்றிடவே மனோன்மணியை மைந்தாமைந்தா
புவனமெல்லாந் தானடுங்க வருகுவாளாம்
ஏற்றிட வேநினைந்து பதறிடாத
இவள்மோசம் பொலலாது சொன்னேனப்பா
சாற்றிடவே அவள்வருகும் வேளைதனனிற்
றுறணையா யிமமென்று தரித்தேயோதி
வாழ்த்திடவே குலதெய்வந் தன்னைப்பார்த்து
வணங்குவாய் சொன்னபடி கேட்பாள்பாரே ௧ருங

பாரப்பா இவள்கிருபை பெற்றமைந்தா
 பராபரையா ளென்றுசொல்லிப் பணிந்துபோற்றி
ஆரப்பா அஷ்டகர்ம வித்தைக்கெல்லாம்
 ஆத்தாளுங் கொடுமையடா பொல்லாள்பொல்லாள்
ஏரப்பா இவளுடைய மாயைதானும்
 எமனையும் விரட்டித்தான் பிடித்தேகொள்ளு
தேரப்பா பூதகணம் பிரமாருத்ரன்
 தெளிவான மால்தானும் வணங்குவானே. கருச

வணங்குவார் தேவர்களும் அழைத்தபோது
 வந்திடுவார் சொன்னபடி பணிவேனென்பார்
இணங்காத பேர்களையு மிணங்கச்செய்வாள்
 எவ்வுயிரு முனைக்கண்டாற் பணியுங்கண்டாய்
தனங்கோடியீய்ந்தாலுஞ் சொல்லிடாதே
 தலைதெறித்துப் போயிடுவாய் சத்யம்சத்யம்
குணங்கெட்டே யலைந்தாலுஞ் சித்தியில்லை
 குருவானபராபரியே யென்றுபோற்றே. கருரு

போற்றடா தோலாசை நினைத்தபோது
 புழுக்குழியி லேவிழுந்து பொசுங்கிப்போவாய்
ஆத்தாட்குச் சரிப்போமோ இந்தப்பேச்சு
 அழிகுழியை நினைத்தாலு மழிந்துபோவாய்
கூத்தாடித் திரியாதே குருவைப்போற்று
 கூபமொன்று நினையாதே குறியைப்பாரு
பார்த்தாலும் பசியுண்டோ பாவிகோலம்
 பாதகர்க்குக் கிடைக்குமோ பாருபாரே. கருசு

பாரப்பா ஜெகசால மாடுந்தாயைப்
 பாரிலறி வாரோபழி காரிதன்னை
ஆரப்பா அந்தாலு மனதடங்கி
 ஆசையற்று ரோசமற்று அருளைப்போற்றி

நேரப்பா நின்றநிலை தன்னைப்பார்த்து
நிலையான பூரணத்தை நினைவாய்க்கொண்டு
தேரப்பா தேட்கொடுக்காங் கொடுக்காந்தேளைத்
தேனென்று நீயறிந்து திறமாய்நில்லே. கருஎ

நில்லடா ஒருமனதாய் நினைவிற்சாற்றி
நிற்கையிலே நின்வசமே அவளுமாவாள்
அல்லடா அஷ்டாங்க முடிவுஞ்சொல்வாள்
ஆறுவரையீதென்றே யருளிச்சொல்வாள்
சொல்லடா வாதநிலை வைத்யஞ்சொல்வாள்
சொல்லாத மவுனமெல்லாந் துடியாய்ச்சொல்வாள்
வில்லடா வினைதீர்ப்பாள் வியாதிதீர்ப்பாள்
வேண்டியதெல்லாங்கொடுத்து விடுகுவாளே. கருஅ

விடுகுவாள் விஞ்சையென்ற மவுனத்தாலே
வேதாவின் விதியுமுதற் பிழைதானாகும்
கடுகளவு நேரமடா மனக்கண்ணூட்டிக்
கருத்தொன்றாய்க் கபாலியென்று நினைத்தீரானாற்
றொடுகுறிபோல் நினைத்தபடி யெல்லாங்காட்டுந்
தொந்தொமெனச் சிலம்பொலியுங் காதிற்கேட்கும்
படுவினையு மற்றுபிணிப் பறந்துபோகும்
பார்தனிலே சகலசித்து மாடலாமே. கருகூ

ஆடலாமறிவாலே அறிவைக்கண்டு
அடங்காத பரணமுந்தா னமுதங்கொண்டு
கூடலாமனோன்மணியே வாவாவென்று
துலங்கலாந் தேகசித்தி யானால்மைந்தா
நாடலாந் தேசமெங்கு மலைந்திட்டாலும்
கல்மான காடுமலை யேறினாலும்
வீடெலாந் தெய்வமென்று பணிந்திட்டாலும்
விஞ்சைதனை யறியாதார் வீணர்தானே. கசுo

தானென்று வாய்மதங்கள் பேசிப்பேசித்
தமர்வாசற் குள்ளிருக்காச் சவங்கடன்னை
ஏனென்று கேளாதே யெதிர்நில்லாதே
ஈஸ்வரியாள் பாதமதை மறந்திடாதே
வானென்ற வையகத்தைப் பழித்திடாதே
வாய்மதங்கள் பேசியடா அழிந்திடாதே
கோனென்ற குருவருளை மறந்திடாதே
குவலயத்தி லலையாதே கூர்ந்துபாரே. ௧௬௧

பாரப்பா ஜெகஜால ஞானியோர்கள்
பசிபொறுக்க மாட்டாமற் புரட்டுப்பேசி
ஆரப்பா வேடங்கள் தரித்துக்கொண்டு
அவன்காலிற் குறட்டிட்டே யலைவான்பாவி
நேரப்பா நேர்நிலையு மறியாத்தோசி
நிலையான பராசத்தி பூசைக்கொன்று
தேரப்பா சத்தியமாய்ப் புரட்டுப்பேசித்
தெளிவான சித்தன்போற் றிரிவான்காணே. ௧௬௨

காணடா வாசிநிலை காட்டச்சொல்லு
கங்குல்மதி ரவியுடைய கருணைக்கேளு
தானடா கற்பநிலை காட்டச்சொல்லு
சாரணையுந் தாரணையுஞ் சாற்றச்சொல்லு
கோனடா குருநிலையைத் தெரியக்கேளு
குலதெய்வ மெஃதென்று குறித்துக்கேளு
நானடா நானிருக்கு மிடந்தான்கேளு
நவிலாட்டாற் பல்லுதிற வடித்துத்தள்ளே. ௧௬௩

தள்ளடா மாயைதனை மறந்துதள்ளு
தவத்தோரைக் கண்டாக்காற் றாழ்ந்துகொள்ளு
சொல்லடா வெறும்பேச்சுப் பேசிடாதே
சோதனையும் பார்த்துவிடு இந்தப்பூசை

அல்லடா மனோன்மணியுஞ் சித்தியாவாள்
அருளான அருளவந்தே யுன்னைக்காக்கும்
கள்ளடா கள்ளுணடு திரிந்திடாதே
கருத்தலைந்துப்போகாதே கருவைப்பாரே. ௧௬௪

பாரப்பா அஞ்சனத்தை குறியைக்கேளு
பாலகனே செம்போத்தின் விழியைவாங்கு
ஆரப்பா தேவாங்குப் பித்துஞ்சேரு
அப் னே கரும்பூனைப் பித்துஞ்சேரு
நேரப்பா நிலக்காக்கைப் பித்துஞ்சேரு
நிலையான பச்சோந்திப் பித்துஞ்சேரு
சேரப்ப அளிஞ்சிவிரைக் காந்தஞ்சேரு
செம்பருத்திப் பூவினுட சாருவாங்கே. ௧௬௫

வாங்கடா மத்தஞ்சார் பச்சைபபாம்பு
வகையான முறைமசக்கிச் சாறுகூட்டித்
தாங்கடா மின்னட்டான் பூச்சிசேரு
தவறாதே கேசரியின் பித்துஞ்சேரு
ஓங்கடா அவுரிச்சா ரதனாலாட்டி
யுத்தமனே சரிபிடையா யெல்லாஞ்சேர்த்துப்
பாங்கடா பன்னிரண்டு சாபமட்டும்
பாலகனே அறைத்திடுவாய் பதியைப்பார்த்தே. ()

பார்த்தடா வுருண்டைசெய்து வுலறவைத்துப்
பராபரத்தின் சாபமெல்லா நிவர்த்திசெய்து
போத்தடா ஐங்காயத் தைலஞ்சேரு
புத்திரனே முக்கடுகு கூடச்சேரு
ஏத்தடா நிறைபிண்டத் தைலஞ்சேரு
என்மகனே மூன்றுதிங்கட் டைலஞ்சேரு
வார்த்தடா வுருண்டையிலே தைலம்விட்டு
வளமாக முன்போலே யறைத்துக்கொள்ளே. ௧௬௭

கொள்ளடா அறைத்ததையும் வழித்துமைந்தா
கூறுகிறேன் சவாதோடு புனுகுஞ்சேர்த்து
அல்லடா சிமிழில்வைத்துப் பதனம்பண்ணி
யாத்தாட்டும் வடுகனுக்கும் பூசைசெய்து
சொல்லடா அஞ்சனா தேவியென்றே
ஜெபம்பண்ணி லட்சமுருத் திடமாய்நின்று
சொல்லடா நசிமசியென் றத்தோடோதித்
துடுக்கான கலியுமென்றே சொல்லுவாரே. ௧௬௮

சொல்லென்றன் றேவிதனை நினைத்துப்போற்றி
துரியத்தைப் பார்த்துமினித் தொடர்ந்துகூடி
நில்லென்றேன் றேவிதனை நினைத்துப்போற்றி
நீமகனே அணுவளவு மையைவாங்கிக்
கொள்ளென்றேன் பூதமொடு கணங்களெல்லாங்
கூத்தாடிக் குதித்துவே றிடத்திலோடும்
அல்லென்ற வினைபோகும் கொடியபாவம்
அகலுமே அஞ்சனத்தி னருமைபாரே. ௧௬௯

பாரப்பா அஞ்சனத்தைக் கையிலிட்டுப்
பாதாளமூடுருவப் பார்த்தாயானால்
ஆரப்பா பாதாள முருவிக்காணும்
அடங்காத சேடனுட முடியுங்காணும்
நேரப்பா பூதமொடு கணங்கடோணும்
நிலையான தேவரொடு முனியுங்காணும்
பேரப்பா வென்னைப்போலே சொல்வாருண்டோ
பேசாத பூரணத்தைப் பேணிக்கொள்ளே. ௧௭௦

கொள்ளடா பூரணத்தை நினைவாய்ப்பார்த்து
கொடியதொரு அஞ்சனத்தைக் கொடுத்திடாதே
அள்ளடா வென்னைப்போலே சொல்வாரில்லை
அடங்காத அஞ்சனத்தி னருமைதன்னைத்

துள்ளடா வாயாலே சொல்லப்போமோ
 தோஷம்வரும்பாவம்வருந் துன்பமாகும்
விள்ளடா வெறுவாயை மென்றிடாதே
 வேதாந்த தக்பரத்தை விரும்பிப்பாரே. ௧௭௧

பாரப்பா கவனம்வைத்துப் பரத்தினின்று
 பஞ்சசத்தி பூசைதனைப் பழக்கஞ்செய்து
ஆரப்பா ஆனந்த வருளைப்பாடி
 யம்பலவர் தன்னையுந்தா னடுத்துக்காத்து
நேரப்பா அறுபத்து நான்குசித்தும்
 நினைத்ததெல்லாங் கைவசமாய் நிற்கும்பாரு
வேரப்பா மனமடங்கி யறிவினின்று
 விஞ்சையென்ற மூன்றெழுத்தைவிரும்பிக்காணே. ()

காணடா விஞ்சைநிலை யறியாப்பாவி
 கடைத்தேற மாட்டான்பார் கவலையாகி
நானடா விஞ்சைநிலை யறிந்ததாலே
 நாதாக்க ளனைவோரும் வணங்கினார்கள்
வீணடா திரியாமல் விஞ்சைபாரு
 வெளியிலொரு வெளிகாணும்வெளியாய்மைந்தா
கோணடா குகைவாசற் குள்ளேமூவர்
 குறிபார்த்து நிலைபார்த்துக் குறியென்றாரே. ௧௭௩

குறிவழியாங் குறிக்குள்ளே நாதந்தோன்றிக்
 கொண்டதடா சராசரங்க ளனைத்துமைந்தா
அரியொளியா மரிக்குள்ளோருருவிருந்தோன்றி
 ஆகாச மந்திரமு மதுவேயாகித்
தெரியொளியாம் மொளியாலே யொளிவுகண்டாய்
 க்ஷேமமடா அழியாது தெளிந்துபாரு
பரியொளியாம் பரியினுட காலைதூக்கிப்
 பவனிவரப் பாவமெல்லாம் பரக்கும்பாரே. ௧௭௪

பாரப்பா சகாரத்தி னடுவேவிந்து
படர்ந்ததடா விம்மென்ற வெழுத்தாய்த்தோன்றி
ஆரப்பா விந்துநிலை யறியாப்பேர்க்கு
ஆத்தாளு மப்பனுந்தா னவர்க்கங்கேது
நேரப்பா நாதமுடன் விந்துசேர்த்து
நிலைத்ததடா தேகமது நிலையதாச்சு
கோரப்பா குவிந்திடவே மனக்கண்ணாருங்
கொடியவினை தானகற்றுங் குறியில்நில்லே. ௧௭௫

நில்லடா விம்மென்ற மவுனத்தாலே
நினைப்பதுவும் மறப்பதுவு மதனாலாச்சி
சொல்லடா வென்றாயா ரெனக்குச்சொன்னாள்
துன்பமெல்லாம் நீக்கியினித் துருவமேவி
கல்லடா கர்மமெல்லாம் விட்டுப்போகும்
கண்மணியே புலத்தியனே சொன்னேனகேளு
வல்லடா வாய்பேசா மவுனத்தாலே
வஸ்தான வஸ்துவுமே வாய்க்குந்தானே. ௧௭௬

தானென்ற வுலகமெல்லாம் வசியமாகச்
சத்தியமாய்ச் சொல்லுகிறேன் மைந்தாமைந்தா
ஊனென்ற தேவாங்கு மூளைவாங்கி
யுத்தமனே பின்காலின் சதையுங்கூட்டித்
தேனென்ற திகைபூண்டுப் பூச்சிசேரு
செப்புகிறேன் சுழல்வண்டு கூடச்சேர்த்துக்
கோனென்ற பேய்க்கருப்பஞ் சாறுவிட்டுக்
கொடியதொரு பேய்த்தும்பைச் சாறுங்கூட்டே. ()

கூட்டியே நிலைப்பனையின் கிழங்குஞ்சேரு
கொடியபுலா மணக்கரையுங் கூடச்சேரு
நாட்டியே மின்மினியான் பூச்சிசேரு
நலமான பேய்ப்பீர்க்கின் சாற்றாலாட்டி

மாட்டியே யொருசாம மறைத்துமைந்தா
மார்க்கமுடன் சமனுக நிறுத்துக்கொண்டு
மூட்டியே யுலைவைத்துச் சாபந்தீர்த்து
மூட்டடா மங்கையர்கள் நாதம்வாங்கே, களஅ

வாங்கியே மறுபடியும் மைந்தாநீயும்
வளமாக வொருஜாமமறைத்தருட்டிச்
தாங்கியே வுலைவைத்துப் பதனம்பண்ணித்
தீபாம லிங்காயத் தைலம்விட்டு
ஓங்கியே முக்கடுகு கூடச்சேர்த்து
உத்தமனே நிறைத்தபிண்டத் தைலங்கூட்டி
மாங்கினியா மென்றுசொல்லி மனதிற்கொண்டு
மைந்தனே தைலம்விட் டரைத்துக்கொள்ளே. ()

கொள்ளடா சாமமொன்றே அரைவைசெய்து
கூறுகிறே னினிக்கண் சட்டிவாங்கி
அல்லடா மருந்தையுந்தா னுள்ளேபூசி
யப்பனே யுலைவைத்தே யெடுத்துக்கொண்டு
சொல்லடா வலம்புரிச்சங் கெண்ணெய்விட்டுத்
தேவியுடநாதமதின் சீலைவாங்கிச்
சொல்லடா விளக்கேற்றிச் சட்டிதன்னிற்
சேரடசொப சாரமுடன் கவிழ்த்துப்போடே. கஅ0

போடென்று சொன்னபடி யின்னம்நீயும்
பூரணியா மோகினியைத் தியாம்பண்ணிக்
கூடென்று முக்கோண மிட்டுமைந்தா
குருவறிய விந்துவிட்டுச் சூலமிட்டு
நாடென்று வோங்காரங் கிலியுஞ்சேர்த்து
நடுவேதான் ஸ்ரீயென்றே நாட்டிவைத்துப்
பாடென்று பட்டமண துறுதியாகப்
பலகார மவல்பயறு வைத்துப்போற்றே, கஅக

போத்தடா பொரிக்கறியும் பானமுந்தான்
புத்திரனே பாலன்னம் புகழ்ந்துவைத்தே
ஏத்தடாசெஞ்சாவற் பலிதானிட்டே
யென்மக்காள் சவாதோடு புனுகுஞ்சாற்றி
வாழ்த்தடா தேங்காயும் பெலிதானிட்டு
வருந்தடா வோங்கிலியும் ஸ்ரீயுமென்று
சாத்தடா லட்சமுரு வோதுவோது
சத்தியமாய் நிலையில்நின்று சார்வாய்ப்பாரே. ௧௮௨

பாரப்பா சட்டிதனை யெடுத்துக்கொண்டு
பராபரையே மோகினியே யென்றுபோற்றி
ஆரப்பா மையுந்தா னிருக்கும்போது
அப்பனே மைதானும் படர்ந்துநிற்கும்
நேரப்பா மைதனையும் வழித்துநீயும்
நிச்சயமாய்ச் சவாதோடு புனுகுஞ்சேர்த்துத்
தேரப்பா சோடசொப சாரமாகத்
தேவியென்று சிமிழதிலே யடைத்துக்கொள்ளே. ()

கொள்ளடா சுழிமுனையில் மனக் கண்ணூட்டிக்
குருவான தேசியென்று திலதம்போட்டு
அல்லடா வெளியேறிப் பார்க்கும்போது
அரசரொடு செகமுழுதுந் தனதாய்ப்போகும்
மல்லடா பூதகண மெதிரேநிற்கும்
வாய்பொத்திச் சொன்னபடி வணங்கிக்கேட்கும்
நில்லடா மங்கையர்கள் தொடர்வார்கண்டாய்
நின்சமுகங் கிடையாது நினைவாய்ப்பாரே ௧௮௪

பாரப்பா திரிலோகத் தார்களெல்லாம்
பார்த்தவுடன் பணிந்திடுவா ருன்னைத்தானும்
ஆரப்பா விதைப்போலே வசியமுண்டோ
அஷ்டகர்ம வித்தைக்கு மதிகமாகும்

நேரப்பா பன்னிரண்டு வருஷங்காத்து
நீமகனே திரிந்தாலுங் கொடுத்திடாதே
வேரப்பா வீண்பேச்சுப் பேசிடாதே
விந்துவட்டந் தனையறிந்து வெளியைப்பாரே. ௧௪௫

பாரப்பா லோகத்தா ரறிந்தமையைப்
பார்தனிலே கண்டாலுங் கொல்வாருன்னை
ஆரப்பா இருக்குதென்று சொல்லிடாதே
யடியோடே யுன்குலமு மழிந்துபோகும்
நேரப்பா வென்றுயா ரிவையுஞ்சொல்லி
நிலையான மைதனக்குச் சாபம்போட்டாள்
கோரப்பா வெனக்காகச் சொன்னளாத்தாள்
கூறுகிறேன் கும்பமுனி யுனக்குத்தானே, ௧௪௬

தானென்ற மையிருக்கு தென்றுசொல்லித்
தவத்தோரைப் பழித்தாக்காற் சாபமாகும்
கோனென்ற கற்புடைய மாதர்தன்னைக்
குவலயத்தில் மையாலே மயக்கினக்கால்
நானென்று சொல்லுகிறேன் மக்காள்மக்காள்
நாசமடா சயம்வந்து நாடிக்கொல்லும்
தேனென்ற மோகினியைச் சிரசிற்கொண்டு
சித்தம்வைத்துக் குலதெய்வர் தன்னைப்போற்றே.

போற்றென்று ளென்னுடைய ஆத்தாள்தானும்
புருவநடுத் தமர்நடுவே யிருக்கச்சொன்னாள்
ஏற்றென்றாள் நிலையறிந்தே யெனக்குச்சொன்னாள்
எட்டாத நற்கனியைப் பரித்தேயீந்தாள்
வாழ்த்தென்றாள் சிங்குவங்கு வாசல்தாண்ட
வல்லாரை பிடுங்கியுந்தா னடக்கிக்கொண்டேன்
சாற்றென்று சொன்னமொழி யறிந்துகொண்டேன்
ஷடாட்சரனென் றெனக்குப் பேருபேரே. ௧௪௮

பேராகி யெனைப்போலே பேறுபெற்றுப்
பெண்மாயை யத்தனையு மறுத்துத்தள்ளி
நேராகி நிலையுறிந்து புவனைபாதம்
நின்றனடா கோடிவரை நிலையைப்பார்த்து
வேராகி யொளியாகி ரூபமாகி
வெட்டவெளிக் குள்ளிருந்து வெளிச்சமாகி
கூராகி யசுரர்களை மடியவெட்டிக்
குறிவெட்டிப் பார்த்தேயான் கூடினேனே. கஅகூ

கூடினேன் பராபரத்தின் முடியிலேதான்
கொண்டனடா பஞ்சகத்தி கூறினாலே
ஆடினேன் தில்லையிலே கலைத்தூக்கி
யம்மம்மா வாசியென்றே யருளைப்போற்றி
நாடினேன் வாசியென்றே யருளைப்போற்றி
நாட்டியே யாறெழுத்தால் முருகாவென்றாள்
கூடினேன் சபைநடுவே சென்றேன்யானுங்
குருவான பரங்கிரியா னென்றாள்பாரே. கசுo

பாரடா வாசியென்ற அம்மாவாசி
பார்தனிலே யார்க்குமினித் தெரியாதையா
ஆரடா வாசியென்ற அம்மாவாசி
யாதார மாறினிலும் நடுவேதோன்றி
நேரடா சிவலிங்க ரூபமாகி
நிறைந்தபரா பரைதானு வுடையுமாகி
ஏரடா விவர்களுட வாசிதோன்றி
யிருந்ததடா குலதெய்வ மென்றுந்தானே. கசுக

தானென்ற குலதெய்வந் தன்னைமைந்தா
தவத்தோர்க ளறியாமற் கெட்டுப்போனார்
வானென்ற வானவர்கோ னறியாவிஞ்சை
வாயாலுஞ் சொல்லார்க ளிந்தவிஞ்சை

மாவென்ற மகாரமல்லோ இம்மென்றுச்சு
மாறாத சிரஞ்சீவி கொடுக்கலாச்சு
கோவென்ற அஷ்டகர்ம மாடலாச்சு
குகைவாசல் தன்னிலேயுங் கூட்டும்பாரே. ௧௯௨

பாரப்பா பேசாத வெழுத்தினாலே
பரலோக முழுவதுந்தான் றனதாய்ப்போச்சு
ஆரப்பா அஷ்டகர்ம வாலைமைந்தா
யார்தனக்குஞ் சொன்னபடி யாடமாட்டாள்
நேரப்பா பஞ்சசக்தி தீட்சைகண்டு
நிலையான மகாரமென்ற மவுனம்பார்த்தால்
தேரப்பா வறுபத்து நான்குசித்துந்
தேவாதி தேவனென்று மாடலாமே. ௧௯௩

ஆடலாஞ் சித்தரொடு முனிவரெல்லாம்
அவனிதனி லறியாம லிருக்கவென்றுற்
பாடலாம் நங்கைதனைத் தைலம்வாங்கிப்
பார்மகனே வென்குன்றித் தைலஞ்சேர்த்து
நாடெலா மறிந்திடவே மைந்தாகேளு
நாய்ப்பாகல் வித்தினுட தைலஞ்சேர்த்துக்
கூடலாம் பேய்ப்பீர்க்கின் வித்துஞ்சேர்த்துக்
குலகுருவ தானபுல்லா மணக்குஞ்சேரே. ௧௯௪

சேரடா மத்தஞ்சார்த் தைலம்வாங்கித்
திடமாக வெரியால மெண்ணெய்சேரு
ஆரடாகேசரியின் பீஜம்வாங்கி
யதினுடவே தைலமெல்லா மடைத்தேமைந்தா
நேரடா மண்டலந்தான் றாக்கிவைத்தே
நிசமாக நசியென்றே நீதானோதி
கோடா வாய்ப்பேச்சுப் பேசிடாமல்
விஞ்சைதனை யோதியடா எடுத்துக்கொள்ளே. ௧௯௫

கொள்ளடா நிறைபிண்டத் தைலந்தன்னற்
குருவான மருந்தினிலும் விட்டேயாட்டு
அல்லடா திகைப்பூட்டுப் பூச்சிசேர்த்தே
யருளான பராசத்தி யம்மாவென்றே
சொல்லடா சொலலிியே நீ நாலுஜாமம்
சுகுமார மாயரைத்தே யுலரவைத்து
வல்லடா வுலர்ந்ததையு மெடுத்துக்கொண்டு
வஞ்சிங்கு மென்றுசொலலி வருந்தியோதே. கககூசு

ஓதடா மவுனத்தின் நில்லைப்பார்த்தே
யுத்தமனே மருந்தையுந்தா னெடுத்துக்கொண்டு
சூதடா சூதகத் திரிந்திடாமற்
சொல்லாதே யைங்காயத் தைலம்விட்டு
வாதடா வாயாடிப் போய்விடாமல்
மைந்தனே மருந்தையுந்தான் சாமம்நான்கு
கோதடா அரைத்ததையு முநுண்மைசெய்து
குருவான பராபரத்தைக் கூடிக்கொள்ளே. கககூஎ

கொள்ளடா மருந்தையுந்தா னுலரவைத்துக்
குருவான பராபரையே யென்றுபோற்றி
அல்லடா மூன்றுதிங்கட் டைலமுந்தான்
அருளான முக்கடுகுந் கூடச்சேர்த்துச்
செல்லடா ஜாமமினி நாலுமட்டுந்
திறமாக மருந்தையுந்தா னரைத்துச்சேர்த்துச்
சொல்லடா வுலரவைத்தே யெடுத்துக்கொண்டு
சோதனைகேளின் னின்னமொரு வகைதான்பாரே. கககூஅ

பாரப்பா மங்கையர்கள் நாதம்வாங்கிப்
பருவமுடன் மருந்தையுந்தா னதனாலாட்டி
ஆரப்பா சாமமுந்தா னேழமட்டும்
ஆத்தாளைப் பூசைசெய்து அரைத்துவாங்கி

நேரப்பா ஜவாதுபுனு கோடுசேர்த்து
நிலையான பராசக்தி தியானஞ்செய்து
தேரப்பா ஸ்ரீயென்று கிலியென்றோதித்
திடமான சிமிழ்தனிலே மையைவையே. ௧௯௯

வையப்பா நாதாக்கள் சாபந்தீர்த்து
வகையாக நசிமசிவ வென்றேயோதிச்
செய்யப்பா லட்சமுரு வோதிமைந்தா
தெளிவான சிமிழைபுந்தான் பார்க்கும்போது
ஐயப்பா சிமிழ்தானுந் தெரியாதப்பா
ஐயுங்கிலி யுஞ்சிவய நமாவென்றோதி
மெய்யப்பா பூரணத்தின் நிலையைப்பார்த்து
மேலான சிமிழ்கனையு மெடுத்துக்கொள்ளே ௨௱

கொள்ளடா சிமிழ்கனையு மடக்கஞ்செய்து
குருவான தேசியென்று மனக்கண்ணூட்டி
அல்லடா மையெடுத்துத் தீபஞ்செய்து
அருளான குலதெய்வந் தன்னைப்போற்றி
வில்லடா புருவமதிற் றீட்டினுக்கால்
விண்ணோரு மண்ணோரு முன்னைக்காணார்
சொல்லடா விதுபோலே மறைபபுமைந்தா
சொல்லார்கள் ரிஷிகளொடு சித்தர்தானே. ௨0௧

தானவனால் நீநிலைத்துப் போற்றவேணுஞ்
சாயுஜ்ய பதவியிலே சாரவேணும்
ஊனென்ற பூரணத்தில் நின்றுமைந்தா
உத்தமனே முதுகுவழி யூடேசென்று
மானென்ற மைதனையும் பதனம்பண்ணி
மாநிலத்தோ ரறியாம லடக்கஞ்செய்து
கோனென்ற கோனருளை மனதில்வைத்துக்
குவலயத்திற் சித்துவிளை யாடுவாயே. ௨0௨

ஆடுவாய் அருளான மெய்யிலே
   அவனியிலே தெரியாம லிருந்துகொண்டு
நாடுவாய் பஞ்சசத்தி தன்னைப்போற்றி
   நாதாந்தப் பேரொளியி னடுவேசென்று
தேடுவாய் செகசாலப் புரட்டுவிட்டுத்
   தினந்தோறு மவுனத்தாற் றீர்க்கம்பெற்றுக்
கூடுவாய் குண்டலியின் குறியைப்பார்த்துக்
   குறித்திடுவா யக்கினியைக் கூர்ந்துமூட்டே, ௨௰௧

மூட்டடா கனலெழும்பிக் கொண்டிருந்தால்
   மோசமில்லை தேகமுந்தா னழியாதப்பா
நாட்டடா வக்கினியுஞ் சந்திரனால்
   நாசமடா ரவிதானுந் தேய்ந்துபோகும்
பூட்டடா மதிதானும் வளர்ந்திருக்கும்
   புத்திரனே பேரின்பங் கிடைக்கொட்டாது
வாட்டடா விம்மென்ற வெழுத்தினாலே
   வருந்தடா வஸ்துவென்று வணங்கிக்கொள்ளே. ( )

கொள்ளப்பா முக்கனியைக் கூர்ந்துபார்த்துக்
   குருவான நடுவணையைக் குறித்துப்போற்றி
விள்ளப்பா விஞ்சையாற் [illegible]
   விடுகாதே விஞ்சைமறந் [illegible]
கள்ளப்பா [illegible] வழியும்பாரு
   கனைகாறு மந்திரங்க ளெல்லாந்தீர்த்தி
தள்ளப்பா பூசையொடு நேசமானை
   தவிர்த்திடுவார் நின்னையறிந்த தலத்தோர்தானே. ( )

நானென்ற பஞ்சசத்தி நிட்டைக்கெல்லாந்
   தவறுதே யாதார வீட்டில்லைமந்த்ர
கோனென்ற வோங்காரக் கணேசன்வீடு
   குறித்திடவே யிதழ்தானும் நாலதாகு

தேனென்ற பிரமனுட வீட்டில்மைந்தா
செப்புகிறே னிதழ்தானு மாறதாகும்
வானென்ற மால்வீட்டி லிதழ்தான்பத்து
மைந்தனே யுருத்திரனிற் பனிரண்டாகும்
கோனென்ற மயேஸ்வரனிற் பதினாறாகுங்
குறித்திடுவாய் சதாசிவத்தைக் கூறுவேனே. ௨௦௬

கூறுகிறேன் சதாசிவத்தி லிதழ்தானிரண்டு
கொடியதொரு பரவெளியி லிதழ்தானொன்று
தேறுகிறே னைம்பத்தோ ரிதழுமாச்சு
செப்பார்கள் பெரியோர்க ளார்க்குமைந்தா
ஆறிதழாய்ப் பிறக்குகின்ற சலேநான்கிற்கே
பரியமணி பூரகமா தாரமாச்சு
வேறுமினி நினையாம லாதாரத்தின்
விஞ்சையடா வைம்பத்தொன் றறிந்துகொள்ளே ௨௦௭

கொள்ளடா வைம்பத்தோ ரிதழைமைந்தா
கூட்டடாமுன்சொன்ன வாதாரத்தில்
அல்லடா பஞ்சசத்தி தீட்சைக்கெல்லாம்
ஆதார சக்கரமு மறியவேணும்
விள்ளடா வைம்பத்தோ ரிதழைக்கண்டு
விடாமல்மவு னத்தையுநீ மாறியோது
தள்ளடா சுடுகாடு பாழ்வீடாகித்
தவத்தோர்கள் நிலையறிந்துசாதிப்பாரே. ௨௦௮

பாரப்பா வைம்பத்தோ ரிதழ்தானென்றார்
பராபரையைத் தானறியுங் கூறுகளைக்கேளு
ஆரப்பா வன்பிருந்த விடந்தான்மைந்தா
அடங்காத விடமாச்சு சுடுகாடாச்சு
நேரப்பா குலையல்லோ தெய்வமாச்சு
நிறைந்தரவி யவ்விடமே புகிக்கலாச்சு

தேரப்பா ஆறுதல மிதற்குள்ளாச்சு
தேறடாவன்பிருந்த விடந்தான்காணே. உ0சு

காணடா வன்பிருந்து குவிந்தவீட்டிற்
கலந்ததடா வொருபொருளே மிச்சமாச்சு
தானடா அன்பருக்கு மன்பராகிச்
சதாசிவனைக் கடந்து சாயுச்சியமாச்சு
நானடா வாயிரத்தெட் டிதழுமாச்சு
நந்திகொலுச் சிங்கார நடனமாச்சு
கோனடா குருவிருந்த விடமிதாச்சு
கொளுத்தடா விம்மென்றே குறிபிற்றாமே. உக0

தாமடா பராசத்தி சகலசித்துந்
தானவனும் பரவொளியைத் தன்னைப்பார்த்து
ஆமடா வடிதொழுது வணங்கிப்போற்றி
யறிவான வாமத்தை யவடான்கொண்டு
நாமடா நாமென்ற சொல்லுமட்டும்
நாட்டியே யைம்பதிதழ் சுற்றிக்கட்டி
வாமடா வள்ளியென்ற ரூபங்கொண்டு
வளர்ந்தாளே யேகமென்ற ரூபம்பாரே. உகக

பாரப்பா வேகமென்ற விதழ்தானென்று
பர்வாகத் தோன்றியவள் பாரையுமாகி
ஆரப்பா பரவெளியி னருளைப்போற்றி
யவனடக்கே யவர்தானு முயிருமாகி
நேரப்பா நிஷ்டையொடு சமாதியாகி
நின்றாளே அஷ்டகர்ம வாலையென்றுய்
தேரப்பா பஞ்சசத்தி தீட்சைகண்டு
தெளிவான மவுனமதிற் றிடமாய்நில்லே. உகஉ

நில்லடா முன்சொன்ன வஷ்டாங்கத்தான்
நிறுத்தடா நிலையறிந்து யாகஞ்செய்து

சொல்லடா சதாகால மயறுமற்றுஞ்
றொழுதனடா பஞ்சசத்தி பாதங்கண்டு
அல்லடா நினைத்ததெல்லாங் கொடுப்பாடேவி
யஷ்டாங்க யோகத்தி னருமையாலே
சொல்லடா மகாரமதை விட்டிடாமற்
றொழுதனடா விம்மென்றே துதிதம்பாரே. ௨௧௩

பாரப்பா மவுனமென்ற விஞ்சைக்கெல்லாம்
பராசத்தி பூசைநிறை வேற்றவேணும்
ஆரப்பா பூரணாநந்தா னிறைந்தபோது
ஆத்தாட்கும் வடுகனுக்கும் பூசைசெய்து
நேரப்பா நின்றநிலை விட்டிடாமல்
நேரமொரு பேச்சுகளை நினைந்திடாமல்
தேரப்பா விப்படியே யருளைப்போற்றி
தேவாதி தேவனென்று செப்பலாமே. ௨௧௪

செப்பலா மொப்பியவள் வாவாவென்பாள்
சிவனோடு மந்திரங்களெல்லாஞ்சித்தி
அப்பியே யிம்மென்ற மவுனம்வைத்து
யாசானே யென்குருவே யென்றுபோற்றி
ஒப்பியே பூரணத்தில் வாசிகாணும்
ஓகோகோ வுந்தனிடம் பேசுவாராம்
தப்பியே போகவென்றுப் போகொட்டாது
சாதகமாய்க் கவிழ்ந்துதம் பிக்கும்பாரே. ௨௧௫

பாரப்பா வுனைப்போலே மைந்தாநீயும்
பாரடா பூரணத்தில் மனக்கண்ணோட்டி
ஆரப்பா பூரணத்தி லறிவுதோணும்
ஐயையா வுந்தனிட மறிவேபேசும்
நேரப்பா வுனைத்தள்ளி யேகமாக
நினைப்போடு அறிவெல்லாம் நீக்கித்தள்ளி

ஏரப்பா வெவ்வுயிர்க்கும் நீயாய்நிற்பாய்
எங்கெங்கும் தானவனாய் நிறைந்துபோவாய்
தேரப்பா விதுவல்லோ ஞானமாச்சு
தேகசித்தி மவுனசித்தி தெளிந்துபோச்சு. உகசு

போச்சடா விம்மென்ற மவுனம்விட்டாற்
பொறியைந்துங் கலங்கிவிடும் பொய்யாய்ப்போகும்
ஆச்சடா தன்னைமறந்த விடந்தான்ஞானம்
ஆகாய யந்திரமு மதுதான்மைந்தா
மூச்சடா அடங்கிநின்ற குலதெய்வந்தான்
மூச்சந்தி வீதியிலே முழங்கிப்பாடும்
வாச்சடா வாய்பேசித் திரிந்திடாமல்
வாங்கடா மவுனமதை வணங்கிக்கூவே. உகஎ

கூவென்ற அட்சரத்தின் குறையைக்காணான்
கோடான கோடிசித்து மறியமாட்டான்
ஆவென்று மாடியுந்தான் கொள்ளமாட்டான்
அஷ்டாங்க யெக்கியமு மறியமாட்டான்
தாவென்று பானமதி லேறமாட்டான்
தன்மையுடன் மனம்நிறுத்தி வாழமாட்டான்
மாவென்று மயிலேறிக் கொண்டோயானும்
மாறாத சிவயோக மறிந்தேன்காணே. உகஅ

காணடா யோகாதி யஷ்டகர்மங்
கருவுமல்ல வுருவுமல்லக் கலந்துசொல்வேன்
தானடா சிங்கைப்பூ ரணத்தில் நாட்டிச்
சாற்றடா பராபரியே யம்மாவென்று
கோனடா கிலியென்றே புருவமேவிக்
கொளுத்தடா ஸ்ரீயினுட பெயரைநாட்டி
வானடா வானவர்கோன் மயங்கிப்போவான்
வள்ளலுந்தான் பதறியுனை வணங்குவானே, உககூ

வணங்காதே வெதிரிக்குக் குறியைக்கேளு
மைந்தனே யரைநொடியில் வாய்கண்ணூசி
இணங்காத பராபரத்தின் கிருபையாலே
யென்னசொல்வே னிரத்தமிட்டே யிறந்துபோவான்
குணங்கண்டே பொருசாமத் துள்ளேமைந்தா
குறியாகி மனதிரங்கிக் கொண்டாயானால்
மணங்கொண்டு சசியெனப்பூ ரணத்திலேசதி
மைந்தனே பார்த்துவிடத் திரும்பாரே. ௨௨௦

பாரப்பா வொருசாமத் துள்ளேமைந்தா
பாரப்பா லவன்சிரசு வெடித்துப்போகும்
ஆரப்பா வொருசாமந் தாண்டிற்றானால்
அவன்குலமு மவனுயிரு மழிந்துபோகும்
வேரப்பா விதுபோலே யார்தான்சொல்வார்
விட்டகுறைப் படியாலே விரித்தேசொன்னேன்
தேரப்பா பராபரத்தின் கிருபையாலே
செப்புகின்ற பூரணத்தின் செய்கைதானே. ௨௨௧

தானென்ற பூரணத்தின் மகிமையொன்றுகுறிச்
சாற்றுடா கிழியென்றே சுழினைக்கேகிக்
கோனென்ற குருவருளை மனதிற்கொண்டு
குறியுடா வெதிரியுட வுயிரைக்கோரி
தேனென்ற மொழிச்சிசிவ காமித்தாயார்
சென்றிடுவாழ் வகிரிகொள்ளச் செய்வாடேவி
மானென்று பட்டதுபோல் மயங்கித்தானும்
மதிமயங்கி யலைந்திடுவான் மைந்தாபாரே. ௨௨௨

பாரப்பா அன்னமது புசிக்கமாட்டான்
பாவையரை யொருநாளும் விரும்பமாட்டான்
ஆரப்பா வினைக்கண்டாற் றொடர்வான்பாவி
யடிந்தாலு மகலானே வையோவையோ

நரப்பா மனிதர்களைக் கண்டால்மைந்தா
நிமிடத்திற் கடித்திடுவான் கழுதைபோலே
உரப்பா பூதகணம் பசாசுகோடி
புண்மையுட னவனிடத்தில் வாழுங்காணே. உ௨.௩

காணடா வினைதீர்க்க வயறுமாலுங்
கலந்தெழுந்த வுருத்திரனு லாகாதையா
நானடா வன்றுமு முடியாதையா
நம்மாலு முடியாது நாடிக்கேளு
தானடா தவத்தோர்கள் வந்திட்டாலுஞ்
சாவண்டா திரிந்தலைந்து சவந்தான்மைந்தா
கோனடா குருவருளாற் கூறினேனுன்
குறிபார்த்து நிலைபார்த்துக் கூடுகூடே. உ௨.௪

கூடென்று நிலையறிந்து தீபங்கண்டு
குருவான தேவிபரா பரமேயென்று
ஆடென்று கேசரியாள் வேலைதாவி
யாகாய கம்பமதிற் றொத்தியேறி
நாடென்று லோகமெல்லாம் வசியமாக
நாட்டடா குலதெய்வந் தன்னைப்பாரு
வீடென்று மழியாதே யிந்தவிந்தை
வெட்டவெளி யாயிருக்கும் விதியும்பாரே. உ௨௫

பாரப்பா விதியென்றால் ரவியுமாச்சு
பாலகனே மதியென்றாற் சந்திரனுச்சு
ஆரப்பா விதியறிந்து மதியைச்சேர்த்து
அப்பனே சரமறிந்து சரத்தினின்று
நேரப்பா சரம்பஞ்சாட் சரமுமாச்சு
நிலையான ஷடாட்சரமு மிதுவேமைந்தா
தேரப்பா வட்சரத்தா லாவதென்ன
தீர்க்கமுடன் குவிந்திடவே சரந்தான்காணே. உ௨௬

காணடா சங்குளிந்தால் முப்பாதாச்சு
கண்டுகொள்ள மனமல்லோ சாந்தாளுகித்
தானடா குலைகனிலே மனந்தானின்று
சத்தியமா யுயிராகித் தானேதானாய்
ஊனடா உடலுக்கு ளுயிராய்நின்று
ஒளிவான பராபரமு மிருக்கலாச்சு
கோனடா நாதமென்றும் விந்துவென்றுங்
குலதெய்வ மென்றுசொல்லிக் கூறலாச்சே. ௨௨௧

ஆச்சடா மனந்தானுங் குவிந்தபோது
ஆடலா மறுபத்து நான்குசித்தும்
மூச்சடா மூச்சற்றால் மனமொன்றாகும்
முடிவான மனதடங்க வென்றால்பாரு
வாச்சடா வினைப்போலே சித்தனில்லை
மனமடங்க விம்மென்ற மவுனங்காட்டிப்
பேச்சடா பேசாதே பேசினுக்காற்
பிடரிவழி யார்க்கமனைப் பேசொணாதே. ௨௨௨

பேசாத மவுனமல்லோ விவனைக்க
பேரின்ப மானதவு மதுவாய்ப்போச்சு
கூசாதே மனதன்பி னாலைமைந்தா
கொண்டனடா வமுதமென்ற பானந்தன்னை
ஏசாதே வெளிவிட்டேன் மக்காள்மக்காள்
ஈராறு தலத்தினுட கூறுஞ்சொல்லி
ஆசானைப் போலவந்தா னருளைப்பெற்றேன்
ஆறுமுக னென்றுசொல்லி நமக்குப்பேரே. ௨௨௩

பேரென்ன தேவரொடு முனிவர்தானும்
பெரிதான பூதகணம் பசாசுகூளி
கூறென்ன பூரணத்தைக் குறித்துமைந்தா
குலதெய்வ மதிலேதான் கூடிச்சென்று

நேரென்ன சிங்கென்றே புருவமேற்றி
நிறுத்தடா வங்கென்றே மாறியூதி
ஆரென்ன உனக்கிடு மாவதுண்டோ
அடங்காத தேவதைகள் வருகும்பாரே. ௨௫௦

பாரப்பா வக்பாதம் பணிந்துபோற்றும்
பார்தனிலே தெய்வமெல்லா மேவல்செய்யும்
ஆரப்பா குருவருளா லறிவைப்போற்றி
யாகாயப் பெருவெளியி லடங்கிவாழ்ந்து
தேரப்பா அய்யுங்கிலியுஞ் சேர்த்தெதானறுய்
செபித்திடுவாய் பூரணத்தின் நிலைமைபார்த்து
நேரப்பா வெதிரியுட பெயரைநாட்டி
நிரந்தரமாம் பராபரியே யென்றுபோற்றே. ௨௫௧

போற்றடா வெதிரிக்கு மைந்தாகேளு
புகைச்சலோ டிளைப்புத்தான் கலந்துகாணும்
ஆற்றடா தேகமெல்லா மெரிந்தேகொல்லும்
அன்னமுந்தா னரோசியமா யவர்க்கேயாகும்
வாழ்த்தடா நித்திரையும் வருகாதப்பா
வாய்குளறி வெறுவியவன் மதியுங்கெட்டுக்
காற்றடா தேகமெல்லாங் கறுப்பதாகிக்
கண்தனிலே மாசியுந்தான் கலந்துபோமே. ௨௫௨

போமடா விப்படியே வருடமூன்று
பொய்யுடலாய்த் தானிடந்து மாண்டுபோவான்
ஆமடா விதைத்தீர்க்க வரிதுசொன்னேன்
யாராலுமாகாது அவன்றன்சாவான்
நாமடா மவுனத்தை யறிந்ததாலே
நலமான வசுரர்கிளை நாசமாச்சு
ஓமடா வோமென்ற பிரணவத்தை
யோதடா பூரணத்தி லொடுக்கிப்பாரே. ௨௫௩

பாரடா ஓமென்று மசியுமென்று
பாரபரையாள் நாதமதைப் பணிந்துபோற்றி
ஆரடா சுழிமுனையில் மனக்கண்ணூட்டி
யழுத்தடா குலதெய்வந் தன்னில்மாறி
வாரடா மானதமாம் பூசைசெய்து
வாங்கடா கலைமறி மைந்தாமைந்தா
தேரடா செகமெல்லாம் வசியமாகுந்
தேவாதி தேவனென்று செப்பலாமே. ௨௩௪

செப்புவா ராசரொடு செகத்தோர்தாமுந்
தெண்டனிட்டுப் பணிதிடுவார் சிவன்தானென்று
ஒப்புவார் மாதர்கடா னுன்னைக்கண்டா
லுத்தமனே மையல்கொண்டே யுருகிவாடி
அப்புவா ளவள்மயங்கி பரதேசியென்பாள்
ஆசைகொண்டு ரோசம்விட்டே யலறிவீழ்வாள்
தப்புகிறே னென்றாலுந் தப்பொட்டாது
சத்தியமாய் வசியத்தைத் தாக்குதாக்கே. ௨௩௫

தாக்கடா விந்தமுறை சொல்லார்சொல்லார்
தவத்தோர்க்கே சித்தியல்லால் மற்றோர்க்கேது
வாக்கடா வாய்திறந்து சொல்லிப்போட்டேன்
வாலைபஞ்ச சத்தியுள வருளினாலே
நாக்கடா நாவினாற் சொல்லப்போமோ
ராஜாங்க போகமதை யறியாப்பேர்க்கு
ஏக்கடா சுழிமுனையா றாதகண்பாரு
மோக்ஷத்துக் கேதுவினி மொழியக்கேளே. ௨௩௬

கேளடா பெரியோர்க்கு வசியம்வேணுங்
கிருபையுள்ள பஞ்சசத்தி யருளும்வேணும்
ஆளடா வஷ்டாங்க யோகம்வேணும்
ஆமென்றே யனுதினமும் நினைக்கவேணும்

நாளடா மூன்றெழுத்து விஞ்சைவேணும்
நாதாக்கள் சாபமதை விலக்கவேணும்
வாழடா வுந்தியிலே யறியவேணும்
வாங்கடா வசியமென்றால் மவுனந்தானே. ௨௬௭

தானென்ற மறைப்புவித்தை சொல்லக்கேளு
சந்திரனைப் பானமென்று தானேகொண்டு
கோனென்ற நசியென்றும் லாலியென்றுங்
குலதெய்வந் தன்னிலேதான் குறித்துநாட்டித்
தேனென்ற மொழிச்சியுட பாதம்போற்றிச்
சிந்தைதனி லேநினைந்து செபந்தான்பண்ணு
வானென்று கலைமாறி வானந்தன்னை
வாங்கடா சுழிமுனையில் மனக்கண்ணூட்டே. ௨௬௮

நாட்டியே பார்த்திடவே செகத்தோர்தானும்
நாடியுனைப் பார்த்தாலுங் காணாரையா
பூட்டியே யுனைத்தானு மரிதேகாணப்
புகழ்ந்தெழுந்த விம்மென்ற மவுனத்தாலே
காட்டியே திரியாதே லோகத்தோர்க்குக்
கபடமென்ற மறைப்பினுட மையைமைந்தா
வீட்டிலே தீபம்வைத்து மையைக்காணு
வெட்டவெளி யாகவுந்தான் வீசிடாதே. ௨௬௯

வீசாதே மவுனமென்ற விஞ்சைவேணும்
வேதாந்தப் படாட்சரத்தை யறியவேணும்
கூசாதே படாட்சர மோங்காரமாச்சு
கூறுதற்கு நாவுண்டோ குணமுள்ளோனே
ஏசாதே வெளிதிறந்து சொன்னேனென்று
என்மக்காள் தாம்பூலந் தரிக்கும்போது
கூசாதே யிலைதனிலே சிகாரம்நாட்டிக்
குருவான தேசியென்றே மனதிறங்கே.

தங்கடா தாம்பூல மி டிக்குத்
தவறாமல் மண்டலந்தா னுண்டாயானால்
அங்கடா வெதிரியுனை யணுக்குங்கூட
அவனிதனி லுள்ளோர் நம் பணிவார்கண்டாம்
பங்கடா வாணியெனும் தேவிதானும்
பாடுவாள் நாவிலே மறைகளெல்லாம்
எங்கடா சித்தர்களிப் படியேசொன்னார்
எனைப்போலே சொல்லுகிறா ரில்லைத்தானே. ௨௩

தானென்ற படாட்சரமாம் நுக்ரன்பீஜஞ்
சாதித்த பேர்களுக்கு தொல்லைநீக்கி
தேனென்ற மனதினிலே யறிந்துகொண்டால்
செகத்திலுள்ள வெதிரிகொட லினைக்கச்சாவா
வானென்ற வானவர்கோன் பணிவாருன்னை
வையகத்தோ ருனைக்கண்டால் வணங்குவார்கள்
ஏனென்ற சடாக்ஷர யறிந்துசித்தி
யில்லாட்டாற் சூத்திரமே கோமயம்பாரே. ௨௪

பாரப்பா படாட்சரத்தின் மகிமைசொன்னேன்
பாராட்டால் மவுனசித்தி பதியாவையார்
ஆரப்பா தேவிபஞ்ச சத்திதிட்சை
யறியாட்டாற் பாவமுன்னைத் தொடர்ந்துகூடும்
நேரப்பா மனமல்லோ விம்மென்றுச்ச
நிர்விகற்ப சமாதியென்று நினைக்கலாச்சு
தேரப்பா விந்துவிட்டால் ஞானம்போச்சு
தேகசித்தி யாகாது தெளிந்துகாணே. ௨௫

காணடா பரபரத்தி னடிப்பிற்சென்று
கங்குல்ராவி தினமாறிக் கருத்திலுன்னி
தானடா நிரேபன்றே மனதிற்கொண்டு
சத்தியபி ராமிதனை நினைத்துப்போற்றி

ஏனடா விருதயமே பீடமாக்கி
  யெதிரியுட பேரையுந்தான் கூடச்சேர்த்துக்
கோனடா குலதெய்வந் தன்னைப்பார்த்துக்
  கும்பித்து ரேசித்துக் குணமாய்நில்லே. உ௪௩

நில்லடா வெதிரிக்குச் செங்குஷ்டந்தான்
  நிலையான தேகமெல்லாம் நீராயோடும்
அல்லடா வைந்தாறு வருடந்தன்னி
  லடைந்திடுவா னரகமென்ற குழியிற்றானும்
கொல்லடா பஞ்சசத்தி கிருபையாலே
  கொடுமைமெத்தக் கூடழிந்து போகுஞ்சொன்னேன்
சொல்லடா பாவம்வரும் தோஷந்தோஷம்
  தொலைதூரம் ஞானமென்றுற் றொடர்ந்துபாரே. (

பாரப்பா விம்மென்ற மவுனந்தன்னைப்
  பார்த்துநிலை தன்னையுந்தா னறிந்துகொண்டு
ஆரப்பா வெந்தெந்தத் தொழிலுக்கெல்லாம்
  அணுநேரம் வனத்திலேநீ வைக்கும்போது
நேரப்பா செந்தீயும் பற்றிவேகும்
  நிலையான கயிலாயம் நீறிப்போகும்
வேரப்பா யாரொருவர் தடுக்கமாட்டார்
  விட்டாக்கால் விண்ணிலிடி விழுகும்பாரே, உ௪௫

பாரடா நந்தியொன்றும் பீசமென்றும்
  பரமசிவன் சிரசினின்ற ஜலந்தாமென்றும்
ஆரடா மூலமென்றுங் கணேசனென்றும்
  ஆச்சாரி யானதொரு குருவாமென்றும்
நேரடா செகத்தோர்கள் பணிவார்கண்டால்
  நிலையான அறுகின்வேர் பலந்தான்சத்து
சோரடா கொண்டுவந்தே யுலரவைத்துத்
  தேவிபஞ்ச சத்தியுட தியானம்பண்ணே. உ௪௬

பண்ணுவது கொடுப்பைவேர் பலந்தானைந்து
பாலகனே நாயுருவி பலந்தானைந்து
உண்ணுவது மாதளைவேர் பலந்தானைந்து
ஓகோகோ நங்கைவேர் பலந்தானைந்து
எண்ணுமடா வல்லாரை பலந்தானைந்து
என்மகனே யிவளவையும் பொடியதாக்கிக்
கண்ணுமனக் கண்ணறிவாய் மசியென்றோதிக்
காரணமாய் வடிகொண்டே யெடுத்துக்கொள்ளே.()
கொள்ளடா திரிகடுகு வகையொன்றுக்குக்
கூறுகிறேன் பலந்தானுங் காலதாக
அல்லடா அரத்தையுந்தான் பலமேகாலாம்
அப்பனே வால்மிளகு பலந்தான் காலாம்
சொல்லடா வாலுழுவை விராகன்நான்கு
சூட்டிடுவாய் மனோசிலையு மதுபோலப்பா
மல்லடா கட்டாமண லேலந்தன்னை
மைந்தனே விராகனிடை நாலுசேரே. உசகூ
சேரடா அளிஞ்சிவித்தும் புங்கம்வித்தும்
சிறந்ததொரு கஞ்சாவின் வித்துஞ்சேர்த்து
ஆரடா காஞ்சிரையின் வித்துஞ்சேர்த்து
அப்பனே ஆமணக்கின் வித்துஞ்சேர்த்து
நேரடா திலப்பனையின் கிழங்குவித்தும்
நிச்சயமா மமுக்கிரு வித்துஞ்சேரு
தேரடா வொவ்வொன்றும் விராகன்மூன்று
தெளிவாக நிறுத்ததையும் வாங்கிக்கொள்ளே. உ௱
கொள்ளடா முன்சொன்ன மருந்தையெல்லாங்
கூறுகிறேன் வித்தெல்லாம் பொடியாய்ச்செய்து
அல்லடா முன்சொன்ன தூளதோடு
அப்பனே யொன்றாகக் கலந்துகொண்டு

வல்லடா ○ சருக்கரையும் பலமிரண்டு
வளமுப்பூ வின்சுண்ணம் விராகனென்று
கொள்ளடா கலந்துமினி யுண்டாயானாற்
கொடியதொரு யெமன்வினையுங் குதிக்கும்பாரே. ( )

பாரப்பா பதினெட்டுக் குஷ்டந்தீரும்
பாலகனே நரைதிரையும் மாறிப்போகும்
ஆரப்பா பதினெட்டு மேகந்தீரும்
அப்பனே வாயுவெல்லாங் குலைந்துபோகும்
நேரப்பா யீளையொடு காசந்தீரும்
நிலையான கண்ணோயும் நீறிப்போகும்
தேரப்பா சன்னியொடு சுரங்கள்தீரும்
செகத்திலுள்ள விஷங்களெல்லாந் தீரும்பாரே. ( )

பாரடா வியாதியென்ற சொல்லுமேது
யார்தனிலே மலடென்ற பேச்சுமேது
ஆரடா விந்துவொன்றாய்க் கட்டிப்போகும்
ஆத்தாளு மப்பனுமே தனதுமாகும்
நேரடா நிலைதனிலே நிறுத்திவைக்க
நீங்காமற் போதமுன்னை யுயரத்தூக்கும்
தேரடா விதையுண்டு மவுனம்பார்த்தாற்
தேவாதி தேவனென்று செப்பலாமே. ௨௫௫

செப்பலா மொப்பியடா கெவனமார்க்கஞ்
செய்யலாங் கும்புமுனி யுனக்காய்ச் சொன்னேன்
அப்பலாம் நின்மயத்தி னின்றுகொண்டால்
அடிப்படையை வலுவாக அறிவேகட்டும்
ஒப்பலா மாயையெல்லாங் கழிந்தேபோகும்
ஓங்காரக் கம்பமதி லொடுங்கவைக்கும்
தப்பலா மென்றாலுந் தப்பொட்டாது
சத்தியமாய்ப் பராசத்தி கிருபைதானே. ௨௫௬

○ சருக்கரை என்பது சீந்திச்சருக்கரை.

தானவனே நீயல்லால் வேறுமுண்டோ
சத்தியமா யிம்மென்ற மவுனத்தாலே
கோனவனைக் காட்டிவைக்குங் குருவாய்நீயுங்
குலதெய்வந் தனையறிந்து கூடினோர்க்கு
வானவர்கோ னீயன்றி மற்றுமேது
வாடாத தீபமதை யறிந்தபேர்க்குத்
தோணவே சொல்லிவிட்டே னிந்தநூலிற்
றேகிகட்கே யாவதென்ன தொடர்ந்துகூடே. ௨௫௫

கூடியே யிந்நூலின் பயனைக்கண்டு
கும்மென்று ரேசித்துக் குணமதாகி
நாடியே யிம்மருந்தைக் கற்பமென்று
நாடியுண்டு மனங்கொண்டு நமனைவென்று
சூடியே பூரணமா யிலிங்கமென்று
சுருதிமுடி பிறந்திடமே யிதுவாமென்று
தேடியே யலையாமற் குருவைக்காணு
செகதலத்திற் பேய்போலே திரிந்துகொள்ளே. ௨௫௬

கொள்ளடா யல்லாரை பலந்தான்நூறு
குருவான தேசியென்றேவாங்கிவந்து
அல்லடா மசியென்றே சாபந்தீர்த்து
அப்பனே ஜலந்தானும் படிதான்நூறில்
விள்ளடா போட்டிடுவாய் தேவியென்று
வித்தகனே யோர்விறகா லனலேமூட்டிச்
சொல்லடா வையுமென்று கிலியுமென்று
சூட்டடா சௌவுமென்று துரியம்பாரே, ௨௫௭

பாரப்பா காச்சியிடு வற்றமட்டும்
பாலகனே ஜலந்தானும் படிரண்டாக
ஆரப்பா விறக்கியதைப் பதனம்பண்ணி
யப்பனே வில்வவேர் பலந்தானைந்து

நேரப்பா சந்தனவேர் பலந்தானைந்து
நிலையான மாதளைவேர் பலந்தானைந்து
ஏரப்பா வெட்டிவேர் பலந்தானைந்து
என்மக்கா ளிவளைவையு மொன்றுய்ச்சேரே. உருஅ

சேர்த்திடுவா யிடித்ததனைத் தூளாய்ப்பண்ணிச்
செப்பிடுவாய் நசியென்றே மவுனங்கொண்டு
பார்த்திடுவாய் குழித்தைலம் வாங்கிமைந்தா
பராபரையாள் பாதமதிற் பணிந்துபோற்றி
வார்த்திடுவாய் திப்பிலியும் பலந்தான்காலாம்
மைந்தனே யதிமதுரம் பலமேகாலாம்
காற்றிலையு மதிகமடா மிளகுமைந்தா
கருத்துவைத்துப் பலந்தானுங் கால்நீவாங்கே. உருசு

வாங்கடா சுக்கதுதான் பலமேகாலாம்
வால்மிளகு வாலுழுவை விராகன்நான்கு
தாங்கடா காந்தமுந்தான் விராகன்நான்கு
சத்தியமாய் மஞ்ஞைசிலையும் விராகன்நான்கு
ஓங்கடா தாரமுந்தான் விராகன்நான்கு
ஓகோகோ கெவுரியந்தான் விராகன்ரண்டு
பாங்கடா அமுரியுப்பு விராகன் நான்கு
பாலகனே காரமுந்தான் கூடச்சேரே. உசுல

சேரடா காரமுந்தான் விராகன்ரண்டு
செப்புகிறேன் தாமரையின் வித்துங்கூட்டி
ஆரடா முப்பூவின் சுண்ணந்தானும்
அப்பனே விராகனிடை யொன்றுசேர்த்துத்
தேரடா வடித்துவிட்டு மருந்தையெல்லாஞ்
செபித்திடுவாய் கிலியென்றே ஜாமம்நான்கு
வேரடா நினையாவ லரைத்துமைந்தா
விமலையுட பாதமதை மனதிற்கொள்ளே. உசுக

கொள்ளடா முன்சொன்ன கஷாயந்தன்னிற்
குறையாம லாவினெய் படிதான்ரண்டு
அல்லடா வொன்றாக விட்டுக்கிண்டி
யப்பனே மருந்தையெல்லா மதிலேதாக்கிச்
செல்லடா சிவநமசி வாயமென்று
செபித்திடுவாய் லெட்சமுரு தீர்க்கமாக
மல்லடா மற்பிடித்துத் திரிந்திடாமல்
மைந்தனே மெழுகுபத மாக்கிப்பாரே. உசஉ
பாரப்பா நெய்யைந்தா னெடுத்துக்கொண்டு
பராசக்தி பாதமதிற் றணிந்துபோற்றி
ஆரப்பா நெய்யைந்தான் பதனம்பண்ணி
யப்பனே விராகனிடை யிரண்டதாக
பாரப்பா மண்டலந்தா னிருபோதுண்டு
நிஷ்டையொடு சமாதியிலே நின்றாயானால்
ஏரப்பா வுன்றேகம் வேறதாகும்
இயமனில்லை யியமனில்லை யெண்ணிக்காணே. உசந
காணடா ரோகமெல்லாங் கலைந்துபோகுங்
கல்வியிலே மிச்சமடா வனுவோரெம்பத்
தானடா முதுமையென்ற சொல்லுமேது
சாவேது வுந்தனுக்கு விதியுமேது
கோனடா மீளையொடு காசமேது
குவிந்துமன மொன்றாக நிலைத்தபோது
நானடா விப்படியே யுண்டுதேறி
நாதனென்றும் வேலனென்றும் வந்தேன்பாரே. ()
பாரப்பா வெந்தெந்தத் துரைக்கெல்லாந்தான்
பராசக்தி தேவியுட பாதம்போற்றி
ஆரப்பா மருந்தையுணு வளவேயீந்தால்
அஞ்சுமடா வியாதிகடா னழிந்தேயோடும்

நேரப்பா விதையறியா ருலகத்தோர்கள்
நிலையான சித்தரெல்லா மறைத்துப்போட்டார்
வேரப்பா வெறுவாயை யென்றிடாதே
வேதாந்த குலதெய்வந் தன்னைக்காணே. ௨௬௫

சாணுவது இக்கிருதங் கண்டபேர்க்குக்
கயிலாயந் தனதாகுங் கடவுளாவார்
பூணுவது பூரணமே மவுனவீடு
பொறியைந்து மொன்றாற் பேதமாகும்
ஏணுவது பிசகில்லை யிந்தப்பேச்சு
எமனுதி கிருதமென்றே இதற்குப்பேரு
தோணுவதெல் லாமுனக்குத் தோணும்பாரு
துன்பமற்றுப் பேரின்பஞ் சேருந்தானே. ௨௬௬

சேருமென்று சொன்னமொழி தப்பேயில்லை
சிவனுணை குருவாணை தேவியாணை
பாருமினி யுலகத்தோ ரடுத்திட்டாலும்
அவர்தனக்கே யியாத யழிந்தேபோவாய்
காருமிந்தக் கிருதத்தை நீயாய்த்தின்று
கருத்தான வல்லாரைக் கற்பமென்று
பாருமினி யிம்மென்றே பகர்ந்தேயோதிப்
பாலகனே நிலைதனைத்தான் பற்றிப்பாரே. ௨௬௭

பாரப்பா யஷ்டாங்கம் பஞ்சசத்தி
பாராட்டா விவையெல்லாஞ் சித்தியில்லை
ஆரப்பா வஷ்டாங்கஞ் செய்வாருண்டோ
யாகாதி தற்பணங்க ளறிவாருண்டோ
நேரப்பா நிஷ்டையிலே நிற்பாருண்டோ
நேர்நிலையுங் கண்டுமினி வணங்குவாரே
காரப்பா விராகமென்றே கடாட்சங்கொண்டு
கருணையுள்ள தியானமதைக் கலந்துகொள்ளே. ()

கொள்ளடா விராகத்தாள் தியானம்வேணுங்
கூறுகிறே னெக்கியத்தா லறியவேணும்
அல்லடா மவுனமென்ற விஞ்ஞைவேணும்,
ஆதார மாறுமொன்று யறியவேணும்
மல்லடா வாய்வெகச்சா ரணையும்வேணும்
வாடாத நியமதி லொடுங்கவேணும்
சொல்லடா பேச்சற்றே இருக்கவேணுந்
தோலாசை மறந்தவர்க்குக் காட்டுவேனே. ௧௯

காட்டுகிறேன் தோலாசை யாலேமைந்தா
கடியதொரு மூவருந்தா னிறந்துபோனார்
நாட்டுகிறேன் கலவியென்ற மயக்கத்தாலே
நாதாக்கள் சித்தரெல்லாம் நாசமானார்
பூட்டுகிறேன் லோகமெல்லா மழிந்துபோச்சு
பொறியைந்தும் வெவ்வேறாய்ப் பிரிந்துபோச்சு
மாட்டுகிறே னில்லமென்ற மனதில்நின்று
மயங்காதே யொழியாதே வயங்கப்பாரே. ௨௦

பாரப்பா விந்துவெல்லாம் வட்டமாச்சு
பரமசிவன் றனைப்படைத்த பரையுமாச்சு
ஆரப்பா லோகமெல்லா முயிர்தானாச்சு
அண்டர்முதல் முனிவருக்கும் வனுவுண்டாச்சு
நேரப்பா வசுரர்கிளை மாளலாச்சு
நிலையான பராசக்தி வேனுமாச்சு
தேரப்பா மயிலேறிச் சுத்திவந்த
சிறுபிள்ளை முருகனென்ற பெயர்தான்காணே. ()

காணடா பரலோக நாதனானேன்
கடவுளர்க்கு முபதேசங் காட்டலானேன்
தானடா சகலருக்கு முயிருமானேன்
சடாட்சரமாஞ் சாமியென்ற வாமியானேன்

தோனடா தூரதிஷ்டி யறியலாச்சு
சொல்லாத மந்திரத்தின் சுருதியாலே
கோனடா வோரெழுத்தை யறிந்ததாலே
கூசாமற் பவ்னிவலம் வந்தேன்பாரே. உஎஉ

பாரப்பா பஞ்சசத்தி தியானத்திற்குப்
பதிவான வுயிரெழுத்தைச் சொல்லக்கேளு
ஆரப்பா வங்கிலியு மென்றேயோதி
யப்பனே யாயிரத்தெட் டண்டமட்டும்
நேரப்பா மாயையற்று ஆசையற்று
நீமகனே அஷ்டாங்க யெக்யஞ்செய்து
தேரப்பா குலதெய்வ மிதுவாமென்று
செபித்திடவே யஷ்டகர்மஞ் சித்திதானே. உஎ௩

தானென்ற அஷ்டகர்மந் தனக்குமைந்தா
தையலர்கள் சையோக மாகாதப்பா
கோனென்ற அஷ்டகர்ம வாலைதன்னைக்
குவித்திடும்போ தெல்லாந்தான் கற்பமுண்ணே
நானென்ற நங்கையடா சிறியநங்கை
நலமான கலைக்ஞானி நங்கையென்றும்
கோனென்ற வாசிநங்கை மரியாநங்கை
கூறுகிறேம் பெரியநங்கை யிதுவேதானே. உஎச

தானடா மூலிகையு முண்ணும்போது
சமதலையா யடிமூலம் நிறுத்தவேணும்
கோனடா விராகத்தாள் மவுனம்வேணுங்
குலதெய்வந் தனையடுத்துப் பார்க்கவேணும்
வானடா கிருதமெல்லா முண்ணவேணும்
வாலையைத்தா னயராமல் நினைக்கவேணும்
தேனடா நங்கையிலே யாதிகேளு
செப்புகிறேன் சிறியநங்கை விபரந்தானே. உஎரு

தானென்ற நங்கைதனைச் சமூலம்வாங்கிச்
சத்தியமாய் நிழலுலர்த்தி யிடித்துத்தூளாய்க்
கோனென்ற பழச்சாற்றுற் சாமமூன்று
குறையாம லரைத்துருட்டிக் காயவைத்து
ஏனென்று சொல்லாதே மசியென்றோதி
யென்மக்காள் மருந்தையுந்தானெடுத்துக்கொண்டு
வானென்ற வானவர்கோ னறிந்தவுண்மை
மறவாதே ஆவின்பால் தன்னுலாட்டே. உஎசு

ஆட்டியே சாமமூந்தான் நாலதாக
அதிற்சீந்திச் சருக்கரையுஞ் சமனாய்க்கூட்டி
நாட்டியே விராகனென்று இருபோதுண்ண
நலமாக மண்டலந்தான் கொண்டாற்கேளு
மூட்டியே மூச்சுடரு மொன்றாய்ப்போகும்
மும்மதம்போல் லகிரியது முழுங்கியாடும்
வாட்டியே யக்கினிதான் கொதித்தேவேகும்
வளமான கிருதமென்ற வகைதான்கேளே. உஎஎ

கேளடா அறுகுவேர்க் கிருதந்தன்னைக்
கிருபையுட னிம்மூலி யருந்தும்போது
ஆளடா முன்னுரைத்த படிபோல்மைந்தா
அணுவளவு தப்பாம லுண்டாயானால்
நாளடா பூரணமுங் கண்ணிற்காணும்
நசியுமடா விஷங்களெல்லாம் நாசமாகும்
வேளடா மன்மதன்போல் ரூபமாவாய்
விட்டகுறை தொட்டகுறை யிதுவேகாட்டும்
தேளடா தேட்கொடுக்கு விஷமும்போகுந்
தேவியுட அஷ்டகர்மஞ் சித்திதானே. உஎஅ

தானென்ற நங்கையடா பெரியநங்கை
சத்தியமாய்ப் பிரமனுட பீஜமாச்சு
கோனென்ற நங்கைதனைச் சமூலம்வாங்கி
கூறுகிறேன் முன்மருந்தைப் போலேயாட்டி

தேனென்ற முன்சொன்ன படிபோல்மைந்தா
  தீர்க்கமுடன் மண்டலந்தான் கொண்டாயானால்
ஆனென்ற வாணவமுந் திரண்டுபோகும்
  ஆதிவஸ்து மனாதிவஸ்து மொன்றாய்ப்போச்சே. ()

போச்சடா மருந்தையுந்தா னுண்ணும்போது
  புத்திரனேவல்லாரைக் கிருதந்தன்னை
வாச்சடா மண்டலந்தான் கூடச்சேர்த்து
  வாலையபி ராமியென்று வணங்கியோதி
நீச்சடா தசநிட்சை யதனாற்கண்டு
  நிறுத்தடா அங்கிலியு மென்றேயோதி
மூச்சடா அடங்கியினி யுருவிப்பாயும்
  முச்சந்தி தனிலிருத்தி வைக்கும்பாரே. ௨௮௦

பாரப்பா வாசிநங்கை பகையின்பீஜம்
  பாலகனே யாரறிவா ருலகத்தோர்கள்
ஆரப்பா நங்கைதனைச் சமூலம்வாங்கி
  யப்பனே முன்சொன்ன யாகஞ்செய்து
நேரப்பா மசியென்றே சாபந்தீர்த்து
  நீமகனே மண்டலந்தா னுண்டாயானால்
தேரப்பா வுனக்கீடு யார்தான்சொல்வார்
  திரிபுரையாள் பாலனென்று செப்பலாமே. ௨௮௧

செப்பலாஞ் சிவனார்தன் வேம்புமூலஞ்
  செப்பார்கள் கிருதமதைத் தெளிவாய்க்கண்டு
ஒப்பலா மண்டலந்தா னருந்தக்கேளு
  ஓகோகோ முன்சொன்ன பாதம்போலே
தபயிலா துண்டிடுவா யருளைப்போற்றிச்
  சதாசிவம்போ லன்றேகந் துலங்கும்பாரு
அப்பலா மஷ்டகர்ம வாலைபாதம்
  அடிகண்டு முடிவரைக்கு மறிந்துகொள்ளே. ௨௮௨

கொள்ளடா மவுனியென்றுற் கலந்துகூடிக்
கொளுத்தடா பூரணத்தின் குறியில்நின்று
அல்லடா அஷ்டகர்மந் தனதாய்ப்போகும்
அருளான வருள்வந்தே யுயரத்தூக்கும்
வில்லடா தாரணையை நிறுத்திப்பார்த்து
வேண்டடா அந்திசந்தி மூன்றுநேரம்
கொள்ளடா விம்மருந்தைப் பதனம்பண்ணிக்
குலதெய்வந் தனைநாடு கூசிடாதே. ௨௮௩

கூசினால் வருவதென்ன ஞானமார்க்கங்
கொழுந்துவிட்டே பெரியாட்டாற் றேகம்போகும்
வாசனைதான் றொடர்ந்தாக்கால் ஞானம்பொய்ப்பாம்
வாலையுந்தா னுந்தனிடம் வரவேமாட்டாள்
தேசிகனைப் போலேதான் வாழ்கவென்றுற்
செப்புகிறே னுருத்திரனார் பீஜமாதி
பூசித்தபேர்களுக்குத் தனதுமாகிப்
புத்திரனே கலைக்கியானி நங்கைகேளே, ௨௮௪

கேளடா நங்கைதனைச் சமூலம்வாங்கிக்
ஒருமையுடன் முன்சொன்ன பாகம்போலே
ஆளடா மண்டலந்தா னுண்டாயானால்
ஆதித்தன் தெரிசனையும் அப்போகாணும்
நாளடா அக்கினியும் மிகுந்துவேகும்
நலமான வாயுவங்கே மேலேயேறும்
வாழடா வில்லவே ரதனைமைந்தா
வையகத்தோ ரறியாமற் கிருதம்வாங்கே. ௨௮௫

வாங்கியே மண்டலந்தான் மருந்துகூட
மைந்தனே யுண்டிடவே வாயுநாசம்
தாங்கியே நின்றநிலை தானேகாட்டுந்
தவறாதே கெவனசித்தி கைக்குள்ளாகும்
ஓங்கியே நடவாதே பதனமாக
ஒடுங்கிடுவாய் குலதெய்வந் தன்னைப்பார்த்து
ஏங்கியே திரியாமற் கெவனம்வைத்தே
யேகாந்த வஸ்துவுட வருளைக்காரே. ௨௮௬

காரடா வுன்றேகந் தனதாமென்று
காத்திடுவாய் தவசுமே கைக்குள்ளாகும்
ஆரடா தேகமது விறந்துபோனால்
அந்தரங்க மானதையு மறிவதெப்போ
நேரடா செனனமதை யறிவதெப்போ
நீணிலத்திற் சித்தர்களைக் காண்பதெப்போ
ஏரடா விருவினையும் போவதெப்போ
என்னசொல்வே னென்னசொல்வே னுலகத்தோர்க்கே.()

உலகத்தோர் வேண்டியபேர் பூசைசெய்து
உடலிறந்து போவதற்குச் செய்வதல்லால்
பலகலைகள் நூல்பார்த்துப் புராணம்பார்த்துப்
பாவியென்று பெயரெடுத்துப் போவதல்லாற்
கலகமிட்டுப் பெரியோரை நாய்போற்சீறிக்
கவனம்வைத்து மாதர்களைச் சேர்வான்பாவி
விலகிடுவா யவர்களைநீ கண்டபோது
வீசுகிறேன் மாலுடைய பீஜங்கேளே. உ௮௮

கேளடா மைந்தாநீ மரியாநங்கை
கெவனம்வைத்துச் சமூலமுந்தான் வாங்கிவந்து
ஆளடா முன்சொன்ன பாகம்போலே
அப்பனே மருந்தையுந்தா னரைத்துவாங்கி
நாளடா மண்டலந்தா னுண்டுதேறி
நந்திகொளுச் சிங்கார நடனம்பார்த்துக்
கோளடா கொடுவினையு மற்றுபோகக்
கூறுகிறேன் தன்னிலையாங் குறியிற்றானே. உ௮௯

தானென்ற இம்மூலி யுண்ணும்போது
தாரணையுஞ் சாரணையு மாறிப்பாயும்
கோனென்ற தேகமதிற் குளிர்ச்சிகாணுங்
கூறுகிறேன் அறுகம்வேர்ச் சூரணத்தை

தேர்ந்தன்ற மருந்தோடே விராகமென்று
தெளிவாகச் சேர்த்ததையு முண்டுதேறி
நாமென்ற ஆணவத்தை யடக்கிமைந்தா
நாதாக்க ளஷ்டகர்மந் தன்னைப்பாரே. ௨௬௰

பாரப்பா விப்படியே மருந்தையுண்டு
பஞ்சசத்தி பாதமதைப் பணிந்துபோற்றி
ஆரப்பா அஷ்டகர்ம மவளேயாகி
யாதார சத்தியென்றும் பெயருண்டாகிக்
கூரப்பா நவக்கிரக மவளேயாகிக்
காலென்றுந் தலையென்றுங் கருத்துமானாள்
பேரப்பா விவள்பெற்ற பேருபோலே
பெரியோர்க ளெவருண்டோ பேணிக்காணே. ௨௬௧

காணடா விராகத்தா ளவுணமென்று
சாட்டுகிறே னென்மகனே கருத்தாய்க்கேளு
ஊணடா நவகோண மிட்டுமைந்தா
தவறுதே வாலைபஞ்சாட் சரமுஞ்சாற்றிப்
பூணடா ஓம்நமசி வாயவென்று
குறியான நடுவீட்டிற் குணமாய்ச்சாற்றித்
தோணடா ஐயெனவுஞ் சௌவுமென்றுந்
தெளிவான கிலியென்றும் வரையிற்றுக்கே. ௨௬௨

தீட்சடா ரீங்கார வகாரபீடந்
தவறுதே நடுமையந் தன்னிற்சாற்றி
வைக்கடா விருவளையம் வாசல்நான்கு
மாவாக விந்துவிட்டுத் தீயைமூட்டி
முட்டடா மூதண்ட தேவியென்றும்
மொத்தடா ரீம்ஜுயுங் கிலியுமென்றும்
நாக்கடா சொல்லாதே சௌவுமென்றும்
ஸ்ரீயென்றும் நலமாக நாடியேற்றே. ௨௬௩

ஓதப்பா பஞ்சசத்தி தீட்சைக்கெல்லாம்
ஓங்காரி வராகத்தாள் தியானம்வேணும்
வாதப்பா பேசாதே வராகவிஞ்சை
வல்லோர்க்குச் சித்தியல்லால் மற்றோர்க்சேது
சூதப்பா சொல்லவில்லை யிந்தப்பூசை
சுருதிமுடி பிறந்திடமாங் குலையாந்தெய்வம்
மோதப்பா மும்மூலத்த டாதகையும்
மோசமோ செய்வதற்கு வந்தாள்பாரே. ௨௬௪

பாரடா சிவனுடைய பாதந்தன்னிற்
பணிந்துநிதம் பஞ்சசத்தி யென்றுபோற்றி
ஆரடா அஷ்டாங்க யக்கியத்தி
லாதியென்றுஞ் சோதியென்று மவனுண்டாகி
நேரடா வமுதசா கினியுமாகி
நிலைதனிலே யெட்டிரண்டு வயதுண்டாகி
மேரடா மேரிலிட்ட தீபம்போலே
மேதினியெல் லாமயக்கி விட்டாள்காணே. ௨௬௫

காணப்பா மெய்யென்றால் மெய்யுமாகிக்
காலனுக்குங் காலனென்ற காளியாகித்
தானப்பா சருவசங் காரியாகிச்
சருவமணிப் பீடமெனுந் தாயுமானாள்
ஊணப்பா வூனென்ற வுயிருமாகி
ஒழுடிந்த பட்டமுத்தி லொடுங்கிவாழ்ந்தாள்
ஞானப்பா வவள்வீட்டில் வாழ்ந்தகாலே
நாதாந்த ரூபமென்ற நாமம்பாரே. ௨௬௬

பாரடா பஞ்சசத்தி யஷ்டகர்மம்
பராபரையாள் பூசைக்கே யெல்லாமைந்தா
ஆரடா வலப்புறத்தில் வராகத்தாளும்
அப்பனே யிடப்புறத்தில் வடுகென்றானும்

கோடக ஞுழவுந்தான் வசுக்களோடு
   விலையான பஞ்சகாத்தாள் பீஜங்கூட்டித்
தேரடா மவுனமென்ற விஞ்சைபார்த்துத்
   தேகசித்தி மாயசித்தி செய்துக்கொள்ளே. உ௯எ

கொள்ளடா வாசிநிலை யறிந்தாற்கற்பங்
   குலதெய்வ மறியாட்டா லாகாதையா
அல்லடா விந்நூலை யறிந்துபாடி
   யப்பனே வடமொழியைத் தமிழுண்டாக்கிச்
செல்லடா சிங்குவங்கு வாசல்தாண்டிச்
   செபித்தனடா விந்நூலைப் பதனம்பண்ணி
விள்ளடா வீணருக்குக் கொடுத்திடாதே
   விட்டகுறைக் காரனுக்கே யெய்தும்பாரோ, உ௯அ

எய்யாம விந்நூலின் நுணுக்கமாக
   இருதயமே தெய்வமென்று வெண்ணிப்பார்த்து
ஐயாநீ யுய்யும்வகை யப்புமாகி
   யாகாய மானதுவே ஜலமாய்த்தோன்றிக்
கையாலே கால்பூட்டிக் காலைநீட்டிக்
   காலனென்ற பாசமெல்லாங் கடக்கவேறி
மெய்யாலே மெய்யையுந்தா னறிந்துபார்த்து
   மேதினியிற் சித்தனென்றே யாடினேனே. . உ௯௯

சித்தியாக வேண்டுமென்று விந்நூல்பாரு
   சிவனோடு மந்திரங்க ளெல்லாஞ்சித்தி
பலதாரை வைத்துமிந்த மவுனம்பாரு
   பரலோக முழுவதுமே தனதாய்ப்போகும்
முத்தான முத்திதரும் முக்கண்வீசும்
   முதுகுவழிப் பார்வையிலே முழங்கிப்பாயும்
வித்தான வித்துமுதல் விளைவோரெம்ப
   வீணருக்குத் தெரியாத வித்தாம்பாரே. ௩௱

பாரப்பா வித்தாலே மவுனமாச்சு
  பல்கோடி பண்டமுமே படைக்கலாச்சு
ஆரப்பா செந்தேனுங் கருந்தேளாச்சு
  அயனையுந்தான் றலைகாலிற் பூட்டலாச்சு
வேரப்பா கெவனத்தி லோடலாச்சு
  வீராதி வீரனென்று பேருண்டாச்சு
ஏரப்பா கயிலாச வரையுமாச்சு
  என்மக்காள் வித்தென்றாற் சொல்லக்கேளே. ௫௱௧

சொல்லக்கேள் வித்தென்றாற் சுருதிமூலஞ்
  சொல்வார்கள் நாதரக்க ளனைவோருந்தான்
விள்ளக்கேள் துறையிஃதாம் மாயைநீக்கும்
  வேணுமென்ற பாக்கியங்கள் கூட்டிவைக்கும்
அல்லல்வினை தானறுக்கும் விந்துவட்ட
  மாயிரத்தின் கலையிலொன்றை மலரதாக்க
வல்லவர்க ளறிவார்கள் மற்றோர்க்கேது
  வாயினாற் சொல்லாத வாஸ்தம்பாரே. ௫௱௨

பாரப்பா மயேந்திரகிரி யுச்சிதீபம்
  பளீரெனவே மின்னுமடா பாருபாரு
ஆரப்பா மயேந்திரகிரி யுச்சியென்றால்
  ஆகாசக் கம்பமல்லோ விந்துவாச்சு
நேரப்பா சரிதையொடு கிரிகையாச்சு
  நிறைந்தெழுந்த புருவநடுத் தமர்தானாச்சு
வேரப்பா வெறும்பேச்சுப் பேசிடாமல்
  விந்துவட்டம் ஜீவரத்னம் விலாசமாகி
ஏரப்பா விருதயமே கமலமாகி
  யேகாந்தப் படிவழி மார்க்கந்தானே. ௫௱௩

தானென்றுந் தானவனாய் நிலைத்தபோது
  சாதகமா யுயரவுனைத் தூக்கிக்கொள்ளும்
மானென்ற மகாரமல்லோ விந்துவாகி
  மக்களே மூன்றெழுத்து மாதியாகித்

தேகமென்ற வமூர்த்தரச பாவமாகிச்
சீவகளை தேககளை யதுவுண்டாகிச்
கோமென்ற குஞ்சரத்தை யஞ்சமென்று
கூடினாற் குமரிகற்ப மிதுவாம்பாரே. ௩௰௪

பாரடா குமரிகற்ப விந்துநாதம்
பரிபூரணமே மின்னுமடா பாருபாரு
ஆரடா அதுதாய்த மிதுவேயாகும்
யஷ்டகர்ம மெட்டுக்கு மாதியாச்சு
வேரடா விந்துவிட்டாற் கதிதானேது
விந்துவென்றால் வீணருக்குத் தெரியாதப்பா
காரடா மதிதானே விந்துவாகிக்
கங்குல்ரவி தன்னையெடுத்துக் காட்டுங்காணே. ௩௰௫

காணடா விம்மூல மறியுமென்றாற்
கபாலிபஞ்ச சத்தியுட திசைக்கரணும்
தானடா வராகத்தால் தியானம்வேணும்
சத்தியமாய் வடுகனுட பூசைவேணும்
வானடா வானவர்கோன் மயங்கிவீழ
மாசற்ற பெருவெளியை மனத்துட்கொண்டு
கோணடா குருவான வாலயத்திற்
கூச்சலிட்டாற் குமரிகற்ப மாகும்பாரே. ௩௰௬

பாரப்பா குமரிகற்ப மேதென்றாக்காற்
பார்தனிலே செம்பூநீ யேதுமில்லை
ஆரப்பா விந்தல்லோ பானமாச்சு
ஆகாய வஸ்துவல்லோ பானமாச்சு
நேரப்பா நிருவிகற்ப சமாதியாச்சு
நீமகனே குலதெய்வந் தன்னில்நின்றால்
வேரப்பா வெறும்பேச்சுப் பேசிடாமல்
விந்துவென்றும் வட்டமென்றும் வேஷிநில்லே. ௩௰௭

நில்லடா விந்துவென்றுற் றெரியாதையா
நீணிலத்தி லுள்ளோரு மறியமாட்டார்
அல்லடா வெனைப்போலே யறிவாருண்டோ
ஆறுமுக மியாவருக்கும் வருவதுண்டோ
கல்லடா காமதேனுக் காண்பதுண்டோ
கற்பமுண்டு சாகாம லிருந்தாருண்டோ
சொல்லடா யாகாதி செய்வாருண்டோ
சூட்சகற்ப மிதுவென்று செய்தேன்பாரே. ௫௦௮

பாரப்பா சூக்ஷகற்ப மறியாத்தோஷம்
பாவையர்க ளழிகுழியிற் சேர்ந்ததோஷம்
ஆரப்பா யோகாதி செய்யாத்தோஷம்
அஷ்டகர்ம வாலையைத்தா னடுக்காத்தோஷம்
நேரப்பா சமாதியிலே நில்லாத்தோஷம்
நிஷ்டையிலே மனங்குவித்து நில்லாத்தோஷம்
காரப்பா மனதடங்கி நில்லாத்தோஷம்
காரணமாய் விந்துவென்று மறியார்ப்பாரே. ௯

பாரடா பாவிகட்கு யென்றுன்சொல்வேன்
பச்சைமயில் வாகனன்யான் பகரப்போமோ
ஆரடா குலப்புழுக்கை பயல்கள்கூடி
யாதிவஸ்து மனாதிவஸ்து வேறிதென்பார்
நேரடா லுத்தருக்குத் தெரியாதிந்த
நிலையான விந்துவட்ட நிலைதான்மைந்தா
வேரடா வெறும்பேச்சுப் பேசிடாமல்
விராகத்தாள் தியானமதை வாங்கிக்கொள்ளே. ௦

கொள்ளடா பஞ்சசக்தி குறியினாலே
கோடான கோடிசித்து மாடலாச்சு
அள்ளடா பஞ்சசக்தி யுயிரைக்கேளு
அங்கிலியு மென்றாக்கா லடக்கமாச்சு

வள்ளடா அஷ்டகர்மம் வாலையாச்சு
வாய்ப்பான திரோகாயி மாயையாச்சு
விள்ளடா லாடத்தில் மேருவாச்சு
வேகமுள்ள வழலையென்று மிதற்குப்பேரே. ருகக

பேராகி விந்துவல்லோ பேசலாச்சு
பிராணய மென்றதுவு மிதற்குப்பேரு
கூறாகிச் சந்திரனிற் கலைதானநாலு
குடிப்பதுவும் பிடிப்பதுவும் அதுதான்கற்பம்
வேறாகித் திரியாதே யிந்தஞானம்
விட்டகுறைப் படியாலே தொடரவேணும்
நாறாகிப் பூவாகி வாசமாச்சு
நலமான விந்துவட்ட மகிமைதானே. ருகஉ

தானென்ற விந்து வட்டத் தாலேயல்லா
சாகாம லிருந்தவர்க ளனேகஞ்சித்தர்
ஊனாகி விந்துவல்லோ ஆதிபீடம்
உடலுயிரு மொன்றாக விருத்திவைக்கும்
தானானே னென்றதுவு மதுதான்மைந்தா
சகலசித்தும் பேரின்பந் தானேகூடும்
வானாளை வதைப்பதற்கு இயமன்வந்தால்
வாய்திறந்து வீழ்ந்திடவே கொல்லும்பாரே. ருகரு

பாரப்பா விந்துவினா லாண்பெண்ணாச்சு
பஞ்சசத்தி மாயையெல்லாம் பறக்கலாச்சு
ஆரப்பா விந்துவென்றாற் சொல்லக்கேளாய்
ஆதார மாறினடிப் படையுமாகி
நேரப்பா வேகமென்ற கற்பமாகி
நீயென்றும் நானென்றும் மனதுண்டாகி
ஏரப்பா வாசியின்மேற் சாரியாகி
இருகலையுஞ் சுழிமுனையு மிதுவாங்காணே. ருகச

சாணடா விடகலையின் சுழினையாகிக்
கலந்தகுல தெய்வமல்லால் வேறேயுண்டோ
தானடா குலையான தெய்வத்தாலே
சதுர்முகனுஞ் சகலருமே வந்தவாறும்
வானடா வானுளு முதித்தவாறும்
வங்குசிங்கு வாசலென்றே யுரைத்தபேரும்
வீணடா வீணருக்குத் தெரியாதிந்த
வெட்டவெளி விந்துவட்ட விபரம்பாரே. ௩௧௫

பாரப்பா கயிலாய கிரியுமாகிப்
பன்னிருகை படைத்தபர மிதுவுமாச்சு
ஆரப்பா சுணங்கவென்ற பாலுண்டாகி
அரகரா வென்றசத்த மதிலுண்டாகி
நேரப்பா கனையெருமைப் பாலுண்டாச்சு
நீங்காமல் மனதறிவை யுணர்ந்தபேர்க்கு
வேரப்பா வெறும்பொய்யுஞ் சொல்லப்போமோ
விந்துவட்ட மறிந்தபெரி யோர்களாமே. ௩௧௬

ஆமடா சௌமென்று மிதற்குப்பேரு
அட்டமா சித்தியெல்லா மிதற்குள்ளாட்டம்
ஓமடா வோமுடிந்த விடமிதாச்சு
ஓங்கார வாங்கார மிதுவேயாச்சு
நாமடா விரண்டெழுத்து மிதுவேயாச்சு
நலமான வைந்தெழுத்து மிதுவேயாச்சு
வாமடா வெட்டெழுத்து மிதுவேயாச்சு
வஸ்துவென்று பெயருண்டாம் வந்தவாறே. ௩௧௭

வாரான சாமளைகே சரியுமாகி
வந்தவளாம் வராகத்தாள் பாதமுன்னித்
தாரான சாரணைசங் கற்பமாகிச்
சாயுட்சம் பாடுகிற தாயுமாகி

மேரான மேரிலொரு வொளிவுமாகி
மேதினியைத் தான்படைக்கு மயனுமாகிச்
சூராதி சூரனையும் பொடியதாக்கிச்
சுப்ரமென்று அற்புதமாய் வந்தேன்பாரே. ௩௪

பரப்பா சுப்பிரமம் பிரமபீஜம்
பராபரனை ரெனைப்பயின்று ரல்லால்வேறு
ஆரப்பா பொறிபாருஞ் சிதறிவீழ
ஆறுமுக நாதனென்றே யழைத்துமீசன்
ஏரப்பா மயிலேற வேற்றங்காட்டி
யென்றந்தை யென்குருவா மென்றுசொல்லி
வேரப்பா லாடவொளி கண்ணுற்பார்த்து
விண்ணிலிடி முழங்கிடவே வீசினரே. ௩௫

வீசியிடப் பாகமொரு வொளியும்வீச
வெற்றியோர் பழங்கனிநீ தானேயென்றார்
நாசியிரு பக்கமுந்தான் சுழல்தான்வீச
நான்கண்டேன் பழச்சாறை யறிந்துகொண்டேன்
காசியென்ற கங்கைபழச் சாறுமாகிக்
காவலர்க ளெவருமே கருணைகூர்ந்து
தேசிமயி லேறுமெனச் செப்பினார்கள்
செப்பியிட்ட வுபதேச மிம்மென்றேனே. ௩௬

இம்மென்றே னம்மாளும் வீரவாவென்றாள்
இருதயத்தி லென்னையுந்தா னிருக்கச்சொன்னாள்
அம்மென்றே னுண்ணமயிது ஆஉவென்றாள்
ஆனந்தமயமான தெய்வமென்றாள்
உம்மென்றே போதவுட னுயிராய் நின்றேன்
ஒன்றென்ற விந்துவட்ட முதலியென்றான்
கம்மென்ற காட்சிவல மாகவந்து
கயிலாய வடவரையைக் காட்டினளே. ௩௭

காட்டினான் வடவரையி லிருந்தேவாழ்ந்தேன்
கந்குல்ரவி யூடறுத்து வெளியிற்சென்றேன்
நாட்டினேன் மவுனரசக் குளிகையுண்டு
நக்கைச்சா றஞ்சமுதல் நான்குங்கொண்டு
கூட்டினேன் கிருதமென்று குவலயத்திற்
கொடியதொரு பாவிகட்குக் கைக்கூடாமல்
பாட்டினாற் சொல்லியுந்தான் சாபமீந்தேன்
பராசத்தி கிருபையினா லின்னம்பாரே. ௱௨௨

பாரடா மவுனமென்ற பூரணத்தைப்
பத்திவைத்து நிலைதனிலே நின்றுகொண்டு
ஆரடா பரமசிவன் சிரசில்நின்று
அறுருபரமேஸ்வரனா ருருகாய்த் தோன்றி
நேரடா நந்தியென்று பெயருங்கொண்டு
நிலையான கணேசனென்றும் பெயருண்டாகித்
தேரடா விந்தவொரு அறுகுதன்னைத்
திடமாக வாங்குகிற வகைதான்கேளே. ௱௨௩

கேளப்பா அருகம்வேர் துலாமொன்றேகொள்
கிருபையுடன் கொண்டுவந்தே யுரலவைத்து
ஆளப்பா ஜலந்தானும் படிதானாறு
அப்பனே அறுகமவே ரதிலேதாக்கி
வாளப்பா அக்கினியோர் விறகால்மூட்டி
மைந்தனே மசியென்று சாபந்தீர்த்துத்
தேளப்பா விரண்டுபடி சலமதாக்கித்
தேவியபி ராமிதனைப் பூசைபண்ணே. ௱௨௪

பண்ணுவது பூரணத்தைப் பணியவேணும்
பாலகனே மாதனேயின் பழச்சார்நாயி
கண்ணுமனைக் கண்ணறிந்து விண்ணைப்பாரு
கலந்தெழுந்த ஆவாரம் பட்டைவேரை

எண்ணுவது தைலமுந்தான் வாங்கிமைந்தா
   என்மக்கா ளதைலமதை யெடுத்தேதீயும்
உண்ணுவது வுற்பனத்தி லொடுங்கிவாழ்ந்து
   ஒகோகோ வின்னமுந்தான் வகையைக்கேளு. ()

கேளடா தாமரையின் கிழங்கைமைந்தா
   கிருபையுடன் பலமொன்று நிறுத்துக்கொண்டு
ஆளடா மிளகுபல மொன்றதாக
   அப்பனே திப்பிலியும் பலமொன்றாக
நாளடா சுக்குபலமரைபதாகி
   நலமான வதிமதுரம் பலந்தானென்று
வாழடா யேலமுந்தான் விராகன்நான்கு
   மைந்தனே கிராம்புகாற் பலமும்போடே. கூஉசு

போடென்று சொன்னவகை தவறிடாமற்
   புகழ்ந்திடுவாய் மைந்தாமுப் பூவின்சுண்ணம்
ஆடென்று சொன்னபடி சுண்ணந்தன்னில்
   அப்பனே விராகனிடை யதிலேசேர்த்து
நாடென்று முன்சொன்ன மருந்தையெல்லாம்
   நலமான வஸ்துவிட்டுச் சாமமொன்று
தேடென்று அரைத்திடுவாய் சாபந்தீர்த்துத்
   தேவிபஞ்ச சத்தியுட னியானம்பாரே. கூஉஎ

பாரப்பா மருந்தையுந்தா னெடுத்துவைத்துப்
   பாலகனே முன்சொன்ன கஷாயந்தன்னில்
ஆரப்பா ஆவரைவேர்த் தைலஞ்சேர்த்து
   அப்பனே மாதளையின் பழச்சார்விட்டு
நேரப்பா மருந்தையெல்லா மதிலேதாக்கி
   நீமகனே பாண்டத்தி லிட்டுக்காய்ச்சித்
தேரப்பா ஆவினெய் படிரண்டாகத்
   தீர்க்கமுடன் வாங்கியடா திலையைக்காணே.

காணப்பா மருந்தையரைத் திட்டமாக
கைபாக மாகவுந்தான் வற்றக்காய்ச்சித்
தானப்பா ஆவினெய் யதிலேவிட்டுத்
தனிச்சீந்திச் சர்க்கரையும் பலந்தான் மூன்று
நானப்பா மெழுகுபத மாகக்காய்ச்சி
நாதாக்கள் சாபமெல்லாம் நிவர்த்திசெய்து
கோனப்பா முக்கோணக் குறியில்நின்று
குருவான தேசியென்றே மனதிற்றகே. ௩௨௯

தங்கடா தசதீட்சை தன்னையோசித்
தவறாமல் நெய்யையுந்தான் பதனம்பண்ணு
பங்கடாயோட்டுமினிக் குடித்திடாமற்
பாலகனே விராகனிடை மூன்றதாகச்
சிங்கடா சிங்குவங்கு வோதிநீயுஞ்
சித்தம்வைத்தே யிருபோதுங் கொண்டாயானால்
அங்கடா நரைதிரையும் மாறிப்போகும்
அடங்காத வியாதியெல்லா மோடும்பாரே. ௩௩0

பாரப்பா விம்மருந்தை யுண்டாயானாற்
பாராபரையுங் கைவசம தாகிப்போவான்
ஆரப்பா பட்டமரம் பச்சையாகும்
அப்பனே மண்டலந்தான் கொண்டபேர்க்கு
நேரப்பா யீளையொடு காசந்தீரும்
நிகழ்மேகம் பதினெட்டுந் தீரும்தீரும்
தேரப்பா வாயுவெல்லாங் குலைந்துபோகும்
தேவாதி தேவனென்று செப்பலாமே. ௩௩௧

செப்பலாங் கிராணியொடு மூலந்தீருஞ்
செகமதனில் நமன்வரத்து மடங்கிப்போகும்
ஒப்பலாம் மலமென்று சொல்வதேது
ஓதுகின்ற குலதெய்வந் தன்னைப்பார்த்தால்

அப்பனே கயிலாசந் தனதாயப்போகும்
யாவருமே யொன்றாக வடங்கிப்போவார்
தப்பலா மென்றாலுந் தப்பொட்டாது
சத்தியமாய்க் கிருதமென்று சாற்றுவானே. ()

சாற்றுகின்ற னிம்மருந்தைப் போலேமைந்தா
தாரணியிற் சொல்லார்கள் ரிஷிகள்சித்தர்
ஏற்றியிட்ட விம்மருந்தை யுண்டோயானும்
என்மகனே மவுனமென்ற விஞ்சைபார்த்து
வாழ்த்தினே னஷ்டாங்க வெக்யஞ்செய்து
வாலையெங்கள் வராகத்தாள் மவுனங்கண்டு
கோத்திரங்க டனைத்திடவே கும்மென்றேற்றிக்
கூறினேன் வேல்வாங்கி வந்தேன்பாரே. ௩௩௩

பாரடா விம்மருந்தை வெளியேயீந்தாற்
பார்தனிலே யெழுபிறப்புஞ் சுவர்னமாவான்
ஆரடா விம்மருந்தைக் கொண்டபேர்க்கே
யகிலாண்ட மவரவர்க்கே தனதாய்ப்போகும்
கோடா விந்துவது திரண்டுபோகும்
கெடுநாளு முருத்திரனுந் தனதாய்ப்போவார்
தீராட வெம்பிணியுந் தீருந்தீரும்
சேவல்மயில் வாகனமுந் தெரியும்பாரே. ௩௩௪

பாரப்பா விக்கிருதந் தன்னையுண்டு
பஞ்சசத்தி தீட்சைதனிற் பயந்தேயேறி
ஆரப்பா வீராதி வீரனென்றே
யறுகம்வேர்க் கிருதமென்றே யாட்டம்பார்த்து
நேரப்பா வுள்ளுணர்ந்து வெளியேவந்து
நிமலிபஞ்ச சத்தியுட நிலையுங்கண்டு
காரப்பா வஷ்டகர்ம வாலையென்று
கண்டநிறைற் கந்தனென்றுபெயருண்டாச்சே. ௩௩௫

ஆச்சடா அஷ்டாங்க வாலையென்றால்
அங்கிலியு மென்றபஞ்ச சத்தியாகி
நீச்சடா வராகத்தா ளதற்குமுன்னே
நிலத்தோடித் திரிந்திடுவாள் நிரோதாயுந்தான்
வீச்சடா வவள்பூசை யறியவேணும்
வேகமுள்ள மவுனத்தைக் காணவேணும்
காச்சடா விவள்மாலை பொல்லாதையா
கண்டவர்க்கு மவுனமென்ற கனியுமாச்சே. ௱௱௬
ஆச்சப்பா படாட்சரமாஞ் சிங்கென்றேதான்
ஆதித்தன் றனைப்பார்த்து மவுனமோதி
வாச்சப்பா விடைமாறிப் பார்த்தாயானால்
மைந்தனே ரவிதானும் மறைந்துபோகும்
நீச்சப்பா லோகமெல்லா மிருளாய்மூடும்
நீமகனே நினைத்ததெல்லாஞ் சித்தியாகும்
காச்சப்பா காச்சிவிடு நிலையைப்பார்த்துக்
கவனம்வைத்துப் படாட்சரத்தைக் காட்டுகிறேனே.
காட்டுகிறேன் படாட்சரத்தை விதியுமொன்று
கல்லைவைத்து லோகத்தோர் கருதுவார்கள்
பூட்டுகிறேன் படாட்சரந்தா னிருந்தமூலம்
புல்லர்களே யுங்களுக்குப் பேசப்போமோ
வாட்டுகிறேன் சிகாரமல்லோ மேருவாச்சு
வங்குசிங்கு வாசலெனுங் குகையுண்டாகிக்
கூட்டுகிறேன் நவக்கிரக மதற்குள்ளாகிக்
கோடைபிடி மின்னலுடன் காற்றுண்டாச்சே.
ஆச்சடா படாட்சரமே யிடிபோல்வீழும்
அப்பனே மண்ணுருவிச் செலத்தைக்கோர்க்கும்
வாச்சடா லோகமெல்லாம் பயிருண்டாகும்
மைந்தனே யீசனுட பீஜமாச்சு

காச்சடா வனல்கொதித்தா லெதிரிவீழ்வான்
   காலாந்தத் தீயல்லோ படாட்சரந்தான்
மூச்சடா முன்பின்னு மியங்கொட்டாது
   முத்திவழி தன்னலேதான் மூட்டும்பாரே. ௫௫க

மூட்டுகின்ற படாட்சரமே யாதிநாதன்
   மூச்சந்தி வீதியிலே முழங்கிப்போகும்
ஆடுகின்ற படாட்சரமா ரறியப்போறார்
   அஷ்டமா சித்திக்கு மாதியாகும்
வீட்டிலே யிருகாமற் சுடுகாடாகி
   விடமுண்ட கண்டனென்று பெயருண்டாகிக்
காட்டிலே திரிகின்ற பித்தனென்றுங்
   கருத்துவைத்தே யலேந்தவிடங் கருதிப்பாரே. ()

பாரடா படாட்சரத்தின் கொடுமைபோலே
   பார்தனிலே சித்தர்கடன் செல்லமாட்டார்
ஆரடா ரவிதானு மறைந்துபோனல்
   அண்டமெல்லா மரசழிந்து கெட்டுப்போகும்
நேரடா ரவிதனைத்தான் வருத்தவென்றால்
   நீமகனே நங்கென்று நிலேயைப்பாரு
வேரடா ரவிதானு மொளியாய்வீசும்
   வித்தகனர் கயிலாசம் வெளியாய்ப்போச்சே. ()

பேச்சடா விதையறிய வேறொன்றில்லே
   புவனமென்ற படைப்புவித்தை யிதற்குள்ளாச்சு
ஆச்சடா விதையறிய வொருவரில்லே
   யகிலாண்ட கோடியண்ட மடங்கிவாழும்
வாச்சடா மூன்றெழுத்தி னுறுதியாலே
   மைந்தனே சகலசித்து மாடலாச்சு
மூச்சடா மூன்றெழுத்து மேதென்றக்கால்
   முக்கியமா மகாரமென்ற மவுனமொன்றே. ௫௪உ

ஒன்றான மகாரமென்ற மவுனத்தாலே
யொருபோதுங் கூடழிந்து போகாதையா
சென்றாலு மகாரமென்ற மவுனந்தன்னைச்
சேரடா குலதெய்வந் தன்னைப்பார்த்து
என்றாலு மூன்றெழுத்திற் கிதுவேபீடம்
மொதிரிகளை யீடழிக்கு மிதுதான்மைந்தா
ஒன்றாகு மிதுபொருளென் றறியாப்பேர்க்கு
உலகத்தி லொன்றுமில்லை யொடுக்கந்தானே. ௫௪௫

தானென்ற வொடுக்கமில்லை யறியாத்தோஷம்
சாதித்துப் பாரார்கள் சவங்கல்மாடு
ஊனென்ற வுடலெடுத்தாற் பலந்தானென்ன
வுயிரறியாப் பாதகர்தா னுலுத்தராவார்
வானென்ற முடிபார்த்து அடியும்பார்த்து
வாழ்த்தடா மூன்றெழுத்து வலிமைபார்த்துக்
கோனென்ற குறிபார்த்துக் குருவைக்காத்துக்
குலதெய்வந் தன்னைப்பார்த்துக் கூடுகூடே. ௫௪௬

கூடியே மகாரமென்ற மவுனஞ்சொன்னேன்
குலதெய்வந் தன்னைக்காணக் குறியுஞ்சொன்னேன்
ஆடியே மகாரமல்லோ அகாரமாச்சு
அம்மம்மா மூன்றெழுத்து மதற்குள்ளாச்சு
நாடியே ரவிமதியு மதுவேயாச்சு
நானென்று சொல்லுவது தா னதுவேயாச்சு
பாடியே திரியாதே மூன்றெழுத்தைப்
பதறாதே சிதறாதே பணிந்துகொள்ளே. ௫௪௭

கொள்ளடா மூன்றெழுத்தின் பயனைத்தானுங்
குவலயத்தி லொருவருக்குந் தெரியாதப்பா
அல்லடா மகாரமொடு நகாரத்துக்கும்
அப்பனே யுயிராச்சு சிகாரங்கண்டாய்

வல்லடா பெரியோர்க ளறிந்துகொண்டு
மாறாமல் மூன்றெழுத்தை மருவியோதி
வில்லடா விற்பூட்டி மாறினாற்போல்
விசைகொண்டு மூன்றெழுத்தை விரும்பிப்பாரே. ()

பாரப்பா மசிநசிவென் றெழுத்தைத்தானும்
பராபரந்தான் வந்தாலு மரிதேசொல்ல
ஆரப்பா லோகத்தோர்க் கியந்தாயானால்
ஆகாய வெள்ளிடியு மதிறவீழும்
நேரப்பா வாலைவிஞ்சை யென்றுபேரு
நிஷ்டையொடு சமாதியென்று மிதற்குப்பேரு
வேரப்பா வெறும்பேச்சுப் பேசிடாமல்
விந்துவட்டந் தனையறிந்து விரித்துக்காணே. ௩௪௭

காணடா பச்சைநிறம் விழியினுள்ளே
கலந்தெழுந்த சதாசிவனே கணேசனாச்சு
தானடா வொளியாலே பிறைபவீசிச்
சகலருக்கு மாதார மாகிப்போச்சு
கோனடா குலதெய்வத் தருளினாலே
கொடியரவிப் பிரபையங்கே விழிக்குள்ளாச்சு
ஊனடா வுயிராச்சு வுலகமாச்சு
ஓம்நமசி வாயமென்ற ததுவாம்பாரே. ௩௪௮

பாரடா வேங்கையது கொடிதேமைந்தா
பாவையர்க ளாசையிலே பாய்ந்தேயேறும்
ஆரடா வேங்கைதனைக் கட்டிமைந்தா
அறிவான சிம்மமதி லப்பாயேறி
ஊரடா பஞ்சசத்தி தியானங்கண்டே
யொன்றென்ற பொருளென்றே யுருகிவாடிக்
கோரடா மனமுருகிக் குவிந்தாயானாற்
குண்டலியாஞ் சத்தியுட குறியிதாச்சே. ௩௪௯

ஆச்சடா குண்டலியாஞ் சத்தியென்று
 லப்பனே மனோன்மணியென் றவட்குப்பேரு
வாச்சடா மனமல்லோ மணியதாகும்
 வச்சிரா யுதமென்றே யிதற்குப்பேரு
காச்சடா பிசகாம லுள்ளேவாங்கும்
 கலைமாறி யிடசாரி யாட்டிவைக்கும்
மூச்சடா பதுங்கியினிக் குமிழியாயும்
 மூச்சடராம் பேரின்ப முறையிதாமே. ௩௫0

ஆமென்று சொன்னவிடம் அடங்கிப்பாயும்
 அப்பனே புற்றரவு மதிலேசாரும்
ஓமென்று சொல்லிடவே விடங்கள்மாளும்
 உன்னிடத்தில் நினைத்தபடி யுதவிசெய்யும்
நாமென்ற சொல்லற்றால் நமனைவெல்லும்
 நாதாந்தப் பூரணத்தின் நடுவேகூட்டும்
காமென்ற காமனுந்தான் பொசிங்கிப்போவான்
 காயமே பெலங்கொடுக்குங் காட்சிபாரே. ௩௫௧

பாரப்பா வின்னமொன்று பகரக்கேளு
 பார்தனிலே யொருவருக்குந் தெரியாதப்பா
ஆரப்பாவிந்துவென் றுஞ் சிவன்றனென்றும்
 ஆகாச மானகுரு நாதனென்றும்
நேரப்பா விப்படியே யனேகம்பேராம்
 நிலையான சிவனார்தன் வேம்புதன்னை
வேரப்பா வேரெடுத்துப் பலந்தான்நூறு
 வித்தகனே யுலரவைத்து எடுத்துக்கொள்ளே. ௩௫௨

கொள்ளடா வுலரவைத்த வேருதன்னைக்
 கூறுகிறேன் மசியென்றே சாபந்தீர்த்து
அல்லடா நறுக்கியதைப் பாண்டத்திட்டு
 அப்பனே செலந்தானும் படிதான்நூறு

வல்லடா வல்லவனீ யாகவென்றால்
மைந்தனே வேருதனைச் செலத்திற்றுக்கிச
சொல்லடா ஐயென்றுங் கிலியென்றோதிச்
சோடசெப சாரமுடன் பூசைபண்ணே ௩௫௩

பண்ணுவது பூசைவிதி யறிந்துபோற்றிப்
பாலகனே யொருவிறகால் வற்றக்காச்சிக்
கண்ணுமனக் கண்ணறிந்து விண்ணைப்பார்த்துக்
கலந்தெழுந்த செலந்தானும் படிரண்டானால்
மண்ணுலகி லொருவருக்குங் காட்டாமற்றன்
மைந்தனே கஷாயமதை யிருத்துவாங்கி
உண்ணுவது ஓரெழுத்தால் மவுனமுன்னி
யொடுங்கியே நிலைதனைத்தா னுற்றுப்பாரே. ௩௫௪

பாரப்பா பத்துபலப் பரங்கிப்பட்டை
பாச்சடா கொடுவலிவேர் பலந்தான்பத்து
ஆரப்பா பிரம்பின்வேர் பலந்தான்பத்து
அப்பனே மூன்றையுந்தா னிறுத்துவாங்கித்
தேரப்பா இடித்திடுவாய் தூளதாகத்
தேவிபஞ்ச சத்தியவள் தியானங்கொண்டு
ஏரப்பா பாண்டத்திற் றாள்கடன்னை
யென்மக்காள் போடையிலே சாபந்தீரே. ௩௫௫

தீரடா சாபமெல்லாம் நிவர்த்திசெய்து
தெளிவான தூளைகுழித் தைலம்வாங்கி
வேரடா வெறும்பிலுக்காய்த் திரிந்திடாமல்
வீறான மிளகுபலங் காலதாக
நேரடா திப்பிலியும் பலங்காலாக
நிறுத்திடுவாய் சுக்கதுவும் பலங்காலாகச்
சேரடா காந்தமுந்தான் விராகன்ரண்டு
சேர்த்திடுவாய் ரசந்தானும் விராகன்ரண்டே. ௩௫௬

விராகனிடை யிப்படியே யிறுத்துவாங்கு
வீறான வஸ்துவிட்டுச் சாமம்நான்கு
மறுதபடி யதையறைத்து வழித்துக்கொண்டு
மைந்தனே முன்சொன்ன தைலந்தன்னில்
விராகத்தாள் பாதமுன்னித் தியானம்பண்ணி
விட்டாட்டி மருந்தையெல்லாங் கலக்கிக்கொண்டு
தராதரமாய் முன்சொன்ன கஷாயந்தன்னிற்
றூக்கிடுவாய் தைலமெல்லா மொன்றாய்த்தானே. ()

தானென்ற ஆவின்நெய் படிரண்டாகத்
தாக்கடா கஷாயமது தன்னில்விட்டுக்
கோனென்ற குருவருளாற் கிலியென்றோதிக்
கூறடா லட்சமுரு குணமதாக
வரனென்ற மெழுகுபத மாகக்காச்சி
வாய்பேசா தெடுத்திடுவாய் மைந்தாநீயும்
தேனென்று நெய்யையுந்தான் பதனம்பண்ணிச்
சீவன்முத்த னவதற்குச் செப்பக்கேளே. ௩௫௮

கேளடா தேகமுந்தான் வலுத்துப்போச்சு
கிருதமிது போலவுமே யார்தான்சொல்வர்
ஆளடா மேகமல்லா மழிந்துபோகும்
அப்பனே ஜன்னிசுர முடனேதீரும்
வாழடா யீளையொடு காசந்தீரும்
வஞ்சனைகள் மருந்திடு மாறிப்போகும்
நாளடா பெரும்பாடு வுடனேதீரும்
நாடிநீர்ச் சுருக்குநீ ரிழிவுபோமே. ௩௫௯

போமடா குஷ்டமெல்லா மோடிப்போகும்
பொல்லாத சூனியமும் பொசுங்கிப்போகும்
ஆமடா விஷமெல்லா மகன்றுபோகும்
அடங்காத சூதகத்தின் திரட்சிபோகும்

நாமடா அரையாப்பு வெட்டைதீரும்
   நடுங்கியதோர் வாதமெல்லாம் நாசமாகும்
வாமடா மண்டலந்தான் கொண்டபேர்க்கு
   மாறாத வயிற்றோட்ட மாறும்பாரே. ௩௬௦

யாரப்பா இம்மருந்தை யுண்ணும்போது
   பாவையர்க ளாசையுந்தா னாகாதப்பா
ஆரப்பா ஆசைவைத்தே யுண்டாரானால்
   அவன்தேக மட்சணத்தி லழிந்துபோகும்
நேரப்பா நேரமொன்று விராகன்ரெண்டு
   நிச்சயமாய் நெய்யையுந்தா னிறுத்துக்கொண்டு
வேரப்பா வெளியேதான் சொல்லிடாமல்
   வினைதீர மருந்தையுந்தான் விரும்பிக்கொள்ளே. ()

கொள்ளடா இக்கிருதம் போலேமைந்தா
   குவலயத்திற் சித்தர்கடான் சொல்லார்சொல்லார்
அல்லடா வுமையாளுக் தாரங்கேட்டே
   அப்பனே கிருதமெல்லாம் வெ:ளியாய்ச்சொன்னேன்
வல்லடா வல்லடியாய்ச் சித்தர்கூடி
   வருந்தியெனைப் பணிந்தவர்கள் குருவென்றார்கள்
செல்லடா செல்வனென்றுஞ் சிவனுனென்றுஞ்
   செப்பினு ரோமென்று மாமென்றேனே. ௩௬௨

ஆமென்ற சொற்கேட்டுச் சித்தர்கூடி
   யாகுரு நீயென்று அருளைப்போற்றி
ஓமென்று குண்டலியைப் பார்த்தேயாடி
   யுனைப்போலே சித்தர்கடா னில்லையென்றார்
நாமென்று அவர்களுக்குச் சொன்னபேச்சு
   நாதாந்த மவுனமதை யவர்க்கேயீந்தேன்
ஓமென்று மாமென்று மெழுத்தைக்காட்டி
   உயர்வான வடகிரியி லிருமென்றேனே. ௩௬௩

இருமென்ற பேச்சாலே ஆ-ஊ-என்று
   ஏகினர் குறுஞ்சித்த ரனேகங்கோடி
திருமந்த்ர மூலமெல்லாம் வெளியாய்க்காட்டிச்
   செகத்திலுள்ள மனிதர்களைச் சித்தராக்கிக்
குருமந்த்ர•மறியாமற் சாவரென்று
   குணம்வந்து மனதிரங்கிக் குருபோற்சொன்னேன்
மருமந்த்ர மேதுக்கு மக்காள்மக்காள்
   மகாரமல்லோ தீபவொளி மார்க்கம்பாரே. நுசுச

பாரப்பா பரமசிவ னிம்மூலத்தாற்
   பரையினிடம் வாழ்வதற்குப் பாக்யம்பெற்றார்
ஆரப்பா விம்மூல மறிந்தானும்
   அவர்தனக்கு மெட்டாத வஸ்துவானேன்
நேரப்பா வஸ்துசடாட் சரமுமாகி
   நீங்காத சிற்றறிபெற் றறியுமானேன்
காரப்பா வுந்திதில் கண்டால்மோட்சம்
   காணுட்டாற் கழுதையென்று காட்டுறேனே. நுசுரு

காட்டுகிறேன் கழுதையென்று சொன்னால்மோட்சங்
   கள்ளனென்று சொன்னாலுங் கபடமார்க்கம்
நாட்டுகிறே னியான்றனும் வெளியாய்ச்சொன்னேன்
   நான்றானுஞ் சொல்லாட்டாற் பாவம்பாவம்
வீட்டிலே யிருந்துநீ தீபம்வைத்து
   வேடிக்கை பார்த்திடுவாய் சிலம்பினோசை
காட்டிலே திரிந்தாக்கால் வருவதேது
   கபடற்ற சித்தனென்றாற் கண்டுகொள்ளே. நுசுசு

கொள்ளாத பசுவுக்குப் பாலங்கேது
   குருடான கண்ணுக்கு வெளிச்சமேது
சொல்லாத பேச்சுக்குக் கேள்வியேது
   சோரஞ்செய் மங்கையர்க்கு வாழ்வுமேது

கல்லாத வீணருக்குக் கல்வியேது
காணாத பேர்களுக்குக் காட்சியேது
விள்ளாத சீடனுக்குக் குருவுமேது
வேடிக்கை யாய்த்திரிந்தால் விழலாம்பாரே. ௫௬௭

பாரப்பா மவுனமுண்டு பாராவிட்டாற்
படீரெனவே யிடிவிழுந்து பட்டுப்போவான்
ஆரப்பா மவுனத்தா லறிவைக்கண்டு
ஆட்டமென்ற ஆட்டையெல்லா மடங்கத்தள்ளிச்
சேரப்பா பஞ்சசத்தி தியானத்தாலே
செகத்தோர்க ளடிபணிந்து தெண்டஞ்செய்வார்
மாரப்பா கீழ்மேலா ராய்ந்துபார்த்து
மனதொருமை யாகவுந்தான் மனதிற்றங்கே. ௫௬௮

தங்கடா செடிபூடு விருட்சமெல்லாஞ்
சம்புசதா பரவெளியே யல்லால்வேறே
அங்கடா வுயிரெல்லாஞ் சிவமதாகும்
அடங்காத மலைகாடுஞ் சிவமதாகும்
தங்கடா இப்படியே சிவமதாகிச்
சகலருக்கு முயிர்க்குயிராய்த் தானேதானாய்ப்
பங்கடா பலவிதமாய் மாயைதோன்றிப்
பராபரையு மொன்றாகி யிருந்தவாறே. ௫௬௯

வாரான தேவிக்குக் கண்தான்பத்து
வளமான சிவனுக்குப் பதினொன்றாகும்
தாரான கண்ணையுந்தா னறிந்தால்முத்தி
தவறினா லினைவாறித் தகர்த்துப்போடும்
கூரான இடகலையே காலனாகுங்
குறிப்பான பிங்கலையே பாசமாச்சு
பேரான சுழிமுனையே முத்தியாகும்
பேசாத குலதெய்வந் தன்னைப்பாரே. ௫௭௦

பாரப்பா வெங்கெங்கு மோடினாலும்
  பலபலவாய் மந்திரங்கள் படித்திட்டாலும்
ஆரப்பா மவுனமென்ற ஆதிபீடம்
  அதினாலே சகலசித்து மாட்டிவைக்கும்
நேரப்பா மற்றதினா லாவதென்ன
  நிலைகண்ட பெரியோர்கள் நீஞ்சுவார்கள்
ஊரப்பா கோடியிலே யொருவனுண்டு
  உற்றுணர்ந்த பெரியோர்க ளுண்மைதானே. ௫௭௧

உண்மையென்றால் மனதுண்மை யிருக்கவேணும்
  உயிர்தோறும் நாமென்று நினைக்கவேணும்
தண்மையிலே யதிகமாய்த் தண்மைவேணும்
  தவறாத தாரணையிற் சாரவேணும்
அம்மையெனு மாத்தாளைப் பணியவேணும்
  அஷ்டாங்க வெக்கியங்கள் செய்யவேணும்
ஜன்மமென்ன பாவத்தா லெடுத்தஜன்மம்
  சடமழியா திருந்தவர்க்கு முத்தியாமே. ௫௭௨

முத்தியுமாய் முப்பொருளாய் மூலத்தலிங்கம்
  மூலத்திலே யாவுடைய மானலிங்கம்
சத்தியமாய்க் குலையாக வாழ்ந்தலிங்கம்
  சரமாறிக் கால்மாறி யாடும்லிங்கம்
புத்தியிலே பேதையொன் றும் பொருந்தலிங்கம்
  புல்லருக்குத் துணையாகப் புகுந்தலிங்கம்
எத்திசையு முயிர்தோறு மிருந்தலிங்கம்
  ஏகாந்த லிங்கமொன்று மிச்சம்பாரே. ௫௭௩

பாரப்பா லிங்கமொன் றும் பரந்தானென்றும்
  பஞ்சசத்தி யாளுடைய பீடமென்றும்
ஆரப்பா வாசிமனோ லயந்தானென்றும்
  அடுக்கடுக்கா யங்கங்கே செனித்ததென்றும்

நேரப்பா மூலமென்றும் பீசமென்றும்
நிலையான சாரணைதா ரணைதாரனென்றும்
ஏரப்பா இந்திரிய வட்டமென்றும்
எங்கெங்கும் நிறைந்தசிவ லிங்கந்தானே. ௩௭௪

தானென்ற சிவலிங்க மியார்தான்காண்பார்
தன்னினைவைத் தானறிந்த பெயர்க்கேகிட்டும்
மானென்ற மகாரமதை யறியாப்பேர்க்கு
மகாலிங்க தெரிசனைதான் கிடையாதப்பா
வானின்று வளர்ந்தமணி பூரகத்தில்
வடவரையோ மேருவென்று வந்தலிங்கம்
கோனென்றுங் குருவென்று மானலிங்கங்
கூறவென்றா லதினாலே பேசலாச்சே. ௩௭௫

பேசாத வெழுத்தாச்சு மகாரமாச்சு
பேசவென்றால் வாய்திறந்து பேசலாச்சு
கூசாத வெழுத்தல்லோ குலையாத்தெய்வங்
கூறுதற்கு மென்னாலே நாவுமுண்டோ
ஏசாதே வெளிதிறந்து சொன்னேனென்று
என்மக்காள் மனதிரங்கி வெளியேவிட்டேன்
காசாசை வைத்தவர்க்கு ஞானமேது
கருத்தறியா மடையருக்குக் காட்டொண்ணாதே. (·)

ஒன்றான சத்தியடா வுறவுமாகி
யுன்னோடே பிறந்ததொண்ணூற் றாறுபேரை
நன்றாக நசித்திடலா மவுனங்கண்டால்
நாடாட்டால் நகைபுரிந்து பேசுவாளாம்
குன்றாதே மவுனம்வைக்கும் போதுநீயுங்
கோடிதன மிருந்தாலுங் குருவுக்கீவாய்
மன்றாட்டுப் பண்ணாதே மற்கட்டாதே
மனதிரங்க மட்டுமடா குருவைக்காரே. ௩௭௭

காரையா பன்னிரண்டு வருடங்காத்தாற்
காட்டுவார் மவுனமென்ற விஞ்ஞைதன்னை
மாராத வாழ்வல்லோ சிவயோகத்தால்
மயங்கினால் வருவதென்ன விழலாய்ப்போச்சு
பாராதே சந்தேக மாகமைந்தா
பார்த்தாக்காற் பாவம்வரும் தோஷமாகும்
நேராதே சந்தேகந் தெளிந்துநீயும்
நிஷ்டையிலே நின்றாக்காற் காட்டுவாளே. ௩௭௮

காட்டுவாள் குருமொழியுந் தவறுவண்ணங்
காரணமே பூரணமே யென்றுபோற்ற
நாட்டுவா ளென்மகனே வாவாயென்பாள்
நல்வினையுந் தீவினையும் நசித்துப்போகக்
கூட்டுவாள் தன்னோடே யுறவதாகக்
கூறுவாள் மவுனமென்ற விஞ்ஞையெல்லாம்
பூட்டுவாள் கற்பமறிந் துண்ணச்சொல்லிப்
புகழ்ந்திடுவா ளென்மகனே யென்றேபோற்றி
மாட்டுவாள் நமனையுந்தான் மாண்டுபோக
மாறாத வாசியிலே யேற்றுவாளே. ௩௭௯

ஏற்றுவாள் கண்மணியே மகனேயென்று
ஈசனுக்கு மேலாக விருக்கச்சொல்வாள்
வாழ்த்துவா ளமுதமெல்லா முனக்கேயீந்து
வந்தவினை யற்றிடவே வாக்குமீவாள்
மாற்றுவாள் பிறவிதனை வரவொட்டாமல்
மயக்கமென்ற மாயையெல்லாம் வாங்கிக்கொள்வாள்
ஏற்றுவா ளீராறு தலத்தினூடே
யென்மகனே யென்றுசொல்லிக் கூறுவாளே. ()

கூறுவதற் கெளிதாமோ அவடன்கோலங்
கோலமென்ற கோலமெல்லாம் வெகுவாங்கூத்து
சேருவது கெதியறிந்து சேருவாளாஞ்
செகத்தோடே கூத்தாடித் திரிகுவாளாம்

ஏறுவது லாடாதி லேறுவாளாம்
  என்தாயாள் முகமாறி யாடுவாளாம்
மேருவிலோர் கால்மிதித்துக் கொள்ளுவாளாம்
  மெல்லியடா நல்லவளாம் வருகுவாளே. ரு௮க

வருந்தாத பாவிகட்கு வருந்துவாளோ
  வம்புசொலும் வீணர்தங்க ளிடஞ்சேர்வாளோ
பொருந்தாத பேர்களுக்குப் பொருந்துவாளோ
  புல்லர்களை நம்பியுந்தான் வருகுவாளோ
இருந்தாலு மவுனமதை யெண்ணினாலும்
  என்தாயைப் போற்றூர்க்கு வருவதுண்டோ
திருந்திடவே மலையாமல் நிலையைப்பாரு
  சீவன்முத்த னுவதற்குத் தீர்க்கம்பாரே. ரு௮௨

பாரடா இன்னமொரு கிருதங்கேளு
  பாவமெல்லாம் பறக்குமடா யிதினால்மைந்தா
ஆரடா வில்வவேர் பலந்தான்நூறு
  அப்பனே நறுக்கியதைப் பாண்டத்திட்டு
நேரடா செலந்தானும் படிதான் நூறு
  நீமகனே வார்த்திடுவாய் பாண்டத்துள்ளே
ஏரடா வோர்விறகா லனலைமூட்டி
  யென்மக்காள் காய்ச்சிடுவாய் வற்றத்தானே. ரு௮ரு

தானென்ற செலந்தானும் படிரெண்டாகத்
  தவறுமற் காச்சியதை யிறக்கிக்கொண்டு
கோனென்ற குருவருளால் மசியென்றோதிக்
  குமரிசிவ சாமிக்குப்பூசைசெய்து
வானென்ற மருதம்வேர் பலந்தான்பத்து
  வளர்கண்டங் கத்திரியும் பலந்தான்பத்து
கோனென்ற தூதுவளை பலந்தானஞ்சு
  கூட்டியே நறுக்கியதையெடுத்துக்கொள்ளே. ரு௮ச

கொள்ளடா தூளைகுழித் தைலம்வாங்கித்
 தருவான தேசியென்றே மனதிற்கொண்டு
அல்லடா தைலமதை யெடுத்துக்கொண்டு
 அப்பனே குமரிச்சார் படிதான்நாழி
வல்லடா வாங்கியதைப் பதனம்பண்ணி
 மைந்தனே வாலுழுவை பலந்தான்காலு
சொல்லடா திரிகடுகு வொவ்வொன்றுக்குச்
 சூட்டடா காற்பலமவ் விதமாமே. ௯அரு

ஆமடா கடுகுரோ கணியுமைந்தா
 அப்பனே யரைத்தையொடு ஏலஞ்சேர்த்து
ஓமடா விந்துப்புக் கிராம்புகாரம்
 ஓகோகோ விராகன்மூன் றெவ்வொன்றுக்கு
நாமடா முப்புசுண்ணம் விராகனொன்று
 நலமாக நிறுத்தெல்லாம் வாங்கிக்கொண்டு
வாமடா வடித்துவிட்டுச் சாமம்நாலு
 வளமாக வரைத்ததையும் வாங்கிக்கொள்ளே. ()

கொள்ளடா முன்சொன்ன கஷாயந்தன்னிற்
 குழித்தைல மருந்தோடு குமரிச்சாறும்
அலலடா வொன்றாகச் சேர்த்துமைந்தா
 ஆவின்நெய் படியுந்தா னிரண்டுசேரு
சொல்லடா வொன்றாகக் கிண்டிக்காச்சிச்
 சொரூபமுள்ள நெய்தானும் மெழுகதானால்
வல்லடா விரக்கியதை யாறவைத்து
 வாலைபஞ்ச சத்தியுட தியானஞ்செய்யே. ௯அஎ

செய்யப்பா கிருதமதை வெளிவிடாதே
 தேசத்தோர் தங்களுக்கே யீந்திடாதே
மெய்யப்பா வறட்சியொடு மீளைதீரும்
 மேகமென்று லுலகத்தி லோடிப்போகும்

ஐயப்பா வாயுவெல்லாங் கலைந்துபோகும்
  ஆதார சதாசிவத்தை யறியச்செய்யும்
பொய்யப்பா போகாது இயமனேது
  பூதலத்திற் சாவேது புண்ணியோர்க்கே. ௩௮௮

புண்ணியவா ஞனவர்க்குக் கிட்டுங்கிட்டும்
  பொய்பேசும் புல்லருக்குக் கிட்டாதப்பா
தன்னினைவாய் கிருதமதை விராகன்மூன்று
  சத்தியமாய் மண்டலந்தான் னிருபோதுண்ணக்
கன்னிமனோன் மணியாடன் கிருபைதங்கும்
  கலவியிலே மிச்சமடா மோகமுண்டு
ஜன்னிசுர முள்ளதெல்லாந் தொலைந்துபோகுஞ்
  சரந்தானும் நிலைதனிலே தங்கும்பாரே. ௩௮௯

பாரப்பா பாவிகட்குக் கிருதமீந்தாற்
  பராபரையாள் சேவையுமே கிடையாதப்பா
ஆரப்பா விப்படித்தான் சொல்வாருண்டோ
  அகத்தியமா முனியேகே ளுனக்காய்ச்சொன்னேன்
நேரப்பா வெறும்வாயை மென்றிடாமல்
  நிஷ்டையொடு சமாதியிலே நின்றுகொண்டு
வேரப்பா தவம்பத்ம கிரியிலேதான்
  வெகுகோடி காலமெல்லா மிருந்தேன்காணே. ()

காணடா தவசுசர வணையிலேநான்
  கலந்தெழுந்த மேருவென்று மதிலுண்டாக்கித்
தானடா பரங்குன்ற மதுவேயாகிச்
  சமாதியிலே வெகுகோடி காலமட்டும்
நானடா வெளியேறித் தேவிபாதம்
  நலமான வசுரர்குல மறுக்கவென்று
வீணடா போகாமல் வேடமிட்டு
  விரைந்தேறிக் குருமலையில் வாழ்ந்தேன்பாரே, ௩௯௧

பாரப்பா அம்மலையி னுச்சிமீதிற்
பரமசிவ னெனைக்கண்டு பணிந்துகொண்டார்
ஆரப்பா அசுரர்குல மறுக்கச்சொன்னார்
ஆத்தாளுஞ் சத்திவடி வேல்தானானாள்
நேரப்பா அதிலிருக்குஞ் சித்தர்கோடி
நீரார்கா ளென்றுசொல்லி யென்னைக்கேட்கத்
தேரப்பா பரவெளிக்குக் குருவாம்நானுஞ்
சிறுவயது மைந்தனென்று செப்பினேனே. ௫௬௨

செப்பிடவே சித்தரெல்லா மென்னைப்பார்த்துச்
சிவ்முருகா கயிலாச வாணியென்று
ஒப்பியே யெல்லோரும் பணிந்தாரென்னை
யுற்றதொரு மவுனமெல்லா மவருக்கீந்தேன்
அப்பியே யறிந்தார்கள் சித்தர்கோடி
யதிலிருங்கோ ளென்றமொழி யவர்க்குச்சொல்லித்
தப்பியே செந்தூரின் மேருவேறிச்
சண்டாள வசுரர்களை வதைத்தேன்பாரே. ௫௬௩

பாரப்பா குருமலையைப் பத்திப்பாரு
பார்தனிலே யொருவருந்தான் சொல்லமாட்டார்
ஆரப்பா அம்மலையின் பத்தியோரம்
அனந்தமடா குகைகளெல்லா மடைத்துப்போட்டேன்
நேரப்பா செந்தூர மதிலேகட்டி
நிலைப்பான கணையெருமை மரங்கள்கோடி
தோப்பாக கணங்களென்ற மரங்கள்கோடி
செகந்தனிலே சொல்லாதே தெளிவுதானே. ௫௬௪

தானடா தானிருந்து தவசுசெய்து
சத்திவடி வேலுருவம் பெற்றேனங்கே
கோனடா குருமலையைப் போலேமைந்தா
குவலயத்தில் மற்றொரு கிரிதானேது

தானடா அதிலிருக்கும் பெருமைதன்னைத்
தவசிகளுஞ் சித்தர்களுஞ் சொல்லார்சொல்லார்
வானடா மவுனமது அறியவென்றால்
வாடாத சிரிதனக்கு வருகுவாயே. ௫௰௫

வருகுவா யென்னை நினைத்து வாலைவிஞ்சை
வருந்துவாய் பராசத்தி யருளைப்போற்றித்
தருகுவே னவர்களுக்கு ஞானமெல்லாஞ்
சாடாளத் தத்துவங்க டொலைந்துபோகும்
மருகுவாய் மவுனமுண்டு அமுதங்கொண்டு
மாசற்ற பெருவெளியை மனதிற்கொண்டு
பெருகுவாய் பேசாத வெழுத்தைநாடிப்
பேரின்ப மானதையுந் தொடர்ந்துகூடே. ௫௰௬

கூடாமற் சிறிதுபேர் ஞானம்பார்த்துக்
குவலயத்தி லலைவார்கள் தெய்வமென்று
ஆடாம லாடிவோ ராட்டமேது
அம்பலத்தைப் பாராட்டா லறிவுமேது
வீடான வீடழிந்தால் ஞானமேது
விந்துவிட்டால் வலுப்போச்சு மாயைசூழும்
மாடானு லொருபோக்காய் நிற்குஞ்சொன்னேன்
மனிதருக்கு அத்தன்மை யில்லைத்தானே. ௫௰௭

தானென்ற பொருள்தேடிச் சனங்கள்கூடிச்
சண்டாளத் தத்துவப்பேய் பிடித்துக்கொண்டு
கோனென்ற குவலயத்திற் பொருளைத்தேடிக்
குருவினுட பாதமதிற் கூடமாட்டேன்
நானென்ற வாய்மதங்கள் பேசிப்பேசி
நமன்றனக்கே யாளாகப் போனன்பாவி
தேனென்ற திரையெழுங் கிழிந்துபோகச்
செப்பியடா மனதுறுதி யாகப்பாரே. ௫௰௮

பாரடா தர்மமென்றும் புண்ணியமென்றும்
பார்தனிலே செய்தலுத்து அலைவார்வீணே
ஆரடா தர்மமென்ன புண்ணியமென்ன
ஆகாச சதாசிவத்தி னருளைக்கண்டால்
நேரடா சிவத்தையுந்தா னறியாவிட்டால்
நீணிலத்திற் றருமங்கள் நிலைகூடாது
காரடா சிவமல்லோ யேகபீஜங்
கண்டுகொள்ள மவுனத்தைக் கருதித்தானே. ௯௯

தானென்ற வேகமந்தப் பீஜத்தாலே
சற்குருவாம் ஷடாட்சரமும் நாமேயாகும்
கோனென்ற அவ்வேக பீஜமானால்
குருவான மகாரமல்லோ அதுவாய்ப்போச்சு
நானென்று சொல்லிவிட்டே னுங்களுக்கு
நலம்பெறவே யுப்பைவிட்டா வீணாய்ப்போச்சு
தேனென்ற வுப்பதையுஞ் செப்பிடாதே
செப்புகிறே னுவருப்பு ஆதிபாரே. ௨00

பாரப்பா வுவருப்பு பூமிநாதம்
பரமசிவன் பீஜமென்று யிதற்குப்பேரு
ஆரப்பா விதைமறந்தார் பெரியோரெல்லாம்
அகத்தியமா முனியேகே ஞானக்காய்ச்சொன்னேன்
நேரப்பா கள்ளர்பற்றும் மறவநாடு
நிலைப்பான பாலைவனத் தேசமைந்தா
தேரப்பா நானைகண்ட முனியோர்பக்கஞ்
சென்றெழுந்த மேற்புறத்திற் றெளிவாய்க்காணே. ()

காணடா அதிலேதா னுவருப்பாகிக்
கண்டுகொள்ளே அஞ்சுவர்ன மாகத்தோன்றும்
தானடா கதிர்போலே வளர்ந்துநிற்குஞ்
சத்தியமாய் ரவியொளிவு வீழ்குமுன்னே

கோனடா மசியென்றே சாபந்தீர்த்துக்
குருவான பராபரையை மனத்திலெண்ணி
வானடா வாய்பேசா தெடுத்துக்கொண்டு
வையகத்தோ ரறியாமல் பதனஞ்செய்யே. ௪0௨

செய்யப்பா சுத்தசெலந் தன்னிலேதான்
சேரவினிக் கரைத்ததையுந் தெளியவைத்து
ஐயப்பா பத்துமுறை யிதுபோற்காச்ச
அப்பனே யுப்பதுதான் வெளுத்துப்போகும்
மெய்யப்பா வுப்பதையும் பதனம்பண்ணி
மேலான பஞ்சசத்தி தியானஞ்செய்து
பொய்யப்பா சொல்லவில்லை யிந்தநூலிற்
புத்திரனே வாதமெல்லாங் கொள்ளையாச்சே. ௪0௩

ஆச்சடா வுப்பைவிட்டால்வாதம்போச்சு
ஆகாது காயசித்தி யையாவையா
மூச்சடா முன்பின்னாய்ச் சொல்லவில்லை
மூடருக்கு இப்பூவுங் கிடையாதையா
காச்சடா காசினியி றகிட்டுமோசொல்
கருத்துவைத்து மனதிரங்கிக் கலந்துசொன்னேன்
எச்சடா விந்தப்பூ கிடையாதையா
எமனையுந் தானடித்துத் தள்ளும்பாரே. ௪0௪

பாரடா தேவிபரா பரையுந்தேவி
பாவையர்கள் நாதமதை வாங்கிக்கொண்டு
ஆரடா சூடனதைப் பொடித்துத் தூவி
யப்பனே முப்பிண்டம் விராகன்ரண்டு
நேரடா வொன்றாகச் சேர்த்துமைந்தா
நீமகனே ரவிமுகத்தி லெடுத்துவைத்து
வேரடா சாபமெல்லாம் நிவர்த்திசெய்து
வேதாந்தப் பராபரையேவேண்டிக்கொள்ளே. ௪0௫

கொள்ளடா ரவிபீஜ முப்பாய்ப்போகுங்
குருவாணை யுமையாணை காட்டிடாதே
அல்லடா பஞ்சசத்தி கிருபையாலே
யருளான வுப்பாலே யெல்லாஞ்சித்தி

வல்லடா வல்லவர்க்குக் கிட்டும்பாரு
வையகத்தில் மானிடர்க்குக் கிடையாதப்பா
சொல்லடா விந்தமுறை போலேமைந்தா
சொல்லார்கள் சொல்லார்க ளுண்மைபாரே, ௨0௬

பாரப்பா பாரையுப்பு யார்தான் காண்பார்
பரமசிவன் பீஜமென்றே இதற்குப்பேரு
ஆரப்பா பாரையுப்பு கல்லுப்பாச்சு
அடங்காத வழலையுப்பு என்றும்பேரு
நேரப்பா சாரையுப்பு என்றும்பேரு
நிலைப்பான தேவியுப்பு என்றும்பேரு
காரப்பா வுப்பையுந்தான் வாங்கிவந்து
கருத்தாக மசியென்றே, சாமந்தீரே. ௨0௭

தீரடா வுப்பையுந்தான் செலத்திற்றாக்கித்
தேவிபஞ்ச சத்தியுட தியானஞ்செய்து
ஆரடா தெளியவைததே யிருத்துக்கொண்டு
அப்பனே பத்துமுறை யடங்கக்காய்ச்சி
நேரடா வுப்பையுந்தா னெடுத்துப்பாரு
நீமகனே உப்பதுவும் வெளுத்துப்போகும்
வேரடா பேசாதே அலைந்திடாதே
வீரான பிண்டமென்று மிதற்குப்பேரே. ௨0௮

பேரென்ன விந்துவென்று நாதமாச்சு
பெரியோர்க ளறிவார்கள் மற்றோர்க்கேது
ஆரென்ன வூரென்ன வரூபமாச்சு
அடங்காத வாதமெல்லாங் கொள்ளையாச்சு
நேரென்ன நிலையென்ன வுன்னைக்கண்டால்
நிலைக்குமடா பாரையுப்பு நினைவாய்மைந்தா
ஊரென்ன ஜனமென்ன உறவோரென்ன
உற்றுப்பா ரொன்றுமில்லை வெளியாய்ப்போச்சே,

போச்சென்றே யிந்தவுப்பை விட்டிடாதே
பூலோகத் தார்களுக்கு மீந்திடாதே
ஆச்சென்றால் முன்சொன்ன வுவருப்போடு
அடங்காத நாதவுப்பு வழலையுப்பு

மூச்சொன்றும் விடாதபடி யொன்றாய்ச்சேர்த்து
முத்திதருஞ் சுண்ணமென்று முடிவுசெய்து
பேச்சென்று பேசாமற் பதனம்பண்ணிப்
பேதையைப்போல் வாய்பேசா திருந்துகொண்டு
காச்சென்று காச்சிவிடு லோகத்தார்க்குக்
கபடற்ற சித்தனென்றாற் பலிக்கும்பாரே ௪௧0

பாரப்பா அமுரியுப்பு யார்தான்சொல்வார்
பராபரத்தின் விந்துவென்று மிதற்குப்பேரு
ஆரப்பா அமுரிபடி யிருபத்தைந்து
அப்பனே பாண்டத்தில் விட்டுக்காச்சி
நேரப்பா காச்சியது வற்றும்போது
நிலையான வுப்பாக வளர்ந்துதோன்றுஞ்
சேரப்பா வுப்பதிலே ஜெலந்தான்வாரு
செப்புமசி யென்றேநீ சாபந்தீரே, ௪௧௧

தீரடா வுப்பையுந்தான் ஜெலத்தில்மைந்தா
தீர்க்கமுடனே கரைத்தபின்பு தெளியவைத்து
ஆரடா தெளிந்தஜெல மிருத்துக்கொண்டு
அப்பனே பத்துமுறை யடங்கக்காச்சு
நேரடா வுப்பையுந்தான் பார்க்கும்போது
நிலைத்திடுமே யுப்பதுதான் வெளுத்துப்போகும்
வேரடா வுப்பையுந்தான் பதனம்பண்ணி
விராகத்தாள் பாதமதைப் பணிந்துகொள்ளே ௪௧௨

கொள்ளடா இவ்வுப்பு போலேகாரங்
குவலயத்தி லில்லையடா மக்காள்மக்காள்
அல்லடா காரமென்றுஞ் சாரமென்றும்
அழகான ஆதியுப்பு என்றும்பேரு
வல்லடா வல்லவர்க்குக் கிடைக்குமையா
மற்றோர்க்குக் கிடையாது வருந்தினாலும்
சொல்லடா நவலோக மதனாற்சாகுங்
கொள்ளிகொண்ட வாதமெல்லாம் பலிக்கும்பாரே,

பாரப்பா புளியறியாப பாதகர்க்கு
பார்தனிலே ஞானமுந்தான் பலியாதையா
ஆரப்பா புளியென்றான் மூலமார்க்கம்
அப்பனே கருநெல்லி யென்றும்பேரு
நேரப்பா அனுதியென்றும் இதற்குப்பேரு
நிலையான வுகாரமென்றும் இதற்குப்பேரு
வேரப்பா வேறிதென்றே அலைந்திடாமல்
வேண்டியதோர் புளிதனையு மெடுத்துக்கொள்ளே. ()

கொள்ளடா பாண்டத்தி லடைத்துமைந்தா
குருவான சூடமுந்தான் பலமொன்றாக
அல்லடா சேர்த்திடுவாய் ஜலந்தான்விட்டு
அப்பனே கரைத்ததையுந் தெளியவைத்து
வல்லடா வாலையுட தியானஞ்செய்து
வாங்கடா ஜலந்தனையு மிருத்துத்துண்டாய்ச்
சொல்லடா காச்சிவிடு முறைதான்பத்து
சுருதிமுடி பிறந்தவிடந் தன்னைக்காணே. ௨௧௫

காணடா வுப்பதுவும் வெளுத்துப்போகுங்
கைகண்ட வித்தையடா வார்தான்சொல்வார்
தானடா வுப்பதையும் பதனம்பண்ணிச்
சத்திசிவ காமியென்று மனதுட்கொண்டு
நானடா சகலசித்து மாடிக்கொண்டேன்
நமன்வினையு மூடறுத்து வெளியில்வந்தேன்
கோனடா கோனருளாற் பாத்திற்சென்றேன்
கூறுகிறே னிதற்குவகை குணமிதாமே. ௨௧௬

தாமடா தானவனுப் நிலைக்கவேணுஞ்
சத்தியமாய் முன்சொன்ன மூன்றுபூவும்
ஆமடா அமுரியுப்பு நெல்லியுப்பு
ஆகவுமஞ் சுப்பென்றே அறிவாற்கண்டு

ஓமடா பஞ்சசத்தி யிதுதாமென்றும்
ஓகோகோ பஞ்சகர்த்தா ளிவர்தானென்றும்
வாமடா வாமனென்று ரூபங்கொண்டு
வாங்கினே னிந்தவுப்புத் தொகைதான்கேளே, சகஎ
கேளடா நவலோக மெல்லாஞ்சித்தி
கிருபையுடன் காந்தமுந்தா னுருகியாடும்
ஆளடா சூதமுந்தான் கட்டிப்போகும்
அப்பனே பாஷாண மெல்லாங்கட்டும்
நாளடா தாரமுந்தான் வாங்கிவந்து
நலமான குமரிச்சார் சுருக்குமிட்டு
வாளடா சாமமொன்றப் படியேயிட்டு
வாங்கடா தாரத்தின் வகைதான்பாரே. சகஅ
பாரப்பா வாங்கியே தாரந்தன்னைப்
பாரபரையாள் பாதத்திற் பூசைசெய்து
ஆரப்பா பஞ்சசத்தி யுப்பையெல்லாம்
அரைத்திடுவாய் வஸ்துவிட்டுச் சாமம்நாலு
நேரப்பா அரைத்ததையும் வழித்துமைந்தா
கிலையான வுப்பையுந்தான் வில்லைசெய்து
தேரப்பா வுலரவைத்தே யெடுத்துக்கொண்டு
சித்தகத்திச் சாறையுந்தான் வாங்குவாயே. சககூ
வாங்கடா சாறுவிட்டு வில்லைதன்னை
வாடாமற் சாமமொன் றரைத்துக்கொண்டு
தாங்கடா அரைத்ததையுந் தாரந்தன்னிற்
சத்தியமாய்ப் பூசுசம தளமதாக
ஓங்கடா வுலரவைத்துச் சீலைமண்செய்து
ஓகோகோ பத்தெருவிற் புடந்தான்போடு
நாங்கடா தேவிதனைப் பூசைசெய்து
நலமான தாரமதை யெடுத்துப்பாரே, சஉ0

பார்க்கையிலே தாரஞ்செந் தூரமாகிப்
பதினாயி ரங்கோடி காந்திமீறும்
ஏர்க்கையிலே குருவருளா லறியவேணும்
இல்லாட்டாற் கைமுறையுந் தப்பாவண்ணஞ்
சேர்க்கையிலே செந்தூரந் திடமோமெத்தச்
செப்பாதே அகத்தியமா முனியேயையா
காக்கையிலே யுணையறிந்து காகாமைந்தா
காக்காட்டா லென்னவுண்டு கண்டுகொள்ளே. ௪௨௧

கொள்ளடா தாம்பிரத்தை யுருக்கிமைந்தா
குருவறிய அணுவளவு மீந்தாயானால்
அல்லடா தாம்பிரமும் பழுத்துப்போகும்
அதுவாயி ரத்தெட்டு மாற்றுமாகும்
வல்லடா வல்லவர்கள் வெளிவிட்டார்கள்
வாய்வீணர் தங்களிடம் பேசிடார்கள்
சொல்லடா விதினாலே அனந்தங்கோடி
தொந்தோமென் றாடுமடா சூட்சம்பாரே. ௪௨௨

பாரப்பா வணுவளவு முண்டாயானாற்
பாலகனே நின்றேகங் காந்திமீறும்
ஆரப்பா தேகமுந்தான் வலுத்துப்போச்சு
அனந்தவெகு கோடிமட்டு மிருக்கவைக்கும்
நேரப்பா விதையறியா வுலுத்தருக்கு
நிசமேது பொய்யேது நினைவுமேது
காரப்பா குருபாத மண்டிக்காரு
காலாந்த செந்தூரக் கனலைக்காரே. ௪௨௩

காரடா செந்தூரப் போக்குங்கோடி
களங்குவகை யனந்தமெல்லா மிதற்குளாடும்
ஆரடா தாரத்தின் செந்தூரம்போல்
ஆடாது கெவனசித்தி மரினமார்க்கம்

ஊரடா வுந்திநிலே வட்டந்தோணும்
உச்சிலழி தான்றிறந்தே யுணரவைக்கும்
ஏரடா வெட்டிரண்டு மிதுவேகாட்டும்
என்மக்கா ளின்னமொன்று எண்ணிப்பாரே, சஉச

பாரப்பா பஞ்சசத்தி தியானத்தாலே
பாலகனே செந்தூரம் படைக்கலாச்சு
ஆரப்பா அஷ்டாங்க முடிவுவேணும்
யாகாதி தற்பணங்க ளனந்தம்வேணும்
நேரப்பா விராகத்தாள் பூசைவேணும்
நிலையான குலதெய்வ மறியவேணும்
சேரப்பா சிந்தையொன்று யிருத்தவேணுஞ்
செல்லாட்டாற் றீநரகில் வீழ்வான்காணே, சஉரு

காணடா நரகமதில் வீழ்ந்திடாமற்
காமப்பாற் கானற்பாற் கனலையுண்டு
தானடா முப்பாலி னமுதமுண்டு
சாதித்து நங்கையஞ்சுஞ் சார்பாயுண்டு
வீணடா வீண்பேச்சுப் பேசிடாமல்
வேதாந்த வுப்பைந்தும் விரித்திடாமற்
கோனடா குருபாத மறிந்தேநின்று
குவலயத்திற் சித்துவிளை யாடுவாயே, சஉசா

ஆடுவாய் சித்துகள்தா னனந்தங்கோடி
அம்மம்மா வென்றுமினித் தெரிந்திட்டாலும்
பாடுவாய் பலபாஷை வந்திட்டாலும்
பராபரமாய் நீயிருந்து வாழ்ந்திட்டாலும்
நாடுவாய் சரமாறி யிருந்திட்டாலும்
நலமான யோகமெல்லா மறிந்திட்டாலும்
கூடுவாய் தில்லையிலே கூடினாலுங்
குவலயத்திற் சித்துவிளை யாடாதென்றே. சஉஎ

ஆடாதே நீபடித்த வித்தையெல்லாம்
அப்பனே பணம்பறிக்கப் படித்தாப்போலே
நாடாதே செகத்தோரை மயக்கிடாதே
ஞானியென்று செகந்தனிலே அலைந்திடாதே

கூடாதே செகத்தோர்க ளிடத்திற்சேர்த்து
கூச்சலிட்டு வாய்வீணும் பேசிடாதே
பாடாதே சாஸ்திரங்கள் பேசிடாதே
பரமகுரு தனைக்கண்டு பணிந்துகொள்ளே. ௪௨௮

கொள்ளடா குருக்கொடுத்த வித்தையெல்லாங்
குவலயத்திற் காட்டிவிட்டாற் பலியாதப்பா
அல்லடா வைத்யமென்ன வாதமென்ன
அப்பனே பாவம்வருந் தோஷமாகும்
கல்லடா வுன்மனசு வுருகாதப்பா
கண்டாரைப் பெண்டீரென் றடுத்திடாதே
சொல்லடா விந்தவகை யெனக்குமைந்தா
சொல்லாட்டாற் பல்லுதிர வடிப்பேன்பாரே ௪௨௯

பாரப்பா வேடமிட்டே யலைந்திடாதே
பாவையரை யனுதினமு மருவிடாதே
ஆரப்பா பொய்யொன்றுஞ் சொல்லிடாதே
படித்தோரைக் கெடுக்காதே ஐயா ஐயா
நேரப்பா யாரொருவ ருறவும்வேண்டாம்
நீமகனே யொருவருட பகையும்வேண்டாம்
தேரப்பா விருந்தபடி யிருந்தால்ஞானஞ்
செப்பாதே குலதெய்வந் தன்னைப்பாரே. ௪௩௰

பாரப்பா பஞ்சசத்தி கிருபையாலே
பார்மகனே குலதெய்வந் தன்னைமைந்தா
ஆரப்பா ஏகமென்ற வெழுத்தேயாகி
அப்பனே தசதீட்சைக் கிதுவேயாகி
நேரப்பா வொன்றான பொருளேயாகி
நின்றிடுவாய் சதாகாலம் நினைவிற்றாக்கி
ஏரப்பா இடைவிட்டு மறந்திடாதே
யேழையைப்போ லிருந்துமன தடங்கிக்கொள்ளே

கொள்ளடா மனதடங்க ஞானங்காட்டுங்
குழந்தையைப்போற் பேசவைக்குங் குலதெய்வந்தான்
அல்லடா விந்தவட்ட மறியாப்பேர்க்கே
யரிதரிது அஷ்டகர்ம மாடவென்றால்

செல்லடா அரவமதைப் பிடித்துவந்து
　சிங்கென்று மரவத்தின் சிரசில்மேவிச்
சொல்லடா வெதிரியுட பெயரைமாட்டிச்
　சூட்டடா குருத்தேட்டில் வரைந்துபாரே. ௪௫௨

பாரப்பா அரவத்தின் வாயினுள்ளே
　பதித்திடுவாய் சீட்டையுந்தான் கவ்வத்தானும்
ஆரப்பா அரவமதைத் தலைகீழ்கட்டி
　அப்பனே காராவின் நெய்யைவார்த்து
நேரப்பா காஞ்சிரையின் சிப்பியாலே
　நீமகனே மசியென்றே யாகஞ்செய்து
தேரப்பா அரவமதைப்பொசிக்கிமைந்தா
　தேவிபஞ்ச சத்தியுட தியானங்கொள்ளே. ௪௫௩

கொள்ளடா விப்படியே சர்ந்தான்மாறி
　கொளுத்தடா வெதிரியுந்தான் கொதித்துப்போவான்
அல்லடா விதைத்தீர்க்க வரிதேமைந்தா
　அப்பனே அவன்குலமும் பொசிங்கிப்போகும்
சொல்லடா பொசிங்கியுந்தான் நரகில்வீழ்வான்
　சொன்னனடா கொடியதொரு பாவம்பாவம்
மெள்ளடா விதியாலே வருவதென்ன
　மெஞ்ஞானிக் காகாது விரைந்துபாரே. ௪௫௪

பாரப்பா வின்னமொரு கருமஞ்சொல்வேன்
　பார்தனிலெ கெருடனையுங் கொண்டுவந்து
ஆரப்பா முன்சொன்ன படினம்போலே
　யாகாதி தன்னிலேதான் பொசிக்கிப்போடு
நேரப்பா வெதிரியுந்தா னிறந்துபோவான்
　நிலையான பஞ்சசத்தி கிருபையாலே
வேரப்பா வெறும்பேச்சுப் பேசிடாமல்
　விராகத்தாள் பாதமதைப் பணிந்துகொள்ளே. ௪௫௫

கொள்ளடா விதியாலே கோடிபாவங்
 கொடிதான தோஷமடா கெருடதோஷம்
அல்லடா வத்தோஷந் தொலையாதப்பா
 அரனையுந்தான் விடுகாது மற்றோர்க்கேது
வல்லடா வெளியாகச் சொன்னேனென்று
 வையகத்தோர் நம்மையுந்தா னேசிடாமல்
கொல்லடா கொடுமைகளைச் செய்தபேரைக்
 கூறுவே னின்னமொன்று குருவிற்றானே ௪௩௬

தானென்ற தவசிகட்கே யிடுக்கஞ்செய்யுஞ்
 சண்டாளர் தனைவதைத்தாற் சாபமில்லை
கோனென்ற குருத்ரோகஞ் செய்தபேரைக்
 கொன்றாலுந் தோஷமில்லை குறியைக்கேளு
நானென்ற செம்போத்தைப் பிடித்துவந்து
 நாட்டுவாய் மசியென்றே சிரசிற்சுற்றி
கோனென்ற குருவினுட வருளினாலே
 கூசாதே சிகாரமதைத் தகட்டிற்சாத்தே ௪௩௭

சாத்தடா வெதிரியுட பெயரைக்கூட்டித்
 தலைமாறித் தகட்டிலேயும் வரைந்துமைந்தா
ஏத்தடா மசியென்றே தியானஞ்செய்து
 யென்மக்காள் முன்சொன்ன படினம்போலே
வாழ்த்தடா வாலைபஞ்ச சத்தியென்று
 வருந்தடா செம்போத்து தனைப்பொசிக்கிப்
பார்த்தடா வெதிரியைத்தான் பார்க்கும்போது
 பார்தனிலே லகிரிகொண்டே யலைவான்பாரே. ௪௩௮

பாரப்பா லகிரிகொண்டு கழுதையாவான்
 பார்தனிலே மனிதருக் குத் தோற்றமாட்டான்
ஆப்பா தீர்ப்பதற்கு முடியாதையா
 அப்பனே யாத்தாடன் னருமையாலே

நேரப்பா வுனக்கிடு சொல்லப்போமோ
நீணிலத்தில் மனிதரெல்லாம் பகையுமாவார்
வேரப்பா வெறும்பேச்சுப் பேசிடாமல்
விடமுண்ட கண்டரையும் வேண்டிக்கொள்ளே. ()

கொள்ளடா தெய்வபஞ்ச சத்தியாலே
கொடியதொரு முப்பூவின் குருவினாலே
அல்லடா வேதையெல்லாங் கைக்குள்ளாடும்
அடங்காத அஷ்டசித்தாங் கைக்குள்ளாடும்
வல்லடா காந்தமுங்கான் பலமேபத்து
வையகத்தோ ரறியாமல் வாங்கிக்கொண்டு
சொல்லடா மேனியிலே யரசம்பாலுஞ்
சுத்தியே காந்தத்தின் மேலேபூசே. ௪௪௰

பூசியே புடம்போட்டே யெடுத்துக்கொண்டு
புத்திரனே கலபத்தில் நொறுக்கிப்போட்டு
தேசியே காரமொடு வீரம்பூரம்
செப்பாதே பாஷாணந் தாரங்கூட்டி
வாசியே மனோன்மணியே வாவாவென்று
மனோசிலையுஞ் சித்தண்டம் வகையாய்க்கூட்டிக்
கூசியே திரியாம லொவ்வொன்றுக்குங்
கூட்டுவாய் பலங்கால தாகத்தானே. ௪௪௧

தானென்ற முன்சொன்ன முப்பூவோடு
சத்தியமாய் கெல்லியுப்பு அமுரியுப்பு
தேனென்ற வொவ்வொன்று விராகனென்று
தெளிவாகச் சேர்த்துமிந்தச் சரக்கினோடே
வீணென்று சொல்லாதே வஸ்துவிட்டு
விருப்பமுடன் சாமமுந்தான் நாலுமட்டும்
கோனென்ற குருவருளா லரைத்துச்சேர்த்துக்
கூறுவாய் மகியென்றே சாபந்தீரே, ௪௪௨

திரடா மருந்தையுந்தான் சுத்திபண்ணி
சிவநமசி வாயமென்று ஜெபித்துக்கொண்டு
சேரடா காந்தத்திற் பிசறிமைந்தா
இல்லிட்டுச் சீலமண் செய்துதானும்
நேரடா வச்சிரமாங் குகையில்வைத்து
நீமகனே யூதிடுவாய் மணிபோல்வீழும்
தேரடா மணிதனையும் பொறுக்கிக்கொண்டு
தீர்க்கமுடன் மருந்தையுந்தான் பிசறிக்கொள்ளே ()
கொள்ளடா விப்படியே யைந்துநேரங்
கும்பிபஞ்ச சத்தியுட தியானஞ்செய்து
அல்லடா வூற்றிவிடு சத்துமாச்சு
அப்பனே மெழுகதனுற் கருத்தான்கட்டி
மெல்லடா வுருக்கியே காந்தந்தன்னை
மேதினியோ ரறியாமற் சாய்க்கமைந்தா
வல்லடா கிண்ணமது வலுத்துப்போச்சு
வராகத்தாள் தனைநினைந்து மனதிற்பாரே ௪௪௯

பாரப்பா வாதமெல்லாங் கொள்ளையாச்சு
பானுண்ணத் தேகமுந்தான் வலுத்துப்போச்சு
ஆரப்பா மறைத்தபொருள் வெளியாய்ச்சொல்லி
ஆனியுப்பு மனுதியுப்பும் வெளியேவிட்டேன்
நேரப்பா விந்தமுறை யொளித்தார்சித்தர்
நிச்சயமாய் வெளிதிறந்தே யுரைத்துப்போட்டேன்
சேரப்பா முன்சொன்ன முப்பூமைந்தா
செப்பாதே பூநீரென் றதற்குப்பேரே. ௪௫௰
பேராச்சு முப்பூவின் பெருமைசொல்லார்
பெற்றபிள்ளைக் கென்றாலும் பேசிடார்கள்
ஆராச்சு அஞ்சாச்சு பிஞ்சுமாச்சு
அதிலடங்கும் வாதபித்த மனேகமுண்டு

நேராச்சு நிருவிகற்ப சமாதிக்கெல்லாம்
நிலக்குமடா முப்பூவின் நிலையினாலே
வேராச்சு வீணருக்குப் பேசிடாதே
வேதாந்த முப்பூவின் மார்க்கந்தானே. ௪

தானென்ற முப்பூவின் சுண்ணந்தன்னைச்
சத்தியமாய்ச் சொல்லுகிறேன் சாதித்தோர்க்குக்
கோனென்ற குருவாருஞ் சுண்ணமப்பா
கூறுதற்கு மெளிதாமோ நாவுமுண்டோ
ஏனென்ற சுண்ணமென்றாற் சௌசமாச்சு
இருதயமாங் கமலமுமே பீடமாச்சு
கோனென்ற முப்பூவின் விராகன்பத்து
குருவான தேசியென்று நிறுத்துக்கொள்ளே ௪௪௭

கொள்ளடா வெடியுப்பு விராகன்பத்து
குருவான நாதவுப்பு விராகனொன்று
அல்லடா வமுரியுப்பு விராகன்பத்து
அப்பனே நெல்லியுப்பு விராகனஞ்சு
சொல்லடா இவையெல்லா மொன்றாய்ச்சேர்த்துச்
சொற்பமென்றே யெண்ணாதே யரசம்பாலால்
வில்லடா ஆட்டுவாய் சாமம்நாலு
விராகத்தாள் பாதமதை மனதிற்றங்கே ௪௪௮

தங்கடா ஆட்டியே வழித்துச்சேர்த்துத்
தவறாமல் வில்லைசெய்து சாபந்தீர்த்து
அங்கடா ரவிதனிலே யுலரவைத்து
அப்பனே யுலர்ந்தபின்பு எடுத்துமைந்தா
எங்கடா திரிந்துமினி யலைந்திடாமல்
என்மக்காள் மேனிச்சார் தன்னைவார்த்துப்
பங்கடா வில்லைதனைப் பிரிந்திடாமற்
பராபரியே யாயியென்று பணிந்துகொள்ளே. ௪௪௯

கொள்ளடா ஆட்டுவாய் சாமம்நாலு
குஞ்சரனைப் போற்றியுந்தான் வழித்துமைந்தா
அல்லடா முன்போலே யுலரவைத்து
அப்பனே மருந்தையுந்தா னெடுத்துக்கொண்டு
சொல்லடா வேளைச்சார் சாமம்நாலு
கூட்டியே யரைத்ததையும் வழித்துக்கொண்டு
மெல்லடா முன்போலே யுலரவைத்து
மேதினியிற் சித்துவிளை யாடுவாயே. சரு௦

ஆடுவாய் கருதும்பைச் சாரைவாங்கி
யப்பனே முன்போலே சாமம்நாலு
நாடுவா யரைத்ததையும் வாங்கிக்கொண்டு
ரவிதனிலே யுலரவைத்து நாடிப்பாரு
தேடுவாய் மசியென்றே சாபந்தீர்த்துச்
செபியடா நூற்றெட்டு உருவேயானல்
கூடுவாய் பத்தெருவிற் புடைத்தைப்போட்டுக்
குருவான சுண்ணமதை யெடுத்துக்கொள்ளே. சருக

கொள்ளடா விதினலே வேதைகோடி
குருவான காயசித்தி கைக்குள்ளாச்சு
அல்லடா செந்தூர மனேகமாச்சு
அடங்காத வைத்தியங்க ளெல்லாஞ்சித்தி
வெல்லடா எமனேது பாசமேது
மேலான சுண்ணமதை யென்னசொல்வேன்
புல்லடா புல்லருக்குக் கிடையாதப்பா
புத்தியுள்ள பிள்ளையென்றாற் பேணிப்பாரே. சருஉ

பாரப்பா விம்மருந்தை யீந்தாயானற்
படீரெனவே தலைவெடித்துப் பாழாய்ப்போவாய்
ஆரப்பா சொல்வாரோ பூமிநாதம்
அடங்காத காயசித்தி யெல்லாமாகும்

நேரப்பா யுவருப்பு ஆதிவிந்து
நிலைத்ததடா பூமியுட நாதமாச்சு
தேரப்பா விதுவல்லோ வண்ணுனுப்பு
செய்யாதே குருவாணை செப்பினேனே. ௨௫௩

செப்பினே னிதுவல்லோ பூநீராச்சு
தேவிபஞ்ச சத்தியுட வருளுமாச்சு
ஒப்பியே சொல்வாரோ மக்காள்மக்காள்
ஒருவருக்குஞ் சொல்லாதே யிந்தப்பேச்சை
தப்பியே போகாதே யிந்தநூலிற்
சாகாம லிருப்பதற்கு விபரங்காட்டி
முப்புவியு மடங்குமடா வுவருப்பாலே
மோசமில்லை மோசமில்லை மொழிந்துபாரே. ௨௫௪

பாரப்பா சுத்தசலம் வேறிதென்று
பார்தனிலே மலையாதே மைந்தாமைந்தா
ஆரப்பா வுவர்நிலத்தி லன்றுபேய்ந்த
அழுகான செலந்தனையு மெடுத்துக்கொண்டு
நேரப்பா முன்சொன்ன வுப்பையெல்லாம்
நிலையான சாபமதை நிவர்த்திசெய்து
தேரப்பா கரைத்திடுவா யிறுத்துவாங்கிச்
செய்பாதே ரவிமுகத்தில் வைத்துக்கொள்ளே. ௨௫௫

கொள்ளடா காச்சென்று சொன்னமார்க்கங்
கூறுகிறேன் ரவிமுகத்திற் காச்சவேணும்
அல்லடா அக்கினியிற் காச்சினக்கால
அப்பனேபூவதுவும் பாழாப்போச்சு
சொல்லடா பூவதுதா னெடுக்கும்போது
சூட்சநிலை சொரூபநிலை தன்னைப்பார்த்து
வில்லடா மானதமா யாகஞ்செய்து
விராகத்தாடன்னையுந்தான்நினைத்துப்போற்றே. ௨௫௬

போற்றடா மவுனமென்ற விஞ்சைதன்னைப்
   பூரணமே காரணமே யென்றேயோதி
ஏற்றடா வுன்னையுந்தான் நினைத்துப்போற்றி
   யென்னைப்போலே வாய்பேசா திருந்துகொண்டு
வாழ்த்தடா மூன்றெழுத்து விஞ்சைபார்த்து
   வடவரையா மாயிரத்தெட் டிதழிற்சேர்ந்து
பார்த்தடா குலதெய்வந் தன்னைப்பார்த்துப்
   பறையுப்பு வழலையுப்பு பாருபாரே. ௪௫௭

பாரடா பரையுப்பு வெடியுப்பாச்சு
   பாலகனே வழலையென்று மிதற்கும்பேரு
ஆரடா வெடியுப்பை யறிவாருண்டோ
   ஆகாச கெங்கையென்ற வ்வருநீராம்
நேரடா சுத்தஜல மதுதான்பாரு
   நிலைக்கின்ற கங்கையடா பரையுமாச்சு
தேரடா விதையறியா ருலகத்தோர்கள்
   செப்புவார் வாய்மதங்கள் பேசித்தானே. ௪௫௮

பேசியே அழியாதே முப்பூமார்க்கம்
   பிண்டமென்றும் நாதமென்று மிதற்குப்பேராம்
வாசியே நிறுத்துமடா விந்தப்பூவால்
   வல்லோர்க்குக் கிட்டுமது மற்றோர்க்கேது
கூசியே திரியாதே வழலைமார்க்கங்
   கோடான கோடிவரை கூட்டிவைக்கும்
நாசியே சுழிமுனையாம் விந்துநாதம்
   நாட்டடா முப்பூவை யறிந்துதானே. ௪௫௯

தானென்ற மூன்றெழுத்தின் விபரங்கேளு
   சத்தியமா யிடைபின்சுழி முனையதாச்சு
நானென்றும் அகாரமென்றும் உகாரமென்றும்
   நடுவனையா மகாரமென்று நாடினாலும்

தேனென்ற அகாரமொடு மகாரந்தானும்
தெளிவான வுகாரமுமூன் றெழுத்துமைந்தா
கோனென்ற மகாரமல்லோ மவுனமாச்சு
குருவான அகாரமொடு உகாரங்கேளே. ௪௬௦

கேளடா சிகாரமல்லோ வுகாரமாச்சு
கிருபையுள்ள அகாரமல்லோ நகாரமாச்சு
ஆளடா மூன்றெழுத்து மதுவேயாச்சு
அம்மம்மா மூன்றெழுத்து மறியப்போமோ
நாளடா குலதெய்வந் தன்னைப்பார்த்து
நாடுவாய் மசிநசி யென்றேதைமைந்தா
தேளடா வாசிபத்தா யிரமடங்கத்
தேவனென்றும் விஷ்ணுசக்க ரந்தான்பாரே. ௪௬௧

பாரப்பா ஜெகமெல்லா மவரைக்கண்டாற்
பாராளு மரசனென்றும் பணிவாருன்னை
ஆரப்பா விஷ்ணுசக்கரத்தினாலே
அவனியெல்லா மொருகுடைக்கீ ழாளவைக்கும்
நேரப்பா ஐம்பத்து லட்சமானால்
நிலையான காயசித்தி நிலைத்துப்போச்சு
தேரப்பா கோடியுந்தா னடங்கிற்றானாற்
றேவிசத்தி வேலுனக்குவாய்க்குங்காணே. ௪௬௨

காணடா குலதெய்வந் தன்னைப்பார்த்துக்
காரடா வாசியினா லறிந்துகொண்டு
தானடா விம்மென்றே சதா நீபோற்றிச்
சண்ணடா மூன்றெழுத்துத் தயவினாலே
நானடா விப்படியே யறிந்ததாலே
நாதாந்த வடிவேலும் நமக்குள்ளாச்சு
கோனடா இம்மென்ற மவுனம்விட்டாற்
குடிகெட்டு இடிவிழுந்து கொல்லும்பாரே. ௪௬௩

பாரப்பா முன்சொன்ன பூவுங்கூட்டிப்
 பாலகனே பாறையுப்புச் சமனாய்ச்சேர்த்து
ஆரப்பா அபிரியுப்பவ விடைக்குச்சேர்த்து
 அப்பனே முன்சொன்ன மூலியெல்லாம்
நேரப்பா அரைத்திடுவாய் முன்போல் மைந்தா
 நிலையான காரமுந்தான் சமனாய்ச்சேர்த்து
தேரப்பா முன்போலே புடமேபோட்டுத்
 தேவிபஞ்ச சத்தியுட தியானங்கொள்ளே. ௪௬௪

கொள்ளடா வெடுத்திடவே சுண்ணமாச்சு
 கெர்டியதொரு கிரணமெல்லாங் கொதித்துப்போச்சு
அல்லடா சுண்ணமது சுருக்கமெத்த
 அண்டபிண்டஞ் சேர்ந்தெழுந்த அருமையாலே
வில்லடா எநதெந்தத் துரைக்காறலும்
 வெகுசுருக்கு வெகுசுருக்கு வெடியுப்பையா
சொல்லடா சொல்லாதே யிந்தப்பூவைத்
 துருசினுட கொடுமையுந்தான் சூட்டுவேனே. ௪௬௫

சூட்டுவேன் துருசதுவும் விராகன்பத்து
 சொல்லாதே வேளைச்சார் தன்னிலூர
நாட்டுவாய் போட்டுமதை யெடுத்துக்கொண்டு
 நலமாக முப்பூவின் சுண்ணந்தன்னைக்
கூட்டுவாய் பணவிடைதான் மேலேபூசி
 குருவான பராபரையை மனதிலெண்ணி
வாட்டுவாய் பத்தெருவிற் புடத்தைப்போடு
 வாடாத சுண்ணமது வலுத்துப்போச்சே. ௪௬௬

போச்சடா துருசினுட சுண்ணம்போலே
 பூதலத்திற் கிடையாது புகழ்ந்துபாரு
வாச்சடா மேருவுந்தா னிதிலுண்டாச்சு
 வள்ளலுந்தா னனுதினமும் வாழலாச்சு

எச்சடா சொல்லவில்லை யிந்தச்சுண்ணம்
ஏகாந்த முப்பூவின் கிருபையாலே
மூச்சடா தானடங்கி மேலேயேறும்
மூதண்டச் சுண்ணமென்று மூர்க்கம்பாரே, சஅஎ

பாரப்பா சவுக்காரம் கிராகன்பத்து
பாலகனே வாங்கியுடன் நிறுத்துக்கொண்டு
ஆரப்பா மேனிச்சார் சாமமொன்று
அப்பனே சுருக்கிட்டு எடுத்துவாங்கி
நேரப்பா முப்பூவின் சுண்ணத்தாலே
நீமகனே பணவிடைதான் சுற்றிப்பூசித்
தேரப்பா பத்தெருவிற் புடத்தைப்போடு
சிவசிவா செந்தூரஞ் சிவந்துபோச்சே. சஅஅ

போச்சடா செந்தூரம் ரவிபோற்காந்தி
புவனையுட பீஜமென்று மிதற்குப்பேரு
ஆச்சடா சவுக்காரச் செந்தூரம்போல்
ஆரறிவா ருலகத்தில் சித்தர்மைந்தா
வாச்சடா லோகமெல்லாம் பொன்னாய்ப்போச்சு
வாசியிலே யனுதினமும் வாழலாச்சு
பேச்சடா பேசாதே யிந்தப்பேச்சு
பெலத்ததடா காயசித்தி வலுவாம்பாரே. சஅகூ

பாரடா விதினாலே நவலோகங்கள்
பாலகனே செந்தூர மாகிப்போகும்
ஆரடா முப்பூவின் சுண்ணம்வேணும்
அடங்காத காயசித்தி யாகவேணும்
ஏரடா வாசிமயி லேறவேணும்
ஏகாந்தப் பராத்தோடே யிருக்கவேணும்
தேரடா நூல்பார்த்துத் தேறவேணுஞ்
செகத்திலுள்ளோ ரறியாமல் வாழ்த்தானே. சகூ0

தானென்று சொல்வதற்கு வாயுமேது
சங்கற்ப மறியாரைச் சமயத்தோரை
நானென்று மென்றாலே சொல்லப்போமோ
ஞாயிறையுந் திங்களையுஞ் சேரப்பேரைக்
கோனென்றுங் குருவென்றுந் துதிக்கப்போமோ
குணமான முப்பூவின் குருவில்லாட்டால்
தேனென்ற வமுதரச முண்ணப்போமோ
தெளிவான மோனம்விட்ட சித்திதானே. சஎக

காணடா கடுங்காரச் சுண்ணமாச்சு
கைகண்ட வித்தையடா சித்தர்சொல்லார்
தானடா பஞ்சசத்தி சுண்ணமென்றூற்
சராசரங்கள் முழுவதுமே தங்கமாச்சு
ஊனடா வுடலுயிரு முறவதாக்கும்
ஒடுங்காத காந்தஞ் செந் தூரமாகும்
நானடா சுண்ணமதை யறிந்துகொண்டு
நானிலத்திற் சித்துவிளை யாடினேனே. சஎஉ

ஆடினேன் பஞ்சசத்தி கிருபையாலே
அடங்காத காயசித்தி யாகிப்போச்சு
நாடினேன் மூன்றெழுத்து விஞ்சையாலே
நாதாக்கள் சித்தனென்றும் பேருங்கொண்டேன்
கூடினேன் நங்கையஞ்சு முண்டதாலே
கோடான கோடிவரைக் குகையைக்காத்தேன்
பாடினேன பாவமெல்லா மகற்றிமைந்தா
பஞ்சசத்தி வேலெடுத்து வந்தேதானே. சஎங

காணடா யாகாதி பெலக்கவேணுங்
கண்மணியே அம்மணியைப் போற்றவேணும்
தானடா விராகத்தாள் தியானம்வேணும்
சங்கற்ப மறிந்துமுறை சாரவேணும்
கோனடா மனங்கோணா திருக்கவேணும்
குவிந்தமுலைக் கண்ணறிந்தே போற்றவேணும்
நானடா இம்மென்ற மவுனங்கண்டு
நாடினேன் சிவயோக வாழ்க்கைபாரே. சஎச

பாரடா பஞ்சசத்தி தீட்சைக்கெல்லாம்
பாலகனே நவக்கிரக தியானம்வேணும்
ஆரடா ஆதித்தன் றனைநிறுத்து
அருளான வுகாரமல்லோ அவர்க்கேபீடம்
நேரடா விந்துவிட்டு ஓங்காரங்கட்டி
நிலைத்திடவே யூடுருவச் சூலமிட்டுச்
சேரடா விந்துக்கு ளுகாரஞ்சாத்திச்
செபித்திடுவா யும்மென்றே தியானங்கூடே. ௪எ௫

கூடியே பஞ்சகர்த்தா ளவருக்குங்
குவித்திடுவா யவரவர்கள் பீஜஞ்சாத்தி
சேடியே யரவமென்ற விராகுகேது
செபித்திடவே யவர்களுட பீஜமைந்தா
நாடியே யிராகுவுக்கோங் காரஞ்சாத்தி
நாட்டிடுகே துவுக்குஸ்ரீங் காரமைந்தா
வாடியே திரியாமல் விந்துவட்டம்
மைந்தனே இட்டிடவே வாய்க்கும்பாரே. ௪எ௬

பாரப்பா அவரவர்கள் பீஜமெல்லாம்
பாலகனே விந்துநடுக் குள்ளேவைத்து
நேரப்பா ஓங்காரஞ் சுத்திக்கட்டி
நிலைத்திடவே சூலமிட்டுக் கும்பந்தன்னைத்
தேரப்பா தெற்கைமா விலையுஞ்சாத்தித்
தெளிந்திடவே கன்னிநூல் சுற்றிக்கட்டி
ஆரப்பா அட்சதையு மடியிற்றூக்கி
அஷ்டகர்ம வாலையென்றே தியானங்கொள்ளே ()

கொள்ளடா தேவிபரா சத்தியென்று
குருவான பராபரத்தை மனதிலெண்ணி
அல்லடா நீயாக சாலைசுற்றி
அப்பனே நவக்கிரகந் தன்னைமாட்டிச்
சொல்லடா குளிகையையும் யாகந்தன்னிற்
சொல்லியே இம்மென்று நடுவேசாத்தி
வில்லடா பூரணமும் வெளியாய்ப்போகும்
மேலான வேல்வந்து வாய்க்கும்பாரே. ௪எ௮

பாரப்பா நவக்கிரகந் தனக்குமைந்தா
　பரிவான ரவியல்லோ தாயுமாச்சு
ஆரப்பா சோமனொடு பஞ்சகர்த்தாள்
　அடங்காத ராகுவொடு கேதுமைந்தா
நேரப்பா இவர்கள்நவக் கிரகமாச்சு
　நிலையான் நவசித்த றென்றும்பேராம்
தேரப்பா இவர்களன்றிப் பூசையேது
　தெளிந்தவர்க்கே பஞ்சசத்தி தருகுவாளே. ௪௭௯

தருகுவா ளஷ்டகர்ம வாலைமைந்தா
　சத்தியமாய்த் தோலாசை யற்றபேர்க்கு
வருகுவாள் அங்கியிபு மென்றுசொல்லி
　வாசியுமே யாயிரத்தெட் டடங்கினுக்கால்
உருகுவா யஷ்டகர்ம சித்தியாகும்
　ஓகோகோ ஆசையற்று உறவுமற்றுப்
பெருகுவாய் இம்மென்றே மவுனம்பூட்டிப்
　பேசாதே குலதெய்வந் தன்னைக்காணே. ௪௮௦

காணடா மூன்றெழுத்தை யறியமாட்டான்
　கங்குல்ரவி தனைக்கடந்து இருக்கமாட்டான்
தானடா பந்தனங்கள் சொல்லக்கேளு
　தாயாராம் பராசத்தி வாலைக்கெல்லாம்
கோனடா தீட்சைபத்தா மகாரபீடம்
　கொளுத்தடா திக்குபந்த னங்களாக
நாணடா பந்தனங்கள் செய்துமைந்தா
　ஞாயிறிலே திங்களையு மடக்கினேனே. ௪௮௧

அடக்கினேன் திக்குபந்த னங்களாலே
　அஷ்டகெசம் அஷ்டவஸ்து அருளுமாச்சு
முடக்கினேன் மூன்றெழுத்து விபரத்தாலே
　முன்பின்னு யோடுகிற கலையுமாறி
மடக்கினேன் காலறிந்து மைந்தாநானும்
　மாருத வாசனையை மறந்துதள்ளித்
தடக்கிநாம் பேசாதே அகாரமூலஞ்
　சாதித்தா லவரமென் றதுதான்பாரே. ௪௮௨

பாரப்பா தேவிபஞ்ச சத்திக்கெல்லாம்
பாலகனே மானதமாம் பூசைசெய்ய
ஆரப்பா நிறைந்தவர்ண நகையுஞ்சீலை
யாத்தாட்டும் வடுகனுக்கு மங்கைசாத்தி
நேரப்பா கிரீடகுண் டலமுஞ்சாத்தி
நீமகனே விராகத்தாள் தனக்குமைந்தா
வேரப்பா பேசாதே யாத்தாளுக்கும்
வெகுவாகப் பஞ்சசத்தி மேலேசாத்தே. ௪௮௫

சாத்தடா மணிமந்த்ர தீபதூபஞ்
சகலகலை வாணியென்றே யருளைப்போற்றி
ஏத்தடா திக்குப்பந் தனமுஞ்சொல்லி
யென்மகனே எந்தனுக்குப் பூசைகேளு
வாழ்த்தடா இம்மென்றே மவுனந்தாக்க
வஸ்துவென்றே யுளைத்தாலும் நினைந்துகொண்டு
ஏத்தடா மானதமாய் பூசைமெத்த
வென்மகனே தேகத்திற் பழுதில்லாமற்
காத்தடா பூசைசெய்வாய் மவுனம்நோக்கிக்
காலனுந்தா னப்புறமுங் கடப்பான்பாரே. ௪௮௬

பாரப்பா நமநமா வென்றுசொல்லிப்
பாலகனே பூஷணங்கள் பூட்டவேணும்
ஆரப்பா தேவிக்கிப் படியேபூட்டி
யஷ்டகர்ம வாலையென்றே வருளைப்போற்றி
நேரப்பா செவ்வரளிப் புஷ்பத்தாலே
நீமகனே தேவிக்கர்ச் சனையுஞ்செய்து
தேரப்பா விந்துவிலே மனக்கண்ணூடி
தேவபஞ்ச சத்தியென்றே திடமாய்ப்போற்றி. ௪௮௭

போற்றுதற்கு லகுவல்ல வாய்ப்பேச்சல்லப்
புத்திரனே மூன்றெழுத்தை விட்டபேர்க்கு
ஏற்றுதற்கு மவுனமதை விட்டபேர்க்கு
எந்நாளு மஷ்டகர்மஞ் சித்தியில்லை

வாழ்த்துதற்கு ஆயிரத்தெட் டடங்கும்போது
  வந்ததடா வாலையுட வமுதமைந்தா
காற்றிலையு மதிகமடா ஆத்தாள்பாதங்
  காட்டாதே லோகத்தார் தனக்குப்பாரே. ௪அ௬

பாரடா அங்கிலியு மென்றால்மைந்தா
  பாலகனே தீட்சையடா நாலாந்தீட்சை
ஆரடா இம்மூல மறியாரில்லை
  யாத்தாட்கு மாயிரத்தெட் டொடுங்கவேணும்
நேரடா இம்மந்த்ர மடங்கமட்டும்
  நீமகனே தோலாசை மறக்கவேணும்
வேரடா மாயையிலே மனந்தான்நாட
  வீணாக வெடுத்தமுறை தவறிப்போச்சு
தேரடா தவறுமற் கவனம்வைத்துச்
  சிந்தித்துப பார்த்திடவே தெளிந்துபோச்சு. ௪அ௭

போச்சடா தெளியவென்றால் லருவுமல்ல
  புத்திரனே இந்தமுறை செய்யவேணும்
ஆச்சடா செய்யையிலே மோகமானால்
  அஷ்டகர்ம வாலையுட அருளும்போச்சு
நீச்சடா வெறும்பேச்சாற் பூசையென்று
  நீணிலத்திற் செத்தவர்க ளனந்தங்கோடி
மூச்சடா மேலேறி நெஞ்சுதன்னில்
  முழங்குமடா கருவியென்ற வாயுதானே ௪அஅ

தானென்ற கருவியுந்தா னுயரப்பாயுஞ்
  சத்தியமாய் நீதானும் பதறிடாதே
கோனென்ற குருவருளால் மைந்தாகேளு
  குருவான முப்பூவின் சுண்ணந்தன்னை
தேனென்று பணவிடைதான் கொண்டாயானாற்
  சிவசிவா நிலைதனிலே சேர்ந்துபோகும்
நானென்ற வாயுவெல்லா மொடுங்கிப்போகும்
  நமன்பாச மானதுவும் நாசமாச்சே, ௪அ௯

ஆச்சடா அஷ்டகர்மம் வாலைபோலே
  அருளான ஞானமுந்தான் கிடையாதப்பா
வாச்சடா கிடைத்தோர்க்கு யோகசித்தி
  வழலையென்ற முப்பூவின் மார்க்கஞ்சித்தி
காச்சடா கங்குல்ரவிக் குள்ளேசேர்க்குங்
  கலந்தெழுந்த கருவியெல்லாம் பொசிங்கிப்போகும்
மூச்சடா மேலடங்குங் கீழ்நோக்காது
  மூலைமூக்குப் பிடரியுந்தான் மூட்டினேனே. ௪௯௰

மூட்டினேன் முன்பின்னு மிந்தநூலில்
  மோசமாய்ச் சொல்லவில்லை மொழிதான்மைந்தா
நாட்டினேன் செந்தூரஞ் சுண்ணமார்க்கம்
  நலமான துருசோடு வழலைப்போக்குங்
காட்டினேன் வெளிதிறந்த இந்தநூலிற்
  கபாலியஷ்ட கர்மியு - கிருபையாலே
மூட்டினேன் திறந்திட்டேன் வெளியாய்விண்டேன்
  மும்மணியு மிதுவாச்சு மோதிப்பாரே. ௪௯௧

பாரப்பா பஞ்சசத்தி யஷ்டகர்மி
  பாலகனே ஒன்றாகும் பழுதில்லாமல்
ஆரப்பா விராகத்தா ளவட்குத்தானும
  ஐயையோ மூன்றோடு பிறவியானாள்
நேரப்பா வடுகனென்றாற் சிவனுமாச்சு
  நித்யபிரம்ம சாரியென்று மவற்குப்பேரு
தேரப்பா தெளிந்தவர்க்கே இதுபோற்காணுந்
  தெளியாத தேகமென்ன தேகந்தானே. ௪௯௨

தானென்ற ஜெனனமது எடுத்தாற்றானற்
  சாற்றுயஷ்ட கர்மியுட தயவுவேணுங்
கோனென்ற குருவருளுங் கிட்டவேணுங்
  குஞ்சரமு மஞ்சலென்றே கூடவேணும்
தேனென்ற துறவதனி லிருக்கவேணுஞ்
  செகத்தோரைக் கண்டாலு மொடுங்கவேணும்
நானென்ற ஆணுவத்தைத் தள்ளவேணும்
  நாதாந்தப் பூரணத்தை நாடிப்பாரே. ௪௯௩

பாரப்பா மூன்றெழுத்து விஞ்சைவேணும்
  பாலகனே தசதீட்சை பத்தும்வேணும்
ஆரப்பா அஷ்டகர்ம பஞ்சசத்தி
  அங்கிலியு மென்றதோ ரருளும்வேணும்
நேரப்பா திக்கும்பந் தனங்கள்வேணும்
  நிலையான சாரணையை நிறுத்தவேணும்
வேரப்பா குருவென்று நினைந்திடாமல்
  வித்தகனே குருசெயலை நினைந்துகொள்ளே. சகூச

கொள்ளடா வாலைவிஞ்சை முடிவுகாட்டிக்
  குருவான யோகாதி முறையுங்காட்டி
வல்லடா வாயுவுசா ரணையுங்காட்டி
  வாடாத குலதெய்வத் தருளுங்காட்டி
சொல்லடா சூட்சநிலைச் சொரூபங்காட்டிச்
  சுருதிமுடி வானதொரு பொருளுங்காட்டி
அல்லடா நவக்கிரக சித்திகாட்டி
  யருளான கவுனத்தில் முடிவுங்காட்டி
கல்லடா கற்பமுறை யாவுங்காட்டி
  கண்மணியே வெளிதிறந்து விட்டேனென்பாரே. சகூரு

பாரப்பா இம்மென்றால் விந்துவட்டம்
  பாலகனே இதுவிட்டால் மவுனம்போச்சு
ஆரப்பா விந்துவிலே மனக்கண்ணுடி
  யனுதினமுந் தாரணையுஞ் செய்யும்போது
நேரப்பா கற்பமென்ன பூசையென்ன
  நிலையான சுற்றத்தா ருறவுமென்ன
தேரப்பா ஜாதியிலே சமயமென்ன
  திரவியங்கள் சயயோக மெதுவுங்காணே. சகூசு

காணடா மவுனமென்ற வருளைக்கண்டாற்
  கயிலாச நாதனென்ற கடவுளாச்சு
தானடா மவுனம்விட்டா லெல்லாம்பாழாஞ்
  சத்திசிவந் தனையறிய மாட்டான்பாவி

கோனடா குருநிலையு மறியமாட்டான்
கோடானகோடிசித்து ஆடமாட்டான்
நானடா பரமசிவம் நம்மைக்கேட்க
நாதாந்த தீட்சைபத்தும் நாட்டினேனே ௪௯௭

நாட்டினேன் பரமசிவந் தனக்குமைந்தா
நலமான முப்பூவின் மார்க்கங்காட்டிப்
பூட்டினேன் திறவுகோல் திறந்துமைந்தா
பூமியுட நாதவிந்து பொருந்தக்காட்டிக்
காட்டினேன் பாறையுப்பு வெடியுப்பென்று
கலந்தெழுந்த வனாதியுப்பு ராதமாகச்
சூட்டினேன் சுரோணிதசுக் கிலமாமென்று
சொல்லாதே சிவனென்றுஞ் சொன்னேன்பாரே. ()

பாரப்பா இம்மென்றே விட்டாயானாற்
பாலகனே மவுனமெல்லாம் பாழாய்ப்போகும்
ஆரப்பா இம்மென்றால் மவுனமாச்சு
அடிப்படையுந் தான்பெலக்கு மனேகஞ்சித்தி
நேரப்பா விந்துவென்றும் பீஜமென்றும்
நிலையான பிடரிவழி மார்க்கமென்றும்
தேரப்பா சௌசசம் போகமென்றுந்
தெளிவாகச் சொன்னதெல்லா மகாரமாச்சே. ௪௯௯

ஆச்சடா இந்நூலைத் தெளிவாய்ப்பாடி
யஷ்டகர்ம வாலையுட அருளுங்காட்டி
வாச்சடா சூலையைத்தான் தெய்வமென்றும்
யாடாத தீபமணி பூரமென்றும்
நீச்சடா என்வாக்கி னாலேசொல்லி
நித்யபிர்மச் சாரியென்று முருகனானேன்
மூச்சடா அஞ்ஞூறு தெளிவதாக
முதன்மையாம் குருபரனால் முடிவதாமே. ௫௱

சுப்பிரமணியர் ஞானம்-௫௱
முற்றிற்று.



உ

சிவமயம்.

சிவபோகசாரம்.

அடிகள் வணக்கம்.

சித்திதருநாதன்றென்கமலைவாழ்நாதன்
பத்திதருநாதன்பரநாதன்—முத்திப்
பெருநாதன்ஞானப்பிரகாசனுண்மை
தருநாதனங்குருநாதன். ௧

அருவுமுருவுமருவுருவுமல்லா
வொருவனுயிர்க்குயிராயோங்கித்—திருவார்
கமலைவருஞானப்ப்ரகாசனெனவந்தே
யமலபதந்தந்தெனையாண்டான்.

ஆரறிவார்நீதிவழியாரறிவார்சித்திமுத்தி
யாரறிவார்நற்றவங்களன்பனைத்தும்-பாரெவர்க்குங்
கத்தன்கமலையில்வாழ்ஞானப்ரகாசனெனு
மத்தனென்போல்வந்திலனேல். ௩

அரியயற்குமுன்னாளடிமுடியுங்காணாப்
பெரியவனேவந்துபிறந்து—துரியம
பெருக்கின்றான்ஞானம்பிரகாசனாகி
யிருக்கின்றானூரிலின்று. ௪

கண்டேனிப்பாசங்கழிந்தேனமுதைமுகந்
துண்டேன்சுகானந்தத்துள்ளிருந்தேன்-வண்டிமிர்காத்
தேனைப்பொழிகமலைச்செங்கமலப்பொற்பாத
ஞானப்ரகாசனையேநான். ௫

உள்ளிருந்தேயென்றுமுணர்த்துகினுங்கண்டிலரென்
றுள்ளும்புறம்புமாவோமென்று—மெள்ள
நாருருவாயாருநில்வந்தானமையாண்
டருள்புரிஞானப்பிரகாசன். ௬

இருந்தயநீக்குமிரவியைப்போலென்னு
ளருளுந்தயநனுயருளி—மருளுந்தய
மாற்றியவனூரன்மாமறையுமாகமமுஞ்
சாற்றியஞானப்பிரகாசன். ௭

ழிபாதபேரின்பத்துள்ளாயுலகில்
பிழியாதிருந்துவிடவே—யழியாத
புராணுசெங்கமலப்பொற்பாதாதெங்கமலை
யாரணுநாயேற்கருள். ௮

தேடுந்திரவியமுஞ்சிற்றறிவும்பற்றுதலுங்
கூடும்பொய்யென்றருளிற்கூட்டினு—னுடரிய
ஞானப்ரகாசனுயர்நற்கமலைமாநகர்வாழ்
வானப்பிறையணிந்தமன், ௯

காண்பதும்பொய்கேட்பதும்பொய்காரியம்போலேயிதமா
ய,புணபதும்பொய்யெவ்விடத்தும்போகமும்பொய்—மா
யாகத், தோற்றியின பவெள்ளமாய்தனனியென்னுட்
சமபந்தன், வீற்றிருப்பதொன்றுமேமெய். ௰

பெறுதற்கருமை.

ஒருமையுடனீசனருளோங்கியென்றுந்தாங்க
லருமையருமையருமை—பெருமையிடும்
பாங்கார்ரங்கோபமபிமானம்ாசைவினை
நீங்காதபோதுதானே. ௧௧

தன்பெருமையெண்ணுமைதற்போதமேயுறத்தன்
மின்பெருமையாஞ்சகத்தைவேண்டாமை-தன்பா
லூடலைத்தினம்பழித்தலோங்குசிவத்தொன்ற
னடலைப்பிறப்பொழியுநாள். ௧௨

உரையிறந்தானுன்னுமுணர்விறந்தான்மாயைத்
திரையிறந்தாற்காண்கின்றதேவை—வரைபெருக
வாசிப்பதுநாவால்வாழ்த்துவதுநாடகமாய்!
பூசிப்பதுஞ்சுத்தப்பொய். ௧௩

ப்ரம்ரகசியத்தைப்பார்ழானவாயா
லிரவுபகலெந்நேரமின்றில்—குரனெரியக்
கூப்பிட்டுங்காணுமோகோழைமடநெஞ்சேமால்
பூப்பிட்டுங்காணுப்பொருள். ௧௪

ஒருகோடியாகமங்களெல்லாமுணர்ந்தும்
பெருகுதவஞ்சித்தியெல்லாம்பெற்றுங்-குருவருளால்
வைத்தபடியிருக்கமாட்டாதமாந்தர்க்குச்
சித்தசலனம்மாந்தினம். ௧௫

அன்புமிகவுண்டாயதிலேவிவேகமுண்டாய்த்
துன்பவினையைத்துடைப்பதுண்டா - யின்பந்
தரும்பூரணத்துக்கேதாகமுண்டாயோடி
வருங்காரணர்க்குண்மைமைவ. ௧௬

அறியும்பகுதி.

உருவையருவையொளியைவெளியை
யிருளைச்சிவமென்றிராதே—மருளைப்
பிறிந் * தறிவிற்கண்டதனைப்பின்னமறவெங்குஞ்
செறிந்தபொருடானேசிவம். ௧௭

அகமாதிகண்டவறிவாகியெங்குஞ்
சுகமாகியின்பசுகமாய்ச்—சுகாதீதத்
தானந்தவெள்ளமதுவாய்ச்சுகத்தையகன்
றானந்தமாதியிலாதான். ௧௮

இந்தனத்திலங்கியெரியுறுநீர்தேனிரதங்
கந்தமலர்ப்போதுவான்காலொளிகண் - சந்தமு
மத்துவிதமாவதுபோலான்மாவுமீசனுமாய்
முத்தியிலேவிற்குமுறை. ௧௯

ஆறாறுதத்துவமுமாணவமுநீங்கியுயிர்
வேறாகநின்றவிடஞ்சொல்லின்—மாறா
விருளாயபாவனையற்றெங்குமாய்நின்ற
பொருளேகாணீயேபுணர். ௨௦

நனவாதியந்தத்திலுடுசுகந்தன்னைக்
கனவாதியந்தத்திற்கண்டு—நனவாதி
தோற்றிடும்போதந்தச்சுகரூபங்கண்டவர்கண்
மாற்றிடுவரென்றுமலம். ௨௧

தத்துவங்களெண்ணித்தலையடித்துக்கொள்ளாதே
பித்துவங்களேதென்னிற்சாற்றக்கேண்—மெத்துஞ்
சுகாரம்பமாஞ்சிவத்திற்றோயாதமாயா
விகாரங்கடத்துவமாமே. ௨௨

* அறிவைக்கண்டதனையென்றும்பாடம்.

ஆறாறு தத்துவமு மாணவமும் வல்வினையு
நீறாக முத்திநிலை நிற்போர்க்குப்—பேறாகப்
பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறிய சித்தியிலே
யோர்விருத்தப் பாதிபோதும். உரு

உபதேசவிளக்கம்.

பரவிமனம் போகாப் பரத்தடையநாளு
மிரவுபகலற்ற விடத்தே—திரமாக
நில்லென்றான் கண்டவெல்லா நேதி பண்ணிமும்மலமுங்
கொல்லென்றான் ஞானகுரு. உச

காயங்கரணமுதனான் கிற்குங்காரணந்தா
னுயவிருண் மாயையதுவென்றாற்—றூயபொருட்
போதனைசெங்கமலப் பொற்பாதனையெனைநீ
யேதென்றுசொல்லாயினி. உஎ

என்னையறிவென்றானென்னறிவிலானந்தத்
தன்னைச்சிவமென்றான் சந்ததமு-மென்னையுன்னைப்
பாராமறைத்ததுவே பாசமென்றானிம்மூன்று
மாராய்ந்தவர் முத்தாரம். உகூ

எங்குமிருக்குமறிவு நீயேகமா
யங்கங்குணர்த்துமறிவுநாம்—பொங்கு
மலமறைத்தன் மாயைமயக்கல் விகாரப்
பலமினைத்துங்கன் மமலம்பார். உள

செங்கமலப் பொற்பாதன் சீர்பாதவல்லவங்க
ணங்கமலைவாழ்கிளியே நாடிக்கேள்—சங்கையிலாத்
தத்துவத்தைக்காட்டியதிற்றத்துவத்தைக் காட்டியருட்
டத்துவத்தைக்காட்டியதுதான். உஅ

தேசசெறிகமலைச்செங்கமலப்பொற்பாதன்
பேசுதமிழ்ஞானப்பிரகாசன்—பாசவினை
வாட்டினான்மீட்டுநான்வாராவகையருளைக்
காட்டினான்கூட்டினான்காண். உகூ

நானிங்காய்நீயங்காய்நாட்டமறவைத்ததற்பி
னானெங்கேநீயெங்கேநாதனே—வானெங்கு
மொன்றாகிநின்றவுணர்வுநீயுன்னறிவி
னன்றாகத்தோன்றுசுகநாம். ௩0

அலைவற்றிருந்தவறிவுநீயாங்கே
நிலைபெற்றிருந்தசுகநேய—மலைவற்
றிருந்ததுகண்டாயேயிருந்தபடியத்தோ
டிருந்துவிடப்போதுமினி. ௩௧

அசுக்கைசயிழுந்தருளாயவ்விடத்தேதோன்றுஞ்
சுகசுநிறைந்தவிடச்செய்தானே—மகந்தாள
சிற்பரனூர்தரிலவாழ்செங்கமலப்பொற்பாத
தற்பரஞானப்பிரகாசன். ௩௨

கிட்டாதவீசனைக்கிட்டியருள்புரிந்த
கிட்டாநுபூதிநிலையிலே—முட்டா
திருவன்னிசேர்ந்துமாற்றேறியபொன்போல
வருமின்பபூரணமாவை. ௩௩

அநாதிசுகரூபியானடிக்கீழென்று
மநாதிசுகரூபிடான்மா—வநாதி
யிருந்தமலம்போக்கியிறையருளினாலே
யிருந்தபடியேகண்டிரு. ௩௪

இற்றைவரைக்கரணத்தோடிணங்கினையே
யிற்றைவரைக்கச்சென்மமெடுத்தனையே—யிற்றைவ
ரைக், துன்பவெள்ளத்துள்ளேதுளைந்தனையேயிதற்
றால், லின்பவெள்ளத்துள்ளேயிரு. ௩௫

தேகாதிநானல்லவென்றிந்தாற்சித்தமயல்
போகாதவென்னையோபுண்ணியா—தேகாதி
தன்னளவேயம்மயக்கஞ்சத்தியமாவெப்பொழுது
முன்னளவேயில்லையுணர். ௯௬

ஆறாறுதத்துவநீயன்றென்றறிந்தனையே
யாறாறுங்கண்டறிவனுயினையே—மாறாம
லுன்னறிவிலானந்தத்தோங்கினையேயோராம
லின்னறிவைவிட்டதுவாய்நில். ௯௭

மாதாபிதாச்சுற்றமென்றுமயங்கினையே
நீதானறனுவாகின்றனையே—யீதெல்லாம்
பொய்யென்றறிந்தனையேபூரணானந்தவெள்ள
மெய்யென்றறிந்தனையேமெய் ௯௮

மனையில்வருபோகத்தின்மாதர்மக்கள்பாச
வினையிலழுந்திவிடாதே—யுனையிழந்து
காணுமற்கண்டானைக்காட்சியறக்கலந்து
பூணுமலெப்பொழுதும்பூண், ௯௯

சுத்தவத்தைநாடியிடுஞ்சுத்தவிராப்பகலா
மெத்தவத்தைநாடிவிடுவையேற்—சுத்தவத்தை
தானுயிரண்டுந்தவிர்ந்தசிவானந்த
வானவைநீயேமதி. ௱

சுத்திலமுன்றனக்குச்சொல்லக்கேடொல்லவினை
தத்துவங்களாறாறுந்தான்பெருகக்—கத்திடுவ
ரெல்லாமிழந்தவிடமேயதுவாக
நில்லாயதுவேநிலை. ௱௧

நெருப்பென்றால்வாய்சுடுமோநெய்பாறேன் * கட்டி
கருப்பென்றாற்றித்தியாகாணீ—விருப்பமுட
னீபிரமமென்றக்காணீபிரமமாயினையோ
நீபிரமஞ்சற்குருவானில். ௱௨

* கண்டென்றும்பாடம்.

ஆர்க்குந்தெரியாதவானந்தவின்பவெள்ள
மேற்கொண்டுகொண்டுவிடுகுதில்லை—பார்க்குந்
தெரியாப்பரப்பிரமஞ்சேர்த்தாயுனக்குச்
சரியார்சிதம்பரநாதா. ௪௩

அநுபூதிநிலை.

உள்ளங்கரையவுடல்கரையவானந்த
வெள்ளங்கரைப்புரண்டுமேலாகக்—கள்ளமலம்
பொய்யாகவென்றுட்புகுந்தவாறென்கொலோ
வையாதியாகவிநோதா. ௪௪

ஏதேதுசெய்தாலுமேதேதுசொன்னாலு
மேதேதுசிந்தித்திருந்தாலு—மாதேவா
நின்செயலேயென்றுநினதருளாலேயுணரி
லென்செயலேகாண்கிலேனே. ௪௫

மாயைமலமெங்கேமறைந்ததோமாயைதனி
லாயசகமெங்கேயழிந்ததோ—காயமதிற்
றங்கும்புருடனெங்கோசச்சிதானந்தவெள்ள
மெங்குமிகக்கோத்ததே. ௪௬

நானுஞ்சுகவடிவாய்நண்ணினேனின்னருளால்
வானுஞ்சுகவடிவாய்மன்னிற்றே—வானுஞ்
சுகரூபமன்றுமணந்தோற்றநிலம்போலுன்
னகரூபமட்டேயது. ௪௭

ஈசனடியிலிருக்கையிலேயெங்கெங்கு
மீசனடிதேடியிளைத்தேனே—பேசரிய
பொற்பதத்தன்செங்கமலப்பொற்பாதன்றன்னுடைய
நற்பதத்தைக்காணுமுனன் ௪௮

நற்பதஞ்சேராரூரின்ஞானப்ரகாசனெந்தை
தற்பரனோர்ஞானவாட்டந்தானே—சொற்பனத்துங்
காரார்மறலியயன்கண்ணனுக்குமஞ்சேனை
யாராலுமென்னசெயலாம். ௪௯

வெறும்பாழிற்பேரின்பவெட்டவெளிதன்னிற்
குறும்பாளர்காணுக்குடிலி—னுறும்பாச
மோட்டியெனைவைத்தனனேயுற்றபிரபஞ்சமெல்லா
வாட்டியஞானப்பிரகாசன். ௫0

என்றுஞ்சிவத்தோடிணைபிரியாதேயறிவாய்
நின்றபடிதன்னைநிகழ்த்தினான்—மன்றி
னடமாடுமாரூரன்ஞானப்ரகாசன்
றிடமாகவென்னுள்ளத்தில் ௫௧

நாதனார்தென்கமலைநாயனாரெவ்வுயிர்க்கும்
போதனார்செங்கமலப்பொற்பாதர்—பேதமற
வொன்றிரண்டுதானறவேயுண்மையிலேகூட்டியெனை
யின்றறவேவைத்துவிட்டாரே. ௫௨

நன்னெஞ்சேநீகேட்டநன்மையெல்லாஞ்சொல்லுதற்குக்
கன்னெஞ்சமாலயனுங்காணாதோன்—வன்னெஞ்ச
ரின்னகுறையுண்டென்றாவீசனெதிர்வந்தா
னென்னகுறைசொல்லாயினி ௫௩

இட்டசனமெங்கேயிதமகிதந்தானெங்கே
துட்டசனமெங்கேதொழிலெங்கே—சிட்டருடன்
கூடியிருந்ததெங்கேகுன்றாச்சிவானந்த
நாடியதுவாயிருந்தநாள். ௫௪

வாக்குமனக்காயத்தான்வந்தபொருளத்தனையும்
வாக்குமனக்காயமுடன்மாயுமே—வாக்குமனக்
காயமுடனிழந்துகாண்ஞாதிருஞான
ஞேயமிழந்தநிலை. ௫௫

புசிப்போஞ்சிவபோகம்பூரணமாயெங்கும்
வசிப்போமுலகில்வசியோ—மூசிப்பின்றி [கீழ்ந்
வாழ்வோஞ்சிவத்தையுணர்மாதவர்தம் பொன்னடிக்
தாள்வோமெமக்கார்சரி ௫௬

உபாயநிலை.

அறிவுநீயென்னவறிந்தறிந்துமாயைச்
செறிவுநானென்றென்றுசேர்ந்தா—லறிவு
தெரிந்திடுமோவின்பசுகஞ்சேர்ந்திடுமோவினைப்
பிரிந்திடுமோசென்மப்பிணி ௫௭

ஆரணங்கடாமெரித்தவத்தரேயென்னுங்
காரணங்களோட்டும்வகைகாட்டீர்—காரணங்க
ணீயுதுவாய்நில்லாமனின்னறிவைக்கண்டருளிற்
போயதுவாய்நின்றுவிடப்போம். ௫௮

தானல்லாதத்தையுந்தானென்றுழலாமற்
றானல்லாமாயதனுட்டாக்காமற்—றானல்லா
மானேமெனும்போதத்தாக்காமலீசனிடத்
தானேனேயாயினவனும். ௫௯

தேகநாமென்றென்றுசெப்புவீரீதில்வரும்
போகநாமென்றுபுலம்புவீர்—நோக
வருந்துவீர்தீவினையின்மாறுதவின்பம்
பொருந்துவீரெப்படிநீர்போய். ௬௦

தன்னையிழந்திடத்தேதானேசுகவடிவா
யின்னபடியென்றறியாவெங்கோனுட்—பின்னமற
நின்றநிலைதானுந்தெரியாதேநின்றவர்கட்
கன்றேபிறப்பறுக்கலாம். ௬௧

உன்னாதேபற்றாதுரையாதேயொன்றியதி
னின்னாமயில்லைநிகழாதே—பன்னாட்
பரையிறந்துநிற்கும்பயனுணர்ந்தார்நெஞ்சிற்
றிரையிறந்துநிற்குஞ்சிவம், ௬௨

அருளறிந்துதானுமறிவறிந்தேயாங்குட்
பொருளறிந்துதானடங்கிப்போத—விருளகல
விம்மாதிருந்துவிகற்பமறவொன்றாகிச்
சும்மாவிருக்கைசுகம். ௬௩

செறியுந்தனுவாதிசேர்ந்தறிந்துநின்ற
வறிவையறிவாலறிந்தே—யறிவிழந்து
நின்றாற்சுகானந்தநீடுநிலைவேறு
சென்றாற்சுகங்கிடையாதே, ௬௪

தத்துவத்தைவிட்டருளிற்றான்கலந்துதன்னிழப்பின்
மெத்துஞ்சுகத்தின்மிகவழுந்திச்—சுத்தமா
யொன்றாகிநின்றவுணர்வுமொழிந்தக்கா
லன்றேசிவபோகமாம். ௬௫

சுட்டறிவுகெட்டசுகாதீதவுண்மையிலே
விட்டகலாதென்றும்விரவுவோ—ரிட்டமுடன்
யோகசமாதிகளுமுட்புறம்பாம்பூசைகளு
மாகவினையாரவர். ௬௬

நின்னறிவில்யானொளித்துநீயாகின்றதுபோ
லென்னறிவினீயொளித்தேயானாகி—யெந்நாளு
நிற்கவல்லையாமாகினின்சனனம்போக்குதற்குக்
கற்கவல்லதேதுமில்லைகாண். ௬௭

இன்பசுகத்துள்ளேயிருக்கலாமெப்போதுந்
துன்பவினையுன்னைத்தொடராது—வன்பா
மருட்டேகமாயடங்கிமாயாமனெஞ்சே
யருட்டேகமாயடக்குவாய். ௬௮

தேகமறந்துதிருவருளாய்நின்றுசிவ
போகம்விளையப்புணர்நெஞ்சே—நோக
வருந்தாமற்றீவினையில்வாடாமற்றுன்ப
மருந்தாமனிபிறவாமல். ௬௯

பூதாதியாசமன்றோ * பூரணானந்தமன்றோ
பேதமறநம்முட்பிரானன்றோ—வாதனைகள்
விட்டாற்சுகமன்றோவென்றுணர்வில்வேண்டுவதுங்
கெட்டாற்பிறப்புங்கெடும். ௭௦

அழுந்தாதேபாசத்தறுதினமுமையோ
விழுந்தாலெழுந்திருக்கவேண்டுஞ்—செழும்பாலை
மீறித்தருபிரதவீட்டின்பமாமலமே
லேறித்திரும்பலா * மே. ௭௧

என்றுஞ்சனனத்திடர்க்கடலிலேமூழ்கிப்
பொன்றுமனமேயுனக்கோர்புத்திகே—ணன்று
தனிச்சங்கஞ்சேராமற்றற்பரனைச்சேரி
னிச்சங்கஞ்சேராதிரு, ௭௨

பணியறுத்தல்.

அவரவருக்குள்ளபடியீசனருளாலே
யவரவரைக்கொண்டியற்றுமானா—லவரவரை
நல்லார்பொல்லாரென்றுநாடுவதென்னெஞ்சமே
யெல்லாஞ்சிவன்செயலென்றெண். ௭௩

எங்கேநடத்துமோவெங்கேகிடத்துமோ
வெங்கேயிருத்துமோவென்றறியேன்—கங்கைமதி
சூடினான்றில்லையிலேதொந்தொமெனநின்றுநட
மாடினானெங்கோனருள். ௭௪

---

* பூரணானந்தமென்றும் படம்.
* ஏ - வினா.

போகம்புவனம்பொருந்துமிடமெங்கெங்குந்
தேகங்கரணந்திரியுமே—யாகிலது
தன்னைநீயென்றுதவியாதேநெஞ்சமே
நின்னையேகண்டருளினில். எரு

ஏதேதுசெய்திடினுமேதேதுபேசிடினு
மேதேதுசிந்தித்திருந்திடினு—மாதேவன்
காட்டிடுவதானவருட்கண்ணைவிட்டுநீங்காது
நாட்டமதுவாய்நட. எசு

எடுத்தவுடற்கேய்ந்தகன்மமெய்ப்போதூட்டும்
விடுத்துவிட்டோமென்பர்விழலர்—விடுத்த
தனுவன்றேயைந்துமலமாறுநீத்த
விதுவன்றோயாந்துறவென்பேம். எஎ

எவ்வுயிருங்காக்கவோரீசனுண்டோவில்லையோ
வவ்வுயிரினுமொருவரல்லவோ—வெளவிப்
பொருகுவதுநெஞ்சேபுழுங்குவதும்வேண்டாம்
வருகுவதுந்தானேவரும். எஅ

முப்பதுஞ்சென்றால்விடியுமுப்பதுஞ்சென்றாலிருளு
மப்படியேயேதுமறிநெஞ்சே—யெப்பொழுது
மாங்காலமெவ்வினையுமாகுமதுதொலைந்து
போங்காலமெவ்வினையும்போம். எகூ

ஆவனுற்றிடுஞ்சகலத்தாவதுவுமாங்கவரே
கேவலத்தின்மூழ்கிக்கிடப்பதுவு—நாவரற்ற
லில்லாதசுத்தத்திருப்பதுவுமிம்மூன்று
மில்லான்செயலென்றிரு. அ0

பாசஞ்சடமுயிரோதாணுகப்பற்றறியா
வீசனிரண்டுமிணைத்தாட்டிப்—பூசலென்றுஞ்
செய்பவனேதானேதிரும்பியருள்செய்யாம
லுய்பவர்களுண்டோவுரை. அக

முற்றின்பமாமருளின்மூழ்குவதுமோகமிரு
சிற்றின்பமாமருளிற்சேர்குவது—முற்றிங்
கறிந்தானன்னெஞ்சேயகிலாண்டமெங்குஞ்
செறிந்தான்செயலேதெளி. ௮௨

என்னிடத்தினின்செயலேயில்லையென்றால்யாதறிவு
நின்னிடத்தில்யான்வேண்டனிச்சயமே—யென்னிட
த்தி, லின்மையுயிர்க்குயிர்நீயின்மையிருந்தியற்றி
னன்மைதின்மைக்கேதுவோநான் ௮௩

நாம்பெரியரென்னுமதைநாடாதடக்குமவர்
தாம்பெரியரென்றுமறைசாற்றிடு—நாம்பெரிய
ரென்பார்சிறியரிவரலாலிவ்வுலகிற்
றன்பார்சுமப்பார்கள்சொல். ௮௪

கட்டமாங்காயங்கலையனைத்துங்கற்றாலு
மட்டமாசித்தியடைந்தாலு—மிட்டம்
ரமசுகமேபதியாதபோது
திரமசுகமேதெளி. ௮௫

மனவாக்குக்காயமுயிர்மன்னியசைப்பானு
மனமாதிபோகமளிப்பானு—நனவாதி
கூட்டிவிடுவானுமுத்திகூட்டிடுவானும்பிறப்பி
லோட்டிவிடுவானுமரன். ௮௬

முன்னைவினைக்கீடாமுதல்வனருணமைக்கொண்
டென்னவினைசெய்யவியற்றுமோ—வின்னவினை
செய்வோந்தவிர்வோந்திரிவோமிருப்போமிவ்
துய்ப்போமெனும்வகையேது. ௮௭

ஊட்டும்வினையிருந்தாலுன்றனைபுன்பதத்தைப்
பூட்டிப்பிடித்துப்புசிக்குங்—கேட்டுத்
திரியாதேதவந்ததில்லைத்தெய்வமேயென்றென்
றெரியாதேநெஞ்சேயிரு. ௮௮

ளன்னதன்றுநின்செயலேயென்றறிந்தால்யான்விரும்
பி, என்னவென்றுவாய்திறப்பேனீசனே-யின்னமின்
ன, மெப்படியோநாயேனையீடேற்றவேண்டுமுனக்
கப்படியேசெய்தருளுவாய். ௮௬

வன்மைபுரிகாயமரப்பாவைதன்னையரன்
கன்மமெனுஞ்சூத்திரத்தாற்கட்டியே—நன்மைதின்
மை, யாட்டுவதுநாடாதறிவிலார்தஞ்செயலாய்
நாட்டுதல்போலுண்டோநகை. ௬0

ஆறாறுதத்துவமுமாணவமுநீங்கியுயிர்
பேறாகவானந்தம்பெற்றாலும்—வேறாகப்
பார்த்திருப்பதன்றியேபாழானகன்மத்தை
நீத்திருக்கலாமோநிலத்து. ௬௧

ஆனசுகதுக்கத்தழுந்துகினுஞானிகடாம்
யானெனதென்றெண்ணியியைந்திடினுந்—தானதற்
கு, வேறென்றருளால்*விரளமாய்க்காணிலென்று
மேறுமோகன்மமிலை. ௬௨

சத்துருவுமித்துருவுந்தாரணியில்வேறில்லை
சத்துருவுமித்துருவுந்தன்னெஞ்சே—பெத்தமலம்
வீட்டும்படிக்குவினைக்கீடுனைத்தனுவோ
டாட்டுஞ்சிவனென்றறி. ௬௩

இன்னவினைபின்னகலத்தின்னபொழு†தின்னபடி
யின்னதனாலெய்துமெனவறிந்தே—யன்னவினை
யன்னதலத்தன்னபொழு தன்னபடியன்னதனாற்
பின்னமறக்கூட்டும்பிரான். ௬௪

அன்றேயநாதியமைத்தபடியல்லாதொன்
றின்றேபுதிதாயியையுமோ—வென்றுஞ்
சலியாதியற்றுவான்றன்னையேநோக்கி
மெலியாதிருந்துவிடு. ௬௫

---

* விரளம், நீக்கம். † இன்னதனாலின்னபடியாய்ப் பொருந்துமென்றமைத்தேயென்றும்பாடம்.

ஆர்பெரியரார்சிறியராருறவரார்ப'கைஞர்
சீர்பெரியரானந்தசிற்சொருபர்—பேர்பெரிய
ரெங்கெங்குந்தாமாயிருந்துசடசித்தனைத்து
மங்கங்கியற்றுவதாஞல். சுஅ

நன்கருத்தேதென்கமலைஞானப்ரகாசனே
யென்கருத்தேயுன்கருததென்றெண்ணுமவ—னுன்கரு
த்தே, யென்கருத்தென்றெண்ணியேயான்பட்டதுன்
பமெலா, முன்கருத்தேதீரவறியும். சுஎ

அமைத்தவினைக்கீடாவதுதினமுஞ்செய்வ
திமைப்பொழுதும்வீண்செயலொன்றில்லை—யுமைக்
குரியா, னெல்லாமறிந்தெங்கியற்றுவதுந்தன்னடிமை
வல்லார்தமக்குணர்த்துவான். சுஅ

கள்ளவரனேகருணையுடனென்னறிவி
றுள்ளசுகந்தந்துவிடவொண்ணுதோ—மெள்ள
வருத்துவதுந்தீவினையிலவாட்டுவதுஞானம்
பொருத்துவதுமேன்றுன்புகல். சுசு

கேளாதெனைமலத்திற்கிட்டியெடுத்தாளாக்கி
மீளாதளித்தபரவீட்டிலெனை—யாள
வுனக்குப்பொறியோவுனைத்தொடர்ந்தாளென்ன
வெனக்குப்பொறியோவினி. கOO

சும்மாதனுவருமோசும்மாபிணிவருமோ
சும்மாவருமோசுகதுக்க—நம்மான்முன்
செய்தவினைக்கீடாச்சிவனருள்செய்விப்பதென்று
லெய்தவனைநாடியிரு. கOக

பொல்லாதநீவினையிற்போகார்கள்போனலு
மெல்லாஞ்சிவன்செயலேயென்றிருப்பர்-நல்லார்க
ணற்றுங்கமலையில்வாழ்ஞானப்ரகாசனருள்
சற்றும்பிரியாதவர். கO௨

கூட்டுவதுங்கூட்டிப்பிரிப்பதுவுமொன்றென்றை
யாட்டுவதுமாட்டியடக்குவதுங்—காட்டுவதுங்
காட்டிமறைப்பதுவுங்கண்ணுதலோன்முன்னமைத்த
வேட்டின்படியென்றிரு. ௧௦௩

உள்ளதுதான்போமோமற்றில்லாததுவருமோ
பள்ளமேவெள்ளம்பரவாதோ—கள்ளமாய்ப்
பித்துப்போலேபிதற்றும்பேதைமடநெஞ்சமே
செத்துப்போனானோசிவன். ௧௦௪

ஈசன்பலகீனனென்றக்காலாலயத்தின்
மோசம்வந்ததென்றுமொழியலா-மீசனே
யாக்குவதுமாக்கியழிப்பதுவுந்தானானா
னோக்குவதென்யாம்பிறரைநொந்து ௧௦௫

தேசஞ்சிவாலயங்கள்சேரவலையவொரு
மோசம்வந்ததையோமுதல்வனே-தேசத்து
மன்னைவெறுப்பேனோவருவினையையூட்டுவிக்கு
முன்னைவெறுப்பேனோவுரை. ௧௦௬

துறவின்பகுதி.

துரத்தியுன்னையாசைதொடராமலென்றும்
விரத்தியினாலாங்கவற்றைவிட்டுப்-பரத்திலன்பு
செய்யடாசெய்யடாசேரப்பிரபஞ்சமெல்லாம்
பொய்யடாபொய்யடாபொய். ௧௦௭

அனைத்துலகுநம்பாலநுக்கிரகம்பெற்றெ
ணனைத்துலகுநம்வசமாயாயெ-னனைத்துலகுங்
கொண்டாடிலென்னைவினைக்கொத்தறுத்துப்பேரி
ன்பங், கண்டாடிலன்றோகதி. ௧௦௮

அறிவிழிந்துநின்றசுகவானந்தத்துள்ளே
குறியிழந்துநின்றுகுலாவிப்—பிறியா
திருந்தாற்பிறப்பறுமோவிச்சைமால்கொண்டு
திரிந்தாற்பிறப்பறுமோசெப்பு. ௧௦௯

எத்திசையுமெவ்வுலகுமெத்தொழிலுமெப்பயனு
நித்தியமென்றெண்ணினிலையாதே—புத்தியினாற்
கண்ணாடியிற்றோன்றிமாய்ந்துவிடுங்காணிவற்றைக்
கண்ணாடியிற்கனவிற்காண். ௧௧௦

எத்தனைதான்கற்றாலுமெத்தனைதான்கேட்டாலு
மெக்கலைசாதித்தாலுமின்பறா—சித்தமே
மெய்யாகத்தோன்றிவிடுமுலகவாழ்வனைத்தும்
பொய்யாகத்தோன்றாதபோது. ௧௧௧

மின்போலத்தோன்றிவிடுமுலகவாழ்வனைத்து
மென்போலிகடாமென்றெண்ணுவார்—தன்போத
மில்லார்சிவபோகமென்றுமருந்திவிடு
நல்லார்திறமிதுவென்னார் ௧௧௨

தேசமூர்பேர்காணிசீர்வரிசைசாதியெனு
மாசையானெஞ்சேயலையாதே—நேசப்
பொருப்பானைநின்னறிவிற்போக்குவரவற்
றிருப்பானைப்பார்த்தேயிரு. ௧௧௩

ஆகம்பகையாவதன்றிப்பகையுண்டோ
மோகந்தவிர்ந்தமுனிவோர்க்கிங்—கேக
னிருவரறியாதவீசனருளல்லா
லொருவர்துணையுண்டோவுரை. ௧௧௪

அளவிலாச்செல்வத்தடைந்தாலுமாகத்
தளவிலாச்சித்திகளுண்டாயு—மளவில்கலை
யாய்ந்தாலுமென்னைசுகரல்லார்சிவானந்தம்
தோய்ந்தார்களன்றோசுகர். ௧௧௫

ஆகாதகாரியஞ்செய்தாஞ்சுகமுமாங்கதனாற்
போகாததுக்கம்பொருந்துவது—மோகோ
வுரைக்கிலணுவுக்குமுயர்ந்தமாமேரு
வரைக்குநிகராமதி. ௧௧௬

பொய்யில்வருந்துன்பம்புகுந்தறிந்தும்பூரணமே
மெய்யில்வருமின்பவிளைவறிந்து—மையோ
தெளியாததென்னநலந்தீங்குகண்டுசேற்றுங்
களியாததென்னமயக்கம். ககஎ

ஆகஞ்சிறைச்சாலையக்கரணங்காவலாள்
போகம்புவனம்பொருந்துமிடம்—மோகோ
விதனுட்படுமுயிர்கட்கிடேற்றஞ்செய்வா
னதனுக்கிறைவனரன். ககஅ

அதிட்டானமீசனருளன்றிமற்றை
யதிட்டானமெல்லாமசித்த—மதிட்டானம்
பொய்யென்றறியாமற்பூதலத்துநெஞ்சமே
மெய்யென்றுழல்வதெல்லாம்வீண். கககூ

நின்னைமதிக்கினினக்கதியர்செல்வநினை
நின்னைவறிஞனெனநீநினையி—னின்னிற்
சிறியார்வறுமைநினைசிந்தைதபுகவென்றுங்
குறியாவிடும்பைதுக்கங்கோள். க௨0

அறிவோர்புகழ்ச்சி.

அநித்தியத்தைநித்தியமென்றுதரிக்கும்பொல்லா
மனித்தருடன்கூடிமருவார்—தனித்திருந்து
மோனந்தமாஞ்சிவத்தின்மூழ்கிமலத்தையறுத்
தானந்தமாயழுந்துவார். க௨க

தாகமறந்துசதுர்மறந்துதான்மறந்து
தேகமறந்தட்டமாசித்திமறந்—தாகத்தின்
வந்ததறியாதிருந்துமாருச்சிவானந்தஞ்
சந்ததம்வாழ்வார்க்கார்சரி. க௨௨

உள்ளமலநீங்கியொழியாச்சிவானந்த
வெள்ளந்துளைந்துவிளையாடும்—பிள்ளைகா
ளத்துவிதமானீர்நம்மாகம்பிரிந்தோமென்
றித்துவிதமெண்ணுவானேன். க௨௩

அறிவாயறிவிழப்பிலாகின்றவின்பச்
செறிவாய்ச்சுகமாய்த்திணைமும்—பிறியா
திருந்தங்கதீதமாயேய்ந்தசிவானந்தம்
பொருந்துவார்முத்தரெல்லாம்போய். கஉச

மடவோர்பழிப்பு.

தனியறியாரீசன்றனையறியார்பாச
வினையறியாரானந்தமேவார்—தனையறியுஞ்
சிட்டர்தமக்கில்லாததீங்குரைப்பர்பொல்லாத
துட்டர்தமக்குள்ளதொழில். கஉரு

தன்னையறியார்தலைவன்றனையறியார்
முன்னைவினையின்முடிவறியார்-பின்னைக்
குருக்களென்றும்பேரிட்டுக்கொள்ளுவார்களையோ
தெருக்கடனிலேசிலர். கஉசா

வாயுவெளிதானசையாவாற்றிருந்தாற்போலென்று
நீயதுவும்பூரணமாய்நிற்கவே-காயத்துக்
குள்ளுள்ளேதான்சிவமென்றுற்றுப்பார்ப்பாரூசிப்
பொள்ளலால்வானபார்ப்பார்போல். கஉஎ

கற்கவிடர்ப்பட்டுமிகக்கற்றவெல்லாங்கற்றவர்பாற்
றற்கமிட்டுநாய்போலச் சள்ளெனவோ—நற்கருணை
வெள்ளமடங்கும்விரிசடையார்க்காளாகி
யுள்ளமடங்கவல்லவோ. கஉஅ

அறியாகனவினிலுமானந்தரூப
மறிவார்தமையுமடையா—ரறிவார்கட்
கில்லாததீங்கேயெடுத்துரைப்பாரிவ்வுலகிற்
பொல்லார்தலையிற்பொறி. கஉகூ

பொது நிலை.

நீதியிலா மன்னரிராச்சியமுநெற்றியிலே
பூதியிலார்செய்தவமும்பூரணமாஞ்—சோதி
கழலறியாவாசானுங்கற்பிலருஞ்சுத்த
விழலெனவேநீத்துவிடு. ௧௫௦

ஐந்தறிவார்க்கண்டாலுமாரேதுசொன்னாலு
மெந்தவிருப்புவெறுப்புப்பேய்ந்தாலுஞ்—சிந்தையே
பாரவிசாரத்தைப்பண்ணாதேயேதொன்றுந்
தீரவிசாரித்துச்செய். ௧௫௧

பரபரக்கவேண்டாம்பலகாலுஞ்சொன்னேன்
வரவரக்கண்டாராய்மனமே—யொருவருக்குந்
தீங்குநினையாதேசெய்ந்நன்றிகுன்றாதே
யேங்கியிளையாதிரு. ௧௫௨

மிகுத்தகுலஞ்செல்வத்துமேவுவதுமத்தைப்
பகுத்துப்பொய்யென்றுவிடும்பாங்கு-தொகுத்து.
விரித்தானன்னெஞ்சேமிருவாரணத்தை
யுரித்தான்செயலென்றுணர். ௧௫௩

ஆறாறுதத்துவம்வைத்தத்திலுறைமூர்த்திகள்வை
த், தேறாமலபாகமேறவே—மாறாம
லுன்னைவிடாதாள்வானைக்கேட்டொநெஞ்சமே
யென்னவிசாரமெமக்கு. ௧௫௪

தானேவசத்தல்லவென்றறிந்தாற்றாரணியி
லேனேபிதற்றிடுவதேழைநெஞ்சே—தானே
யிறவாததுதானிறக்கவருமோ
மறவாதிருசிவமாவை. ௧௫௫

ஏற்றுதவையாயிருப்பதுவுமுண்மயச்ச
மாற்றுதுதீரென்றாற்றுவதுந்—தோற்றாது
தோற்றுவதுமுன்னைச்சுகபூரணனென்று
தேற்றுவதுமீசன்செயல். ௧௫௬

அன்றேயரனணுக்கள்பாசங்களைந்தொழில்க
ணன்றேசிவனுநடுவனே—சென்றருளி
னிற்கச்சிலர்சிலர்கணீணரகிற்பூதலத்திற்
சொற்கத்திருப்பதென்றேசொல். ௧௫௭

ஆசையறுப்பாசம்விடாயானசிவபூசைபண்ணாய்
நேசமுடனைந்தெழுத்தைநினையாய்—சீசீ
சினமேதவிராய்திருமுறைகளோதாய்
மனமேயுனக்கென்னவாய். ௧௫௮

தில்லைவனங்காசிதிருவாரூர்மாயூர
முல்லைவனங்கூடன்முதுகுன்ற—நெல்லைகளார்
காஞ்சிகழுக்குன்றமறைக்காடருணைகாளத்தி
வாஞ்சியமென்முத்திவரும். ௧௫௯

தனி. கட்டளைக்கலித்துறை.

ஆய்வார்பதிபசுபாசத்தினுண்மையையாய்ந்தறிந்து, காய்வார்பிரபஞ்சவாழ்க்கைஎல்லாங்கல்விகேள்வியல்ல,லோய்வார்சிவானந்தவாரியுள்ளேயொன்றிரண்டுமறத், தோய்வார்கமலையுண்ஞானப்பிரகாசன்மெய்த்தொண்டர்களே. ()

கனக்கும்பொதிக்குமெதுக்குந்தன்னிச்சைகண்டதுண்டோ, வெனக்குமுடற்குமெனதிச்சையோவிணங்கார்புரத்தைச்,சினக்குங்கமலையின்ஞானப்பிரகாசசிதம்பரவின், றனக்கிச்சையெப்படியப்படியாகவுரைத்தருளே. ()

எல்லாமுனதுசெயலென்றறிந்துமெனதுளத்திற்
பொல்லாதசங்கற்பமேன்வருமோபுரமூன்றெரிக்க
வல்லாய்கமலையின்ஞானப்ரகாசவரதவிது,சொல்லாய்
கரணமபக்கமன்றோவென்றெழிலல்லவே. ௧௬௨

கலி விருத்தம்.

அவரவர்வினையளவியவரவர்வந்தன
ரவரவர்வினைவழியவரவரனுபவ
மெவரெவர்க்குதவினரெவரெவர்க்குதவிலர்
தவரவர்வினைவதுதமையுணர்வதுவே. ௧௬௩

சிவபோகசாரம் முற்றிற்று.

உ

கணபதி துணை.

சொக்கநாத வெண்பா.

ஆடரவஞ்சூழ்மதுரையம்மானேயன்பருடன்
கூடவிளையாடிவருகோமானே—நீடுபுகழ்
மென்மேலுமென்றனக்குமேவியிடப்பொல்லாத
வென்மேல்வினைகெடுப்பாயே ௧

புண்கட்டுதோலைப்புதுக்கிமயக்கமுறக்
கண்கட்டுவித்தைபோற்காட்டுவாய்—பண்கட்டுப்
பூணுவேன்றன்னையின்பபூரணத்திற்பூணவரு
டாணுவேசொக்கநாதா. ௨

ஏடாருநாரியரையையோயமன்பிடிக்கும்
பாடாவிதியென்றுபாராமற்—கேடாரப்
பூண்ட * வாபாதனென்றுபோடாதெனையருளி
லாண்டவாசொக்சநாதா. ௩

காக்கைநரிஞாளிகழுகுபருந்துக்கிரையா
மாக்கையினையானென்றலையாமல்—வாக்குமன
மெட்டாதவீட்டிலெனைக்காட்டுதிட்டருளந்
தட்டாதசொக்கநாதா. ௪

பஞ்சமாபாதகனையாண்டபுகழ்பார்மீதிற்
கொஞ்சமாவீறுபுகழ்கூறுமே—வஞ்சமே
பூண்டளவில்பாதகஞ்செய்பொல்லாதநாயேனை
யாண்டளவிற்சொக்கநாதா. ௫

வறிஞர்தமையொக்கவைக்குமன்னர்போல
வறிஞர்தமையாள்வதன்றிப்—பொறிபுலனால்
வெம்புவேன்றன்னைவிடுத்தாள்வதேபாரஞ்
சம்புவேசொக்கநாதா. ௬

---

* ஆபாதன்—நழுவுகின்றவன்

என்றுனையடையவல்லேனெனிலிடரி
லிந்நாளளவுமிருப்பேனோ—பன்னகம்
பூண்டவாவேணிப்புனிதாமதுரைநக
ராண்டவாசொக்கநாதா. ௭

எல்லாமும்வல்லசித்தரென்றக்காலென்னுடைய
பொல்லாக் * கருத்தகற்றப்போகாதோ-வல்லாடும்
பொங்கராவேணிப்புனிதாமதுரைநகர்ச்
சங்கராசொக்கநாதா. ௮

பேசாதநுபூதிபிறக்கவெனதுளத்தி
லாசாபசாசையகற்றுவாய்—தேசாருஞ்
சிற்பரானந்தாதிருவாலவாயுறையுந்
தற்பராசொக்கநாதா. ௯

இறந்தும்பிறந்துமிளைத்தேனினியான்
மறந்தும்பிறவாவரந்தா—சிறந்தபுகழ்
ஞாலவாயாமுடிக்குநாட்டுளாமணியா
மாலவாய்ச்சொக்கநாதா. ௰

உலகவெறுப்புமுடல்வெறுப்புமுள்ளத்
திலகுமலவெறுப்புமெல்லா—மலகிறந்த
நந்தாதவின்பசுகநாட்டின்விருப்பமுறத்
தந்தாள்வைசொக்கநாதா. ௧௧

எப்போதுமும்மலம்விட்டேறுவேன்பூரணமா
மெப்போதினின்பசுகத்தெய்துவே—னெப்போது
நித்தியாசுத்தாநிராமயாசொற்றுவருச்
சத்தியாசொக்கநாதா. ௧௨

காயமோகாலன்கருத்தேமாகாகாலன்
ஞாயமோசற்றுநடப்பதில்லை—பேயனேன்
மாளுவனோதென்மதுரைமாமணியேயென்னையுகந்
தாளுவையோசொக்கநாதா. ௧௩

---

* வினையகற்றவென்றும் பாடம்.

எரிசுடுவதல்லாவிரும்புசுடுமோ
வரியயற்கும்வாசவற்குமியார்க்கும்—பெரியவர்க்கும்
பூணுமேதத்தொழிலின்பொன்னருளாற்றென்மதுரைத்
தாணுவேசொக்கநாதா. ௧௪

ஆரிடத்தில்வந்துமடியேனுளத்திருந்து
மோரிடத்திலுற்பவித்துமுள்ளபடி—பாரிடத்தி
னாயேனுளமகிழநன்றாவுணர்த்திடுவாய்
தாயேநீசொக்கநாதா. ௧௫

நித்தமெழுந்தருளிநின்மலனேயென்றனக்குப்
புத்திமிகமிகவும்போதித்துச்—சித்தமயல்
போக்குவாயின்பசுகபூரணத்திரண்டறவே
யாக்குவாய்சொக்கநாதா. ௧௬

மறையாகமவிதியும்வந்தவுடறன்னி
னிறையூழ்விதியுமுன்னாநின்றான்—மறைவிதிக்கே
யேற்கவேசெய்வேனிசைந்தாலூழ்வேறதனா
லார்க்காவென்சொக்கநாதா. ௧௭

நலம்விளைக்குமுன்பதத்தினூடைவைப்பதல்லான்
மலம்விளைக்குஞ்சோறருந்தவைத்தாய்-சலம்விளைக்குஞ்
சென்னியாமாமதுரைச்செல்வாவெல்லாமும்வல்ல
தன்னியாசொக்கநாதா. ௧௮

ஆர்வந்தெனார்போவெனையாவுஞானந்தச்
சீருளத்தேதெயென்றுஞ்செறிந்திலதேற்—காரிருண்ட
கண்டனேயோர்புருடன்காதல்கொண்டாள்போன்மதுரை
யண்டனேசொக்கநாதா. ௧௯

கான்றசோறாபுலகங்காணவில்லையின்பவெள்ளத்
தூன்றவடியேனுறங்கவில்லை—யேன்ற
விருள்சகலநீங்கவில்லையேழையேற்குன்ற
னருளுறாதோசொக்கநாதா. ௨௰

நீயேபரமசிவஞானக்கானின்மலனே
நாயேனுளமகிழநன்றாகப்—பேயேன்
கருத்தடங்கநின்கருணைகாட்டியின்பவெள்ள
மருத்திடுவைசொக்கநாதா. ௨௧

விதிமார்க்கமெப்பொழுதுமேவறியேனூழின்
விதிமார்க்கமல்லாதுமெய்யாங்—கதிமார்க்கங்
காட்டுவாய்நாயேன்கரையேறவெவ்வுலகு
மாட்டுவாய்சொக்கநாதா. ௨௨

அருவருப்பேமெத்தியிடுமாகத்தைச்சற்று
மருவருக்கத்தோற்றுதில்லையையோ—வருவருக்கத்
தோற்றியிடாதென்னவினைதுய்ப்பித்தறுப்பதற்கோ
சாற்றியிடாய்சொக்கநாதா. ௨௩

தவமோசிறிதறியேன்றானமேற்செய்யு
மவமோவளவில்லையாற்—சிவமோ
பெறுமாறென்கூடற்பிரானேமுப்பாச
மறுமாறென்சொக்கநாதா. ௨௪

அனைத்துயிர்க் கும்பாசமறுத்துமுத்திகூட்ட
மனத்துயரஞ்செய்தன் மருந்தோ—மனத்துயரஞ்
செய்யாமற்றீர்மருந்துசித்தாவறிந்திலையோ
வையாவென்சொக்கநாதா.

உணர்த்திலுணர்வேனுணர்த்தாயேனாயேன்
கணத்துமுணரும்வகைகாணே—னுணர்த்தியென்னுட்
பூண்டமலமாயைகன்மம்போக்கிச்சிவானந்த
தாண்டருள்வைசொக்கநாதா. ௨௬

பிறிந்தேன்மலத்துனதுபேரருளினாலே
யறிந்தேனுனைநன்றாவையா—செறிந்தவின்ப
பூரணாசெங்கமலப்பொற்பாதாகூடலில்வா
ழாரணாசொக்கநாதா

கெடுங்காலம்வந்தாற்கெடுப்பைகதியில்
விடுங்காலம்வந்தால்விடுவை—கொடுந்தவங்கள்
பண்ணிடினும்பாவம்பயிற்றிடினுமாரேனு
மண்ணாலேசொக்கநாதா. உ௮

என்னவினைநாயேற்கிருக்குதோவிக்காயத்
தென்னவினைநின்றுளியற்றுமோ—வென்னவினை
வந்திடுமோவென்றறியேன்வந்தாலுநின்னருளே
தந்திடுவாய்சொக்கநாதா உ௯

ஆறாறுதத்துவத்துமாணவத்துங்கன்மத்து
மாறுதெந்நாளுமயங்காமற்—பேறாக
நித்தனேநின்மலனேநின்பதத்திலாண்மதுரை
யத்தனேசொக்கநாதா. ௩௦

அடியேனைவேண்டவப்படியேயென்றுங்
கொடியேன்கருத்திசையக்கூறி—யடியேனை
மீண்டுபிறவாதுன்விரைமலர்த்தாள்சூட்டியெனை
யாண்டவனேசொக்கநாதா, ௩௧

ஆசானுளத்திருந்துமான்மாவுளத்திருந்து
மாசார்மலத்தையறுத்தருளி—நேசா
வொளித்திருந்தயின்பவெள்ளமொன்றவுயிர்க்கென்று
மளிப்பவனீசொக்கநாதா. ௩௨

ஆற்றையணிவேணியமலனேமெய்யதனி
னீற்றைப்புனையுநிமலனே—கூற்றைக்
குமைத்தவனேயென்சிரத்துன்கோகனதத்தாளை
யமைத்தவனேசொக்கநாதா. ௩௩

காலவசமோகடியேன்வினைவசமோ
ஞாலவசமோவருளைநாடியே—கோலமறச்
சிற்பரானந்தவெள்ளஞ்சேர்ந்தறிந்துஞ்சேர்கிலேன்
றற்பராசொக்கநாதா. ௩௪

நீணாட்பிறந்திறந்துநின்றதுயர்நீயறிவை
வீணாட்கழித்துவிடாமலே—பூணவரு
ணண்ணரியபேரின்பநாடியதுவாக
வண்ணலேசொக்கநாதா. ௫௫

ஆறாறுதத்துவத்துமாணவத்துஞ்சாராமன்
மாறாதபேரின்பவாரிதியே—பேறாகச்
சார்ந்திருக்கவல்லசதுராருளத்ததுவா
யார்ந்திருக்குஞ்சொக்கநாதா. ௫௬

காடோவனமோகனகிரியோகாசினியோ
காடோசகலகலைஞானமோ—வாடி
யொடுங்குவதோமெய்வீடுயிர்க்களித்தல்போத
மடங்குவதோசொக்கநாதா. ௫௭

துன்றுபரமானந்தச்சோதியிலிரண்டற்று
நின்றுவிடவென்னைநிறுத்துவா—யன்று
கமலனேகாண்பரியகண்ணுதலேகூட
லமலனேசொக்கநாதா. ௫௮

எக்காலமிக்காயமிற்றிடுமோவென்வினைக
ளெக்காலமும்மலங்களிற்றிடுமோ—வெக்கால
மானந்தசாகரத்திலாடிடுமோவென்னுளந்தா
னானந்தாசொக்கநாதா. ௫௯

எக்காலமெய்க்கேயிரையிடுதலிற்றிடுமோ
வெக்காலமிக்கரணமிற்றிடுமோ—வெக்காலம்
பேசாநுபூதிபிறந்திடுமோவென்னுளத்தி
லாசானேசொக்கநாதா. ௬௦

வாக்கினுரைபொய்யேமனநினைப்பதுங்கவடே
யாக்கைதினஞ்செய்வதகிர்த்தியமே—நோக்கிற்
றிரிவிதமுமிப்படிநீசெய்வித்தான்முத்தி
தருவிதமென்சொக்கநாதா. ௬௧

இக்காலத்தின்னவினையென்றமைப்பையப்படியே
யக்காலத்தவ்வூழருக்கிடுவை—யிக்காலந்
தப்புவாருண்டோதமியேற்குந்தப்பரிதென்
அப்பனேசொக்கநாதா. சஉ

மோகாபிமானமின்னுமுற்றுமறக்கவில்லை
தேகாபிமானஞ்சிதையவில்லை—யோகோ
வுனையடைந்தும்பாசமொழியவில்லைகூட
றனையடைந்தசொக்கநாதா. சந

பத்திமெத்தச்சித்தம்பதியவில்லையட்டமா
சித்தியவாவெறுக்கச்செய்யவில்லை—முத்தியுளங்
கூடவில்லையெந்நாளுங்கூடலிலேமாறிநட
மாடவல்லசொக்கநாதா. சச

என்னைவளைபாசவரணின்னமுநீகொள்ளவில்லை
யன்னையனேநீபதணமாறுலு—முன்னைமல
மோடவேயெவ்வுயிர்க்குமோட்டுமருட்சேனை
தாடியிடுஞ்சொக்கநாதா. சரு

சேகரத்தினுச்சியின்மேற்செந்தேனுக்கிச்சித்தே
போகவசமாகுமோபோகாதார்—தாக
மிகவறவேயுள்ளத்தில்வேண்டினுன்றாட்செந்தே
னகமுறுமோசொக்கநாதா. சசு

அடியார்பரிபாகமெல்லாமறிந்து
படிகீழ்ப்பதமேற்பதத்திற்—கொடுபோ
யிருத்திடுவைசேரவினுமேலாம்போக
மருத்திடுவைசொக்கநாதா. சஎ

வாழைம்மலத்தால்வருந்திமிகவுடைந்த
வேழையனுக்கையோவிரங்குவாய்-கோழையனாய்ப்
போரனேன்புலப்பகையாற்பொன்னடியைநின்னருளாற்
றுமினதாசொக்கநாதா. சஅ

எச்சாலந்தாசங்களிற்றிடுமோகாயங்க
ளெக்காலமாசைசினமிற்றிடுமோ—வெக்கால
நல்லார்குணம்வருமோநாதாவெல்லாமுமா
யல்லானேசொக்கநாதா. ௪௯

உள்ளமுனையல்லாலொன்றுள்ளவில்லைநின்றொளிக்குங்
கள்ளமறநீயுங்கருதவில்லை—யெள்ளளவு
நற்றவமோசெய்யவில்லைநாயேனுனையடைதற்
கற்றதென்னசொக்கநாதா. ௫௰

ஆர்க்குக்கிடைக்குமடியேன்முன்வந்துமறைக்
கேற்கக்கருத்துக்கிசையவே—பார்க்குந்
தெரிவரியாவேதசிகைசித்தாவுரைத்தா
யரியறியாச்சொக்கநாதா. ௫௧

எவ்விதையைமாக்கள்பயிரிட்டார்களிட்டவரே
யவ்விதைபின்போகமருந்துதல்போற்—செவ்விதாய்த்
துன்மார்க்கஞ்செய்வார்க்குத்தோன்றும்பிறப்புமுத்தி
சன்மார்க்கஞ்சொக்கநாதா. ௫௨

எல்லார்கருக்குமிதமாயுரைக்கறியே
னல்லாங்குதீங்கெனநாடறியே—னெல்லாரு
நீரேரும்வேணிவிமலாமதுரையில்வா
ழாரூராசொக்கநாதா. ௫௩

உரையிறந்தபேரின்பவுல்லாசவீட்டிற்
றிரையிறந்துதூங்கித்திளையேன்—வரைபெருகப்
பேசுவேன்யானென்றேபெற்றவர்தம்முள்ளத்துக்
காசுவேசொக்கநாதா ௫௪

ஆறாறுதத்துவமுமத்திலுறைமூர்த்திகளும்
பேறும்வினையினையும்பெந்தித்து—மாறும்
லாட்டுவதுநீயானலாகாமியமென்பாற்
சாட்டுவதென்சொக்கநாதா. ௫௫

முன்னளவின்மாக்களுக்குமுத்திகொடுத்தவரு
ளென்னளவிற்சும்மாவிருப்பதேன்—முன்னளவிற்
சீர்பெற்றாரேனுன்றிருவருளொத்தாசையன்றி
யார்பெற்றார்சொக்கநாதா. ருசு

நோயால்வருந்தியுனைநூறுகுரற்கூப்பிட்டா
னீயாரெனாதிருக்கைநீதியோ—தாயா
யலைகொடுத்தகேழலருங்குழவிக்கன்று
முலைகொடுத்தாய்நீயலவோமுன். ருஎ

தாயர்மகவருத்தஞ்சற்றுந்தரியார்க
ளாயவினைக்கீடாயமைத்தாலுங்—காயம்
பரிக்குந்துயரமெல்லாம்பார்க்கவுனக்கென்றுந்
தரிக்குமோசொக்கநாதா. ருஅ

தீவினையாலின்னமின்னந்தேகமுறச்செய்வையோ
தீவினையற்றன்மயமாயச்செய்வினையோ—தாவிதமா
யின்படிமேல்விளைவதென்றறியேனீதறிந்த
வன்னையேசொக்கநாதா. ருகூ

என்னதியானென்பதுவுமியான்பிறர்செய்தாரெனலு
மன்னுமதிபாதகமேல்வாஞ்சைகளு—மின்னமின்னஞ்
சொல்லுகின்றவிச்செயனீதூண்டுதலற்றென்செயலா
லல்லவேசொக்கநாதா. சுO

ஆலந்தரித்தலிங்கமாலவாய்ச்சொக்கலிங்க
மூலமாயெங்குமுளைத்தலிங்கம்—பாலொளியா
மத்தனேகூடன்மதுராபுரியுமையா
ளத்தனேயாலவாயா. சுக

எல்லாமுனதுபதமெல்லாமுனதுசெய
லெல்லாமுனதருளேயென்றிருந்தாற்—பொல்லாத
மாதுயரநீங்குமருவுமுனதடிக்கே
யாதரவாய்ச்சொக்கநாதா. சுஉ

ஸ்ரீதாமவாநந்தச்செய்மதுரைவாழ்வேந்தா
நாதாசிவாநந்தநல்குவாய்—வேதச்
சிரசராஜித்தாதிரபராசுத்தா
வரகராசொக்கநாதா. ௬௩

மற்றொருவர்தஞ்சமின்றிவந்தடைந்தாக்காலெனைநீ
சற்றுமிரங்காதிருக்கைதன்மையோ—கொற்றவா
பாவலாகூடற்பரமாபரதேசி
காவலநீதானெனக்கால். ௬௪

தன்னந்தனியேதமியேன்முறையிட்டா
லின்னந்திருச்செவியிலேறாதோ—மன்னவனே
தென்மதுரைமேவித்திருந்தியசெங்கோல்செலுத்துந்
தன்மதுரைநீயலவோதான். ௬௫

என்போன்மலகடினரெல்விடத்துங்கண்டதுண்டோ
வின்பமதுரைக்கிறைவனே—யன்பேது
மில்லாதெனையாண்டவெண்ணத்தாற்றேவரீ
ரெல்லாமும்வல்லசித்தரே. ௬௬

நீயேயொளித்திருப்பைநீயென்றுங்காணும
னீயேயொளித்தபடிநின்னருளா—னீயேதான்
காட்டவனனியமாக்கண்டேனுனதுவிளை
யாட்டதென்னசொக்கநாதா ௬௭

பேரன்பனல்லன்பிழைசெய்யான்றானல்ல
னோரன்புமில்லாவுலுத்தனேன்—பேரன்பு
காட்டியெனைக்காட்டியுனைக்காட்டியின்பத்தொட்டிலிலே
யாட்டிவளர்சொக்கநாதா. ௬௮

இட்டாசனத்திலிரவுபகலற்றிடத்தின்
முட்டாதிருக்கவருண்முற்றுந்தா—வட்டாங்க
யோகந்தானீங்கியொழியாச்சிவானந்த
வாகந்தாசொக்கநாதா. ௬௯

மோகங்கரையமுழுதுமலங்கரைய
வாகங்கரையவறிவானந்த—மோகமாய்ப்
பூரணமாயெங்கெங்கும்பொங்கியெழவிழித்த
வாரணனேசொக்கநாதா. ௭௦

ஊனதுவானவுடலோடுமணுகர்மலரு
ளானசிவபோகமதுவாயருள்வாய்—ஞானக்
கரும்பொருளேவாழ்மதுரைக்கண்ணுதலேயார்க்கு
மரும்பொருளேசொக்கநாதா. ௭௧

பூண்டமலமாண்டுவிடப்போந்தசிவானந்தவெள்ளத்
தாண்டுமெனைமீண்டுவிடலாகுமோ—நீண்டமால்
வீரென்பார்தாராவிமலாவெனைக்கண்ட
ராரென்பார்சொக்கநாதா. ௭௨

முன்னைமலமகற்றிமூதறிவானந்தமயந்
தன்னையறிந்ததபோதனரு—ளென்னையுநீ
யாண்டுபரிச்சொக்கநாதாந்தமருள்கூடலிலே
தாண்டுபரிச்சொக்கநாதா. ௭௩

கருணைநிதியேகடவுளேயன்பர்
பொருளானபேரின்பப்பொற்பே—யொருநாளு
நீங்காதெனதறிவினின்றசுகானந்தமே
யாங்காணீசொக்கநாதா. ௭௪

நீரிலேமூழ்கிலுமெனித்தமருச்சிக்கிலுமென்
பாரிலேசுற்றிப்பணியிலுமென்—வேரிலே
யுற்றிருந்தாலன்றோவுயிர்க்குறுதியொன்றிரண்டு
மற்றவனேசொக்கநாதா. ௭௫

என்செயலேயென்றென்றியற்றுவதுமென்செயலு
முன்செயலேயென்றென்றுணர்த்துவது—நின்செயல
தாகுமேயென்னவடியேற்குணர்த்தலுநீ
யாகுமேசொக்கநாதா. ௭௬

ஈண்டுமெனையாண்டிலையேலென்வினைக்கீடாயானே
வேண்டும்பவங்களினீவிட்டாலும்—பூண்டருளா
லங்கங்கேயென்னோடனளியமாயென்னுருவிற்
றங்கியருள்சொக்கநாதா. எஎ.

உன்னைவிடநீங்குமுயிரொன்றில்லையாதலினா
லென்னைவிடநீங்குவதுமில்லைநீ—பொன்னைவிடப்
பூந்தேனலருடையாய்பொங்குமதுராபுரியில்
வேந்தேபிரியாவிடை. எஅ

அன்பர்க்கருள்புரிவதல்லாமற்றேவரீர்
வன்பர்க்கருள்புரியமாட்டீரே—னும்பர்தொழு
நல்லார்புகழ்மதுரைநாதரேதேவரீர்க்
கெல்லாமும்வல்லசித்தரேன். எகூ

நரகமினிநாடநாடோமுமையாள்
விரகர்தமிழ்மதுரைமேவித்—துரகநரி
யாக்கினார்வைகையினீராடினோமவ்வெல்லைப்
போக்கலாம்யாந்திரிந்திப்போது. அ0

நானோதனுகரணநானோமலமாயை
நானோவினைகணடத்துவது—நானோதான்
பூண்டவினையறுப்போன்புண்ணியபாவம்புரிவோ
னுண்டவனேசொக்கநாதா. அக

அரும்பாசநன்மைதின்மையாகமதன்மேல்
விரும்பாதநிட்டையிலேமேவித்—திரும்பாத
மானந்தாவென்னறிவின்மாறாதுபொங்கியெழு
மானந்தாசொக்கநாதா. அஉ

துஞ்சப்பிணமென்னச்சுற்றத்தாரிட்டத்தா
ரஞ்சச்சலிக்கவருவருக்கக்—கொஞ்சமுற
வந்ததனுவிருந்துவாழ்ந்துநானென்னவைத்த
தந்திரமென்சொக்கநாதா. அங

தனுவாதியாக்கியுயிர்தன்னிலிசைத்தாட்டி
மெனுமாகமங்கருணையென்றுந்—தினமுநீ
யாச்சரியம்யானெனதென்றூட்டன்மறந்தொன்றுரைத்த
லாச்சரியஞ்சொக்கநாதா. அச

தேகாதியெல்லாஞ்செடம்பிணம்பொயென்றிருக்க
மோகாதியெல்லாமுடிந்திருக்க—வேகமா
யெப்போதுமின்பவெள்ளத்தேயிருக்கவாழ்வையெ
ன்னு, எப்போதேசொக்கநாதா அரு

நின்பாடலென்றுநினைப்பாடலன்றியே
பென்பாடலெங்கேயிறைவனே—நின்பாட
லாமேதனுவாதியாகமநால்வாக்காதி
யாமேநீசொக்கநாதா. அசு

நீயியற்றவோர்பொருளைநிச்சயித்தநாயேனும்
போயியற்றல்செய்யப்புரிகுவே—னீயியற்ற
லாக்காதணுவுமசையுமோவவ்விகற்பந்
தாக்காதசொக்கநாதா. அஎ

அன்றுமுதலின்றளவுமேலுமடியேனுக்
கென்றுநீநன்மைசெய்வதன்றிநா—னென்றேனுஞ்
செய்யுமாறெங்ஙன்சிவனேயினிநாயே
னுய்யுமாறெங்ஙனுரை. அஅ

அறிவுபரமானந்தமாகவில்லையாகம்
பொறிகரணம்யானெனதும்போக-நெறிதவஞ்சேர்
பேரன்போவில்லைபினைநானுனக்கடிமைக்
காரென்பேன்சொக்கநாதா. அகூ

நின்னளவிலானந்தநின்கருணைசற்றேனு
மென்னளவிற்றோற்றாதிருந்தக்கா—னின்னளவிற்
பூரணம்பொய்யானந்தம்பொய்கருணைபொய்யுரைத்த
வாரணம்பொய்சொக்கநாதா. கூ௦

தேவைமதுரைநகர்ச்சிற்பரனேயெவ்வுயிர்க்குங்
கோவேயெனையாளுங்கோவேயென்—றோவே
யுனைத்துதிக்கச்சிந்தையுனைநினைக்கவென்றுங்
கனத்திலுனைவணங்கக்காண். ௯௧

உன்னைச்சிங்காரித்துனதழகுபாராம
லென்னைச்சிங்காரித்திடர்ப்பட்டேன்—பொன்னை
யரிவையரையேநினையுமன்பிலேற்குன்று
டருவையோசொக்கநாதா. ௯௨

சொக்கநாதாவுனையேசொல்லுமடியேனுடைய
பக்கமாய்நின்றுவினைபாற்றியே—யெக்காலு
மீண்டுவாராதகதிமேவுவிப்பாய்தென்மதுரைத்
தாண்டவனேசொக்கநாதா. ௯௩

ஆறுதலையில்லையடியேனுக்கன்பாகத்
தேறுதலைசொல்வார்சிலரில்லை—வேறெனக்குத்
திக்காருமில்லைசிவனேபழிக்கஞ்சி
சொக்கேநின்றாளேதுணை. ௯௪

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஞானசம்பந்ததேசிகர்திருவடிவாழ்க.

உ

சிவமயம்.

கைலாயக்கம்பிளிச் சட்டைமுனிநாயனார்

அருளிச்செய்த

முன்ஞானம்-நூறு.

அகண்டபரிபூரணமாமுமையாள்பாதம்
அப்புரத்தேநின்றதொருவையர்பாதம்
புகன்றுநின்றகணேசனொடுநாதாக்கள்பாதம்
புகழ்பெரியவாக்குடையவாணிபாதம்
நிகன்றெனவேயெனையாண்டகுருவின்பாதம்
நிறைந்திறையாய்ச்சொரூபத்தில்நின்றோர்பாதம்
முகன்றுயெனையின்றெடுத்தசின்மயத்தின்பாதம்
மூவுலகுமெச்சநற்குக்காப்புதானே.

தூங்குநின்றசரிதையிலேநின்றுசடம்வீழ்கில்
தப்பாதுகிரியையுள்ளேசாரப்பண்ணும்
வாங்கிநின்றகிரியைவிட்டுவிழுந்தானால்
மகத்தானவுடலெடுத்துயோகம்பண்ணும்
ஓங்கிநின்றகிரியைவிட்டுவிழுந்தானால்
உத்தமனேயுயர்ந்துநின்றஞானந்தற்றுப
பாங்கிநின்றஅச்சென்மமவனமுத்தி
பரிவாகவாய்ந்தவர்களறிந்துகொள்ளே.

அறிந்திந்தநான்குக்கும்விக்கினங்களுண்டு
அப்பனேஅகாமியஞ்சத்திசித்திமேலே
மறிந்துநின்றபிராரத்தந்தோயத்தோடு
மகத்தானநாலுக்கும்விக்கினங்களாச்சு
பிரிந்துநின்றநாலினுஞ்செய்வதென்ன
பேரானவாணவமையொடுகிலேசந்தக்கது
செறிந்துநின்றபெண்பொன்னுமண்ணிறைந்தே
சேர்த்துமதநசிவிபோலேதியங்குவாரே.

தியங்கினல்கெற்சித்துத்துறத்திச்சண்ணுஞ்
சிறியாமிலேச்சரையேஜகத்தினுள்ளே
மயங்கினார்நாலுபாதத்தினுள்ளு
மனஞ்செவ்வையாவதெப்போநாமறிவதெப்போ
தயங்கினாருலகத்திற்கோடிபேர்கள்
சாவதும்பிறப்பதுவுங்காவடிபோலாச்சு
துயங்கினார்துயரத்தால்ஞானம்போச்சு
சுடுகாட்டிலறிவதுபோல்சுத்தப்பாழே. ௪

பாழானமாய்கைசென்றுவொழிவதெப்போ
பரந்தமனஞ்செவ்வையாய்வருவதெப்போ
வாளானவிழியுடையபெண்ணைச்சேரு
மயக்கம்அற்றுநிற்பதெப்போமனமேமையோ
காழானவுலகமதினாசையெல்லாங்
கருவறுத்துநிற்பதெப்போகருதிநின்ற
கோளானகருவிவிட்டுமேலேநோக்கிக்
கூடுவதுமேயதென்றால்மூலம்பாரே. ௫

மூலமதுலாறுதலங்கீழேதள்ளி
முதிர்ந்துநின்றமேலாறுமெடுத்துநோக்கிக்
கோலமுடனுன்மனையைத்தாண்டியேறிக்
கொடியதொருஞானசத்திக்குள்ளமைந்தா
பாலமென்றகேசரியாமவுனத்தூண்டிப்
பராபரமாமந்திரத்தில்ஞானமுற்றிக்
காலமொடுபிறப்பிறப்புங்கடந்துபோகுங்
கைவிட்டசூத்திரம்போல்சடமுமோங்கே. ௬

ஓங்காரமுதங்கொண்டுவைங்கெழுந்தோடாறு
முற்றுநின்றபஞ்சகர்த்தாளிருந்திடந்தான்பாரு
ஆங்காரமாணுவமும்நானெனவும்போனா
லப்பவல்லோஅகாரமுதலுகாரங்காணும்

பாங்கானமகாரமொடுவிந்துநாதம்
 பரவியதின்மேல்நிற்கும்பராபரந்தானைமைந்தா
வாங்கானமவுனத்தைப்பற்றியேறு
 மருவிநின்றலகிரியைத்தாறெத்துக்காணே. எ

ஒத்துநின்றஓங்காரமண்ணையுண்ணு
 முருவியந்தமண்ணசென்றசலத்தையுண்ணும்
பத்திநின்றசலமதுசான்றீரையுண்ணும்
 பாங்கானதீச்சென்றகாலையுண்ணும்
வெத்திநின்றகால்சென்றுவிண்ணையுண்ணும்
 விழுந்ததப்பாசடமென்றவேதாந்தம்பேச்சு
முத்திகண்டுக்கூடுவதுவெந்தக்காலம்
 மூடரேமதுவையுண்டுமேலேபாரே. அ

பாரப்பாஅகாரமுதலுகாரத்தைக்கொள்ளும்
 பாங்கானஉகாரமதுமகாரத்தைக்கொள்ளும்
நேரப்பாமகாரமதுவிந்துவைத்தான்கொள்ளும்
 நேரானவிந்துவதுநாதத்தைக்கொள்ளும்
சேரப்பாநாதமுற்றுசத்தியத்தைத்தான்கொள்ளும்
 சேர்ந்துநின்றசத்தியல்லோசிவத்தைக்கொள்ளும்
ஆரப்பாசிவந்தன்னைப்பரந்தான்கொள்ளும்
 அப்பரத்தைக்கொண்டவிடமறிந்துவுண்ணே. ௯

உன்னிநின்றுமூலமுதலாறும்பார்த்து
 வுருகிநின்றசுழிமுனையையறிந்துபின்பு
மன்னிநின்றமதிமேலேசாம்பவியைக்கண்டு
 மருவினின்றுமனமுறைந்துத்தேர்ந்தபினபு
பன்னிநின்றபிவ்வளவும்யோகமார்க்கம்
 பகலிரவுமற்றவிடம்ஞானமார்க்கம்
கன்னிநின்றவிடங்கண்டாலவனேஞானி
 காட்டுவான்கேசரியைகாட்டுவானே. ௰

காட்டுவாள்கிரியுன்னைமேலேயேற்றிக்
 கைவிட்டாள்கிரியைத்தான்கீழேதள்வாள்
மூட்டுவாள்குளிகையிட்டால்கூஷணத்துக்குள்ளே
 மூதண்டபுவிக்கடந்துவெளியுங்காணும

ஆட்டுவாளண்டரண்டமாலைபூண்டா
ளாகிவஸ்துஅனைதிவஸ்துரண்டுமொன்று
ஊட்டுவாள்நிர்க்குணத்தினமூர்தவள்ளி
யுயர்ந்துநின்றஞானசத்தியுறவுதானே. சஎ

உறவென்னத்தாறைவிடவுறவுமுண்டோ
வுலுத்தமையோவாமத்தைத்தூஷிப்பார்கள்
குறைவென்னதிரோதயிசமையந்தோறுங்
கூடியல்லோமாயவலைகூட்டியாட்டி
மறவென்னஞானமென்னமயக்கித்தள்ளி
மகத்தானசமுசார்வலையிற்போட்டாள்
நிறவென்னவாமத்தால்ஞானமாச்சு
நின்றவனேசிவயோகிவாசிபாரே. சஅ

வாசியென்றும்மவுனமென்றுமிரண்டும்வித்தை
மகத்தானசாம்பவியுங்கேசரியும்ரண்டு
தேசியென்றால்யோகத்துக்காதிவித்தை
திறமான மவுனமென்றால்ஞானவித்தை
மாசியென்றமனமுடைத்தாலிரண்டுமாகா
மருவிநின்றுஅறிவறிந்தாலிரண்டுமாகும்
தூசியென்றவெளியல்லோஅண்டவீதி
சொக்காமல்கிரிகொண்டுஆக்கியேறே. சகூ

ஆக்கின்றபரிசத்தார்கொசுவிறந்ததையா
ஆச்சரியம்ரூபத்தால்வண்டிறந்ததையா
பாககிநின்றமணியொலியால்மானிறந்ததையா
பாழானவுரிசையினால்மீனிறந்ததையா
தாக்கிநின்றகெந்தியினாலேறுமபுசென்று
சாதகமாய்மாண்டுதிந்தவைந்தும்பாரு
பாக்கிநின்றவிந்திரியவிடையத்துள்ளே
பாழானமனஞ்சிக்கிப்படுகுவாரோ. ருய

வாரானவுலகத்தில்மனுஷர்கோடி
மருவிநின்றவுண்டுதனைசையோக்கிச்சுத்
தாரானஜெகதுரங்கபரங்கமேறிச்
சகலரத்தினபூஷணங்கள்தரித்துவிம்மி
மாரானவாமுடைந்தோரிறந்தாரையா
மாண்டவர்கள்வெகுகோடிமாயவாட்கைக்
கூரானசிவயோகஞானம்வந்தால்
கூடிழிந்துப்போகாதுகூடுகூடே. ௧௫

கூடுவதுஅம்பரமோகேசரமோவென்னில்
கூர்மையுள்ளவானமோவதீதமோவென்னில்
ஆடுவதுஆச்சரியநின்மலமோவென்னி
லருமையுள்ளநிர்க்குணமோநிரஞ்சனமோவென்னில்
பாடுவதுபதங்கடந்தப்பூரணமோவென்னில்
பகலிடமுமற்றிடமோபராபரமோவென்னி
லூடுவதுவெங்கேயப்பாபின்னையெங்குமல்ல
உம்மென்றுலூமவெள்ளமோகங்காணே, ௧௬

மோகமென்றவுறலுக்குள்மனந்தான்சிக்கி
முசியாமலிடிப்பதற்குவைம்பொரியங்கோல்தான்
பாகமென்றகோபம்வந்துவுருவாய்நின்று
பதையாமற்சண்ணிச்சுவுலகமெல்லாந்
தாகமென்றஞானம்வந்துயென்னசெய்யுஞ்
சண்டாளவிந்திரியச்சார்பினாலே
வேதமென்றமனமுடைத்தோர் லகிரியைத்தான்கொண்டு
விண்ணுக்குளேநிற்கவெளியாய்போமே. ௧௭

வெளியேதுவெளியிற்குள்வெளியெங்கேது
வேதாந்தவொளிகடந்தவொளியங்கேது
அளியேதுஅளிகடந்தவகண்டமேது
அப்புறத்தேதோற்றுகிறசோதியேது

வெளியேதுனவே துநிர்க்குணந்தானே து
நேரானபூரணத்தின்நாதமே து
வழியேதுசுழியடக்குஞ்சூட்சமேது
தோற்றுமப்பாவானத்தையோற்றுப்பாரே. ௧௮

ஒத்துநின்றசரிதையொடுகிரிகைரண்டு
முரவாதிசெய்தவப்பாநன்றாய்க்கேளு
பத்திநின்றயோகமுதல்ஞானம்ரெண்டுப்
பாங்காகசித்தருக்குஅடுத்தவாறு
அத்திநின்றஅகாமியசஞ்சிதமாம்பிராரத்துவ
மாருக்குமடுக்குமென்றால்யோகவரைசெய்தும்
முத்திநின்றஞானத்திற்புகுந்தோர்க்கையா
மூன்றுமிலைப்பிரபஞ்சமுழுதும்போச்சே. ௧௯

போச்சென்பார்முக்காலம்பிறகேநின்று
புரிமுருக்குப்போலேறிப்புணர்ந்துகொல்லும்
ஆச்சப்பாகாலமென்னவென்றுசொல்லி
யவரவர்கள்சபஞ்செய்வாரறிந்தமட்டும்
நீச்சப்பாஅகாலவெள்ளமார்கடப்பாரென்றால்
நேரானஞானியல்லோகடந்துநின்றார்
மூச்சப்பாஅற்றிடத்தைப்பாருபாரு
மூட்டிவிக்குமுகிடந்தான்ஞானத்தீயே. ௨௰

தீயுக்குள்விழுந்துநின்றதிரணபஸ்பம்போலச்
செகச்சாலமுதற்கொண்டுகாலங்கள்போகும்
தீயுக்குள்விழுந்தெழுந்தநெய்யைப்போல
சிறப்பானஞானமதுதிரண்டுயேறும்
தீயுக்குள்காஷ்டமொடுகோலுங்கூடி
திரண்டாப்போற்கருவியெல்லாம்க்ஷணத்தில்மாளும்
தீயுக்குள்பராபரந்தானிருந்ததுவும்பாரு
செகமெல்லாம்வித்தையென்றுதெளிந்துபோமே.

தெளிந்தவிடங்கண்டவரார்சிவசித்தர்யோகி
செகமெல்லாம்நானென்பார்திருட்டுஞானம்
ஒளிந்தவிடமுன்மனைத்தால்கேசரிக்குள்நிற்பாள்
உற்றுப்புரர்மகாரம்வைத்தூதூது
அளிந்தவிடம்நிற்கருணாந்தனைதிலேகேளு
ஆச்சரியமகாரமொன்றுவுண்டுவுண்டு
களிந்தவிடம்நிராகாரமொன்றுமில்லைக்
காட்டுந்தாரந்வுகொண்டுவுற்றுக்காணே. ௨௨

உற்றுநின்றவுலகத்தோர்ஞானம்பார்த்து
வூணுக்குக்கிடையாமல்பிரட்டுப்பேசி
பற்றுநின்றமோகத்தாற்பெண்ணைக்கூடி
பரந்துநின்றதிரோதாயிவலையிற்சிக்கிக்
கொத்துநின்றவிடங்காண்பார்கண்ணைமூடிக்
கும்மென்றுயிருளாகுமறியும்பொய்யா
மற்றுகின்றலகிரியினால்கொண்டுயேற
மாட்டார்களறுசமையமாடுதானே. ௨௩

சமையமெல்லாஞ்சத்தியுண்டுசிவமுமுண்டு
சண்டாளர்பிரித்தல்லோதள்ளினார்கள்
சமையமெல்லாம்வேதாந்தஞ்சித்தாந்தமுண்டு
சாதகத்தைப்பாராமற்றயங்கினார்கள்
சமையமெல்லாம்நாதமுண்டுவிந்துமுண்டு
காக்காமற்கெட்டார்களுலகத்தோர்கள்
சமையமெல்லாம்பரமாம்ஞானமுண்டு
தாயைவிட்டபாவத்தால்தவரிப்போச்சே. ௨௪

போச்சப்பாஆறுறும்பானத்தாலே
புத்தியுள்ளோர்பாணத்தாற்கண்டாரையா
ஆச்சப்பாவாமமென்னநிசிதமென்பார்
ஆதன்குணமோகிராதாயியனுஷ்டானந்தான்

ஓச்சப்பாநாதாக்கள்ரிஷிகள்சித்தர்
ஓசங்கவெரைக்கண்டவர்கள்பானத்தாலன்றோ
காச்சமறம்பட்டதென்னவேறற்றுப்போல்
கசடென்றவறுசமயங்கேட்டபாங்கே. ௨௫

பாங்கானகுண்டலிக்குள்மூலமொன்று
பாரப்பாகண்டத்தில்மூலமொன்று
போங்கானபுருவமையமூலமொன்றுப்
புகழானவிந்துவில்மூலமொன்று
வாங்கானசந்திலேமூலமொன்று
மருவிநின்றபராபரத்தில்மூலமொன்று
தேங்காமலிதையாறுங்கண்டஞானிச்
சேர்ந்துநின்றமும்மூலயோகியாமே. ௨௬

ஆமப்பாநகாரமுதல்யகாரவரைநிற்கும்
அவ்வளவும்யோகத்தின்மூலமாச்சு
தாமப்பாஅகாரமுதலுகாரந்தொட்டு
சாந்தகமாய்மகாரவரைஞானமூலம்
ஓமப்பாநிசைநாதமவுனத்திற்காணும்
உற்றேறவுற்றேறஅகண்டவீதி
காமப்பாலுண்டாக்கால்யோகசித்திக்
கடுங்கானற்பாலுண்டஞானமாச்சே. ௨௭

ஆச்சிந்தவரிசைவிட்டுவுலகஆசான்
ஆதியொன்றுஅந்தமொன்றுரவிமதிதானென்பான்
மூச்சற்றவிடங்காட்டத்தெரியாதேநின்று
முன்னேதுபின்னேதுசாங்கமென்பான்
வாச்சிந்தமயக்கத்தாலுலகத்தோர்கேட்டார்
மதனைவிட்டுயேறியல்லோசமையத்தோர்கேட்டார்
ஓச்சிந்தவிதமறிந்தோன்யோகஞானி
உம்மென்றுஆதுமென்றநாதமாமே. ௨௮

நாதமப்பாயோகத்திலேந்துநாதம்
நலமானமவுனத்திலேந்துநாதம்
வேதமப்பாகடந்திடத்தேசுத்தநாதம்
வெட்டவெளிக்குள்ளேயொருநாதமுண்டு
போதமப்பாகடந்திடத்தேயந்தநாதம்
புகழாகச்சேவித்துநிற்குமென்றுளுந்தான்
காதமப்பாதூரமல்ல அந்தோ அந்தோ
கண்ணிமைக்குள்விண்ணுக்குள்கலந்துகாணே. ௨௯

விண்ணேதுவெளியேதுவொளியங்கேது
விரைந்திந்தமூன்றுமல்லோகேசரிதானுச்சு
கண்ணேதுகாதேதுமூக்கங்கேது
கண்டிப்போய்கண்டதெல்லாமழிந்துபோச்சி
ஒண்ணேதுயிரண்டேதுசமரசந்தானேது
வுற்றுப்பார்வெட்டவெளியொன்றுமில்லை
எண்ணேதுநினைவேதுஅறிவங்கேது
யேகமாய்க்கலந்தமுத்தியிடத்தைக்காணே. ௩௰

உத்திகொண்டுஞானநூல்பார்த்துப்பார்த்து
வுலகத்தோர்ஞானமெல்லாம்வந்ததென்று
பத்திகொண்டுஅலைவார்கள்விண்ணப்பாரார்
பாழானமனதையங்கேநிறுத்தமாட்டார்
முத்திகண்டவிடமெங்கேயென்றுகாணார்
மூச்சற்றுநின்றிடத்தைநோக்கிப்பாரார்
சித்திகண்டால்சித்திகொண்டுசெய்யமாட்டார்
சேர்ந்துமதாயிருக்கறியார்திருடர்தானே. ௩௧

தானென்றவாணவத்தைநீக்கமாட்டார்
சண்டாளகோபத்தைத்தள்ளமாட்டார்
ஊனென்றசுகபோகமொழிக்கமாட்டார்
உற்றுநின்றசையோகம்விடுக்கமாட்டார்

பானென்றஞானவெள்ளமுண்ணமாட்டார்
பதறுமல்மவுனத்தேயிருக்கமாட்டார்
வானென்றபொருளென்னவெளிதோமைந்தா
மகத்தானமனமடங்கவெய்யுங்காணே. ௫

காணிந்தவுலகத்தில்மாயக்கூத்துங்
கண்மூக்குச்செவியோடுவிந்திரியக்கூத்தும்
பூணாந்தவாசியினால் வருமைக் கூத்தும்
புகழானஜெனனமொடுமானக்கூத்தும்
ஆணிந்தவண்டமெல்லாம்படைத்தகூத்தும்
ஆங்காரமனம்புத்தியானகூத்தும்
தோணிந்தப்படிபடைத்தபரமேமையயா
சொற்பெரியபூரணமேயென்றுகூவே. ௫௫

கூவையிலேயாத்தாளைக்தொழுதுகூவ
குறையாதகருணையினால்திரும்பிபார்த்து
தாவையிலேமதலையைத்தான்தாய்தான்சென்று
சார்வாகயெடுத்ததுபோலுன்னைமைந்தா
தேவையிலேயெடுத்தணைத்துவுயிரைவைப்பாள்
செகச்சாலமாடுகிறதிருட்டுத்தாய்தான்
பாவையிலேமனஞ்சென்றுபரவாவிட்டால்
பாரதுபோலிருப்பாள்பாருபாரே. ௫௬

பாரப்பாசெகமனைத்துமண்டலமெல்லாம்
பாங்கானகுக்ஷியிலேவைத்திருந்தகன்னி
நேரப்பாயிவளைவிட்டுயோகம்பார்த்தேன்
நேராக அண்டத்தில்ஞானம்பார்த்தேன்
சேரப்பாசுத்தவிழல்மனமோபேயாம்
செகச்சாலகூத்தைவிட்டுத்தெளியமாட்டார்
ஆரப்பாஅவளைவிட்டுஞானங்கண்டோர்
அலைக்கழிக்குமாசையென்றபாம்புதானே. ௫௭

பாம்பையல்லோ ஆபரணம்பூண்டவீசன்
பரிவாகமதியோடுகொன்றைசூடி
பாம்பையல்லோமுன்னூலாய்ப்போட்டகூத்தன்
பாங்கானகரியுரித்தப்பாணிபாணி
பாம்பையல்லோகங்கணமாய்தரித்துக்கொண்டு
பரியுழுன்வத்தோலுடுத்துப்பாதந்தூக்கி
பாம்பையல்லோவுன்மனைக்குமோதிரமாய்ப்போட்டுப்
பாரென்று அகண்டத்திலாடினாரே. ௫௬

ஆடினதோர்கூத்தெல்லாமாத்தாள்மெச்சி
யண்டையிலேயழைத்தானையிருத்திக்கொண்டாள்
நாடினதோரவளருகிலரனுமெய்வார்
நாமறியோமவனவளுமொன்றுவொன்று
ஊடினப்பாரிடமெங்கேயொளிகேட்டதெங்கே
யொன்றாகக்காணுகிறநடனமெங்கே
கூடினதோரகண்டத்தின்சோதியெங்கே
கூசாமல்மவுனத்திற்கூடிக்காணே. ௫௭

மெய்ஞ்ஞானகுரு.

காணப்பாமகாரவரைநாதவோசைக்
கன்னிக்குப்பீடமடமவுனஞானம்
ஊணப்பாவூணப்பாநாதத்தோடு
யொருமுனையாயொருவழியாயொன்றாயோடும்
தோணப்பாதோற்றுவது அங்கொன்றுமில்லை
சுத்தவெளிரவிகோடிசூழவன்னி
ஆணப்பாமாகோடிகண்கொள்ளாது
ஆச்சரியமதிகமென்றமகாரங்காணே. ௫௮

மகாரமல்லோமுந்தியாசான்சூட்டி
வழிகாட்டுமுறமையதுஞானமார்க்கம்
மகாரமல்லோவடங்கியந்தநாதந்தாண்டி
மருவிநின்றவிடமல்லோகேசரிதான்மைந்தா

மகாரமென்னமேலெழுத்துயென்பார்மான்பார்
 மாட்டுவதுமூன்றெழுத்துவென்றுகாணார்
மகாரமென்னமகாரவித்தையதீதவித்தை
 வாய்திறந்துபேசாதேமவுனமாமே. ௫௯

மௌனவித்தையேதென்றால்மூன்றெழுத்தேயென்பார்
 மாட்டுகிறவினங்காணுமார்க்கங்காணார்
மௌனவித்தையாவதென்னவாய்மூடலென்பார்
 மாடுமுதற்குதிரையிலாவதென்ன
மௌனவித்தைகேட்டிருப்பார்கூட்டுறவுகாணார்
 வாய்மூடவழியோடோநாதங்கேளார்
மௌனவித்தையாசாந்தான்தூண்டிக்காட்டில்
 மணிமுதலாய்நிசைநாதங்கேழ்க்குந்தானே ௬௦

கேழக்கையிலேமதியினிடவமிர்தஞ்சிந்துங்
 கெடியானதுவாசமூர்த்தங்கடந்துதோன்றும்
[illegible]ழுக்கையிலே[illegible]
 வாருகிபோலண்ணாக்கிலமிர்தமோடும்
[illegible]ாக்கையிலேரவிகோடிகாந்திகாணும்
 சச்சிதானந்தவொளிதானேதோன்றும்
[illegible]ட்டையிலேமேலமிர்தலகிரிபீறும்
 மூன்றுலகமும்க்ஷிணமாகுமூட்டிப்பாரே. ௬௧

மூட்டையிலேபுலகத்துகிரிகொண்டுமூட்டி
 முநிர்ந்தபின்புவின்னுக்குள்கிரிவந்துசாக்கும்
கூட்டையிலேமகாரத்தையறிந்துகூட்டுங்
 கும்மென்றநாதத்திற்கூடியேறு
மாட்டையிலேயறிவோமெனத்தைமாட்டு
 மறுகாலும்நாதத்தைகூர்ந்துகேளு
ஒட்டையிலேயொருவழியாயோடிற்றானே
 லாத்தமனையச்சின்னமுத்தியையா.

ஏறுகிறதுறை.

ஐயனேகுருவானவகண்டமூர்த்தி
அதீதமென்றஞானமெல்லாமருளிச்செய்தீர்
மெய்யனேயேறுகிறசாதகத்தைச்சொல்லும்
வேதாந்தலட்சியத்தைவிளக்கச்சொல்லும்
துய்யனேநிலைதோறுமெழுத்தைச்சொல்லும்
சொற்பெரியபிராணய சூக்ஷத்சொல்லும்
தையனேதையமென்றநிர்த்தஞ்சொல்லும்
சாதகமாய்லக்ஷியத்தைச்சாற்றிடீரே ௭௩

சாத்துமென்று கேட்டுரைத்தமாணாக்கனேகேள்
சந்தோஷமாச்சுதிப்போசார்புசொல்வேன்
ஏற்றமென்றமூலத்தில்வாசிவைத்து
யெத்தாகப்பிராணயம்பண்ணிதேறு
ஆத்துமென்றகுண்டலிக்குள்நடனங்கண்டு
ஆதித்தன்கொடியைப்போல்காந்திகாணும்
மாற்றுமென்றகண்டத்திலங்கென்றாணு
வாய்திறக்கவொட்டாதுவழிசெய்வாமே ௭௪

வழியோடேநின்றுரைத்துப் பழக்கமாகி
மனோன்மணியாம்புருவமையத்தூடேசென்று
ஒளியோடே மவுனத்தையோட்டியூது
உத்தமனேசாம்பவியைக்கண்டுகொள்வாய்
தெளிவோபோயிவ்வுளவும்யோகமார்க்கம்
நின்றவனேசிவயோகிநினைவாய்க்கேளு
தெளிவோடேவிந்துவென்றகுருபத்தில்நின்று
தாக்கப்பாமவுனத்தைதாரையாமே. ௭௫

ஆமப்பாவிந்துவிலே ரவிமதியோர்கூடி
ஆச்சரியங்கண்கூசிமயக்கமாகி
ஓமப்பாநாதத்திற்செவிடுபட்டு
ஊமையென்ற வெழுதுடையவுருவங்காணும்

தாமப்பாசத்தியிலே வன்னியோடு
சதகோடிரவிமதியுமொவ்வாவொவ்வா
வாமப்பாலுண்டவர்க்கித்தனையுங்காணும்
வாய்பேசாஞானிக்குமாயங்காணே. ௨௬

தானென்றசிவத்துக்குள்மௌனஞ்சென்றால்
சதகோடிநவகோடிவன்னிரவிசோமன்
பானென்றபரத்தின்கீழ் முப்பாழுண்டு
பாரமகனே அகாரமொன்றுஉகாரமொன்று
வாவென்றமகாரமொன்றுமுப்பாழாக
வழங்கிற்றுஅதனொளியைச்சொல்லப்போகா
தேனென்றமொழியுடையனமனுந்தத்தை
தேவியிடபதமென்றகேசரித்தான்காணே. ௨௭

காணிந்தகேசரத்தின்தாயின்காந்தி
கண்கொள்ளாவிண்கொள்ளாகரையுங்கொள்ளா
ஆணிந்தப்பரையென்பார்அம்பரந்தானென்பார்
அவ்ளுக்குள்மவுனமுண்டுஅறிவுகொண்டுபாரு
ஊணிந்தமௌனத்தைநிஷ்களமாய்ப்போவாய்
ஓகோகோஅம்பரத்திலேதோவேதோ
தோணிந்தப்படியிருந்தாலயத்தின்னேர்மை
சொல்லரிது அப்புரத்தேசோதிதானே. ௨௮

சோதியென்றுபராபரத்திலாறுவரையுண்டு
சொல்லையிலேகேட்டிருப்போம்சொல்லிக்காணும்
ஆதியென்றமூலகுருபேரான்மைந்தா
ஆண்கிள்ளைச்சிங்கமென்றகொங்கணர்தான்கேளு
வாதியென்றாலவர்வாதிஞானவாதி
மகத்தானகுளிகையிட்டசித்தன்வாதி
பேயென்றால்மேருப்போலேயும்பண்ணும்
பெருவாதிரசவாதிபேருள்ளோனே. ௨௯

பேருள்ளகொங்கணர் தான் குளிகையிட்டுப்
பேரானபூரணத்திலாறுவரைகண்டார்
ஆருள்ளாருலகத்தில்வரைகுருசொல்ல
ஆச்சரியஞ்சித்தருக்குக்கீர்த்திவைத்தார்
நேருள்ளரிஷிகளொடுமுனிவரையா
நேராகசமாதியிலேயிருந்துகண்டோருண்டு
தாருள்ளசலத்தோடுஞ்சென்றாரில்லை
சமர்த்தானமனதினிடசத்திதானே. ௫௰

சத்தியுள்ளவாசனையாய் குரங்குகேளு
தண்டி யல்லோ இந்திரியக்கொம்புக்குள்ளே
பத்தியுள்ளேயலைத்தடித்துப்பேய்க்கூத்தாக்கி
பாங்கானமனதையல்லோசின்னம்பண்ணி
முத்தியுள்ளவாசனுக்கு யேறொட்டாது
மூமோசசனியனப்பாஞானத்துக்கு
கொத்தியுள்ளவாசனையையடக்கிப்பார்த்தால்
குருடனுக்குஞானவழிகூடுங்காணே. ௫௧

கூடுவதுஎப்படிதான்ஞானமூர்த்திக்
குரங்கைவிட்டுஅகிலுகிறவழியைச்சொல்லும்
நாடுவதுவுலகத்திவாதம்வந்தால்
நன்மனதுஉண்டானால்சாஸ்திரத்திற்சொல்வார்
ஊடுவதுசாதுசங்கம்வேதாந்தம்பார்த்தால்
உத்தமனேவாசனையாங்குரங்குபோகும்
ஆடுவதுதொய்தவாசனையிலேற்றும்
அப்படியேயுலகத்திலனேகம்பேரே. ௫௨

பேரானவுலகத்தில் ஞானமுற்றும்
பேசாமலிருகிருந்த விடத்தில்மைந்தா
வாராணமோதத்திலிங்கமாகும
வாறுதிக்குமேருவுக்கும்நடுவேகோடி

காரானகாமத்தால்சுரபாண்டிலிங்கம்
கைவிட்டசமாதியினால் சுந்தரமாலிங்கந்
தாராணமலைதோறும்பூமிதோறுஞ்
சாற்றரிதுசாற்றரிதுசார்ந்துபாரே. ௫௩

பாரப்பாசுயம்பில்வந்துபிக்ஷையேற்றால்
பலித்துதப்பாஞானசித்திமவுனசித்தி
நேரப்பாவொன்பதுபேரிதியேயாறு
நிகராகப்பெலிகொண்டோர்நீகுழுவர்
காரப்பாவிண்ணையென்றால்காவார்காத்தர்
காத்தாலேஞானசித்திகைகலந்துகூடும்
ஊரப்பாவாதியைப்போல்நீங்கள்கெட்ட
வுலுத்தரென்பார்சித்தர்கள்தானுரைத்திடவே ௫௪

உரைக்கவல்லோராஜயோகம்வைத்தாரீசன்
உண்டுடுத்துத்திரிவதற்கோசொன்னாரையன்
மறைக்கவல்லோவாசனையோலகிரிகொள்ளுமென்றார்
மகத்தானதெக்ஷணாமூர்த்தியாசான்
நிறைக்கவல்லோயோகமுதல்ஞானஞ்சொன்னார்
நிற்கவிடமற்றிருந்தநிர்மலமாஞ்சோதி
இரைக்கவல்லோவூரினதோர்கேணியைப்போ
லெடுக்கெடுக்கவெழும்பிவரும் வாசனைத்தான்காணே.

எழும்பாரல்வாசனையைக்கொன்றோன்ஞானி
யேகாமல்வாசனையையடித்தோன்சித்தன்
எழும்பாமல்கருவிகளையிருக்கச்சாடி
யிருத்தினவன்சிவயோகிவாதயோகி
எழும்பாமலடிப்பதற்குசூட்சஞ்சொல்வே
னென்மக்காள்மவுனத்தேயிருந்தாற்போகும்
எழும்பாமல்வாசனைபோச்சுதானால்
ஏதுமில்லைசத்தவெளியிருளும்போச்சே. ௫௬

போச்சென்றுஇருக்கிறதோர்ஞானத்துக்குப்
புகழானவல்லமைதானென்னமைந்தா
வாச்சென்றஅகண்டத்துள்வரைகளாறு
மருவினுல்சடத்தோடேயவனேசித்தன்
நீச்சென்றவரைபார்த்துவாரேன்மக்காள்
நில்லுங்கோள்குகையினுள்ளேயென்றுசொல்லி
தோச்சென்றபூரணத்திற்சொக்கிநின்ற
சுந்தராநந்தன்வந்துதொழுதிட்டானே. ௫௭

தொழுதுகொண்டுபதம்பிடித்தவகண்டத்துள்ளே
சொக்குகிறேனென்றுசொன்னசுந்தரமேயையா
விழுதுகொண்டஆலைப்போல்நெட்டிட்டேறி
வெளிகடந்து ஆறுகலங்கண்டுவாரேன்
முழுநூ கண்டானென்பிள்ளையென்றுகீர்த்தி
மூட்டிவைப்பேன்சித்தத்தில்கோபம்வேண்டாம்
பழுதுகொண்டுவருகிறேன் திரும்பாவிட்டால்
பராபரத்திலிச்சிடுவேன்பண்பிடீரே ௫௮

பாரப்பாஅகண்டவெளிசுத்தக்கானல்
பார்ப்பதற்கோஅங்கொன்றுமிடமேயில்லை
நேரப்பாரவிகோடிவன்னிகோடி
நேரானமதிகோடிகண்ணேகூசும்
ஆரப்பாவளவிட்டோர்கண்டோர்வீதி
அதுக்குள்ளேசெல்லரிதுமைந்தாபோபோ
காரப்பாகுகையென்றுபட்டங்கட்டி
கடுங்குளிகைசோடிட்டுக்கலந்திட்டானே. ௫௯

கலந்திட்டேனொருவரையில்நாதவோசை
கண்கொள்ளாவெளிக்குள்ளேகலக்கமாச்சு
கலந்திட்டேன்மறுவரையிலிடியோகோடி
கண்கெட்டேன்மதிகெட்டேன்காதுங்கெட்டேன்
கலந்திட்டேன்மூவரையிற்காந்திக்குள்ளே
கடுகவந்தேன்கொங்கணரையழைத்திட்டீரே. ௬0

அழையுமென் றசொற்கேட்டுச்சுந்தராணந்
தக்ஷணத்திற்கொங்கணரையதிசீக்கிரத்தில்
விழைவுடனேவோடிவந்துதெண்டனிட்டு
விரைவுடனேகொங்கணர்தாங்க்ஷணத்தில்
அழையுமென்றுரெங்களையருங்களைத்தான்
ஆச்சயரியஞ்சொல்லுதற்கடியேன்வந்தேன்
அழையுமென்றசீஷனிடமின்னேவந்து
அடியேன்தான்வந்ததென்றுபணிந்திட்டாரே. ௬௧

பணிந்திட்டகொங்கணரைவாரிமோந்து
பராபரமேநீர்க்குணமேபண்புள்ளோனே
அணிந்திட்டஅறுவரையிற்சொக்கிச்சென்ற
ஆதியென்றபராபரமேயையாயையா
மணியிட்டசிலம்பொலியைக்கேட்டமூர்த்தி
மார்க்கத்தையெப்படிதானேறினீரோ
கணியிட்டநிர்மலமாமனத்தினாலே
கைலாயதேகமென்னதங்கமாச்சு ௬௨

ஆச்சப்பாஅப்படியேதான்வரவேணுமென்று
ஆசைகொண்டிருக்கையிலேயழைத்தனுப்பிவித்தீர்
வாச்சப்பாமனுவொன்றவடியேனுக்கு
மைந்தன்மேல்கடாக்ஷித்தால்சொல்லவேணும்
ஓச்சப்பாகொங்கணரேயுபசாரமென்ன
வேங்கினதையுரைக்கிறேன்கேளுகேளு
காச்சப்பாவுலகத்திலெடுத்ததேகங்
கைலாசசட்டையாங்கருவைச்சொல்லே. ௬௩

கருவென்னவொன்றுமில்லைமேருவுக்குநேரே
காணப்பாயீசானங்கைலாயமாச்சு
உருவென்னவெடுத்ததெல்லாங்கைலாயதேக
முத்தமனேநிராகாரஞானசித்தி

குருவென்னநிர்க்குணத்தின் மவுனத்துள்ளே
குவிந்துரைத்தபெருமையினுல்லையாலமாச்சு
அருவென்னமகாரவித்தைதமுட்டிக்கொண்டு
ஆதிவிர்த்தகற்பமதுஉண்டுபாரே. ௬௪

பாரப்பாரூதமுண்டுமவுனந்தாக்க
பளிச்சென்றஎழுசட்டைபண்ணுய்ப்போதும்
நேரப்பாஅச்சடந்தான்கைலாயதேகம்
நிமிஷத்தேசித்தியாமுன்னினைவுக்கையா
ஆரப்பாஉனைப்போலேநினைத்தபடிபண்ண
தரிதரிதுகூடாதுமூடரூடபோரா
சேரப்பாசொல்லிவிட்டேனென்றபேச்சு
செப்புமுன்னேகைலாயமூர்த்திபாரே. ௬௫

உற்றுநின்றபலநூலைப்பார்த்துப்பார்த்து
உரையாமல்வேதாந்தஞ்சித்தாந்தமென்று
பற்றிநின்றபரவசந்தானென்றுஉன்னிப்
பாராமலலைந்துகெட்டாரனந்தங்கோடி
முற்றிநின்றவிடமெங்கேஞானமெங்கே
கொற்றிநின்றமேல்மூலத்துரியமெங்கே
கூடுவார்மெய்ஞ்ஞானர்குறைவிதாமே. ௬௬

குறைவேதுவாசனையாந்தேகத்தோடு
கூடவல்லோமெய்ஞ்ஞானபுனைந்துநிற்கு
மறைவேதுமறையினிடஅந்தமேது
மறைவற்றுநின்றதொருவெளியங்கேது
துறையேதுதுறைக்குள்ளேசோதியேது
சூட்டியிந்தவிபரமெல்லாம்ஞானங்கோற்றும்
அறையேதுஅல்லவென்றுசம்சாரத்துள்ளே
அழுத்துமப்பாதோய்தத்திணுண்மைதானே. ௬௭

ஆண்மையென்றால்தோய்தத்திணுண்மையல்லோ
அகண்டமுதலண்டமெல்லாம்ஞானந்தோற்றும்
ஆண்மையென்றால்வாய்பேச்சாம்ஞானிவாயில்
மண்ணையள்ளிச்சூறுகொண்டுமலங்கப்பார்த்து
கேண்மைகொண்டுலகமெல்லாங்கெடுத்து ஆட்டி
கெடியானபெண்பொன்ஞாணினாலே
தாண்மையென்றபிறப்பிறப்பைபீதப்பாய்ந்து
சண்டாளக்கோபத்தைத்தள்ளுதள்ளு. ௬௮

தள்ளுகிறவுருப்புவந்தாள்கருவைக்கேளு
சாதகமாய்குண்டலிக்குள்வாசிவைத்து
தெள்ளுகிறபிராணாபண்ணித்தீருந்
திரண்டொலியுஞ்சிலம்பொலியுங்காணும்காணும்
நள்ளுதிறகண்டத்தேயங்கென்றாணும்
நலம்பெரியபுருவமையந்திறந்துபோகும்
அள்ளுகிறகனிபோலேயமர்தம்வீழும்
அப்பவல்லோகாயசித்தியறிந்துகொள்ளே. ௬௯

அறிந்திந்தமதியானவிந்துமட்டு
மப்பனேயோகமீதேவறிந்துகொள்ளு
பரிந்திந்தவிந்துமுதல்நாதஞ்சித்தி
பாங்கானசிவத்தோடுபரந்தான்கேளு
அறிந்திந்தப்பராபரத்தோடாறுகேளு
அப்பனேமவுனத்தைத்தூக்கிக்கொண்டால்
செறிந்துநின்றஞானத்தின்யோகமாச்சு
செயலைதம்பமவுனத்தைசென்றுகாணே. ௭௦

காணப்பாபராபரத்தின்மேலேயாறு
கைவிட்டவகண்டமொன்றுநிர்க்குணந்தானென்று
பூணப்பாநிர்க்குணந்தான் நிராகரந்தான்
புகழானநிர்மலந்தான்போதத்தந்தம்
தோணப்பாவிதுவாறுங்காணப்போக
சொல்லுகிறவார்த்தையென்றால்கேட்டிருப்போமைந்தா
ஊணப்பாசடம்விட்டுஅறிவுவிட்டு
உற்றுநின்றவண்டத்தேயறிந்துகொள்ளே. ௭௧

அறிந்துகொள்ளுமதியளவுபிண்டத்தினுள்ளே
அப்பனேயாறுதலமறிந்துகாணும்
அறிந்துகொள்ளுவிந்துவின்மேல்பரத்தின்மட்டும்
அறிவுக்குள்சக்கரந்தானப்பாகேளு
அறிந்துகொள்ளும்பரத்தின்மேல்போதமட்டு
மாதாரநிர்மலத்தின்வரைகளாறும்
அறிந்துகொள்ளுமேலாறுங்காணப்போகர
தாச்சரியம்கொங்கணரைவிட்டுக்காணே. எஉ

காணப்பாதசதீட்சைக்கடந்தபின்பு
கைவிட்டசூத்திரத்தையாசான்காட்ட
ஊணப்பா அதுமவுனமற்றதெல்லா
முரவார்த்தை அகாரமுதலுகாரமென்பார்
வீணப்பாசிரசுமேல்வேதாந்தக்காஷி
விரைந்ததிலேயும்மென்றுஊனென்பார்கள்
பூணப்பாவும்மென்றநாதமாமோ
போக்கறியான்சொல்லுகிறஞானந்தானே. எங

தானென்றவிடங்காட்டிநாதங்காட்டி
சாற்றுகிறமவுனத்தின்சார்புகாட்டி
வானென்றவெளிகாட்டியறுதலமுங்காட்டி
வாய்மூடிஞதிக்கவகையுங்காட்டி
ஊனென்றவுடம்பைவிட்டுக்கேசரியுங்காட்டி
யூமைநின்றவிடங்காட்டியுரைக்கப்பண்ணி
கோனென்றகுருவெனும்வாய்பேசலாமோ
குரும்பரேகுருசொல்லவிரண்டுமாமே. எச

ஆமிந்தவுலகத்தோர்ஞானவிதியை
யறிந்தேறிக்கூடுவதுஅறிதுமெத்த
ஓமிந்தக்குண்டலியைத்தொட்டேற்ற
ஊதுவதுகடினமெத்தயோகமார்க்கம்

வாமிந்தவாமத்தேநின்றுகொண்டு
  மகத்தானபானமுண்ணவாய்க்குமிரண்டும்
சோமிந்தச்சடையில்வைத்துச்சின்மயத்தைக்காட்டும்
  சொற்பெரியபூரணந்தான்சொன்னவாறே, எரு

வாறானகுருவினிடவாழ்க்கைக்கேளு
  மகத்தானசடையின்மேல்மதியுஞ்சூட்டி
தாரானநெற்றியிலேதீயைவைத்துச்
  சற்பமல்லோஆபரணமாகப்பூண்டு
வீறானகரித்துகிலேமேலேபோர்த்து
  விளங்கியதோர்புலித்தோலையிடையிற்கட்டி
கூறானசுடுகாட்டிற்குடியுமாகிக்
  கொள்கிறார்பலியெடுக்கக்கொள்கிறாரே, எசு

பலியெடுத்தகுருவினிடவாமபக்கம்
  பகர்கின்றயென்தாயார்பரிசுகேளு
பொலியெடுத்தஅஷ்டமாசித்திநிற்கப்
  புகழ்பெரியரத்தினவகையாபரணம்பூண்டு
நலிவில்லாயோகாப்பியாசஞ்செய்து
  நண்ணுமிருபதச்சேவைகாண்பதற்கு
ஒலியெடுத்தநவகோடிதேவர்சித்த
  ரொன்றானகணநாதர்போற்றுவாரே. எஎ

அறிந்துகொள்ளுமெந்தாயோ துரைப்பெண்ணப்பா
  அப்பனேயெருதேறுமேழையேழை
அறிந்துகொள்ளுமிவளேமுன்னே மையாவைத்து
  ஆதரித்துக்கேட்டதெல்லாமருளிச்செய்வான்
அறிந்துகொள்ளுமகண்டத்தேஞானசத்தி
  ஆத்தாளைப்பூசித்தாலறுபத்துமீவாள்
அறிந்துகொள்ளுஞ்சடமெல்லாமவளேயாச்சு
  அப்பனுக்குமெதும்போடுநரம்புமிரண்டே. எஅ

இரண்டானவாயுவினிலொன்றுசத்தி
நேராகசிவமேதுபிராணவாயு
ஒன்றாகநாடிநின்றால்சுழிமுனையுமாச்சு
யோகமுமாம்ஞானமுமாமுற்றுயேறு
தண்டான்சுழிமுனைதானடுமையம்நிற்குஞ்
சாதகமாயிதற்குள்ளேமுக்கிரந்தியுண்டு
நன்றானசுழிமுனையிற்பிராணனேறில்
நாதாந்தயோகமிதுநாடிக்காணே. ௭௯

காணப்பாநெஞ்சினுள்ளேபிராணயோகங்
கண்டுகொள்ளுந்தாமரையினூல்போலாடும்
ஊணப்பாயதிலிரட்டிஅப்பானவாயு
உற்றநின்றிரண்டையுநீகண்டாயானால்
பூணப்பாவிதுக்குள்ளேஞானயோகம்
புஜண்டருக்குச்சித்தியிதுகைலாயதேகம்
தோணப்பாநவகோடிமானுகண்டார்
சுகயோகமாவதிந்ததுறையுமாவே. ௮௰

ஆமப்பாஆசைவிடகருவைச்சொல்வேன்
அறிந்துகொண்டுஅறிவாலேநின்றுபாரு
சேமப்பாதிரோதாயியாரென்றாக்கால்
செகமெல்லாம்பெண்ணானவுருதானப்பா
ஓமப்பாபொன்மண்ணும்வாசனையினாசை
யொற்றுநின்றவிந்திரியமயக்கத்தாசை
நாமப்பாவென்றுசொன்னஆண்மையாசை
நல்வினைக்குந்தீவினைக்கும்வித்துமாச்சே. ௮௧

வித்துக்குள்பாவமென்னபுண்ணியந்தானென்ன
வெகுகோடிபுண்ணியத்தால்புருஷஜன்மமையா
பத்துக்குள்வெகுகோடிபாவபுண்ணியம்
பாழானபெண்ஜனனமெடுத்தவாறு

கொத்துக்குளிவையறிந்துபாவமான
    குழிக்குள்ளே வீள்வாரோமானிடங்களேயோ
எத்துக்குளிவையறிந்துவேறுய்ந்தின்று
    இகழ்ந்தவனேமெஞ்ஞானவீசனுமே, அஉ

பூரணமேயகண்டமேயகத்தினந்தம்
    பொங்கிநின்றநிற்குணமேயென்னையீன்ற
காரணமேயுலகத்திற்பெண்ணைசைபோலக்
    கலந்துநின்றசுபமில்லைகருதிக்கொண்டேன்
ஆரணமேயதீதத்தில்சுகந்தானென்ன
    அப்பனேசொல்லுகிறேனறிந்துகொள்ளு
வாரணமாங்குவிமுலையாளாசைவிட்டால்
    மகத்தான்மூவுலகும்விடக்கும்நேரே. அங

நேரானபெண்ணாசைநீங்கிற்றுனல்
    நிலையானதிரோதாயிமாய்கைபோச்சு
தூறுனவேதாந்தவெளியிற்சொல்வார்
    சும்மென்றசகஞ்சொல்லவாயோயில்லை
வாராய்நீயென்மகனேபெண்ணாற்சிக்கி
    மகத்தானரிஷிகள்சித்தர்கோடிபேர்கெட்டார்
தாரானசித்தரொடுபஞ்சகர்த்தாள்
    தயங்கிநின்றுபடும்பாடுசாற்றுரேனே. அச

சாற்றுரேன்வீதியிலேபடுகுழிதானுண்டு
    ததன் மேலேபுல்லோடுசெடியுமூடி
மாற்றுரேன்வீதியிலேநடந்தோன்வீழ்ந்த
    வாறெருக்கும்பெண்ணைமாயக்கூபம்
ஆற்றுரேனென்றுலுமாற்றப்போகா
    அரகராபெண்ணரவுகடித்துதானுல்
போற்றுரேனென்றுலும்பொல்லாக்காமம்
    பொறியிலிட்டநெய்போலப்பொங்கும்பாரே, அரு

பொங்குகின்றகாமமென்னசிவத்தின்கூறு
பொலலாதஆசையென்னமாலின்கூறு
மயங்குகின்றமோகமென்னமயேஸ்பரத்தின்கூறு
மருவியந்தமூன்றாலுமுலகம்பாழாய்
தங்குகின்றயோகம்போய்ஞானம்பாழாய்ச்
சமாதியெல்லாமிந்திரியச்சாரமூடி
தொங்குகின்றமோக்ஷத்தின்தரைப்போலாகச்
சூனியமாம்ஞானமெல்லாந்தோற்றுவாரே. ௮௬

வாறானபெண்ணாசைவிட்டேனென்பார்
மருவியவள்தனிப்பட்டால்சரணஞ்செய்வார்
தாறானசயனத்திற்பெண்டான்சொல்லில்
சதாசிவனால்முடியாதுமற்றேது
கூறானவிந்துவிடக்கோபமோகந்
தூறியழிக்கும்வினைவழிக்குங்கூட்டைக்கொல்லும்
வீறானவிந்துவுக்குமேலேநின்று
விருதுபெற்றமௌனியல்லோவெட்டினாரே. ௮௭

வெட்டினார்மௌனியந்தவிந்துபாம்பை
வேதாந்தமென்றதொருவாளினாலே
தட்டினார்மாய்கையைத்தான்சண்ணிக்கீழே
சச்சிதானந்தவெள்ளச்சார்பினாலே
ஓட்டினாரோட்டினார்நிர்க்குணத்தின்மட்டு
முத்தமனேயதுவல்லோஞானவீதி
தொட்டினார்தொட்டினார்சகலரெல்லாம்
செகச்சாலவித்தையென்றுதெளிந்துப்பாரே. ௮௮

தெளிவதுதானெளிதல்லவாய்ப்பேச்சல்ல
சிங்காரபெண்கண்டால்ஞானம்போச்சு
அழிவதுதான்சடத்துக்குவடுத்தகூறு
அதரமுண்டுகூடுரதுபோகமென்பார்

கழிவதுதான்காலேதுவாசியேது
கைவிட்டமௌனத்திற்கலப்பதேது
ஒளிவதுதானென்றோவென்றலோக
வொருகோடிமாண்டார்களுண்ணிக்காணே. ௫௬

காணப்பாபிறப்பிறப்பும்பெண்ணாலாச்சுக்
கைகடந்தமாயமெல்லாம்பெண்ணாலாச்சு
பூணப்பாவிந்திரியம்பெண்ணாலாச்சு
புகழ்பெரியவாசனையும்பெண்ணாலாச்சு
தோணப்பாமனம்புத்தியாங்காரத்தில்
சொக்கிச்சுப்பெண்ணாலேகூட்டிப்பாரு
ஊணப்பாவூணப்பாவுரைக்கச்சொன்னே
னுலகத்திற்றிரியாதேவிண்ணிலாடே. ௬0

ஆடையிலேவிண்ணிக்குட்சித்தர்கோடி
யந்தந்தமலைகளினாதாக்கள்கோடி
ஊடையிலேயண்டத்தில்முனிவர்கோடி
உற்றுநின்றபதமளவும்ரிஷிகள்கோடி
தேடையிலேசதாநித்தம்வேதம்பாரு
சேர்ந்துநின்றயோகையிலேதெளியச்சொல்வார்
நாடையிலேயென்னேரம்மவுனத்தில்நாடு
நரகமாம்வாசனைத்தான்நன்றாய்கேளு. ௬௧

கேளப்பாயிதைவிட்டு வுலகஞானி
கேட்டதெல்லாஞ் சொல்லுகிறேன்மக்காள்மக்காள்
நாளப்பாஜெகமெல்லாஞ்சாங்கமென்பான்
நலமானநூல்பாரான்தீக்ஷையாவான்
தாளப்பாமவுனமென்பான் விண்ணைப்பார்ப்பான்
சாதகத்தைவிட்டுவிட்டுசீவனத்திற்செல்வான்
நாளப்பாதினந்தோறுந்தற்கம்பேசி
நலமானபெண்ணோடுமயங்குவானே. ௬௨

மயங்குவான்பொன்றேடவெகுபிரட்டுப்பேசி
　　மகத்தானஞானமெல்லாம்வந்ததென்பான்
தயங்குவான்மண்ணுமேலசார்வுகாணுன்
　　சாதகம்ாயோகத்திற்சார்ந்தேனென்பான்
றியங்குவான்நோய்வந்தாற் பூரணமேயென்பான்
　　செகச்சாலதிரேத்தாயிசிரிப்பாள்பார்த்து
முயங்குவான்சமாதிவிட்டேனோயோவென்பான்
　　மூடமொற்றஞானமெல்லாமுலகிற்பாரே. கூரு

பாரப்பாசரீரம்நிதசமாதிக்காகா
　　பாழானஸ்தூலமிதுவென்பார்கோடி
நேரப்பாவாதம்வந்தால்ஞானம்வருமென்று
　　நேரர்கவலைந்தவர்கள்கோடாகோடி
ஆரப்பாவுலகத்தில்ஞானியுண்டோ
　　ஆராய்ந்துநான்கண்டேனென்பார்கோடி
ஏரப்பாவுழுதல்லோவெள்ளாமையாகும்
　　ஏறில்லானழுத்தடித்தகதையுமாச்சே. கூசா

கதையாச்சுவுலகத்தில்ஞானமோடுவாதங்
　　கைகண்டாற்சொல்வாரேகல்போல்நெஞ்சம்
அதையாச்சுயிதையாச்சுயென்றுசொன்னால்
　　அவன்கையிலொன்றுமில்லையறிந்துகொள்ளு
உதையாச்சுஅரனுடனேதொழிலெபித்தம்
　　முதுவானவன்வர்தியுண்மைமேகளு
கதையாச்சுஆனுமும்பொங்கியுள்ளம்
　　சுடுவான்பாரசயோகிஞானிதானே கூடு

தானென்றவாதியிலேரெண்டுவிதமுண்டு
　　சண்டாளவாதியென்றுனுண்டுத்துப்பொங்கி
வானென்றஞானமென்னவேதைகண்டபின்பு
　　மகத்தானபெண்ணேடேகூடியாடி

கானென்றநாகமொடுகேளிக்கைப்பார்த்துக்
கண்டபெண்ணைத்தாய்போலேகருதிச்சென்று
ஊனென்றஉடம்புக்குயெடுத்துப்போவென்பா
னுலுத்தமனுக்குச்சென்னமென்றநாகந்தானே.

நாகமென்றபெண்மேலேயாசைவிட்டு
நாதாந்தவேதாந்தஞ்சித்தாந்தம்பார்த்து
நரகமென்னவுலகமெல்லாமனதில்வைத்து
நலமானதேவியுடகிரிகையிலேநின்று
நாகமென்னஜடமுதலாய்நாமல்லவென்று
நாட்டியுள்ளேதசதீட்சைகடந்தபின்பு
நரகமென்றசிவசொத்தைவறுமைபோல்நின்று
நாமறியோம்வாதமென்றுயிருப்பார்காணே. ௬எ

இருக்கையிலேசதகோடிதொழிலைச்செய்வார்
இத்தனைக்குப்பொருளேதுயிவன்வறுமைக்கென்பார்
இருக்கையிலேசெயநீருஞ்செந்தூரஞ்சுன்ன
மெடுத்தெடுத்துயடிக்கிவைப்பார்அனேகங்கோடி
இருக்கையிலேதொழிலெடுப்பாரார்க்குங்காட்டா
ரில்லையென்பாருண்டென்பாரனேகம்பேர்கள்
இருக்கையிலேசதாநித்தமறிவலூட்டி
யிருப்பார்கள்மவுனமுத்தவாதிதானே. ௬அ

வாதியென்றாலவன்வாதிமவுனவாதி
மகத்தானபிரபஞ்சத்தேஇருந்தாலென்ன
வாதியென்றாலரசவாதிஞானவாதி
வாங்காமற்சமாதியிலேயிருந்தவாதி
வாதியெல்லாநிஜவாதிநிர்மலத்தின்வாதி
வாய்திறக்கஅண்டத்தேவாழ்ந்தவாதி
வாதியென்றாலவரிடத்தேசித்தர்செல்வார்
மயக்குகின்றசென்னமில்லைமுத்திதாமே. ௬௬

முத்திபிந்தவாதிக்குவருகுமென்று
மூச்சுமுதற்சிவன்சொன்னரென்றுசொல்லி
கத்திபிந்தசிவசொத்தைப்பெண்ணுக்கீந்து
பாழான்விஷயமெல்லாம்பண்ணிப்பண்ணி
அத்தியென்றபஞ்சகத்தைதபண்ணிப்பாவி
ஆங்காரத்தால்திரிந்துவேவதைபோட்டு
மற்றுநின்று அலைந்தவர்க்குநரகமெய்தி
மாளுவார்கோடிசென்மமாளுவாரே. ௧௦௦

மாளாமலிருக்கவல்லோவாதஞ்சொன்னேற்
மாண்டிறந்துமாண்டிறந்துபிறக்கநன்றே
வெருளாமல்மனம்பிடித்வாதியானல்
வெகுசுளுக்குபேறுதற்குஞானவீதி
அருளாமோபொருளாமோவென்றுயெண்ணி
அலையாமல்நின்றவனேவாதயோகி
இருளாமோவெளியாமோவென்றுயெண்ணி
யேகவெளிசுத்தபிருளாகிப்போமே. ௧௦௧

ஆகவப்பாயிருபத்துஅஞ்சுநூறு
அறைந்திட்டேன்வாதத்தையறிந்துகொள்ளும்
ஆகவப்பாயி துக்குள்ளேஞானம்நூறு
அப்புறத்தேசொன்னதொருஞானம்நூறு
ஆகவப்பாயிருபத்துயெறநூறுந்தான்
அறிந்தமட்டும்சொல்லிவந்தேன்வல்லோருண்டோ
ஆகவப்பாபார்த்துரைத்தா லிகபரமுஞ்சித்தி
ஆதியென்றகுருவருளால் சொன்னமுற்றே.

சட்டைமுனிநாயனார்முன்ஞானம்-௱.

முற்றிற்று.

சிவமயம்.

பின்ஞானம்-நூறு.

கைலயப்பரம்பரத்திலென்னையாண்டக்
    கடவுளெனுந்தெக்ஷிணாமூர்த்திபாதம்
கைலாயத்தெனையீன்றஆயிபாதங்
    கருணையுடன்போற்றிநித்தம்ஞானம்சொல்வேன்
கைலாயநிற்குணமேநிர்மலமேதேவர்
    காட்டுகின்றீர்கேசரியைச்சின்மயமாய்க்கையில்
கைலாயபரம்பரையாய்வந்தபேர்க்குக்
    கடைப்பிள்ளைஞானத்தைப்பாடுரேனே. ௧

பாடுறேன்சரிதையென்னதேவியுடதீட்சைப்
    பரிவானகிரிகையென்னதேவியுடபூசை
பாடுகிறேன்யோகமென்னமாசியற்றவமூர்தம்
    பாங்கானஞானமென்னமௌனத்தந்தம்
பாடுகிறேன்கிடத்திரந்தனையிதோகீதம்
    பாங்கானஅஞ்சலிதான்மனமடக்குந்தேகம்
பாடுகிறேன்பரன்முன்னிவளுக்கேயென்றால்
    பரிவானால்ஞானவித்தைபலிக்குந்தானே. ௨

தானென்றஞானத்தின்பூமிகேளு
    சாதகமாயோகமென்று அகாரவீடு
வானென்றபூமியிலேவித்தைகேளு
    மருவிற்குமரிவானவுகாரவிந்து
வேனென்றவெளியெல்லாம்படைத்துநின்று
    வேதாந்தஅண்டமென்றமகாரமாச்சு
கோனென்றநாதமங்கேகுமுரியாடுங்
    கூப்பிட்டார்கேளாதுகண்ணும்போச்சு. ௩

போச்சப்பாதத்துவங்கள்ளித்தியப்பட்டுப்
புலன்கெட்டுநிலங்கெட்டுபொறியுங்கெட்டு
ஆச்சப்பாமனவரையில்மயங்கிநின்று
ஆடுறதோர்படம்போலசைந்துதன்னு
நீச்சப்பாகடிநீச்சுதிரோதாயிவெள்ளம்
நிலையேதுகரையேதுதவணையேது
மூச்சப்பாயடங்குமுன்னேமாயைவந்து
சுத்திமுதிர்ந்தறிவைதள்ளிவிடுமோசங்காணே. ௪

காணப்பாமனவரையாமாறுக்குள்ளே
கடத்தேறப்போகாதுகலக்கமெத்த
ஊணப்பாவென்றுசொன்னால்மனமூணாது
வுற்றுமெள்ளபிடித்தாலுமாயைவந்துகட்டும்
வீணப்பாவுலகத்தோர்ஞானமெல்லாம்
வேதாந்தசித்தாந்தமென்பார்கோடி
தோணப்பாஞானமென்னகண்டிப்பில்லைச்
சுடர்கோடிவொளிபோல்தோன்றுந்தானே. ௫

தானென்றநிர்மலமாமனத்தின்வீதி
தாண்டறிதுதாண்டினாலரிவிபோற்றும்
கானென்றமனதுசாதகத்தைக்கேளு
கற்பமுண்ணவஸ்துன்னாலவாசிதோறும்
பானென்றபாணத்தின்பொதையிலேநில்லு
பகலானுங்கேசரத்தில்மனந்தானெட்டும்
வானென்றவெட்டவெளிவடிவுகாணு
மாச்சல்மெத்தமாச்சல்மெத்தமருவிகூடே. ௬

கூடுவதுநிமைக்குமுன்னேகுளிகைகூட்டுங்
கூப்பிட்டால்பூரணந்தான்கூடப்பேசும
மாடுவதுமனவரையில்மாயம்போக்கு
மருவிலேசொக்கிநின்றுஆட்டிவிக்கும்

நாடுவதுபூரணத்திலேற்றிக்காட்டும்
நலமானசாணையார்கெவுனமீளூஞ்சூதம்
கேடுவதுசித்தருக்குக்குளிகைகேட்டு
செகத்தோர்க்குவாதமென்றதேட்டுத்தானே. ஏ

தேட்டானவரைகடந்துமன்முந்தாண்டித்
தெளிவானவறிவினுடவரையுந்தாண்டி
நீட்டானபூரணத்தின்வரைகாணவென்று
நேரானமூன்றுவரையேறிச்சொக்கிப்
பூட்டானபூட்டென்றுயிரங்கிவிட்டேன்மைந்தா
புகழானவெருவெளியிலேறப்போகா
ஆட்டானகைலாயப்பரம்பரையாய்வந்த
வாச்சரியமூலதருவாக்குங்கேளே. அ

கேளப்பாமூலருக்குகாலாங்கிபிள்ளைக்
கெடியானகாலாங்கிமைந்தன்போகர்
நீளப்பரபோகர்பிள்ளைக்கொங்கணர்தான்கேளு
நேராகநான்குமுறைபேராகி
தாளப்பாமேருவிலேதவசுபண்ணி
சாதகமாய்கைலாயவர்க்க னார்
ஆளப்பாபிள்ளையென்முலவரேபிள்ளை
யாச்சரியமின்னுமுண்டுசொல்லுறேனே. கூ

சொல்லுகிறேன்சிங்கென்றுமுன்னேயூணி
சோதிகண்டபின்பதிலேமனதையூணி
சொல்லுகிறேன்அங்கொன்றுபின்னேயுன்னி
சோதியிலேஅக்ஷரங்கள்தனமுங்கண்டு
சொல்லுகிறேன்பின்பல்லோமவுனமுன்னி
துடர்ந்தேறிதளமெல்லாம்பார்த்துக்கண்டு
சொல்லுகிறேன்புருவமையமனத்திற்கூடி
துரிமென்றஅறிவினுள்ளேநோக்கினேரே. ய

சொக்கியல்லோ அறிவைவிட்டு அகண்டமேறி
துயரற்வசமாதியுள்ளேகற்பமுண்டு
சொக்கியல்லோமூன்றுவரைசடததோடொக்க
சுரூபவரைகாணவென்றுதுணிந்துபொங்கி
சொக்கியல்லோயேறுதற்குயின்னவிதமென்று
சோதித்துக்குளிகையெல்லாம்பார்த்துப்பார்த்து
சொக்கியல்லோயேற்றிவைக்குஞ்சுரூபமணியென்று
சூக்ஷமாய்மூலருடநூல்பார்த்தாரே கக

பார்த்தறிந்தாரிந்தமணிவாவெதென்று
பரிவானகயிலாயதெக்ஷணாமூர்த்தி
சேத்தறிஞ்சதம்முடையவர்க்கமான
சீடரிலேதிருமூலர்சண்டிகேசர்
மர்த்தறிஞ்சசனகாதிநால்வரோடு
மருவிநின்றவியாக்கிரமர்பதஞ்சலியினோடு
போக்கறிந்தவடியேனொடொன்பதுபேர்பிள்ளைப்
புகழானபூரணத்திலெழும்பென்றாரே. கஉ

எழும்பையிலேநிர்மலம்போற்சடமோகாணு
தேனென்றுற்பூரணந்தானெதுக்கப்பேசும்
எழும்பையிலேகுளிகைமுதற்கண்டிற்பத்து
யேற்றியதோர்தீபத்தின்சுடர்போர்காணும்
எழும்பையிலேதேகமில்லைகோடாகோடிபேற்காணும்
யெடுத்தஜடங்சூட்சமாயிருந்துதென்றால்
எழும்பையிலேமேலெழும்பிமௌனமுத்து
யிருந்துரைத்தசமாதியுடபலந்தான்காணே. கங

காணப்பாசொரூபமென்றுகமலிதானென்று
கையடங்காத்தட்டமாசித்தியொன்று
பூணப்பாகைகொடுத்துசின்மயமாந்தேவர்
பொருளோடேவருளானபோக்குக்காட்டிக்

தோணப்பாதோன்றிநிற்குஞ்சும்மா அம்மா
 சுகமாகயிசைந்ததிலேசொக்குமென்பார்
வீணப்பாமற்றதென்றார்சின்மயத்தைக்காட்டி
 வேதாந்தமூலத்தைவிளம்பென்றாரே. ௧௪

விளம்பினார்சனகாதிவேதாந்தங்கோடி
 விதித்தாரேமவுனத்தைசண்டிகேசர்
விளம்பினார்பதஞ்சலியுமனந்தங்கோடி
 விரித்தல்லோதிருமூலரனேகஞ்சொன்னார்
விளம்பினார்வாவாதாமென்றுயானும்
 விரியாமலிரநூறுஞானஞ்சொன்னேன்
விளம்பினார்வெகுவாகயெந்நூல்கொஞ்சம்
 வேதாந்தமிரநூறும்விரைந்துகாணே. ௧௫

காணப்பாமூம்மணிபுங்கயிலாயவர்க்கம்
 கழியாமற்பிள்ளைகட்கேமற்றோர்க்கில்லை
தோணப்பாவிதுமூன்றுஞ்சித்தர்சொல்வார்
 சொற்பெரியபூரணமேசொல்லவேணும்
வீணப்பாஆராலுஞ்சொல்லக்கூடா
 வேதாந்தஅந்தத்தில்வெளியிற்கூட்டும்
ஆணப்பாவருபத்துநாலுமரப்புக்குள்
 ஆருக்குங்கிடையாதுஅறியார்க்காணே. ௧௬

அறியாததுளிகையுடன்சாரணைபிற்குத்து
 அதன்பெருமைகாணவென்றால்கொங்கணரைக்கேளு
அறியாதவண்டமுதற்புவனம்பார்த்து
 மருவியதோர்பதம்பார்த்துத்திரிந்துஆடி
குறியாகக்கற்பமெல்லாமேறிப்பார்த்து
 கூறுதபூரணத்தைக்காண்பேனென்று
நெறியாகமனமுறைக்கக்குளிகைகட்டி
 நேராகமனவரையிலேறினாரே. ௧௭

ஏறினாறுவரையிலியல்புங்கண்டு
யிதமாசவறிவினிடவரையிற்சென்று
தேறினார்மனமுறைத்தார்கண்டத்தேற
சேர்ந்தேறிசேர்ந்தேறியொருவரையிற்றூண்டி
கூறினாரிவ்வளவுமொன்றேயென்றார்
கூசாமல்மருவரையில்குதிரைப்போட்டார்
மாறினால்சென்றுமனம்பிடித்துச்சென்றார்
வரைமூன்றுங்கடக்கவொருகற்பமாச்சே. கரு

ஆச்சப்பாநாள்தரையிலேறும்போது
அரகராவொறுகோடியிடிபோல்நாதம்
மூச்சப்பாவோடாதுமுன்பின்றேணு
முதிர்ந்தமனமாயையினால்பின்னுஞ்சென்றார்
கூச்சப்பாஐவரையிற்போக்கின்று
குருகுரெனமொழிந்ததிலேமனமுந்தேறி
போச்சப்பாசடமொன்றுநிராசையாகி
புக்கினார் ஆறுவரையிற்புக்கினாரே. கசு

புக்கியல்லோசுழல்காற்றின்றுரும்புபோலே
புலம்பினார்மூலருடபேரன்பேரன்
மக்கியல்லோமனம்போச்சுகுளிகைபோச்சு
மாறுதமௌனமுன்னேமாண்டுபோச்சு
ஓக்கியல்லோசிலம்பொலிதானுள்ளேவாங்கி
ஓகோகோகுளியதுகீழேவாங்கு
சொக்கியல்லோயென்செய்வேனென்றுயேங்கி
தூரியத்தைவிட்டுமெள்ளக்கீழ்க்கொண்டாரே. உ0

கீழ்க்கொண்டார்கீழ்க்கொண்டகொடியாஞ்சித்தர்
கேசரத்தைவிட்டுமெள்ள அறிவில்வந்துநின்று
நாட்கொண்டபாடெல்லாம்நினைத்துக்கொண்டு
நான்பிழைத்தேநான்பிழைத்தேனென்றுசொல்லி

ஆட்கொண்டயென்குருவேபூரணத்திநின்றீர்
ஆச்சரியமௌனயின்றுமிவரையேயையா
வேட்கொண்டயென்றவத்தையீந்தனையா
வெருவெளியாஞ்சிலம்பொலியைமேவென்றுரே.

மேவென்றுசொல்லுமுன்னேமேற்கண்டபோகற்
வேதாந்தசிரோன்மணியைபெற்றதினன்மைந்தா
கோனென்றகுருவுக்குஅவரேசீடர்
கோடிலக்ஷத்தொருசீஷருண்டோகாணேன்
பானென்றவேதாந்தஞ்சித்தாந்தம்பார்த்து
பறக்கிறதோர்குளிகைமுதல்வாதம்பார்த்து
தேனென்றகைலாயவர்க்கமாகி
சித்தருக்குச்சித்தராய்ரிஷியானாரே. உஉ

ரிஷியென்னசிலம்பொலியைக்கண்டாருண்டோ
நேராகயதுக்குள்ளேசேர்ந்தாருண்டோ
ரிஷியென்னரஸவித்தையறிந்தாருண்டோ
நிமிஷத்திற்கவனமுற்றுத்திரிந்தாருண்டோ
ரிஷியென்னஅண்டமுதற்புவனந்தாண்டி
நின்றநிறையாய்க்கண்டுவந்தோருண்டோசொல்லும்
ரிஷியென்னமவுனமுத்துசமாதிக்குள்ளே
நின்றதினால்திகைமையாய்நினைவாய்க்காணே. உ௩

காணப்பாரிஷியாட்டுஞ்சித்தராட்டுங்
காரணமாய்மவுனத்தேநின்றோராட்டும்
பூணப்பார்பூரணத்தைநின்றோராட்டும்
பொன்னுகமாமுகலாய்புகழ்ந்தோராட்டும்
தோணப்பாவாசியுடகுதிரையாட்டும்
ஒன்றுமற்றுத்தன்மயமாய்நின்றோராட்டும்
தோணப்பாயிதுவெல்லாங்கொங்கணர்க்கேயல்லால்
சூழுலகிற்சித்தருண்டோசொல்லிடீரே. உச

சொல்லிடமாய்ஞானமுண்டோகுளிகையுண்டோ
சூட்சித்தகற்பமுண்டோவாசிதானுண்டோ
மல்லிட்டவாதமுண்டோசுன்னமுண்டோ
மகத்தானசிங்கியுண்டோஜெயநீருண்டோ
வெல்லிடர்விடமுண்டோசாரணைதானுண்டோ
வெவ்வேறேகூட்டுகிறகுடோரியுண்டோ
அல்லிடர்வேதைக்குகிருவணந்தானுண்டோ
அப்பனேபதினேழுமமைத்திருரே. உரு

அமைத்தியவர்மூணுகாண்டம்பாடியதோரங்கமென்று
வந்தித்தப்பிள்ளைக்குமறிவுதோன்றும்
அமைத்தியவர்பாடினதுபொற்கம்பிபோல
அறிவுகெட்டமிலேச்சருக்கும்வாதசித்தி
அமைத்தியவர்கருவெல்லாம்வெட்டவெளியாக
அங்கங்கள்மறையாமற்சொன்னர்சொன்னர்
அமைத்தியவர்பாட்டுக்குநம்முடையநூல்தா
னருகாகமறைப்பென்றுஅமைத்திட்டாரே. உசா

அமைத்திட்டாரந்நூறுபிள்ளைகளைவேண்டி
அம்மம்மாவெகுதெளிவுசாத்திரந்தான்மைந்தா
நிறைத்திட்டஆரணம்போல்வெட்டவெளியாக
நீங்காமற்றுறந்துவிட்டாரருளோடுபொருளும்
குறைந்திட்டபுத்தியுல்லவிட்களமாம்புத்தி
கூறுதபொருளையெல்லாங்கூறிவிட்டார்
மறைத்திட்டமவுனமெல்லாம்வெட்டவெளியாக
வாய்திரக்காவித்தையெல்லாம்வளங்கிருரே. உஎ

வளங்கியதோர்கொங்கணரால்மூலவர்க்க
மகத்துவந்தானுண்டாச்சுமக்காள்மக்காள்
விளங்கியதோர்கீர்த்தியுண்டோவுங்களாலப்பா
வெட்டவெளிக்கப்புரத்தேசெல்லமாட்டீர்

முளங்கியதோர்குளிகையென்னகாயசித்தியென்ன
மூச்சற்றவிட்டத்திலேநோக்கமென்ன
பிளங்கியதோர்சித்தருடவர்க்கமென்ன
பேய்மக்கள்மூவருஞ்சுபேரிற்றானே. ௨௮

தானென்றுசொன்னதென்னவென்னைப்பெற்ற
சச்சிதானந்தவெள்ளத்தயவுள்ளாரே
கோனென்றமூக்குளிகைநமக்குண்டையா
கொடியதொருமவுனவித்தைநமக்குண்டையா
பானென்றவாசிவித்தைநமக்குண்டையா
பாங்கானகாயசித்திநமக்குண்டையா
வானென்றவெட்டவெளியேறியாடி
வருகிறேன்விடைகொடுத்துவாழ்த்திடீரே. ௨௯

வாழ்த்தியுன்னையனுப்பினால்பூரணந்தான்
வரைகடந்து ஆறுவிரைவேறுவாயோ
வாழ்த்தியுன்னையனுப்பினால்நரகத்துள்ளே
மயங்காமற்செல்லுவையேமைந்தாசொல்லு
வாழ்த்தியுன்னையனுப்பினாலிடியிற்குள்ளே
மயங்காமற்றியங்காமல்மருவுவாயே
வாழ்த்தியுன்னையனுப்பினாலென்னமுன்னால்
வாய்பேச்சோவரைகடக்குமார்க்கந்தானே, ௩௰

மார்க்கமென்னவென்னையீன்றகைலாயமூர்த்தி(ன்
மகத்தானசமாதியுள்ளேகர்ப்பமொன்றுவாழ்ந்தே
சேர்க்கமென்னசிவாலயங்கள்பலியேத்துண்டேன்
சிவமேதுநீரன்றிவேறொன்றுகாணேன்
ஆர்க்கமென்னகுளிகையிட்டுசென்றுபோரே
னங்கங்கேமனந்தேறியேறிப்போரேன்
தீர்க்கமென்னசொக்கினாற்சொக்கிப்போரேன்
திரும்பினாற்ஜடத்தோடதிரும்புரேனே. ௩௧

திரும்புகையோவென்மகனேதிடந்தானுண்டோ
சிறுபிள்ளைபுத்தியல்லோசெப்புராய்நீ
வளர்பிறையோதேய்பிறையோரவியினுள்ளே
வருவதுபோலல்லவஃதுமாட்டிவாங்கும்
பரும்பிறைநபோயோகமதுபிரவிகோடி
பாங்கானவொளிக்குள்ளேகண்மேணுக்ஷம்
அரும்பிறையோமனந்தரும்புமேவொட்டாது
அரகராயென்மதனேயறிவாய்நீயே. ௯௨

அறியாதவரைப்பார்க்கநான்தானேன்றி
அய்யனேமூன்றுவரைக்குள்ளேசிக்கி
நெறியர்கநால்வரையிலேயொட்டாமல்
நிமிஷத்திலறிவினிலேவந்துநின்றே
மறிவானமனம்படைத்தகொங்கணரேசித்தர்
மற்றோருரையான்காணேன்மைந்தாசொல்லு
பொறியானவழியடக்கிசூக்ஷமாகி
போனவரார்போகருடபிள்ளைதானே. ௯௯

பிள்ளையென்றாலவரல்லோபோகருக்குப்
பிள்ளைபுகழானரிஷிகளெல்லாஞ்சித்தரென்பார்
தள்ளையென்றாலவர்தள்ளைமூலரிடம்போன
சச்சிதானந்தவின்பயானபிள்ளை
கொள்ளையென்றாலவர்கொள்ளைஞானவீதி
கொடிதானசிலம்பொலியைக்கேட்டுமீண்டார்
விள்ளையென்றவந்ததினால்கீர்த்தியாச்சு
வேதாந்தஅந்தமெல்லாம்வெளியாய்ப்போச்சே.

போச்சென்றுசொல்வதென்னபோய்வாரேனையா
புத்திசொன்னபுத்தியெல்லாம்போட்டிட்டாயோ
வாச்சென்றுநின்வயத்திற்பிறந்தபிள்ளை
வந்தாலென்கெட்டாலென்மகத்துவந்தானுண்டோ

கோச்சென்றநாதமெனயிடிந்தாலென்ன
　கோடிரவிகாந்தியென்னபயமுண்டாமோ
ஓச்சென்றசிலம்பொலியைக்கண்டுவாரே
　னொருமனதாய் பூரணத்திலுன்னிடரே. ௫௫

உன்னிடர் அண்டமுதற்புவனந்தாண்டி
　யொருநொடிக்குட்பதந்தாண்டிமுப்பாழுந்தாண்டி
மன்னிடருள்மனையைக்கண்டுபோற்றி
　மருவியதோர்பூரணத்திற்சென்றுயேறி
பன்னிடர்தினந்தோறும்பழக்கமையா
　பாயுரேனதுகடந்துவரைகளாறும்
தன்னிடர்போகறியேனுமதருளாற்போரேன்
　தயாநிதிகடாக்ஷித்து அனுப்புவீரே. ௫௬

அனுப்புறதுபிறகுன்னையான்சென்றுவாரே
　னவ்வளவுங்குகைக்குநீபட்டமாய்நில்
தனுப்பிறந்தகளிபோலசென்றுதாண்டி
　சாதகமாய்சொரூபமணிமூன்றுங்காட்டு
கனுப்பிறந்தகமலியதுமூன்றுங்காட்டி
　காட்டிலேயவஷ்டமாசித்திஜால்காட்டி
உனுப்பிறந்துமோர்தாண்டியொருவரையிலேறி
　யுற்றுமறுவரையிலோடினேனே: ௫௭

ஓடினேன்மூவரையிலிடியோகோடி
　ஓகோகோரவிகோடிவன்னிகோடி
வாடினேன்மனமிளைத்தேன்மயக்கமானேன்
　வாயிலிட்டகுளிகைசென்றுயேறிப்போரேன்
நாடினேன்கற்மொன்றுமூவரையிற்றாண்டி
　நலமாகநாலுவரைக்குள்ளேசென்றேன்
ஆடினேனோடினேனறிவுகெட்டே
　னரகராமோசமென்றுயிரங்கினேனே. ௫௮

இரங்கினேனுனுவரைக்கப்புறமேபோக
யென்றாலேமுடியாதுயேதோஅஞ்சில்
இரங்கினேனென்மக்காளுங்களாலாமோ
பேதுசொன்னாய்பேய்ப்பிள்ளாயென்னபோச்சு
இரங்கிநோனின்றாள்பின்னையார்சொல்வார்
ஏகவெளிதிக்காடுயிடியோர்கோடி
இரங்கினேனென்றாலேமுடிவுகாணே
ஏறினார்கொங்கணர்தானேறினாரே. ௩௯

சொங்கணர் மருத்துவம்.

ஏறியதோர்கொங்கணரைப்போலேயில்லை
யேகவெளிதீப்க்காட்டிலெப்படிபோபோனார்
மாறியதோர்மனம்பிடித்தார்யோகநிஷ்டையானார்
மாறுவதுநிஜமென்றுவாய்மைபூண்டார்
கூறினதோராறுவரையைக்கண்டுமுட்டக்
கூமரியதோர்சிலம்பொலியைக்கேட்டுமீண்டார்
ஆறியதோர்மனங்கண்டீரவரேசித்தர்
ஆச்சரியங்கொங்கணம்போலார்காணேனே. ௪௦

காணரிதுகாணரிதுகோடாகோடி
கண்டுநான்பாபருக்ஷசித்தர்க்குள்ளே
பூணரிதுபூணரிதுவகண்டவீதி
புக்கியல்லோசிலம்பொலியைக்கேட்கமாட்டார்
ஊணரிதுஊணரிதுவெளியிற்பார்த்து
ஓடுகிறேமென்றீர்கள்மக்காள்நீங்கள்
தோணரிதுதோணரிதுதாயாய்நின்றஞானம்
சீடருக்குள்ளோடுறதுதுரியந்தானே. ௪௧

சாங்கத்தார்.

தானென்றபூரணத்தைசாங்கத்தோர்கள்
சகலமெல்லாம்நிர்க்குணமாய்நின்றதென்பார்
வானென்றவெளியென்பாரொன்றுமில்லையென்பார்
வாய்பேசார்சொன்னக்காற்போமோசொல்லு

கோனென்றகுருவருளால்சமாதிகூட்டி
குவிந்துநின்றமவுனத்தின்நிலையைப்பற்றி
ஊனொன்றவுடம்பைவிட்டுஅறிவாய்நின்று
உலாவரதேசங்கமென்றுவுரைத்திட்டாரே. ௪௨

உரைத்திட்டாகாரமென்றபிரிதிவுபோக்கி
போடுகிறவாசியினால்போகம்பார்த்து
மறைத்திட்டமவுனத்தோடேமவுனமூட்டி
மருவியந்தவறிவோடேவாசமாகி
நிறைத்திட்டவகண்டத்திற்சென்றுஆடி
நேரானஅண்டமுதற்புவனம்பார்த்து
முறைத்திட்டந்தப்பாமற்சமாதிநின்றால்
முழுபோகிமுழுஞானிமோக்ஷாவாயே. ௪௩

ஆமப்பாயிதுக்குமுன்னேயப்பியாசமார்க்க
மறையுரேனஷ்டாங்கம்நன்றாய்க்கேளு
ஓமப்பாவகையாகவிரித்துச்சொல்வே
னுத்தமனேசாட்டியாம்நித்திரையைப்போக்கு
தாமப்பாசதாநித்தம்தாரகத்தேநில்லு
சார்ந்துநின்றகேசநிலைசதாநித்தம்பாரு
சோமப்பால்கழித்தோடுங்கேசரியைக்கண்டால்
சொல்லாதமுத்திரையைச்சொல்லுரேனே ௪௪

சொல்லுறேன்ரவிமதியும்வன்னிக்கூடிச்
சொலித்துநின்றவிடமல்லோகேசரிதானப்பா
சொல்லுறேனதைப்பாருமனஞ்செய்நீராகுஞ்
சுத்தவெளியறிவோடேதாக்கியேத்தும்
சொல்லுறேன்மனம்புத்திசித்தமென்பாந்
துடர்ந்துநின்றகுருபதத்தைகூட்டிக்கேளு
சொல்லுறேனறிந்தமட்டும்புருவமையம்
சூக்ஷந்தொட்டேறியஷ்டங்கதுரைக்கேளே ௪௫

கேளப்பாயேமதத்தைச்சொல்லுவேனானுங்
கெடியானநேமமுடனுசனமுங்கண்டு
வாளப்பாபிராணாயம்பிரத்தியாகாரம்
மகத்தானகியானமொடுதாரணையுங்கேளு
தாளப்பாசமாதியிடமிட்டையங்கம்
தனித்தனியேசொல்லுகிறேன்நன்றாய்ப்பாரு
வேளப்பாயேமமென்றபத்துஞ்சொல்வேன்
வேதாந்தபொறியறிந்தோர்பெரியோர்தானே. ௪௬

பெரியோர்கள்றண்டமென்றஆன்மாவைநோக்கி
பேரானபரிச்சின்னமனதுமாகி
அறிியோர்கள்சாதியென்றஆச்சிரமும்விட்டு
ஆசையென்றவிகற்பமெல்லாமடித்துத்தள்ளி
பரியோர்களிங்கிசையைநீக்கிப்போட்டு
பராபரத்தைநோக்குவதேஅங்கிஷயதாகும்
சரியோர்களாவதுஞ்சகலமதத்தாலுந்
தனித்தனியேகண்டிக்கப்படாதென்பாரே. ௪௭

என்பார்களிங்கிசையாயிருக்குமான்மா
வெங்கெங்கும்நிறைந்திருந்தசுரூபமூர்த்தி
அன்பார்களிதுவல்லோசத்தியந்தான்மைந்தா
ஆரதிகஆன்மாவர்சரீராதிசுபாவம்
வன்பார்களபகரிப்பைவிட்டுவிட்டு
மனமுரைத்தாலாரதிகமென்றுபேரு
தன்பார்கள்பிறச்சரியுஞ்சரீராதிசுபாவந்
தானென்றதற்குலத்தின்லக்ஷணந்தான்பாரே. ௪௮

பாரப்பாபிரம்மமதுசுபாவமாக
பரவியதுநிரந்தரமுஞ்சஞ்சரித்தாலன்று
நேரப்பாபிரம்மமிதுசரியமிதுவாங்கண்டாய்
நிரந்தரமுந்தயவினுடநினைவுகேளு

தாரப்பாசரீரத்தில்வருத்தத்தைநீக்கி
சகலஜெனம்நம்மைப்போலெறாயெண்ணி
ஆரப்பாசுபாவத்திலனுபோகஞ்செய்வார்
அவரல்லோதயவுடைத்தோரறிந்துகாணே   சகூ

காணப்பாவேதாந்தசாத்திரமேசெம்மை
கரைகற்றசமையமெல்லாம்பொய்யென்றுதள்ளி
ஆணப்பாதிடப்பட்டால்ஆக்ஷேபமென்பார்
விக்ஷணமுஞ்சீதளமுஞ்சுகதுக்கத்தாலே
வீணப்பாமானாபிமானம்வந்து
வெறும்வெளிபோற்சொற்பனமாமென்றுதள்ளி
தோணப்பாதாங்காமல்ளகண்டத்துள்ளே
சொக்குவதுசமையமென்றுசொல்லலாமே.   ருo

சொல்லலாம்வேதாந்தத்துள்ளேமுத்தி
தொடுகுறியாஞ்சாத்திரத்தின்முத்தியில்லை
வெல்லலாமதினாலேசொன்னபொருளெல்லாம்
வேறில்லைநாமதுதானென்பதல்லோமுத்தி
அல்லலாஞ்சொற்பனம்போலவத்தையிலேகண்டு
அகிலமென்றபிரபஞ்சமெல்லாமெடுத்துமூழ்கி
நில்லலாமற்புதமாய்நிற்கயிடமற்று
நிர்மலமாய்நிற்கிறதோர்பூரணந்தானென்னே.   ருக

தானென்றபூரணந்தாநாமென்றெண்ணி
சதாநித்தம்மறவாமலிருந்தானாகில்
வானென்றகவிதகாரியாச்சுதாச்சு
மருவியதோர்சாஸ்திரத்தினாலேயபபா
கோனென்றதன்னிடத்தேவந்ததொன்றுமில்லை
கூடிநின்றுபோனதில்லையென்றுயெண்ணி
வேனென்றநிர்க்குணனும்வேறொன்றுமில்லை
வேதாந்தநிசமென்றார்கௌசமாச்சே.   ருஉ

ஆச்சப்பாநேமத்தைச்சொல்லக்கேளு
அறையுறேன்நன்றாகபூரணந்தான்
வாச்சப்பாசத்தியமென்னமித்தையென்ன
மருவியதோர்நானென்றுநானென்றதாரு
வீச்சப்பாநமக்குவந்தபந்தமேது
வேதாந்தசாஸ்திரத்தால்விளங்கப்பார்த்து
கூச்சப்பாதிடப்பட்டார்தவசென்றுசொல்வார்
குலாமரிட்டவிடமெல்லாங்குருட்டுநோக்கே ௫௩

நோக்கப்பாபிரமமதிலோகத்துள்ளே
நுகர்ந்துநின்றகாமியத்தைநரகம்போலெண்ணி
வாக்கானவெறுப்பவத்துசொற்பனம்போலெண்ணி
மசகமித்துவென்றுதள்ளிமனமீதேறி
தாக்கானபொருளல்லோசச்சுதாநந்தம்
தடையறவேதானுனர்சந்தோஷமாச்சு
போக்கானவேதாந்தம்பிர்ம்மசாரம்
புகட்டுகிறகுருச்சொல்லும்பூரணமென்றெண்ணே. ()

எண்ணியதோர்மூன்றையுந்தானுண்மையென்று
பெண்ணியிருக்கிறது ஆரென்றுயியப்புவார்கள்
தண்ணியதோர்குருவுரைத்தவுபதேசத்தை
தானறிந்துபூரணமாய்முத்தனாகி
பண்ணியதோர்பூதாமமெல்லாங்குருவுக்கேயீய்ர்து
பராபரத்தைதன்தேகம்போலேயெண்ணி
அண்ணியதோர்சுகமுடனேதுக்கமெல்லாம்
ஆர்செய்துந்தனக்குவரந்தாராய்போலுங்காணே. ௫௫

காணப்பாவிப்படியேதீர்த்தியானால்
கைகடந்தசிவபூசையென்றுசொல்வார்
வீணப்பாசகலநூலென்றுதள்ளி
விரைந்துநின்றவிரத்தியெல்லாவிட்டுவோடி

ஊணப்பாகுருப்பிறகேநிமூலப்போலே
வுத்தமனேசச்சுதானந்தனாய்
ஆணப்பாதேவிக்குமுபசரித்துவென்று
அறிகிறதேசிறவணமென்றுவறிந்துகொள்ளே. ருசு

அறிந்திந்தவேதநிலைவிட்டுநீய
மப்பனேவாசனையாம்பிரபஞ்சந்தாண்டி
வறிந்திந்தபுத்திராதிபாசத்தாலே
மாயம்வந்துமுட்டையிலேகலச்சையாக்கிச்
செறிந்துஅதையடிச்சகத்தில் வேதாந்தம்பார்த்து
சீராகநிற்கிறதேசெம்மையாகும்
நெறிந்துநின்றவேதாந்தப்பிரமந்தன்னில்
நினைவோடுவருகிறதேயாஞ்சதானே ருஎ

ஆசையென்றுமதியென்றுமதற்குநாமம்
அப்பனேதான் பிரம்மமென்றுஆசான்
நேசையென்றுவுபதேசப்படியே யென்றும்
நேராகவேதாந்தப்பொருளென்றெண்ணி
பூசையென்றுமற்றதெல்லாந்தள்ளிவிட்டா
லுத்தமனேசிவமென்றுசொல்லுவார்கள்
தாசையென்று யென்னென்னகாரியங்கள்வந்துந்
தைவிட்டதுக்கம்வந்துங்கலங்காதே. ருஅ

நலங்காமல்நாம்பிரமமென்றுயெண்ணி
நவடற்றுநிராதாரம்வேதாந்தாம்பார்த்து
நிலங்காமல்நிற்கிறதேவிருதமப்பா
மகத்தானநேமமென்றபத்துபாச்சு
நிலங்காம விருபதையுமனுஷ்டித்தாக்கா
லென்கனேமனதிடமாயில்லாவிட்டால்
துலங்காதசுவரில்லாசித்திரம்போலாகுஞ்
சுழியதுதானடிப்படைமூன்றேன்றும்வாறே ருகூ

வாசிரகசுகாசனமாயிருந்து கொண்டு
மருவியதோர்மூலத்தில் வங்கென்றுபூரி
கூறுகும்பித்துமாத்திரையையேற்றிக்
குறியோடேசிகாரத்தால்ரேசிரேசி
நாராகவிப்படிதானங்கென்றுகும்பி
சாதகமாயிதுமூன்றுந்தீர்ந்தபின்பு
ஆறுக அகாரமுதலுகாரங்காட்டி
யப்பனேமவுனத்தாற்கும்பித்தேறே. ௬௰

கும்பித்துமௌனந்தான் குவிந்தபின்பு
கொள்கியதோர்மூலத்தைவிட்டுநீயுந்
தம்பித்துக்கண்டத்தேநின்றூது
காலடங்கியுரைத்தபின்புமேல்மூலப்நின்று
சொம்பித்துவறிவோடேமௌனம் பூரிச்
சுகமாகப்பூரணத்தையதுக்குட்கும்பி
தம்பித்துமனத்தோடேரேசகத்தைப்பண்ணு
நலமானபிரம்மமென்றுபிராணனுச்சே. ௬௧

ஆச்சப்பா விதுவல்லோபிராணாயாமம்
அறிந்தவனுர்சிவயோகியறியாமற்றோர்
ஓச்சப்பாபிரபஞ்சமென்றவாசைவிட்டு
வொன்றையுந்தான் மனதினுள்ளேசங்கியாமல்
வாச்சப்பாவந்ததென்றகாரணமாக
மருவியதோர்ஞானமென்றமார்க்கத்தூடி
கூச்சப்பாகாமியத்தைநரகம்போலெண்ணி
கூறுனகர்மமெல்லாம்விடுக்கநன்றே. ௬௨

நன்றாகவேதாந்தசாஸ்திரத்தாலே
நாம்சாக்ஷியென்றுநித்தமுறைத்துநின்று
பன்றுனமற்றதெல்லாம்நாமல்லவென்று
பரவிநின்று வுலகமெல்லாம்வித்தையென்று

கன்றானவுரைப்புவந்து நிரந்தரமுனினவாய்
காரணகாரியங்களெல்லாந்தவிழ்ந்துபோட்டு
வென்றானவொரு பொருளாய்நின்றாயானா
னுத்தமனேபிரத்தியாகாரமாச்சே ௬௩

ஆச்சப்பாமாயையொடுமாயவின்ப
மப்பனேசுத்தசைதன்னிய மூன்றும்
போச்சப்பாவாகாயம்போலேயெங்கு
மோடியெங்குமறைந்திருக்குங்கண்டாலுந்தான்
ஆச்சப்பா அவர்களைத்தான்தீர்த்த மூர்த்தி
வாகனணிதோத்திரமாய்தியானம்பண்ண
வீச்சப்பாபிரமம் மென்றேதியானமாச்சு
விளம்புகிறேனைந்துவகைசமாதிதானே. ௬௪

தானென்றவதிஷ்டானசைதன்னியத்தை
தனையளித்துநிலவரையில்தீபம்போல
ஆனென்றஅலைவற்றுத்திடமதாக
அப்பனேயகண்டமதுதானாய்நின்று
வேனென்றதோற்றமற்றுயிருந்தாயானால்
விளங்கியதோர்தத்துவலயசமாதியாச்சு
வானென்றசவ்விகற்பசமாதிகேளு
மருவியதோர்தத்துவலயசமாதிக்குள்ளே. ௬௫

உள்ளாகவிருக்கையிலேபேசுஞ்சுற்ற
முறவாகக்கேட்டாக்காசந்தானுவித்தை
தள்ளாகசவ்விகற்பசமாதியென்று
தானுரையாற்பெரியோர்கள்கேளுகேளு
விள்ளாகதிரிசானுவித்தைமார்க்கம்
வியவியந்தசமாதியிலேநின்றிருக்கும்போது
தள்ளாகத்தன்னையனுசந்தானித்து
தலமானசந்தா னந்திரிசானமாச்சே ௬௬

ஆச்சப்பாயிதின்பேருகவ்விகர்ப்பமென்பார்
அருளியதோர்நிருவிகர்பசமாதிகேளு
ஓச்சப்பாதத்துவலயசமாதிமுத்தி
யுத்தமனோசாத்தானுவித்தங்கேமறந்து
ஆச்சப்பார்தூக்கமுற்றமிருகம்போல
ஆச்சநீயஞ்சத்தமெல்லாங்கேளாவிட்டால்
கூச்சப்பாசித்தமதுசொரூபத்துள்ளே
கொள்கிநின்றுற்பூரணத்தில் நிருவிகற்பமாமே, ௬௭

ஆமப்பாசமாதிவிட்டுசஞ்சரிக்கும்போது
மப்பனேசாத்திரங்கள்பார்க்கும்போது
ஓமப்பாகாலமென்றநிறையமில்லை
யுத்தமனேபிரபஞ்சமில்லையென்றுதிடமதாகி
சோமம்பாவிகாரந்தோற்றுகிறபிரபஞ்சஞ்
சொற்பனம்போல்பாசமென்றமரிபாதியடக்கி
லாமப்பாதீவிரமாம்பிறவிருதியார்க்கும்
மகத்தானகாரணமுமென்றுமெண்ணே. ௬௮

எண்ணியல்லோமனதுள்ளேபடாதேநீக்கி
யேகமாய்நிருவிகற்பமாகிநின்று
அண்ணியல்லோபிரபஞ்சத்தின்விகற்பந்தள்ளி
யனுபோகநிருவிகற்பசமாதியாச்சு
ஒண்ணியல்லோசொரூபத்தில்பிச்சுநின்று
வுற்றிருந்தவகண்டவிர்த்திகாற்றில்லாததீபந்
தண்ணியல்லோவுப்புண்டாபோலேமக்காள்
சாதகமாயுன்னுருவங்கெட்டுப்போச்சே, ௬௯

போச்சதுவுங்கடிகையொன்றுதானுய்நின்றுற்
புகழானபெருமைசொல்லயென்னூற்கூடா
ஆச்சதுவுமவுனமுற்றுவாயைமூடி
ஆசையற்றுவிருந்தாலல்லோவகண்டவீதி

வாச்சதுவும்பிரபஞ்சத்திற்கண்டதெல்லாம்
வாலையுடனுரைபோலும்மலைபோற்காணும்
கோச்சதுவுஞ்சிலந்தியுடநூலும்போல
கூறுமத்தினங்கம்போற்குறியைக்காணே. ௭௰

குறியானவிண்ணுதித்தமேகம்போலுங்
கோதியதோர்சொற்பனத்தின்பிரபஞ்சம்போலும்
நெறியானவகண்டநாம்நம்மிடத்தேமைந்தா
நேராகவுண்டாகில்யிற்றுப்போச்சு
சரியானவெவ்வேறுநாமமரகி
பாழுலகுநம்மிடத்தேதோன்றுந்தோன்றும்
மறியாகவழிந்துப்போம்நாமேபிரம
மற்றொன்றுமில்லையென்றுமயக்கந்தீரே. ௭௧

மயக்கமற்றுநானொருவனென்னுக்குளெல்லா
மற்றொன்றுமில்லையென்றுதீராகித்
தியக்கமற்றுயென்னேரமுள்ளிட்டுக்கொண்டு
சேர்ந்துவருஞ்சந்தோஷதுக்கந்தள்ளி
முயக்கமறவருட்பொய்துமுன்னேவந்து
முன்னின்றுவிகற்பங்கள்பண்ணினலும்
அயக்கமற்றுமனதிடமாய்சதவாய்த்தள்ளி
யாராதிகொண்டகறித்தாலுய்நில்லே. ௭௨

நில்லப்பாசஞ்சாரகாலத்துள்ளும்
நேராகச்சமாதியிலேயிருக்கும்போது
அல்லப்பாதொய்தம்வந்தாலாதரவுபண்ணி
யுசையாதமலைபோலவிருக்கநன்று
சொல்லப்பாகற்பமதுகண்டத்தொய்துஞ்
ஞட்டிநின்றுதிடப்படுதல்மெத்தநன்று
வெல்லப்பாவாசனையைவிண்டாயானல்
மேவியதோராரூடசமாதியாச்சே. ௭௩

மாயையுத்தி,

ஆச்சப்பா மாயையுத்திசொல்லவென்று
லனேகமுண்டுசூக்ஷமாய்சொல்லக்கேளு
வாச்சப்பாதேசத்திற்பேதாபேதம்
மருவியதோர்கிராமத்தில்கிராமபேதம்
ஓச்சப்பாதிறங்களிலேதிரங்கள்பேதம்
ஓகோகோசனங்களிலேயனேகபேதம்
வீச்சப்பாபுத்திகளிற்பேதாபேதம்
வெகுமோகமாயத்தாற்றோன்றுங்காணே. ௭௪

ஞான வான்,

காணப்பாவின்னமயமாகிநின்று
கலந்துநின்றபிராணமயகோசமாச்சு
ஊணப்பாவிக்கியானமயமுமாகி
யுத்தமனோமனோமயமாங்கோசமாச்சு
பூணப்பாவானந்தமயமுமாக
பொங்கிற்றுவஞ்சுதிரைபோதத்துக்கு
தோணப்பாதிரையஞ்சுமாயைமாயை
சொல்லுகிறேன்சூக்ஷத்தைபூட்டிப்பாரே. ௭௫

பூட்டியதோர்விசிஷ்டனென்றும்விராடனென்றும்
புகழ்பெரியயேமகற்பபோக்கேதென்றும்
நீட்டியதோரண்டமென்றும்புவனமென்றும்
நேரானபதங்களென்றும்மாயையிலாச்சு
ஆட்டியதோராட்டமெல்லாமாயையாட்டு
அறிந்துகொள்ளுமுன்மனமேமட்டைமாயை
மூட்டியதோர்மனமும்வந்தவரைக்கேநிற்கு
மூதண்டமனங்கடக்க முடியவாறே. ௭௬

வாரானவுலகத்திற்சுத்தவீரன்
மனதோடேபோராடியருவில்மாள்வான்
கூறுனஞானியென்றுலிங்கத்திற்புக்கிக்
குறியானவம்பலத்தில்சேர்வாரப்பா

தாரானவுலகத்தோர்க்கடுத்தஞானஞ்
  சகத்திரமாங்கோடியிலேயொருவர்சொல்வார்
வீரானசிலபேர்கள்சாங்கம்பேசி
  விழிந்திறந்துவிழிந்திறந்துதிரிவர்தானே. ௭௭

தானென்றபிரம்மருமோராறிவிற்சென்றார்
  சாதகமாய்மாலென்றாலறிவினுடைமையும்
கோனென்றருத்திரனோருருவிலந்தங்கொள்கி
  நின்றமகேஸ்வரனோரறிவிற்றோன்றும்
வானென்றசதாசிவனோமணியைக்காண்பான்
  மகத்தானவைவருந்தானுக்கிப்பீடம்
வேனென்றபஞ்சகர்த்தாளிம்மட்டுஞ்சென்றால்
  வேதாந்தியென்மட்டுஞ்சொல்வார்பாரே. ௭௮

பாரப்பாசித்தரென்றார்குளிகைபோட்டு
  பகுத்தறிவாருன்மனையைப்பகுந்துபோற்றி
நேரப்பாதம்மோடுபூரணித்தினின்று
  நேராகவோடம்போல்நீஞ்சிபாடி
சேரப்பாதிரும்பிவந்துபுக்குவார்கள்
  செகத்திலுள்ளசித்தருக்குஅடுத்தவாறு
கூறப்பாபூரணத்திற்றிசைநாதந்தாண்டி
  கொங்கணர்தான்சிலம்பொலியைக்கூடினாரே. ௭௯

கூடினார்மூலகுருபேரனென்று
  கோடானகோடிசித்தரோடிப்பார்த்தார்
ஆடினாராடினாரேறமாட்டார்
  ஆச்சரியங்கொங்கணர்தாமகண்டிசித்தார்
ஓடினாரோடினாரனேகங்கோடி
  யோங்கிநின்றநாதத்திலொன்றிப்போட்டு
தேடினார்தேடினார்குளிகைதன்னைச்
  சித்தருக்குச்சொரூபணிதுகிட்டும்வாறே. ௮௰

வாரான சுரூபமணியாருடையவர்க்கம்
மகத்தானதெக்ஷணாமூர்த்திவர்க்கம்
கூறானதொன்றுகிநிஷ்களங்கமாகிக்
குவிந்துநின்றபொருளாகிக்கூறுஞ்சுதா
தாரானபதற்பதமாய் அதுவுமற்று
சச்சிதானந்தத்தில்நின்றஆசான்
பேரானபிள்ளைகட்குமணியுமீந்து
பெரும்பாதைமகாரமென்றுபேசினாரே. அக

பேசியதுர்க்கந்தமென்னவென்றுகேட்டால்
பெருவிரலேநீபாச்சுமெய்விரலேபோத
மாசியதுவற்றக்காற்கவிந்தெடுக்குமுன்னே
பக்களையி தபாரென்றுகாட்டி
தேசியதுமகாரவித்தைசென்றுகூட்டி
செப்பாதேமகாரவித்தைகுளிந்தஞானம்
வாசியதுக்கருகாகுங்கண்டுகொள்ளு
மக்களேசின்முகத்தில்நடிப்பாலாமே. அஉ

நடுவென்னவெட்டவெளியொன்றுமில்லை
நானுமில்லைநீயுமில்லையகண்டவீதி
கடுவென்னலகுவென்னமனஞ்செவ்வானால்
கண்டுகொள்ளுமென்றுசொல்லிகரத்திற்காட்டி
சுடுவென்னதாபமென்றமுனையைமுந்தி
சுடுகிறதுத்திவென்னமௌனத்தீதான்
விடுவென்னவிந்திரியபாம்பைநீயும்
விட்டகன்றுவறிவோடேயேவுமேவே. அந

மேவுமென்றகைலாயபரம்பரையாமானு
வெகுகோடிரிஷிகளுக்குவுபதேசித்தார்
மேவுமென்றுசித்தறிலேயனேகங்கோடி
மேருவிலேயிருந்தார்க்குமுபதேசித்தார்

மேவுமென்றுயென்னேடேபதினறுபேர்க்கு
 விளங்கியவர்பதம்பிடிக்கவுபதேசித்தார்
மேவுமென்றுமெழுவருடன்றிருமூலருக்கு
 விளம்பினர்மெஞ்ஞானம்விளம்பினரே. அச

விளம்பியதோர்நாங்களெல்லாங்கயிலாசவர்க்கம்
 மேருவிலேயெடுத்தவுடலெங்களுக்குமக்காள்
அளம்பினதோர்ஜனகாதியையரைத்தான்விட்டு
 அரைக்ஷணமும்பிறியார்களடியைவிட்டு
தளம்பினதோர்கொடிக்கல்லோகொழும்புபோலே
 சதாசித்தங்காத்திருந்தோமையாகிட்ட
கிளம்பினதோர்பந்துபோலனேகம்பிள்ளை
 கொடியிட்டுமொட்டியங்கேகிட்டினரே. அரு

கிட்டினேங்கைலாயபரம்பறையினலே
 கேளுமக்களாச்சரியங்கொங்கணர்தான்சென்று
கிட்டினேமென்றுசொல்லியீசானத்தே
 கெடியானரசமுண்டுசட்டைபோக்கிக்
கிட்டினேமீசானந்துதித்தோமென்று
 கெடியாகதவசிருந்துமுத்தனுகி
கிட்டினேமென்றுசொல்லிதக்ஷணுமூர்த்தி
 கொடியானபதம்பிடித்துபணிந்திட்டாரே. அசு

 பணிந்திட்டகொங்கணரைப்பார்த்துநாயன்
பாருலகிற்பிறந்தவனேவிப்படிதானனல்
 மணிந்திட்டச்சடம்போக்கிக் கைலாயத்தேக
மானதுதான்வெகுகடினமதிகமெத்த
 கனிந்திட்டகனிவாலேவீறத்தாலே
கலங்காமற்சமாதியுற்றுகயிலாயத்திற்
 றணிந்திட்ட புத்திகொண்டுயிங்கேவந்தாய்
சாதகமாயொருவரையுங் கண்டிலேனே. அஎ

கண்டிலேனுச்சரியங்குமாரனேபாருங்
கலந்தநற்சென்மமிவர் கைலாயமானார்
ஒண்டிலேநாலதுக்குமகத்துவந்தானென்ன
வுற்றசிவவிந்துவுன்னிலப்படிதானுச்சு
கண்டிலேனிவரைப்போற்சித்தர்காணேன்
காரணமாயிவனுக்குதீஷிப்பேனுன்
பண்டிலேன்கொங்கணரை பயங்கவேண்டாம்
பரம்பரமாய்வயதுதந்த மௌனந்தானே ௮௮

மௌனவித்தைமூலருககுமுன்னேசொன்னேன்
மருவியவர்காலாங்கிக்கதுவேசொன்னார்
மகத்தானபோகருந்தாஆனக்குச்சொன்னார்
மவுனவித்தையகண்டாதியறிந்துகொள்ளு
மற்றென்றுமயக்கமற்றுமௌனத்தார்க்கு
மௌனவித்தையெப்தாக்காலவனேஞானி
வாய்திறந்துபேசாதேமகாரம்நன்றே. ௮௯

நன்றானமௌனத்திற்கடிகைசேர
நல்வினையுந்தீவினையும்நாசமாகும்
நன்றானமௌனமென்றுநினைக்கமுத்தி
நல்லோர்கள்நினைப்பார்கள்மற்றோர்காணார்
நன்றானமவுனமல்லோரிஷிகள்சித்தர்
நாலுதிக்குஞ்சொரூபமல்லோசாத்திரங்கள்தோறும்
நன்றானமௌனத்தைக்கண்டார்முன்னே
நலமாகக்கூப்பிடுதுகண்டிலாரே. ௯0

கண்டிலார் மௌனத்திலனேகசித்தி
காணுமப்பாசொல்லுகிறேநன்றாய்க்கேளு
மண்டிலார்மந்திரங்கள்செபிக்கும்போது
அப்பனேமௌனமென்றதீக்ஷைகேளு

ஒண்டிலாய்வாய்மூடிபோச்சுமற்று
ஒருசேரைசமைத்துண்ணுமொருபோதப்போ
விண்டிலாதென்னேரஞ்செபித்தாயானால்
விளங்கியதோரேமூலக்ஷமந்திரமுஞ்சித்தே. ௬௧

சித்தாகுஞ்சித்தியுமாமெட்டெட்டுமாடுந்
திறமாகநின்றவர்க்குமந்திரமுஞ்சித்தி
பத்தாகும்வேதத்தில்மந்திரந்தைப்பாவி
பலபலெனப்பேசியவர்சேவிப்பார்கோடி
கத்தாதும்நாய்போலேகற்றியென்ன
காசிக்குமாநரதிசித்தியில்லை
முத்தானமௌனம்விட்டால்மௌனம்பாழாச்சி
மோசமிந்தவேதமெல்லாம்பொய்யென்பாரே ௬௨

பொய்யென்றுயெண்ணியெண்ணியுலகங்கெட்டுப்
போச்சப்பாவதனாலேயுகபேதமாச்சு
கையென்றயோகத்தில் மௌனமுட்ட
கடுஞ்சித்திபறிவுமட்டுங்கலந்துதாக்கு
கையென்றநிர்த்தமப்பா ஆறிற்காணுஞ்
சாதகமாய்மேல்மூலந்தாண்டிக்காணும்
மெய்யென்றுபிடித்தாக்காலவனேயோகி
விரைந்துயிதையறியாட்டால்விருதாமாடே. ௬௩

விருதன்றேவுலகத்திலாசாரென்று
வேடமிட்டுவேஷமிஞ்சிமோடியேற்றி
விருதன்றேபணம்பறித்துப்பிழைப்பாரையோ
வேதாந்தமொன்றுமில்லைச்சாங்கமென்பார்
விருதன்றேகெடுத்துவிட்டாருலகத்தோரை
வேஷமென்றுமயக்காலேமயங்கிப்போனார்
விருதன்றேசீஷருடபாவமெல்லாம்
விளையாட்டுப்போல்வாங்கிவிளைந்திட்டாரே. ௬௪

விழுந்திட்டாரென்றறிநதுகொங்கணரேநீர்தான்
வெகுபிள்ளைபெற்றிராமுன்னூறுபிள்ளை
நழுந்திட்டப்பிள்ளையுண்டோதிறந்தானுண்டோ
நலமாகவும்மைப்போலானொருண்டோ
அழுந்திட்டசயாதியுண்டோதியானமுண்டோ
ஆகாதபிள்ளையுண்டோசொல்லுஞ்சொல்லுங்
கொழுந்திட்டதேவரீர்கருணையினாலேயா
கொஞ்சமறபிள்ளையிலேகூடிலேனே. ௬௫

கூடாதநல்லபுத்திசித்தர்வென்றார்
கொள்கியேவரங்களெல்லாபூமியிலேதட்டி
நீடாகத்தண்டனிட்டுஅழைத்துக்கொண்டு
நிமிசத்திற்குகையினுள்ளே நேர்ந்துபோனார்
ஆடானலதுவாட்டு வன்றேசித்தர்
ஆனந்தபோகமுண்டஆண்மையாண்மை
ஓடானலதுவொட்டுகிர்க்குணத்தின்வீதி
யொருமனதாய்நின்றுபுத்தியுரைப்புத்தானே. ௬௬

கானென்றகொங்கணர்போல்பிள்ளைபெற்று
லதற்குமடாகுட்டென்றார்கைலாயமூர்த்தி
வானென்றசுந்தரானந்தன்விந்து
வரவற்றபூரணமேதாபமென்ன
கானென்றவெளிகடக்கஅறிவோம்நாங்கள்
கரையற்றபோகத்தைப்பானஞ்செய்வோம்
கோனென்றகைலாயபூரணமேதேவர்
கொள்கியதோருற்பணமும்லயமுஞ்சொல்லே, ௬எ

சொல்லுகிறேன்கேளுங்கள்மக்காள்நீங்கள்
சுகமாகவாரிதியில்மேசஜலம்போலே
அல்லுகிறதிவலையைப்போற்பிறப்புண்டாச்சு
அதுவோங்கும்விபரமென்னசொல்வீரையா

பல்லுகிறசந்திரனாட்நீரையபபாவாங்கு
பாஙகானரவி பஙகேநன்றுப்பபாரு
சொல்லுகிறகெறபததிலவிநதுவுன்னி
சிநதூளிபரஞ்சததிறு றசினனமாசசே. ௯௮

ஆசசபபாஜனனமிநதபபடியேயாகி
லடஙகிறதுமககினியுமரவிமதியுஙகூடி
வாசசப்பாசநதிரனிறகலநதுபோனால்
மானுகிறவிதமிது தான் குளிாநதுபோகும்
நீச்சபபாசின்னமொடுபாணமரண்டும்
நேராகமனோன்மணியைதநொட்டுமீறும்
ஊசசபபாலககமிலலையெழுவகைதநோறறு
முத்தமனோநாலுவகையோனிகாணே. ௯௯

காணிநதப்படியெல்லாங்கண்டுகொண்டு
கலஙகாமலிருக்காமல்யுகமேகோடி
வாணிநதசாயமட்டேஜெகச்சாலமெல்லாம்
மனநதாண்டி அறிவிலவநததெல்லாமபோச்சு
ஆணிநதபபடிநீஙகள சமாதிகொண்டு
அரைவிட்டாலகுளிகையிட்டுவோடிப்பாரு
தோணிநதபபடிசொன்னேன்முன்னைத்தூக்கு
சுழல்காற்றுததுரும்பதுபோலமவுனமாமே. ௱
மௌனமென்றீரேனையாண்டதக்ஷணாமூர்ததி
மலர்பணிநதஞானமதுநூறுஞசொன்னேன்
மௌனமென்றநாதாக்கள்பதத்தைப்போற்றி
வகையோடேநிகண்டாகவாதனுசொன்னேன்
மௌனமென்றீராஞானமபொய்யென்றுசொல்லி
வாகானசெயமண்டிபோட்டேநூறறில்
மௌனமெனறேசமரசததான்மககாளமக்காள்
வாகானஞானமுறைமுற்றுங்காணே. ௱௧

பின்ஞானம-நூறும் முற்றிற்று.

உ

பரமபதி துணை.

காகபுசுண்டர் ஞானம்-௮௰.

காப்பு.

சிறந்தபரா பரமாகி யெங்குந்தானாய்த்
 தீர்க்கமுடன் ரவிமதியுஞ் சுடர்மூன்றாகிப்
பிறந்தருளும் ஐம்பூத மாயைதோன்றிப்
 பல்லாயிரங் கோடிஅண்டம் படைத்தபோதம்
வரம்பெருகி யனந்தனந்தம் உயிருமாகி
 மதபேத மாகவுந்தான் வடிவைக்காட்டிச்
சரம்பெருகி அண்டத்தி லெழுந்துநின்ற
 சச்சிதா னந்தமதைப் பணிகுவோமே. ௧

ஓமென்ற சுழினையடா அண்டவுச்சி
 ஓமுடிந்த பட்டணத்துக் கப்பாற்சென்று
நாமென்று சொல்லற்று யோகஞானம்
 நாட்டுகிறேன் அஞ்சனமுந் திலதப்போக்கும்
வாமென்ற வயித்தியமும் அஷ்டகர்மம்
 வாதமென்ற வித்தையெல்லாந் தெளிவதாகக்
காமென்ற பீடமதிற் கண்டுதேறிக்
 காட்டுகிறேன் மௌனஞானக் கருவைப்பாரே. ௨

பாரேநீ யோகமென்ற வழியைச்சொல்வேன்
 பத்தடா ஐம்புலனைப் பரத்தினூடே
சீரொருவர் தெரியாமல் மதங்கள்பேசித்
 திருவான வுச்சியிலே சேராமற்றான்
ஆரொருவன் ஆதாரம் வெவ்வேறென்று
 அடுக்கடுக்காய்ப் பன்னிரண்டு தலங்களென்று
வீரேதான் பேசியே மெலிந்து போவான்
 விஷமுண்ட அண்டமதை விரும்பிக்காணே. ௩

காணப்பா தலமெல்லாம் அண்டவுச்சி
கமலமடா பதினெட்டாங் கோட்டிற்சென்று
பூணப்பா மனதையுந்தான் பிசகொட்டாமற்
பூட்டடா பிரமத்திற் புகுந்தென்றனும்
வீணப்பா மந்திரங்க ளொன்றுமில்லை
விதியில்லை மதியில்லை கெதியுமில்லை
தோணப்பா தோணுமடா மனதொன்றான
சுத்தமுடன் நீயிருந்து தவஞ்செய்வாயே. ௪

செய்யப்பா வாசிமுனி மகனேகேளு
தீர்க்கமுடன் முன்னுரைத்த ஆயிரத்தில்
மெய்யப்பா சரக்குவகை நீத்துவகையெல்லாம்
மேன்மையுடன் கட்டினங்கள் உருக்கினங்கள்
பொய்யப்பா சொல்லவில்லை ரத்னப்போக்கு
புனிதமுடன் சரியாகச் சொல்லிப்போட்டேன்
வையப்பா இந்நூலில் மவுனமெல்லாம்
வகையாகச் சொல்லுகிறேன் பணிந்துகேளே. ரு

கேளப்பா கேசரமே அண்டவுச்சி
கெட்டியாய்க் கண்டவர்க்கே மவுனமாகும்
ஆளப்பா பரப்பிரம்ம போகமென்று
அடுக்கையிலே போதமுந்தான் உயரத்தூக்கும்
வாளப்பா கெவுனமணி விந்துநாதம்
வலுத்ததடா கெட்டியாய்த் திரண்டுபோகும்
நாளப்பா அண்டமெல்லாஞ் சுத்தியோடும்
நடனமிடுஞ் சிலம்பொலியுங் காணலாமே. சு

காணலாம் பிரமத்தில் நிர்ணயந்தான்
காட்டுகிறேன் வாசிமுனி கருவாய்க்கேளு
பூணலாம் அண்டவுச்சி தன்னில்நின்று
பொரிகளையு முண்டாக்கிப் புவனந்தன்னில்

தோணலாம் உயிர்ப்பயிரைப் படைத்தெந்நாளுந்
தொந்தமென்றும் எழுவகைத் தோற்றமாகி
ஆணலாம் நாலுவகை யோனியாகி
அண்டமடா அனந்தனந்த மானவாறே. ௭

வாறான பிரமத்தில் நடுவேமைந்தா
வந்துதடா ரவிமதியுஞ் சுடர்மூன்றாகிக்
கூறாகப் பின்னியடா கீழேபாயுங்
கூறுகிறேன் இருகண்ணில் ஒளிவைக்கேளு
வீரான அண்டவுச்சி முனைக்கப்பாலே
வெற்றியுடன் நரம்பதுதான் விழுதுபோலே
நேராக இருகண்ணிற் பின்னலாகி
நிச்சயமா மொளிவாகி நிறைந்தார்பாரே. ௮

பாரப்பா பரப்பிர்மம் ஒளியினாலே
பத்தியே நரம்புவழி பாயும்போது
ஆரப்பா இருகண்ணில் ஒளிவதாகி
அண்டமெல்லாம் யேகமாய்த் தெரியலாச்சு
காரப்பா நரம்பென்ற விழுதுவட்டம்
கபாலத்தில் முக்கூறாய்ச் சுழினையாச்சு
வீரப்பா காதுகளும் நாக்குக்குந்தான்
வெற்றிபெற இன்னமுநதா னுரைக்கக்கேளே. ௯

கேளப்பா மூலமடா லிங்கந்தன்னில்
கிருபையுடன் தண்டுக்குங் கீழ்மேலாக
நாளப்பா தமர்போலே பிடரிமார்க்கம்
நன்றாக ஓடுமடா நரம்பினூடே
வாளப்பா அண்டமுட்டி வுயரமைந்தா
வலுவாக முன்சொன்ன நரம்பினூடே
தேளப்பா சேர்ந்துமிகப் பின்னலாகிச்
சிறந்திடவே புருவமத்தி யாகும்பாரே. ௧௦

பாரடா புருவமத்தி யேதென்றாக்கால்
பரப்பிர்ம மானதொரு அண்டவுச்சி
நேரடா முன்சொன்ன நரம்புமத்தி
நிலைத்துதடா சுழினையென்று நினைவாய்ப்பாரு
வீரடா அண்ணாக்கில் நேரேமைந்தா
மேவடா மனந்தனையுஞ் செலுத்தும்போது
காரடா சுழினையிலே மனந்தான்பாய்ந்து
கலந்தைந்து பூதமுந்தான் ஒன்றாய்ப்போமே. கக

போமடா முன்சொன்ன நரம்பினூடே
பூரித்து ரவிமதியுஞ் சுடர்தான்மூன்றும்
ஆமடா பின்னியுந்தான் கீழேபாயும்
அந்தரங்கந் தன்னைப்பார்க்க அடங்கிப்போகும்
நாமடா வெளிதிறந்து சொல்லிவிட்டோம்
நாதாந்த பரப்பிரமம் நாட்டந்தன்னை
ஓமடா விந்துவுந்தான் அண்டவுச்சி
உறுதியுடன் சித்தமதை யூணிப்பாரே. கஉ

பாரான சாகரமே அண்டவுச்சி
பதினாலு லோகமெல்லாம் பரத்தினூடே
சீராகத் தெரியுமடா மவுனமார்க்கஞ்
சித்தான சித்துவிளை யாடிநிற்கும்
வீரான மந்திரங்கள் பிறந்ததெப்போ
விஷ்ணுவென்றும் பிரமனென்றும் வந்ததெப்போ
கூரான முக்குணங்க ளுதித்ததெப்போ
கூறாத அக்ஷரத்தின் குறியைக்காணே. கங

காணார்கள் பிரமமுந்தா னுதிக்குமுன்னே
கருணையுள்ள மந்திரங்கள் பிறந்ததுண்டோ
தோணாமல் மந்திரங்க ளனந்தங்கற்று
சுழினையென்ற மூக்குநுனி தன்னைப்பார்த்து
வீணாகத் திரிந்துமிகப் பித்தர்போலே
வேறேடே கெட்டுழல்வான் விருதாமாடு
கோணாம லண்ணாக்கின் நேரேமைந்தா
குறிப்பறிந்து பார்த்தவர்க்கே முத்திதானே. கச

முத்தியடா மந்திரத்தை நினைக்கும்போது
மோசமடா மனந்தானும் ரெண்டாய்ப்போகும்
சத்தியடா மனந்தானே யேகமாகத்
தனித்திருந்து நித்திரையைத் தள்ளிமைந்தா
புத்தியடா பிரமத்திற் புகுந்துகொண்டாற்
பூலோக மெல்லாந்தான் பணிவாருன்னை
எத்தியே திரியாமற் பிடரிமார்க்கம்
ஏறுகின்ற வாசியுந்தான் கற்பந்தானே. கரு

தானென்ற கற்பமடா மதுவுண்டாக்கல்
சஞ்சார சமாதியென் றதற்குப்பேரு
ஊனென்ற பசிதீரும் கோபம்போகும்
உதயகிரி தனிற்சென் றாடுருவிப்பார்க்கத்
தேனென்ற திரையேழுந் தீய்ந்துபோகுந்
திருவாரே உச்சிநடு சென்றபோது
கோனென்ற கருவியெல்லா மொடுங்கிப்போகுங்
கூற்றுவனு ராட்டமதைப் பார்க்கலாமே. கசா

பார்க்கலாம் ஒருகாலே உசரத்தூக்கிப்
பாடுவா ரொருகாலேத் தாழவிட்டு
ஏர்க்கையிலே மேல்நோக்குங் காலேகேளு
என்மகனே மதியென்ற ததற்குப்பேரு
காக்கையிலே கீழ்நோக்குங் காலேமைந்தா
கண்டுபார் ரவியென்று கருதலாகும்
மார்க்கமுடன் அண்டவுச்சி மேலேதானும்
மகத்தான வன்னியிருப் பிடந்தான்பாரே. கஎ

பாரப்பா யிதையறியார் சித்தர்கூடிப்
பார்தனிலே அறுபத்து நாலுயோகம்
ஆரப்பா யிருக்குதென்று வெவ்வேறாக
அலேந்தலேந்து கெட்டவர்க ளனந்தங்கோடி
நேரப்பா ராஜாங்க யோகம்பார்த்து
நினேயறிந்து கண்டவனே கோடிக்கொன்று
வீரப்பா பேசாமல் மனக்கண்ணாலே
விந்துவடா பாய்ந்ததலம் வெளியைக்காணே. கஅ

காணுத காக்ஷியெல்லாங் கண்ணிற்கண்டு
காகமடா புசுண்டனென்று பேரும்பெற்றேன்
தோணுமல் நானலேந்து சிறிதுகாலம்
துருவமென்ற பிரமத்தை யடுத்துக்கேட்க
நாணுமல் அண்டவுச்சி தன்னிலேதான்
நாடியே மனதாலே நாட்டமாகக்
கோணுமல் பாருமென்று எனக்குச்சொல்லக்
கூசாமல் மனதொன்று யிருத்தினேனே. கக

இருதநியே இருதயத்தில் மனதொன்றாக
ஏகபர மாம்பொருளை யிருத்தியொன்றாய்
நிருத்தியே வெகுகோடி காலமட்டும்
நிவிகற்பசமாதியிலே நிறைந்தெந்நாளும்
பொருந்தியே லாடக்கண் திறந்துபார்க்கப்
பூலோக மெங்குமொன்றாய் நிறைந்தேன்மைந்தா
கருக்கொன்றாய் நிருத்தியடா கபாடம்நீக்கிக்
காரணத்தைக் கண்டுவிளை யாடுவாயே. ௨௦

விளையாடிப் போதமய மாகவுந்தான்
வெட்டாத சக்கரத்தின் வெளிச்சம்பார்த்து
நிலையான அண்டமதில் நெற்றிக்கண்ணை
நீயறிந்து அரவுவிஷந் தன்னைப்போக்கி
அலையாம லாரொருவ ருறவுமற்று
ஆயிழையாள் மோகமதை யதற்றுத்தள்ளி
மலையாமற் பிரமமே துணையென்றெண்ணி
மவுனமென்று மனந்தனையு மடக்கிநில்லே, ௨௧

நில்லென்றால் லோகத்தில் மனிதர்தாமும்
நிஷ்டையுடன் சமாதியுமே பொருந்தாமற்றான்
வல்லவர்போல் வேதங்கள் புராணகாவியங்கள்
மந்திரங்கள் கோடான கோடியென்றும்
செல்லுவார் கோவிலென்றுந் தீர்த்தமென்றுந்
திருடர்கள்தா னலைந்தலைந்து திரிவார்மட்டை
வெல்வதொரு பிரமநிலை யறியாமற்றான்
வேரற்ற மரம்போலே விழுவார்பாரே. ௨௨

பாரப்பா மலரெடுத்து லிங்கம்வைத்துப்
பார்த்தீப லிங்கத்தைப் பணியாமற்றான்
வீரப்பா மணியாட்டிப் பூசைசெய்து
வீணர்கள்தான் கத்தபம்போற் கதறுவார்கள்

தேரப்பா மலரதனைக் கிள்ளும்போது
செத்தசவம் போலாச்சு தெளிந்துபாரு
காரப்பா மனங்கொண்டு பரததினூடே
கண்டவரே கயிலாசத் தேகந்தானே. உரு
தானென்ற பிர்மத்தை யடுத்திடாமற்
றூரணியில் தெய்வமடா அனந்தமென்றும்
ஊனென்ற குருவென்றுஞ் சீஷனென்றும்
உதயகிரி பாராத வுலுத்தமாடு
வேனென்ற பொய்களவு கொலைகள்செய்து
வேசையர்மே லாசைவைத்து வீணாகிக்
கோனென்ற குருபாதம் அடையமாட்டான்
கூடுவான நரகமதில் வீழ்வான்பாரே. உச
பாரப்பா நாக்கையுந்தான் அண்ணாக்கேத்திப்
பார்தனிலே பார்த்தவர்க்குப் பலிதமில்லை
ஆரப்பா கண்வெடிக்குந் தேகம்போகும்
அடையோக மென்பார்களாகாதப்பா
சாரப்பா மனந்தனையும் அண்ணாக்கில்நேரே
சார்ந்துமிகப் பார்க்கையிலே வாசிதானும்
வீரப்பா மேலடங்குங் கீழ்நோக்காது
வெட்டாத சக்கரத்தை யறியலாமே. உரு
அறியலாம் மனந்தானே உயிர்தானாகும்
அண்டத்திற் சேர்ந்திடவே ஆகும்முத்தி
பரியேறிச் சவாரியுமே நடத்தலாகும்
பஞ்சமா பாதகங்கள் பறந்தேபோகும்
விரிவான மனந்தனையும் அணுவதாக்கி
விட்டகுறை தொட்டகுறை விதியைப்பார்த்துக்
குறியான குண்டலியா மண்டவுச்சி
கூறுகிறேன் முக்கோண நிலையதாமே. உசா

தாமென்ற உலகத்தில் மனிதரோடே
சஞ்சாரஞ் செய்யாமற் றனித்துநில்லு
ஓமென்ற ஊண்மிருந்து உண்டிடாதே
ஓரமாய் வழக்கதனை உரைத்திடாதே
ஆமென்றி அட்சரத்தை மறந்திடாதே
ஆபாச மாகவுந்தான் திரிந்திடாதே
காமப்பேய் கொண்டவனோ டிணங்கிடாதே
காரணத்தைக் கண்டுவிளை யாடுவாயே. உஎ

விளையாடிக் கருநெல்லி பறித்துஉண்ணு
வேகாத தலையாகும் விரும்பிப்பாரு
மலையாமல் வெண்சாரை பிடித்தேவுண்ணு
மைந்தனே சாகாக்கா லதுவேயாகும்
அலையாமல் ஜோதியுட பாலையுண்ணு
அக்கினியாங் கம்பமடா சுழினையாச்சு
கனுநாலு போகிறதை யெட்டிற்சேரு
கபடற்ற தேகமடா கண்டுபாரே. உஅ

கண்டுகண்டு மனந்தானே அண்டஞ்செல்லக்
கலைநாலும் எட்டிலையுஞ் சேர்ந்துபோகும்
தண்டுமுண்டு செய்யாதே மனம்வேறானல்
தற்பரத்தை யெப்போதும் அறியமாட்டாய்
தொண்டுசெய்து பெரியோரை யடுத்துமைந்தா
தொழுதுநீ யென்னாலே யன்பாய்க்கேளு
விண்டுமவர் சொல்லாட்டா லின்னால்சொல்லும்
வெத்திபெற மனதடக்கம் வைத்துப்பாரே. உகூ

பாரப்பா விஞ்சைமந்த்ரம் யென்பார்வீணர்
பாயடா விஞ்சைகிரி தன்னில்மைந்தா
ஆரப்பா சென்றேறிப் பார்க்கும்போது
அதீதமுள்ள விஞ்சைமந்த்ரம் அனந்தங்காட்டும்

நேரப்பா சிருஷ்டிப்புச் சங்காரங்கள்
நிமிஷத்திற் செய்திடுவாய் நிலைமைக்கண்டால்
வீரப்பா அமிர்தமுந்தான் குமிழிபாயும்
வேரில்லாககனிதனையு முண்கலாமே. ௯0

உங்கலாம் பிரமத்தி லடங்கும்போது
உறுதியுள்ள அண்டத்தி லுருகிப்பாயுந்
திங்கலாந் தோணுமடா அமிர்தச்சீனி
தித்திப்புப் பாலுடனே திடமாய்மைந்தா
தங்கலாந் தேகமது அழியாமற்றன்
சட்டையுமே கழன்றுமிகத் தங்கம்போலே
பொங்கலாம் மெஞ்ஞானத் தீபத்தாலே
பூரித்துப் பார்த்திடவே புவனமொன்றே. ௯௧

ஒன்றான பிரமமே வெவ்வேறாக
உலகத்தி லந்தமடா கூத்துமாச்சு
நன்றாச்சு தீதாச்சு நாலுமாச்சு
ஞாயிறு திங்களென்ற பேருண்டாச்சு
குன்றாச்சு ஊர்வனங்க ளனந்தமாச்சு
குருக்களென்றுஞ் சீஷனென்றுங் குறிகளாச்சு
நன்றாச்சு நாதவிந்தும் அடங்கிநின்ற
நாதனையு மோர்மனதாய் நாட்டுவாயே. ௯உ

நாட்டுவார் சித்தரெல்லாம் பேதமாக
நலம்போலே சாஸ்திரங்கள் கட்டினார்கள்
பூட்டியே மனிதரெல்லாம் நூலைப்பார்த்துப்
பூரணமாய் அண்டமதைப் பாராமற்றன்
காட்டிலே திரிந்தலைந்த மானைப்போலே
கபடமாய் வாய்ஞானம் பேசுவார்கள்
கூட்டிலே அடைத்திருக்குங் குயிலைப்பாரார்
கூறாத மந்திரத்தின் குறியைப்பாரே. ௯௩

குறியென்ற உலகத்திற் குருக்கள்தானும்
கொடியமறை வேதமெல்லாங் கூர்ந்துபார்த்து
அறியாமற் பிரமத்தைப் பாராமற்றான்
அகந்தையாய்ப் பெரியோரை அழிம்புபேசி
விரிவான வேஷமிட்டுக் காவிபூண்டு
வெகும்பிலுக்காய் அலைந்திடுவான் நாயைப்போலே
பரியாச மாகவுந்தான் தண்டுமேந்திப்
பார்தனிலே குறடிட்டு நடப்பான்பாரே. ௩௪

பாரப்பா சீஷர்களை யழைப்பான்பாவி
பணம்பறிக்க வுபதேசம் பகர்வோமென்பான்
ஆரப்பா பிர்மஙிலை காட்டாமற்றான்
ஆகாசப் பொய்களையு மவன்தான்சொல்வான்
நேரப்பா சீஷனுக்குப் பாவமாச்சு
நிஷ்டைசொல்லுங் குருக்களுக்குத் தோஷமாச்சு
வீரப்பா அடங்குகின்ற இடத்தைப்பாரான்
விதிபோலே முடிந்ததென்று விளம்புவானே. ௩௫

வானென்ற அண்டமதிற் சென்றுபுக்கி
வடவரையி லுச்சிநடு தீபங்கண்டு
தேனென்ற சுத்தசிவ கங்கைதன்னில்
தீர்த்தங்க ளாடிதிரு நாமமிட்டுக்
கோனென்ற மனதன்பாய் மலராய்ச்சசாத்திக்
கொடியமறை வேதமுந்தா னடக்கங்கண்டு
தேனென்ற சித்தமே புத்தியாகத்
தெளிந்தவரே மெஞ்ஞானி யாகும்பாரே. ௩௬

பாரண்ட மதையொன்றாய்ப் பார்க்கும்போது
பலபேத மாயையெல்லா மருண்டேயோடுஞ்
சீரண்ட மகிலாண்ட பிர்ம்மாண்டங்கள்
ஜெனித்தவகை யுயிர்தோறும் நீயாய்நிற்பாய்

காரண்ட லாடக்கண் திறந்தபோது
கண்கொள்ளாக் காட்சியெல்லாங் கலந்தேகாட்டும்
வீரகண்ட மேலவட்டம் விரிந்தசக்ரம்
மெஞ்ஞான வெளியதனிற் றொடர்ந்துகூடே. ௩எ

கூடுவதென் குணமறிந்து மனதொன்றாகக்
கூத்தாடித் திரியாமற் கெவுனமாகப்
பாடுவது பலநூலைப் படித்திடாமற்
பராபரத்தி னுச்சிநடு வெளியேசென்று
ஆடுவது தொங்கோமென் றட்டைப்பார்த்து
அடுக்கடுக்கா யாயிரத்தெட் டிதழுங்கண்டு
வாடுகிற பயிர்களுக்கு மழைபெய்தாற்போல்
வாடாத தீபமதை யறிந்துபாரே. ௩அ

பாரென்று மெஞ்ஞானம் பகர்ந்துசொன்னீர்
பராபரத்து நிலையினுட பாதஞ்சொன்னீர்
வீரென்ற அண்டமெல்லாம் பாழதாகி
விராட்பிர்ம மொண்டியா யிருக்கும்போது
சீரென்ற வுயிர்களெல்லா மிருப்பதெங்கே
சித்தருடன் திரிமூர்த்தி யிருப்பதெங்கே
கூரென்று நீர்தங்கு மிடந்தானெங்கே
குருபரனே இந்தவகை கூறுவாயே. ௩௯

கூறுகிறே னென்மகனே வாசிநாதா
குணமான யீஸ்பரனுர் சபையிற்கூடி
தேறுகின்ற பிரளய காலந்தன்னிற்
சீவஜெந்து சித்தருடன் முனிவர்தானும்
வீருடனே யெங்கேதா னிருப்பாரென்று
விமலருந்தான் விஷ்ணுவையும் விபரங்கேட்கக்
கார்மேக மேனியனுங் கடவுளரைநோக்கிக்
கண்டுமிகப் பணிந்துமினிக் கருதுவாரே. ௪௦

கருதுவான் ஆலிலைமேற் றுயில்வேன்யானுங்
 கனமான ஜீவஜெந்து அனந்தசித்தர்
உறுதியா யெந்தனுட கமலந்தன்னில்
 ஒடுங்குவா ராதரித்து மிகவேநிற்பேன்
வருதியாய்ப் புசுண்டருந்தான் வருவாரென்று
 வலவனுடன் மால்தானும் உரைக்கும்போது
சுருதியா யெனையழைத்துச் சிவன்றான்கேட்கச்
 சூத்திரமாய் நல்வசனம் மொழிந்தேன்பாரே. ௪௧

பாரென்று சிவனுடைய முகத்தைப்பார்த்துப்
 பல்லாயிரங் கோடியண்ட வுயிர்களெல்லாஞ்
சீரென்ற சித்தருடன் முனிவர்தானுந்
 திருமாலும் ஆலிலைமேற் றுயிலும்போது
கூரென்ற வுந்தியுட கமலந்தன்னிற்
 கூடியே அடைந்திருப்பார் குணமதாக
வீரென்ற ஐவரையுந் தாண்டியப்பால்
 வெகுசுருக்காய் வீதிவழி வந்தேன்பாரே. ௪௨

பாரப்பா ஆகாசஞ் செல்லும்போது
 பாலகனே சக்கரந்தான் சுத்தியாட
ஆரப்பா சக்கரத்தைப் பிசகொட்டாமல்
 அதின்பேரி லேறியுந்தா னப்பாற்சென்றேன்
நேரப்பா நெடுந்தூரம் போகும்போது
 நிச்சயமாய்க் கம்பத்தின் நிலையைக்கண்டேன்
வீரப்பர் அக்கினிபோல் படர்ந்துநிற்கும்
 வெளியொன்றுந் தெரியாம லிருக்குந்தானே. ௪௩

இருக்குமடா வெங்குமொன்றாய் அக்கினியின்கம்பம்
 என்மகனே கம்பத்தில் நடுவேமைந்தா
உருக்கமுடன் பெண்ணரசி யொன்றிநிற்பாள்
 ஓகோகோ அவள்முகத்தைப் பார்க்கும்போது

பெருக்கமுடன் முன்பார்த்தாற் புருஷரூபம்
புத்திரனே பின்பார்த்தாற் பெண்போல்ரூபம்
வருக்கமுடன் யான்றானுங் கம்பத்தூடே
வஸ்தோடே வஸ்தாக இருந்தேன்பாரே. ௪௪

பாரப்பா இப்படியே அனந்தகாலம்
பராபரத்தி னூடேதா னிருந்துவாழ்ந்தேன்
ஆரப்பா பிரமமுந்தான் மனதிரங்கி
அகண்டமதைப் படைப்பதற்கு அருளும்போது
வீரப்பா கம்பத்தி லிருந்தபெண்ணும்
விமலரென்றும் உமையென்றும் மிகவேதோன்றி
சீரப்பா சக்கரத்தி லிருந்துகொண்டு
திருமாலைத் தானழைக்கத் தீர்க்கம்பாரே. ௪௫

பாரப்பா திருமாலுங் கமலந்தன்னில்
பல்லாயிரங் கோடிஅண்ட வுயிர்களெல்லாம்
நேரப்பா தானழைத்து முக்குணத்தைக்காட்டி
நிலையான சமுத்திரங்கள் பூமிதானும்
சேரப்பா ரவியோடு திங்கள்தானுஞ்
சிறந்தெழுந்த மலைகாடு ஜீவஜெந்து
வீரப்பா நவக்கிரகம் நட்சேத்ரங்கள்
வெற்றியுடன் நால்வேதம் வகுத்தவாறே. ௪௬

வாறான தெய்வமென்றும் பூதமென்றும்
வையகத்தில் வானமென்றும் பூமியென்றும்
கூறாக மகாமேரு கிரிகளென்றுங்
கோவிலென்றுந் தீர்த்தமென்றுங் குளமுண்டாக்கி
நேராகப் பிரமமே சாட்சியாக
நிலைத்ததெங்கும் உயிர்தோறும் நிறைந்தாரையா
வீராகத் திரியாமல் மவுனம்பார்த்து
வெற்றிபெற யின்னமுந்தான் உரைக்கக்கேளே. ௪௭

கேளப்பா யிப்படியே பிரளயந்தான்
   கிருபையுடன் ஏழுலட்சங் கோடியானால்
ஆளப்பா அரியயனும் ஜீவஜெந்து
   அகண்டமென்ற பிரமத்தி லடங்குவார்கள்
நாளப்பா நானுமந்தப் படியேசெல்வேன்
   நலமாக இன்னமுந்தான் அகண்டமானால்
வாளப்பா காகமென்ற ரூபமானேன்
   வடவரையின் கூடுதொத்தி யிருந்தேன்பாரே. ( )
பாரடா இப்படியே யுகங்கள்தோறும்
   பார்தனிலே நானிருந்தேன் யெந்தனையோகோடி
ஆரடா யென்னைப்போலே அறிவாருண்டோ
   ஆதியென்ற சித்தருக்கும் ஆதியானேன்
வீரடா விமலரிடஞ்செல்லும்போது
   வெற்றியுட னென்னையெடுத்து முத்தமிட்டார்
காரடா கைலைமே லிருக்கச்சொன்னார்
   காகமென்ற ரூபமா யிருந்தேன்பாரே ௪௯
காகமென்ற ரூபமா யிருந்துகொண்டு
   காரணங்க ளனைத்தையுமே கருவாய்ப்பார்த்து
வேகமுடன் வெளியோட்ட நிலையைப்பார்க்க
   வெகுதூரஞ் சுத்தியின்னம் விபரங்கானேன்
மோகமுடன் பறந்தமனம் அனுவதாக்கி
   மூர்க்கமுடன் பரவெளியை மனவெளியைந்தாக்க
நாசீக மாகவுந்தா னண்டமேவி
   நடுவணையா முச்சிநடு மத்திதானே ௫0
பத்திய மானதிலே முளைத்தலிங்கம
   மகாமேரு வுச்சியிலே வளர்ந்தலிங்கம
சத்தியும் ஆவிடையு மானலிங்கம்
   சஞ்சார சமாதியிலே நிறைந்தலிங்கம்

புத்தியாய் மனதொன்றாய்ப் புகழ்ந்தலிங்கம்
பூவருந் தன்னிலேதான் முளைத்தலிங்கம்
எத்திசையும் புகழ்ந்திடவே வந்தலிங்கம்
ஏகபர மானதொரு லிங்கந்தானே ௫௧

தானென்ற சிறுவீட்டுக் குள்ளேசென்று
தலைமாறிப் போறதொரு வாசியைத்தான்
கோனென்ற பிரமத்தி லடக்கமாகக்
குறித்திடுவாய் மனதடங்கிக் கூர்ந்துபார்க்க
வானென்றிப் போகுமடா பர்ணம்பாணம்
மைந்தனே உண்டிடவே பசிதான்தீரும்
தேனென்ற சட்டைகளுங் கழன்றுபோகும்
தேவனுக்குந் தேவனு யிருக்கலாமே. ௫௨

இருக்கலாம் யெங்கெந்த யுகங்களுக்கும்
ஏகாந்த மானதொரு பிரமந்தன்னில்
பெருக்கவே மனதடங்கி மவுனம்பெத்துப்
பேராசை யாகவுந்தான் பிரமத்துள்ளே
குருக்களைப்போல்அரசனைப்போலிந்திரனைப்போலுங்
குணமான மூவரைப்போற் பிரமத்தூடே
திருக்கெடுத்து யெங்கெந்த அவதாரங்கள்
செய்திடலாம் நிலையறிந்த பெரியோர்தானே. ௫௩

தானவனே யென்குருவே புசுண்டநாதா
தாரணியில் ஜீவஜெந்து அகண்டமெல்லாம்
தோணவே மும்மூர்த்தி யிவர்கள்தானுந்
துடியாகப் பிரமத்தி லடங்குமென்றீர்
கோனவனே பின்னுந்தா னகண்டமெல்லாங்
குறிப்புடனே படைக்கும்வகைக்குறியுஞ்சொன்னீர்
தானவனே மதுவுண்கச் சொன்னீரையா
சத்தியமா யதின்விபரஞ் சாற்றுவீரே. ௫௪

சாற்றுகிறே னென்மகனே வாசிநாதா
சத்தியமா யண்டத்திற் செல்லும்போது
போற்றுகிற அக்கினியும் பிரவேசித்துப்
புலன்களைந்துரு சேர்ந்ததிறற் போதமாகும்
மாற்றிலையும் அதிகமடா வுன்றன்தேகம்
மைந்தனே அபுரூப மாகுமப்பா
வாற்றியெ நிழற்சாய்கை யற்றுப்போகும்
வலுத்துதடா காயசித்தி யாச்சுப்பாரே. ௫௫

ஆச்சென்று அபுரூப மானபோது
அஷ்டமா சித்திவகை யெட்டுமாகும்
மூச்சொன்றி லடங்கிப்போம் பிரமத்தூடே
முன்னணியும் பின்னணியு மொன்றாய்ப்போகும்
காச்சென்று காச்சிவிடு மவுனங்கண்டு
கலைமாறி நின்றிடுமே கனகபீடம்
நீச்சொன்று மில்லையடா வுன்னைக்கண்டால்
நிலைத்துதடா சமாதியென்ற மார்க்கந்தானே. ௫௬

மார்க்கமுடன் தவசுநிலை யறியாமற்றான்
மனந்தளர்ந்து திரிவார்கள் லோகத்துள்ளே
ஏர்க்கமுடன் முப்பதுக்குள் மவுனங்கண்டு
இளவயசா யிருப்பார்கள் பெரியோர்மைந்தா
காக்கவே சற்குருவின் பாதங்கண்டு
கருணை யுடன் அவர்பதத்தை வணங்கிப்போற்றி
தீர்க்கமுடன் பிரமத்தில் மனந்தான்செல்ல
ஜீவனுக்குச் சிவனா யிருக்கலாமே. ௫௭

இருக்கலாஞ் செடிபூடு கற்பமில்லை
    யேகாந்த மானதொரு பிரமந்தன்னில்
உருக்கியே மனதடங்கிப் பார்க்கும்போது
    உத்தமனே காயமது வுறுதியாச்சு
மருக்கியே திரியாமல் மதம்பேசாமல்
    வண்டரோ டிணங்கியடா மருவிடாமல்
குருக்கியே கோளரிடஞ் சேர்ந்திடாமற்
    குருபாதங் கண்டுமிகப் பணிந்துபாரே.   ருஅ

பாரென்று சொன்னதெஞ் ஞானமூர்த்தி
    பரத்தினுட அடிமுடியும் பகர்ந்துசொல்லும்
சீரென்று சொற்பனங்க ளதிகமாகத்
    திடப்படவே காணுமிடந் தீர்க்கஞ்சொல்லும்
காரென்று மனம்பிறந்த இடந்தான்சொல்லுங்
    கதிர்மதியுஞ் சுத்திவரு மார்க்கஞ்சொல்லும்
வீரென்று உயிர்பிறந்த யிடந்தான்சொல்லும்
    வெற்றிபெற இந்தவகை விளம்புவாயே.   ருகூ

வாயாலே சொல்லுகிறேன் மகனேகேளு
    மகத்தான பிரமத்தின் பாதந்தன்னில்
ஓயாமல் முன்சொன்ன நரம்புபின்னி
    உத்தமனே ரவிமதியுஞ் சுத்தியாடும்
மாயமடா வாசியுந்தான் நடுவேநின்று
    மார்க்கமுடன் சுழுத்தியிடம் மனந்தான்சென்றால்
காயான சுழுத்தியென் றிதற்குநாமம்
    கண்டுபார் கண்டுகொள்ளப் போதந்தானே.   கூ0

தாமென்ற பலரூப மதிக்கநாளும்
தன்னுடைய தேவதைபோற் பின்னுங்காட்டும்
உமையென்ற பெண்ணைப்போ லுன்னைக்கூடி
உத்தமனே சையோகஞ் செய்தாப்போலே
தேனென்று மயக்கிவைக்குஞ் சுழுத்தியாலே
தித்திப்புப் போலேதான் ருசிகாட்டுங்
கோவென்ற குருவருளைப் பணிந்துகொண்டு
குறிப்பறிந்து பூரணத்தின் நிலையைப்பாரே. ௬௩

நிலையார்தசமுத்திரமே சுழுத்தியாச்சு
நின்றிலங்கும் வாசியைத்தான் வெளியிற்சேரு
தலையான அக்கினியை அப்படியேசேரு
சத்தியமாய் ரவிமதியைக் கூடச்சேர்த்து
மலையாமல் யேகபரா பரனேயென்று
மனதடங்கி அண்டவுச்சி தன்னைப்பார்க்க
அலையாது மனந்தானும் பரத்திற்சென்று
ஆகாச வீதிவழி யாட்டும்பாரே.

ஆட்டுமடா ஆசையற்று ரோஷமற்று
அன்னைசுற்றந் தனைமறந்து அகண்டமேவும்
பூட்டுமடா நவத்துவா ரங்கள் தன்னைப்
பொறிகளைந்துஞ் சேருமடா புனிதமாகக்
காட்டிலென்ன நாட்டிலென்ன மவுனங்கண்டால்
காமதேன் கற்பகமும் உனக்கேசித்தி
வீட்டிலே தீபம்வைத்தாற் பிரகாசிக்கும்
வெளியேறி னற்றீபம் விழலாய்ப்போமே. ௬௫

போமடா புத்திசித்தம்ள ன்றதாக்கிப்
  புசுண்டனென்று பேரெடுத்துப் புவனந்தன்னில்
ஆமடா வடசாளி மைந்தனென்றும்
  அருமையாங் கன்னியுட மைந்தனென்றும்
நாமடா ஐந்துபேர் தன்னிலேதான்
  நாட்டமுடன் முன்பிறந்தேன் நான்தானமைந்தா
வாமடா சாண்முழத்திற் காட்சிபார்க்க
  வஸ்துவுந்தான் யீஸ்பரனு ரென்றூர்பாரே. சுச

பாரப்பா யென்குலந்தான் சொல்லக்கேளு
  பார்தனிலே பிரமனுட விந்துவாலே
ஆரப்பா பிறந்துவிட்டோம் ஐந்துபேரும்
  ஆகாச அண்டமதை யடுத்தேசென்றேன்
நேரப்பா வெகுகோடி காலம்வாழ்ந்தேன்
  நிஷ்டையிலே மனந்தவறு திருந்துகொண்டேன்
வீரப்பா பேசுவர்கள் லோகத்தோர்கள்
  விட்டவிடந் தொட்டவிடம் விரும்பிக்காணே. சுரு

காணப்பா ஜாதிகுலம் யெங்கட்கில்லை
  கருத்துடனே யென்குலஞ்சுக் குலந்தான்மைந்தா
தோணப்பா தோணுமற் சாதிபேதஞ்
  சொல்லுவான் சுருக்காகச் சுருண்டுபோவான்
வீணப்பா பிரமத்தில் ஆதிகாலம்
  வீரமுடன் பிறந்துதடா உயிர்களெல்லாம்
நானப்பா அப்படியே உதித்தேன்முன்னே
  நன்றாக வுதித்தவிடம் நாடினேனே. சுசு

நாடியே வுதித்தயிடம் அறியாத்தோஷம்
நடுவாக வந்தயிடம் பாராத்தோஷம்
கூடியே பிறந்தயிடங் காணுத்தோஷம்
குருபரனை நிந்தனைகள் செய்ததோஷம்
வாடியே வஸ்தோடே சேராத்தோஷம்
வம்பரோ டிணங்கியே திரிந்ததோஷம்
கூடியே வுறவற்று யிருந்ததோஷம்
கும்பிடுங்கற் சிப்பியையும் அறியான்பாவி. ௬எ

அறியாத பாவிக்கு ஞானமேது
ஆறுமுகன் சொன்னதொரு நூலைப்பாரு
பரிபாஷை யாகவுந்தான் சொல்லவில்லை
பராக்கிரமம் யென்னுடைய நூலைப்பாரு
விரிவாகச் சித்தர்சொன்ன நூலையெல்லாம்
வீணாக மறைப்பாகச் சொன்னாரையா
குறியான அண்டமதை யொளித்தேவிட்டார்
கூறினார் வெவ்வேறாய்க் குற்றந்தானே. ௬அ

குற்றமது வையாமல் அண்டத்தேகிக்
கூறாத மந்திரத்தின் குறியைப்பார்த்துச
சித்தமொன்றாய் அந்திசந்தி யுச்சிக்காலம்
தேவனுக்கும் பூசைசெய்து தெளிவுபெற்று
குற்றமது வையாமல் மனதன்பாலே
குருபரனை நோக்கியடா தவமேசெய்து
பற்றாசை வைத்துமிகப் பார்க்கும்போது
பராபரையுங் கைவசமா யாகுவாளே. ௬௯

ஆருவா ளந்திசந்தி யுச்சியென்றால்
அப்பனே ரவிமதியுஞ் சுடர்மூன்றாகும்
ஏகுவாய் மூன்றுமொன்றாய்ப் பின்னலாகி
யிருந்திடமே பிர்மாண்ட நிலையதாகும்
போகுமே நீசெய்த காமமெல்லாம்
புவனைதிரி சூலியுட கிருபையாலே
வாகுமே வழியோடே சேர்த்தாயானால்
வாணியுந்தான் நாவில்நடஞ் செய்வாள்பாரே. ௭௦

பாரடா வாணியுந்தா னிருந்தவீடு
பாலகனே சொல்லுகிறேன் பண்பாய்க்கேளு
ஆரடா அண்ணாக்கின் கொடியினூடே
அண்டத்தைப் பத்தியடா விழுதுபோலே
நேரடா நரம்பதுதான் பொருந்திநிற்கும்
நிலையான அக்கினியின் மத்திதன்னில்
வீரடா அதுவழியே அருள்தான்பாய்ந்து
விண்ணுலகில் வேணதமிழ் சொல்லுவாளே. ௭௧

சொல்லுவா ளனந்தமறை வேதமெல்லாம்
சுருதியடா முடிந்தெழுந்த பிர்மத்தாலே
வெல்லுவார் தனையறிந்த பெரியோரெல்லாம்
வீராண்மை பேசார்கள் மவுனமாகி
அல்லுபக லற்றதொரு பிரமந்தன்னை
ஆரறிவா ருலகத்தி லையாபாரு
சொல்லடங்கு மிடந்தனையுங் கண்டுதேறி
சூஸ்திரமாய்க் கல்லுப்பு வாங்குவாங்கே. ௭௨

வாங்கியே அண்டத்தில் மூளைசேர்த்து
வளமாக வப்பிலையும் பிசறிமைந்தா
தாங்கியே திருகுகள்ளிக் குள்ளேவைத்துக்
தமர்வாயைத் தான்மூடிச் சாபாதீர்த்து

ஓங்கியே திங்களுந்தான் மூன்றுசென்றால்
உத்தமனே கள்ளியைத்தான் தரித்துக்கொண்டு
சாங்கமினிச் செய்யாமற் சீலைமண்ணுஞ்
சத்தியமாய்ச் செய்தபின்பு உலர்த்திப்பாரே. எ௩

பாரப்பா வுலர்ந்தபின்பு எடுத்துமைந்தா
பக்திபுடன் கெஜபுடத்திற் போட்டுப்பாரு
ஆரப்பா ஆரவைத்து யெடுக்கும்போது
அருணனிறம் போலிருக்குஞ் செந்தூரந்தான்
நேரப்பா அணுப்போலே சரக்குக்கெல்லாம்
நிச்சயமாய்ப் பூசியுந்தான் புடத்திற்போடு
வீரப்பா நீறுமடா நவலோகந்தான்
வேதையென்ற வித்தையெல்லாங்கைக்குள்ளாச்சே.

ஆச்சடா வுடம்பிலுள்ள வியாதியெல்லாம்
அணுப்போல வுண்டிடவே பறந்துபோகும்
வாச்சடா தேகசித்தி யதிகமாச்சு
வஸ்துடனே கூடியுந்தான் வாழூலாச்சு
மூச்சடா தலைப்பிண்டங் கொடியுமாவும்
முத்தியடா வாங்கியபின் தயிலம்வாங்கு
ஏச்சடா தரியாமல் சூடன்சேர்த்து
இன்பமுடன் வஸ்துவையும் பூசைசெய்யே. எ௫

பூசையடா செய்துமிகப் பதனம்பண்ணு
புத்திரனே பேய்ப்பீர்க்குத் தயிலம்வாங்கு
ஆசைபுல்லா மணக்கதுவு மதுபோல்வாங்கு
அப்பனே கேசரியின நெய்யுஞ்சேர்த்து
ஓசையுடன் தேவாங்கு பித்துஞ்சேர்த்து
வுத்தமனே தலைப்பிண்டந் தயிலஞ்சேர்த்து
பாசையடா பேசாம லரைத்துமைந்தா
பாலகனே சவாதோடு புனுகுசேரே. எ௬

சேரடா அணுப்போலே புருவத்திட்டு
  தீர்க்கமுடன் நீதானுஞ் செல்லும்போது
ஆரடா வுன்னைத்தான் ஆர்தான்காண்பார்
  அண்டமெனும் பிரமத்தி னருளினாலே
நேரடா திகைப்பூடு கொண்டுவந்து
  நிச்சயமாய் முனிசொன்ன தயிலம்விட்டு
வீரடா அரைத்தபின்பு புருவத்திட்டால்
  வேசையர்கள் வெகுபேர்கள் மயங்குவாரே. எஎ

வாரான தில்லைப்பால் கருந்துளசி
  வவ்வாலின் பித்துடனே மந்திப்பித்துஞ்
சீராக முன்சொன்ன கருவைவிட்டு
  திடமாக அரைத்திடுவாய் சாமமொன்று
நேராக அரைத்ததையு மெடுத்துமைந்தா
  நிட்சயமாய்ப் புருவத்தி லிட்டுப்பார்க்க
வீராகப் பாதாளம் பிளந்தேயோடும்
  வேதாந்த சாரணையை விரும்பிப்பாரே. எஅ

பாரடா பரப்பிரமத் தூடேசென்று
  பரிதிமதி அக்கினியும் மூன்றுமொன்றாய்
சேரடா ஆதியுந்தான் எதிரிதன்னை
  நிச்சயமாய்ப் பார்த்திடவே நீறிப்போவான்
கூரடா கோடான கோடிசித்து
  குறித்திடவே ஆகுமடா பிரயத்தாலே
வீரடா யிந்நூலைக் கொடுத்திடாதே
  வெற்றியுடன் யெண்பதுமே விளங்சமுற்றே. எக

காகபுசுண்டர் ஞானம்-அய.
முற்றுப்பெற்றது.

உ

பரமபதிதுணை.

காகபுசுண்டர் உபநிடதம்.

முப்பத்தொன்று.

காப்பு.

ஆதியெனை யீன்றகுரு பாதங்காப்பு
 அத்துவிதப் பிரணவத்தி னருளேகாப்பு
நீதியா மாரூட ஞானம்பெற்ற
 நிர்மலமாஞ் சித்தருட பாதங்காப்பு
சோதியெனப் பாடிவைத்தேன் முப்பத்தொன்றிற்
 றுரியாதீ தப்பொருளைத் துலக்கமாகத்
தீதில்லாக் குணமுடைய பிள்ளையாஞற்
 சிவேச வைக்கியமது தெரியுந்தானே.

தானென்ற குருவினுப தேசத்தாலே
 தனுகரண வவித்தையெல்லாந் தவறுண்டேபோம்
வானென்றசுவ ரனுபவ ஞானமுண்டாம்
 மவுனநிதி யோகத்தின் வாழ்க்கையெய்தும்
நானென்ற பிரபஞ்ச வுற்பத்திக்கு
 நாதாதீ தகயானம் நன்றாய்யெய்தும்
கோனென்ற கொங்கணவர் தனக்குச்சொன்ன
 குறிப்பான யோகமிதைக் கூர்ந்துபாரே.

பாருநீ பிரமநிலை யார்தான்சொல்வார்
 பதமில்லை யாதெனினும் பவ்யமில்லை
சேருமிந்தப் பிரமாணந் தானுணர்ந்து
 தெரிவிக்கப் படாதருளிற் சிவசொரூபம்

ஊருகின்ற காலத்ர யங்களாலே
உபாதிக்கப் பரதத்வ முற்பத்திக்கும்
சாருமிந்த வுபாதான காரணத்தின்
சம்பந்த மில்லாத சாட்சிதானே. ௨

சாட்சிசத்தா யதீதகுணா தீதமாகிச்
சட்சுமனத் தாலறியத் தகாது யாதும்
சாட்சியதே யேதுசா தனமுந்தள்ளிச்
சகலவிந்திரி யாமியதாய்ச் சர்வபூத
சாட்சியினை யிவ்வளவவ் வளவாமென்று
தனைக்குறித்து நிர்ணயிக்கத் தகாதுயோகம்
சாட்சியதே ஞாதுர்ஞான ஞேயரூபஞ்
சத்தாதிப்ர மாதிகளைத்தானேசொல்வாம். ௩

சொல்லுமெனக் கேட்டுகந்த மாணாக்காவுன்
தூலகா ரணப்பிரமந் துரியாதீதாம்
அல்லுமல்ல பகலுமல்ல நிஷ்களங்கம்
ஹம்சோகம் அசபாபந் திரத்தியானம்
சொல்லுமவ னேநானென் றபிமானிக்கும்
சித்தவிர்த்தி நிரோதகாமம் யோகத்தாலே
வெல்லறிஞர் பலபோக விர்த்தியோகி
விவேகதியா ஞாதிகளே மேலாம்பிர்மம். ௪

பிர்மசுரோத் ராதிஞானேந் திரியமைந்தும்
பேசுகர்ம வாக்காதியிந் திரியமைந்தும்
கர்மமெனுஞ் சத்தாதி விடயமைந்தும்
கரணாதி நான்குபிரா ணாதியைந்தும்
வர்மமிவை யிருபத்தி னன்குங்கூடி
வருந்தூல சரீரவிராட் டெனவேசொல்லும்
தர்மவத்தை சாக்கிரபி மானிவிஸ்வன்
தனக்குவமை யாங்கிரியா சத்திதானே. ௫

சத்தியுடன் ரசோகுணந்தான் நேத்ரத்தானம்
   தனிப்போக மிதனோடே சார்ந்தவான்மா
வெற்றிபெறும் ஜீவாத்மா அகாரமாச்சு
   விவகார ஜீவனிதை விராட்டென்பார்கள்
வித்தையெனு மவித்தையிலே பிரதிவிம்பம்
   விசாலமிந்தத் தூலசூக்ம விருத்தியாச்சு
தத்தொமசி வாக்கியசோதனையினாலே
   தான்கடந்து சூட்சுமத்திற் சேர்ந்துகொள்ளே. ௬

கொள்ளடா ஞானேந்திரி யங்களைந்து
   கூடினது கர்மேந்திரி யங்களைந்து
தள்ளடா பிராணாதி வாயுவைந்து
   சார்வான மனம்புத்தி தானிரண்டு
விள்ளடா பதினேழு தத்துவங்கள்
   விர்த்தியெனுஞ் சூட்சுமமா மிரண்யகர்ப்பத்
துள்ளடா அபிமானி சைதன்யனாகுஞ்
   சொற்பனா வத்தையெனச் சொல்லுநூலே. ௭

நூலான சாத்மிகமா மகங்காரத்துள்
   நுழைந்தவிச்சா சத்தியல்லோ நுணுக்கமாச்சு
காலான கண்டமெனுந் தானத்துள்ளே
   கலந்திருக்கும் போகமல்லோ யிச்சாபோகம்
நாலான ஆன்மாவே அந்திரான்மா
   ஞாயமிந்தப் படியறிந்தா லுகாரமாச்சு
தூலமெனுஞ் சூட்சுமத்தைக் கடந்துநின்று
   சொல்லுகிறேன் காரணத்தின் சுயம்புதானே. ௮

தானவ்யாக் கிருதமெனுஞ் சரீரத்துக்குத்
தானமதே இருதயமா ஞானசத்தி
வானமதே அகங்காரம் வித்தையாகில்
வருஞ்சுழுத்தி யபிமானி பிராக்ஞனாகும்
கோனிதற்கு ஆனந்த போகமாகுங்
கூடுகின்ற ஆன்மாவே பரமான்மாவாம்
கானிதற்கு பரமான்மா ஜீவனிந்தக்
காரணமே மகாரமெனக் கண்டுகொள்ளே. ௯

கொள்ளுமந்தப் பொருள்தானே சத்துமல்ல
கூறுன வசத்துமல்ல கூர்மையல்ல
உள்ளுநிரா மயமல்ல சர்வமயமல்ல
உற்றுப்பார் மூன்றெழுத்தும் ஏகமாச்சு
தள்ளுகின்ற பொருளல்ல தளளாதல்ல
தானந்த பிரமயிக்யஞ் சந்தானமுத்தி
விள்ளுமிந்தப் படிதானே வேதபாடம்
விசாரணையாற் சமாதிசெய்ய விட்டுப்போமே. ௧0

விட்டுப்போம் சமுசார வியாபாரங்கள்
விடயசுக இச்சைவைத்தால் விவேகம்போச்சு
தொட்டுவிட லாகாது ஞானமார்க்கம்
துரியநிலை நன்றாகத் தோன்றுமட்டும்
எட்டுகின்ற பரியந்தம் கருதிவாக்யத்
தெண்ணமெனுந் தியானத்தா லெய்தும்முத்தி
தட்டுகின்ற ஜீவத்வம் தனக்கில்லாமற்
சமாதியுற்றால் நாமதுவே சாக்ஷாத்காரம். ௧௧

சாக்ஷாதி பிரமத்தால் பூர்வகர்மம்
தத்வாதி வாசனைகள் தானேபோகும்
சூக்ஷாதி பிராந்தியெனும் மாயாசத்தி
தொடராமற் சேர்வதுவே சொரூபஞானம்
தீக்ஷையினாற் பிரமாண்டம் பிண்டாண்டங்கள்
சிருஷ்டிமுதல் யாவற்றுந் தெரியும்நன்றாய்
காக்ஷியென்ன ஏகவஸ்து வொன்றல்லாமற்
காண்பதெல்லாம்வியர்த்தமெனக்கண்டுகொள்ளே.

கண்டுபார் மூடமெனி மஞ்ஞானிக்குக்
கர்த்து ஜீவான்மா பரமான்மாவும்
தொண்டுபண்ணி குருமுகத்தில் விசேடமாகச்
சுருதியெனும் வேதாந்த மப்பியாசித்து
உண்டுமனு பவஞானங் கிர்த்யாகிர்த்யம்
யோகிதனக் கேதேனுந் தேவையில்லை
விண்டுசொல்வோம் நதிகடக்க வோடமல்லால்
விஷயத்தாற் சாதனங்கள் வீணாமென்றே. ௧௩

வீணல்லோ சாதனப்பிர யோஜனங்கள்
மெய்ஞ்ஞான அபரோட்சம் வந்தபோது
வீணல்லோ வேதபா டத்தினிச்சை
வியோமபரி பூரணத்தில் மேவிநின்றால்
வீணல்லோ இருட்டறையிற் பொருளைக்காண
விளக்கதனை மறந்தவன்கை விடுதல்போலும்
வீணல்லோ தியானதா ரணைகளெல்லாம்
மெய்பிரகா சிக்கும்வரை வேணுந்தானே. ௧௪

வேணுமென்று லெள்ளுக்கு ளெண்ணெய்போலும்
வித்தினிடத் தடங்கிநின்ற விருட்சம்போலும்
காணுகின்ற பூவினுறை வாசம்போலும்
கன்றாவின் பாலினுள்ள நெய்யைப்போலும்
தோணுமயில் முட்டையின்மேல் வர்னம்போலும்
தூலமதிற் சூட்சமந்தான் துலங்கிநிற்கும்
ஆணவத்தாற் சாதனத்தை மறந்தாயானால்
அபரோட்ச ஞானமுத்தி யரிதுதானே. ௧௫

அரிதில்லை பிரமவியா கிருதஜீவ
னயிக்யமெனுஞ் சந்த்யான மப்யாசித்துச்
சுருதிகயிற் றால்மனமாம் யானைதன்னைச்
சுருக்கிட்டுச் சிக்கெனவே துறையிற்கட்டிக்
குருவுரைத்த சிரவணத்தின் படியேநின்றால்
குதியாகு பிரயஞ்ச கோட்டிற்றானும்
திரிவதில்லை திரிந்தாலும் மதமீறாது
ஜீவனை ராக்யமெனுந் திறமிதாமே. ௧௬

திரமென்ன ஹம்சோகம் மந்த்ராதீதம்
திருசியசூன் யாதிகளே தியானமாகும்
சரமென்ன சாக்ரசத்தா வவித்தைசூன்யம்
சாதனையே சமாதியெனத் தானேபோகும்
வரமென்ன விபரீத விர்த்திமார்க்கம்
வாசனையே சாதனமாய் வகுத்துக்காட்டும்
அரமென்ன இதையறிந்தால் யோகியாவான்
அஞ்ஞான மவரிடத்தி லணுகாதென்னே. ௧௭

என்னவே அஞ்ஞானி யுலகாசாரத்
திச்சையினுற் றர்மார்த்த வியாபாரங்கள்
முன்னமே செய்ததின்பின் மரணமானுல்
மோட்சமதற் கனுபவத்தின் மொழிகேட்பீரால்
வின்னமதா யாங்கார பஞ்சபூத
விடயவுபா திகளாலே மேவிக்கொண்டு
தன்னிமையா யிலிங்கசரீ ரத்தோடொத்துச்
சதாகாலம் போக்குவரத் தாகுந்தானே. க௮

தானிந்தப் படியாகச் சீவரெல்லாஞ்
சகசபிரா ரத்வவசத் தாகினுர்கள்
ஏனிந்தக் கூரபிமா னத்தினுலே
இத்தியாதி குணங்களெலாம் வியாபிக்கும்பா
வானிந்து போன்மெலிந்து வளர்ந்துபோகும்
வர்த்திக்கு மஞ்ஞானம் மாற்றவேண்டி
நானிந்தப் பிரமவுபா சனையைப்பற்றி
நாட்டம்வைத்தோ மவித்தையெலாம் நாசமாச்சே.

ஆச்சப்பா எத்தனையோ கோடிகாலம்
அந்தந்தப் பிரளயத்துக் கதுவாகநின்றேன்
மூச்சப்பா வோடவில்லை பிரமாதீத
முத்திபெற்றேன் பிரமாண்ட முடிவிற்சென்றேன்
சூச்சமப்பா வற்றுபிர்ம சாக்ஷாத்காரம்
குருபாத மாகியகோ சரமாய்நின்றேன்
பேச்சப்பா சராசரங்க ளுதிக்கும்போது
பின்னுமந்தப் புசுண்டனெனப் பேர்கொண்டேனே

பேர்கொண்டேன் சொரூபசித்தி யனேகம்பெற்றேன்
பெரியோர்கள் தங்களுக்குப் பிரீதியானேன்
மேர்கண்டே னுயிரத்தெட் டண்ட்கூட
வீதியெல்லாமோர்நொடிக்குள்விரைந்துசென்றேன்

தார்கண்டேன் பிருதிவியின் கூறுகண்டேன்
சாத்திரவே தங்கள்வெகு சாயுங்கண்டேன்
ஊர்கண்டேன் மூவர்பிறப் பேழுங்கண்டேன்
ஓகோகோவிதுவெல்லாம் யோகத்தாட்டே. உக

யோகத்தின் சாலப்ப நிராலம்பந்தான்
உரைத்தாரே பெரியோர்க ளிரண்டாமென்று
ஆகமத்தின் படியாலே சாலம்பந்தான்
அநித்யமல்ல நித்தியமென் றறையலாகும்
சோகத்தைப் போக்கிவிடும் நிராலம்பந்தான்
சூன்யவழிப் பிராயமதே சொரூபமுத்தி
மோகசித்த விருத்திகளைச் சுத்தம்பண்ணி
மும்மூட்சு பிர்ம்மயிக்ய மோட்சமென்னே. உஉ

மோட்சசாம்பி ராச்சியத்தில் மனஞ்செல்லாத
மூடர்களுக் கபரோட்சம் மொழியலாகா
சூட்சமறிந் தாலவனுக் கனுசந்தானம்
சொரூபலட்ச ணந்தெரியச் சொல்லலாகுந்
தாட்சியில்லை சாதனைச் சட்டியத்தில்
சட்சேந்த்ரி யாநாதா தீதமாகும்
மூச்சுலயப் படுவதல்லோ பிரமநிட்டை
மூலவிந்து களாதீத மொழியலாமே. உ௩

மொழிவதிலே அகாரமெனும் பிரணவத்தின்
மோனபிரா ணதியதே நாதமாச்சு
தெளியுமிந்த ஓங்காரத் தொனிவிடாமற்
சிற்ககனத் தேலயமாய்ச் சேர்க்கவேணும்
ஒளிதானே நிராலம்பம் நிர்விசேடம்
உத்கிருஷ்ட பரமாத வுபகாரஸ்தன்
வெளியோடே வெளிசேர்ந்தால் வஷ்துவாச்சு
விரோதசத் ராதியெலாம் விருததமாச்சே. உ௪

விருத்தமா மனுதியெனும் பிராரர்த்வகர்மம்
விஷயாதி பிரபஞ்சவிஷ் மங்களெல்லாம்
ஒறுத்தவனே யோகியென்பா னவனொருடன்
உலகமெலாந் தானவ துண்மையாகும்
நிறுத்தவென்றால் நாசிகாக் கிரகவான்மா
நிலைபுருவ மத்தியிலே நிஷ்டனாகிக்
கருத்தழிந்து நின்றவிடம் சாக்ஷாத்காரம்
கண்மூக்கு மத்தியிலே கண்டுபாரே. உ௫

பார்பதற்கு நீண்டதுவாய் குறுகிவட்டம்
பரிதிமதி யுதயமெனப் பளிங்காகாசம்
தாப்பதற்கு மூன்றுசுழி பின்னைநிற்கும்
சாக்கிரத்தி னடையாளந் தாக்கிப்பாரு
சேர்ப்பதற்குச் சுழிமுனையென் றிதற்குநாமம்
திரிகோணக் குண்டலியே சிவசொரூபம்
காப்பதற்கு நடுநாடி யூடேசென்று
கால்நிறுத்திப் பிடரிவழி கண்ணைப்பாரே. உ௬

கண்ணான பிடரிமுது கோடுரந்த்ரம்
கால்கூட்டிப் பார்த்தாலே தலைமேலாகும்
விண்ணான பெருவெளிக்கு லீனமானால்
விமோசனமாம் நிராலம்ப மெனத்தான்சொல்லும்
ஒண்ணான யோகமல்லோ ... தநிஷ்டை
உபதேசம் பெற்றவர்க்கே உண்மையாகும்
அண்ணாந்து பார்த்திருந்தால் வருமோஞானம்
அசபாமந் திரத்தியானம் அறைகிறேனே. உ௭

அறைகிறேன் அசபையெனும் பிராணன்பாவை
அகண்டபரா பரத்தினுள்ளே ஐச்யனுசெய்ய
குறைவில்லை ஓங்கார மூலவட்டக்
குண்டலியாய் நின்றிடத்திற் குணநிதந்தான்

நிறைகிறேன் நாசிகா ரந்த்ர வாயு
 நீக்காம லேகமாய் நிர்ணயித்துப்
பறைகிறே னட்சரசா தனமுந்தள்ளிப்
 பந்தமற்ற மகாமோட்சப் பதிபெற்றேனே. ௨௮

பதிபுருவத் தடிமுனைக்கீ ழுண்ணுக்கென்னும்
 பவளநிறம் போன்றிருக்குந் திரிகோணந்தான்
துதிபெறுசிங் குவையுபஸ்த சுகந்தியாக
 சுபாவசா தனையினால் மவுனமாச்சு
விதிவிகித பிராரத்வ கர்மம்போச்சு
 விடயபோ கத்தினிச்சை விட்டுப்போச்சு
மதியெனுமோர் வாயுவது அமிர்தமாச்சு
 வஸ்துவதே காரணமா மகிமையாச்சே. ௨௯

மகிமையென்று யோகசா தனையினாலே
 மனாகாச நிருவிகற்ப வாழ்க்கையாச்சு
அகமகமென் றுணவத்தை நீக்கலாச்சு
 அத்துவித பிரமசித்தா னந்தகாரம்
சகளாதீ தங்கடந்து களாதீதத்தில்
 சாதித்தேன் தன்மயமாய்ச் சார்ந்துபோச்சு
பகலிருளில் லாதவெளிக் கப்பாலாச்சு
 பந்தமற்ற மகாமோக்ஷ பதம்பெற்றேனே ௩0

பெற்றதனைச் சொல்லிவிட்டேன் வடநூல்பாஷை
 பிரித்துமுப்பத் தொன்றினிலே பிரமஞானம்
தத்துவத்தைச் சொல்லிவைத்தேன் யோகியானால்
 சாதனைசெய் வானறிவான் சைதன்யத்தில்
முத்தியடை வானதிலே நிருந்தஞ்செய்வான்
 மும்முட்சுத் துவமறிந்த மூர்த்தியாவான்
நித்யமெனு முபநிடதப் பொருள்தான்சொல்லும்
 நிலவரத்தால் யோகநிஷ்டை நிறைந்துமுற்றே. ௩௧

காகபுசுண்டர் உபநிடதம்-௩௧

முற்றுப்பெற்றது.

உ

பரமபதிதுணை.

காகபுசுண்டர் காவியம்.

முப்பத்திமூன்று.

காப்பு.

கணபதியே அடியாகி யகிலமாகிக்
　காரணத்தின் குருவாகிக் காட்சியாகிக்
குணபதியே கொங்ணைநமின்னாள் வெள்ளைஞானக்
　குருநிலையா யருள்விளங்குங் கொம்பேஞானக்
கனவிலேயும் நினைவிலேயும் ஒளியாய்நின்ற
　காரணத்தின் வடிவாகிக் கருத்துள்ளாகிப்
பணியரவம் பூண்டசிவ வாசிநேர்மை
　பாடுகிறேன் காவியந்தா னெண்ணிப்பாரே.

நூல்.

எண்ணியெண்ணிக் காவியத்தை யெடுத்துப்பாரு
　எந்நேரங் காமசிந்தை யிதுவேநோக்கும்
பண்ணிபண்ணி பலகுட்டி போட்டாலென்ன
　பதியானைக் குட்டியொரு குட்டியாமோ
சண்ணியுண்ணி யிந்நூலை நன்றாய்ப்பாரு
　சக்கரமு மக்கரமும் நன்றாய்த்தோணுந்
தண்ணிதண்ணி யென்றலைந்தாற் றாகம்போமோ
　சாஸ்திரத்தி லேபுகட்டித் தள்ளியேறே. க

புகட்டினாள் தசதீட்சை மகிமைதன்னைப்
　பூரணப்பா லெனக்களித்து அகண்டந்தோறும்
சகட்டினாள் சகலசித்து மாடச்சொன்னாள்
　சந்திரபுஷ்கரணிதனில் தானஞ்சொன்னாள்
பகட்டினா னுலகமெல்லாம் முச்கோணத்திற்
　பரஞான சிவபோதம் பண்பாய்ச்சொன்னாள்
அகட்டினா னவர்களை யின்றாளம்மன்
　அந்தருமை சொல்லவினி யடிதான்கேளே. உ

கேளப்பா யீசனொரு காலந்தன்னிற்
கிருபையுடன் சபைகூடி யிருக்கும்போது
வாளப்பா மாலயன்றன் முகத்தைநோக்கி
வந்தவா றெவ்வகையோ சென்றதேதோ
கொளப்பா ஜெயகால லயம்தானெங்கே
குருநமசி வாயமெங்கே நீங்களெங்கே
ஆளப்பா ஐவர்களு மொடுக்கமெங்கே
அறிந்தெனக்கு இன்னவகை யுரைசெய்வீரே. ௩

இன்னவகை யீசரவர் கேட்கும்போது
எல்லோரும் வாய்மூடி யிருந்தாரப்போ
சொன்னவகை தனையறிந்து மார்க்கண்டேயன்
சொல்லுவான் குழந்தையவன் கலகலென்ன
அன்னை தனை முகம்பார்த்து மாலைநோக்கி
அரிகரி யீசர்மொழிக் குரைநீர்சொல்வீர்
பின்னைவகை யாருரைப்பார் மாயைமூர்த்தி
பேசாம லிருந்துவிட்டா லொழிவாரெங்கே. ௪

எங்கையென்று மார்க்கண்ட னெடுத்துச்சொல்ல
வென்னசொல்வா ரேகவெளிச் சிவனைநோக்கி
கங்கைதனைப் பூண்டோனே கடவுளோனே
காரணமே பூரணமே கண்ணேமின்னே
சங்கையினி யேதறிவேன் மகுடச்சோதி
சந்திரனைப் பூண்டிருந்து தவம்பெற்றோனே
மங்கையிடப் பாகம்வைத்த மகுடத்தோனே
மகாமுனிகள் ரிஷிகள்சித்தர் அறிவார்காணே. ௫

அறிவார்கள் ரிஷிகள்சித்தர் முனிவோரையா
அரகரா அதுக்குக்கோ ளாரென்றாக்கால்
பொறியாகம் புசுண்டமுனி சொல்வாரையா
போயழைக்கக் கோளாறு வசிஷ்டராகும்

நெறியாக இவ்வகைநா னறிவேனையா
நிலைத்தமொழி புசுண்டரலால் மற்றோர்சொல்லார்
புரிவாறு மிவ்வளவென் றுரைத்தார்பாயன்
பொருள்ஞானக் கடவுளப்போ மகிழ்ச்சிபூண்டார்
மகிழ்ச்சியுடன் மார்க்கண்டா வாராய்கண்ணே
வரலாறு நீயெனமா யறிவாய்சொல்லாய்
சுகட்சியுடன் கருதிப்பார் யுகங்கள்தோறு
சூட்சமிந்த மாலோன்றன் வயிற்றிற்சேர்வேன்
அகட்சியுடன் ஆலிலைமே லிருப்பாரையா
அப்போது இவரிடத்தி லெல்லாஞாயம்
இகழ்ச்சியுட னிவற்குப்பின் னெவரோகாணேன்
இவ்விர்த்தை நானறிவே னவரைக்கேளீர். ௭

கேளுமென்றான் மார்க்கண்டன் சிவன்தானப்போ
கிருபையுட னிவ்வளவு மறிவாயோடா
ஆளுகின்ற யீசனுநா மறியோமிந்த
அருமைதனை நீயறிந்தா யருமைப்பிள்ளாய்
காளகண்டர் யாயோனைச் சொல்வீரென்றார்
கருவேது நீயறிந்த வாறுமேது
பாளுகின்ற முப்பாழுந தாண்டிநின்ற
பரஞான சின்மயமின் பகர்ந்திடோ. ௮

பாமான பரமகயி லாசவாசா
பார்த்திருப்போ மாலிலைமேற் பள்ளியாகி
தரமான புசுண்டமுனி யந்தவேளை
சக்கரத்தைப் பிரளொட்டார் தவத்தினாலே
துரமாக வெவ்வாறோ திரும்பப்போவார்
சூட்சமதை நாமறிவோம் பின்னேதோதான்
வரமான வரமளித்த ஞானவாழ்வே
வசிஷ்டர்போ யழைத்துவரத் தருமென்றாரே. ௯

தருமென்ற வார்த்தைதனை யறிந்துயீசர்
வமான வசிஷ்டரேநீர் புசுண்டர்ஜாகை
அகமகிழ வங்கேகி யவற்குரைத்து
அவரையிங்கு சபைக்கழைத்து வருவாயென்ன
ஜெகமான ஜெகமுழுது மாண்டஜோதி
திருவடிக்கே நமஸ்கரித்துத் திரும்பினார்பின்
உகமானந் தனையறிந்தும் அரனார்சொன்ன
உளவுகண்டார் புசுண்டரெனுங் காகந்தானே ௧0

காகமென்ற வேஷமதாய் விருட்சமீதிற்
காத்திருந்தார் வசிஷ்டர்வரக் கண்டார்நாதன்
ஏகமதா யொட்டான வசிஷ்டரேநீர்
எங்குவந்தீர் வாருமென்று இடமுமீயத்
தாகமுடன் யீசனும்மை யழைக்கச்சொன்னார்
சங்கதியைத் தங்களிடஞ் சாற்றவந்தேன்
பாகமுடன் எட்டான விபரந்தன்னைப்
பத்துமெய்ஞ் ஞானபெரு ளருள்பெற்றோரே. ௧௧

பெற்றோரே யென்றுரைத்தீர் வசிஷ்டரேநீர்
பிறந்திறந்து எட்டாங்காற் பிறந்துவந்தீர்
சத்தான சத்துகளு மடங்குங்காலம்
சக்கரமுந் திரும்பிவிட்டாற் சமையம்வேறும்
சித்தான ஞ்சவர்க ளொடுங்கும்போது
சேரவே ரிஷிமுனிவர் சித்தரோடு
முத்தாகப் பஞ்செழுத்தி லொடுகமாவார்
முத்துமணிக் கொடியின்அருள் முளைத்திட்டீரே. ௧௨

முளைத்திட்ட ரித்தோடே யெட்டுவிசைவந்தீர்
முறையிட்ட ரிவ்வண்ணம் பெருமைபெற்றீர்
களைத்திடப் போகாதீர் சொல்லக்கேளும்
கண்டமதில் விஷம்பூண்டார்க் கனுவலென்ன
கிளைத்திடப் போனக்கால் மறந்துபோவார்
கிளர்நான்கு யுகந்தோறு மிந்தச்செய்கை
பிழைத்திட்டுப் போவமென்று லங்கேபோவோம்
பேய்பிடித்தோர் வார்த்தைசொல நீர்வந்தீரே. ௧௩

வந்தீரே வசிஷ்டரேநீ ரின்னங்கேளு
வளமைநான் சொல்லிவந்தேன் வேஷம்நீங்கி
இந்தமா மரக்கொப்பி லிருந்தேனிப்போ
யிதுவேளை யெவ்வளவோ ஜனமோகாணும்
அந்தமோ ஆதியோ யிரண்டுங்காணு
ரவர்களெல்லாம் ரிஷியோகி சித்தராணர்
சந்தேக முமக்குரைக்கப் போகாதையா
சாமிக்கே சொல்லுமையா யிதோவந்தேனே. ௧௪

வந்தேனே யென்றுரைத்த வாறுகொண்டு
வசிஷ்டருமே வாயுலர்ந்து காலும்பின்னி
இந்தேனே முனிநாதா சரணங்காரும்
எழுந்துசிவன் சபைநாடி முனிவர்வந்தார்
மைந்தனையே யீன்றருளுங் கடவுள்நாதா
மாமுனிவன் வாயெடுக்கப் புசுண்டர்சொல்வார்
சிந்தனைசெய் யீஸ்பரனே வந்தேனையா
சிவசிவா யின்னதென்று செப்பிடீரே. ௧௫

செப்புமென்ற புசுண்டமுனி முகத்தைநோக்கிச்
சிவன்மகிழ்ந்து யேதுமொழி செப்புவார்கேள்
கொப்புமென்ற யுகமாறிப் பிறளுங்காலம்
குருநமசி வாயமெங்கே பரநாதனெங்கே

அப்புமென்ற பஞ்சகணத் தேவரெங்கே
அயன்மாலும் சிவன்மூவ ரடக்கமெங்கே
ஒப்புமிந்த யுகம்மாறிப் பிறந்ததெங்கே
ஓகோகோ முனிநாதா வுரைசெய்வீரே. ௧௬

உரையென்றீ ருன்றனக்குப் புத்திபோச்சு
உம்மோடே சேர்ந்தவர்க்கும் மதிகள்போச்சு
பரையென்றால் பரைநாடி நிலைக்கமாட்டீர்
பரமசிவன் தானமென்றும் பேரும்பெற்றீர்
இரையென்றால் வாய்திறந்த பட்சிபோலே
எல்லோரு மப்படிக்கே இறந்திட்டார்கள்
நிரையென்ற வார்த்தைகளைச் சொன்னேனானால்
நிசங்கொள்ளா தந்தரங்கம் நிசங்கொள்ளாதே. ௧௭

கொள்ளாமற் போவதுண்டோ மவுனயோகி
கோடியிலே உனைப்போலே ரிஷிபோகாணேன்
உள்ளாக ரிஷியொருவ ரில்லாவிட்டால்
யுகவார்த்தை யாருரைப்பார் யானுங்காணேன்
விள்ளாமற் றீராது முனிவரேகேள்
மெஞ்ஞானப் பரம்புகுந்த அருள்மெஞ்ஞானி
தள்ளாமற் சபையிலுள்ளோ ரெல்லோர்கேட்கச்
சாற்றிடீர் முனிநாதா சாற்றிடீரே. ௧௮

சாற்றுகிறே னுள்ளபடி யுகங்கள்தோறும்
தமக்குவந்து சொல்லுவதே தவமாய்ப்போச்சு
மாற்றுகிறேன் க்ஷணத்தின்முன்னுரைத்துப்போனேன்
வரகாட்ட மெனக்காசசு இனியென்சொல்வேன்
சேற்றிலே நாட்டியதோர் கம்பம்போலத்
திரும்பினது போலாச்சு யுகங்கள்தோறும்
ஆற்றுகிறே னந்தமது ஆகும்போது
அரகரா அந்நேரம் நடக்கைகேளே. ௧௯

கேளப்பா நடந்தகதை சிவமேயுண்மை
கெடியாகச் சக்கரங்கள் திரும்பும்போது
பாளப்பா தசநாதம் மவுனம்பாயும்
பரமான மவுனமது பரத்திற்சாடும்
ஏளப்பா அடுக்குகளும் இடிந்துவீழும்
இருந்தசதா சிவமோடி மணியில்மீளும்
கோளப்பா யிதுகோளு மெவருஞ்சொல்வார்
கோகோகோ அண்டமெல்லாங் கவிழ்ந்துபோமே.

கவிழ்ந்துபோ மப்போது அடியேனங்கே
கருத்துவைத்துத் தியானமொரு தியானமுண்டு
தவிழ்ந்துபோங் காலமப்போ நிறுத்துவேன்யான்
சமையமதி லக்கினிபோல் ஸ்தம்பங்காணுஞ்
சிவந்தவர்னம் நீலவுரு சுடர்விட்டேகும்
சிவசிவா அக்கினிபோற் கொழுந்துவீசும்
நவந்துஅதி னருகேதான் சென்றுநிற்பேன்
நகாரமுத லஞ்செழுத்து வரக்காண்பேனே. உக

காண்பனே நகாரமது மகாரம்புக்கும்
கருத்தான மகாரமது சிகாரம்புக்கும்
தேண்பேனே சிகாரமது வகாரம்புக்கும்
சிவசிவா வகாரமது யகாரம்புக்கும்
கோண்பேனே யகாரமது சுடரிற்புக்குங்
குருவான சுடரோடி மணியிற்புக்கும்
நாண்பான மணியோடி பரத்திற்புக்கும்
நற்பரந்தான் சிவம்புக்குஞ் சிவத்தைக்கேளே. உஉ

கேளப்பா சிவமோடி அண்டம்பாயும்
கிருபையா யண்டமது திரும்பிப்பாயும்
கோளப்பா அண்டமது கம்பத்தூண்தான்
குருவான தசதீட்சை யொன்றுமரச்க

மீனப்பா ஸ்தம்பமது விளங்குஞ்செய்கை
 மேலுமில்லை கீழுமில்லை யானுங்காணேன்
ஆளப்பா நரைத்தமா டேறுவோனே
 அண்ணளவோ யிண்ணளவோ அறிந்திலேனே. ௨௩

அறிந்திலே னென்றுரைத்த புசுண்டமூர்த்தி
 அரகரா உன்போலே முனியார்காணேன்
தெரிந்திலே னென்றுரைத்தால் மனங்கேளாது
 சிவனயந்து கேட்கவும்நீ யொளிக்கவேண்டாம்
பொருந்திலேன் பூருவத்தில் நடந்தசெய்கை
 பூரணத்தா லுள்ளபடி புகழ்ந்துசொல்லும்
பரிந்திலேன் மிகப்பரிந்து கேட்டேனையா
 பழமுனியே கிழமுனியே பயன்சொல்வீரே. ௨௪

பழமுனிவ னென்றுரைத்தீர் கடவுளாரே
 பருந்தீபஸ் தம்பத்தைப் பலுக்கக்கேளும்
குழவுடனே ஸ்தம்பமதில் யானும்போவேன்
 கோகோகோ சக்கரமும் பிரண்டுபோகும்
தழும்பணியச் சாகரங்க ளெங்குந்தானாய்ச்
 சத்தசா கரம்பிரண்டு யெங்கும்பாழாய்
அழகுடைய மாதொருத்தி ஸ்தம்பத்துள்ளாய்
 அரகரா கண்ணாடி லீலைதானே. ௨௫

லீலைபோற் காணுமுகம் போலேகாணும்
 நிலைபார்த்தால் புருடரைப்போற் றிருப்பிக்காணும்
ஆலைபோற் சுழன்றுநிங் கம்பத்துள்ளே
 அரகரா சக்கரங்க ளாறுங்காணும்
வாலைபோற் காணுமையா பின்னேபார்த்தால்
 மகத்தான அண்டமது கோர்வைகாணுஞ்
சோலையா யண்டமதிற் சிவம்தான்வீசும்
 சிவத்திலே அரகரா பரமுங்காணே. ௨௬

பரத்திலே மணிபிறக்கும் மணியினுள்ளே
பரம்நிற்குஞ் சுடர்வீசும் யிப்பாற்கேளு
நிரத்திலே சடமதனில் யகாரங்காணும்
நிக்ஷய்மாம் யகாரமதில் வகாரங்காணும்
வரத்திலே வகாரமதிற் சிகாரங்காணும்
வரும்போலே சிகாரத்தில் மகாரங்காணும்
நரத்திலே மகாரத்தில் நகாரங்காணும்
நன்றுமப் பூமியப்போ பிறந்ததன்றே- உள

பிறந்ததையா யிவ்வளவு மெங்கேயென்றால்
பெண்ணொருத்தி தூணதிலே நின்றகோலம்
சுறந்ததையா மிவ்வளவும் அந்தமாது
சூட்சமதே அல்லாது வேறொன்றில்லை
கறந்ததையா உலகமெல்லாங் காமப்பாலைக்
காலடியிற் காக்கவைத்து சகலஜெந்தும்
இருந்ததையா யிவ்வளவுஞ் செய்தமாது
எங்கையென்று வுன்னிடத்தி லிருந்தாள்கன்னி.

இடப்பாக மிருந்தவளு மிவளேமூலம்
இருவருக்கும் நடுவான திவளேமூலம்
தொடக்காக நின்றவளு மிவளேமூலம்
சூட்சமெல்லாங் கற்றுணர்ந்த திவளேமூலம்
அடக்காக அடக்கத்துக் கிவளேமூலம்
ஐவருக்குங் குருமூல மாதிமூலம்
கடக்கோடிக் கொர்ப்பதனில் நின்றமூலம்
கனனியவள் சிறுவாலை கன்னிதானே. உகூ

கன்னியிவ ளென்றுரைத்தார் புசுண்டமூர்த்தி
கர்த்தனப்போ மனதுசற்றே கசங்கினார்பின்
மண்ணுள்ள தேவர்களும் பிறப்பித்திந்த
மார்க்கத்தி லிருப்பதுவோ மவுனம்பெண்ணே

உன்னிதமா யுன்கருணை யெங்கேகாண்போம்
ஓகோகோ ஐவருந்தான் வணங்கினார்கள்
சொன்னியவள் வாக்குரைக்காள் சிவமேகன்னி
சொலுமுகத்தில் நால்வரும்போய் வணங்கினாரே.

வணங்கியவர் வாய்புதைத்து நின்றார்பின்னே
மாதுகலி யாணியென வசனித்தார்கள்
வணங்கினார் தேவரொடு முனிவர்தாமும்
மற்றுமுள்ள தேவர்களும் நவபடாளும்
வணங்கினா ரஷ்டகெஜந் கிரியெட்டும்
வாரிதியுஞ் சேடனுமா லயனும்மூவர்
வணங்கினார் மிகவணங்கித் தொழுதாரப்போ
வாலையவள் மெய்ஞ்ஞானம் அருளீவாளே ருக

அருளீவாள் சுடிமணியை மாலைபூண்டாள்.
அரகரா சின்மயத்தி னீறுபூசி
பொருளீவா ளவரவர்க்கு ஏவல்சொல்லிப்
பொன்றாத பல்வுயிர்க்கைக் கிடங்கள்வேறாய்த்
தொருளீவாள் சிவயோகந் தெளிவதற்குச்
செயலுறுதி யாகவல்லோ தெரியவேண்டித்
திருளீவாள் தாயான சிறியவாலை
சிவசிவா சூட்சம்பூ ரணமுமுற்றே. ருஉ

பூருவத்தில் நடந்தகதை இதுதானென்று
புகன்றுவிட்டுப் புசுண்டருந்தான்பதிக்குச்சென்றார்
காரணத்தி லேவகுத்தே னிந்தஞானங்
கம்பமணி வாலைசொலுக் கூட்டமப்பா
நாரணத்தில் நின்றிலங்கும் மவுனவாலை
நாட்டினாள் சிவராஜ யோகங்கேளு
ஆரணத்தி பூரணத்தி யருள்மெய்ஞ்ஞானி
ஆதிசத்தி வேதமுத்தி யருள்சொல்வாளே. ருரு

காகபுசுண்டர் காவியம் - ருரு.

முற்றுப்பெற்றது.

காகபுசுண்டர் குறள் - ௧௬.

சின்மயத்தைப் போற்றிச் சிவராஜ யோகத்தில்
நன்மை பராபரத்தை நாடு. ௧
அண்ட முடிமீதி லங்கி ரவிமதியை
கண்டு தரிசித்தாற் கதி. ௨
வலமிடமாய் நின்ற மதிரவியை மாறி
விலகா தடியினிற்பின் வீடு. ௩
அறுபத்து நால்யோக மவ்வளவுந் தள்ளி
யொருபொழுது முண்டுநிலை யோர். ௪
உலகமே மாயமென வுன்மனதிற் கண்டு
நலமாக நாதனடி நம்பு. ௫
சித்தர் பதினெண்மர் செய்கையிற் றேன்றாத
அத்தனருளும் புசுண்டன் யான். ௬
சொன்னே னறிந்து சுகமா யுலகோருக்
கெந்நாளும் வாழ்கவென்றே யான். ௭
கண்ணுண் மணியாகிக் காரணமாய் நின்றான்
மண்ணு முயிர்பதியு மாறு. ௮
விண்டேனே ஞானம் வெளியாக முப்பத்தி
ரண்டி லறிவீர் நலம். ௯
நேத்திரத்தைக் காகம்போல் நிச்சயமாய்நிற்க
ஆத்துமத்தி லானந்த மாம். ௧௦
உலகி லறிந்தோ ரொருநாளு மாளார்
பலநினைவை விட்டுநீ பார். ௧௧
கண்டோருஞ் சொல்லார் கருத்தாற்பெரியோரை
தொண்டுசெய்து பெற்ற சுகம. ௧௨
ஆதியிற் சொன்னவய ரண்டமதையெடுத்து
மாதுசிவன் பூசைசெய்து வை. ௧௩
முப்பொருளைச் சுட்டு முழுதுமே நீறாக்கித்
தப்பாம லுண்டுநிலை சார். ௧௪
யோகமுடன் கற்ப முரைத்தேனீ ரெட்டில்
வேகமுடன் கண்டுணரு வீர். ௧௫
வாசிமுனை மைந்தா மருவு பிரமத்தில்
மோசமவரா தென்குறள் முற்றும். ௧௬

காகபுசுண்டர் குறள்-௧௬ முற்றிற்று.

பரமபதி துணை.

சூரியானந்தர் சூத்திரம்

பதின்மூன்று.

சீர்கொண்ட அருமறையின் பொருளாய்நின்ற
தெட்சணா மூர்த்தியுட பாதங்காப்பு
பேர்கொண்ட சூஸ்திரமே பதிமூன்றுக்குள்
பிரித்துவைப்பேன் பூவழலை பெருமையெல்லாம்
நீர்கொண்ட வூசரத்தின் மகிமைதன்னை
நிசமாகச் சொல்லாமல் மறைத்துப்போட்டார்
ஆர்கொண்ட வேணியனா ருமக்குச்சொன்னார்
ஆத்தாளு மடியேனுக் கறைந்திட்டாளே. க

அறைந்திட்ட வகையேது வுப்பேஆதி
ஆகாச விந்துவினால் ஜெனித்தபிண்டம்
மறைந்திட்ட வுப்பதுவே காரங்காரம்
மண்ணான வுப்பதுவே சாரஞ்சாரம்
கறைந்திட்ட வூசரத்துக் கேற்றவுப்பைக்
காணாமற் போனதினாற் கலக்கமாச்சு
இறைந்திட்ட மலஜலமாய்க் காணலாகும்
இந்தவிரண் டோரிடத்தி லிருக்கும்பாரே. உ

இருக்கின்ற வுப்பினுக்கு மூலாதாரம்
இந்துவொன்று இரவியொன்று வன்னியொன்று
பெருக்கின்ற வீசனுக்குச் சூட்சமுந்தான்
பிரிதிவியே தூலமெனப் பேசலாகும்

கருக்கொண்ட யோனியிலே நாலுபேதம்
கருதையிலே யெழுதோற்றங் காணலாகும்
உருக்கொண்ட ஜீவஜெந்து அனேகமுண்டாம்
உற்றுப்பா ரண்டபிண்ட முண்மைதானே. ௩

தானாக நின்றதுவே பாருமாச்சு
சகலசித்துப் பிரகிருதி யுயிருமாச்சு
வானாகி நின்றதுவே சாட்சியாகும்
மன்னுயிரெல் லாஞ்சோதி மயமுமாச்சு
ஊனாகப் பிறந்தசடம் பிறவாமுத்திக்
குதவியல்லோ பிரகிருதி யோனியோனி
கோனாக நின்றகுரு வுபதேசத்தாற்
குழிபுகுந்து வுப்பெடுத்துக் கொள்ளுவாயே.

கொள்ளுவார் முப்பூவின் முதலாமங்கம்
கூர்ந்துபா ருசரத்தைக் கொள்கிக்கொண்டு
விள்ளுவார் யோனியின் படிவிடாமல்
மேலேற்ற மேலுதவி மேவித்தானற்
றள்ளுவா ரிந்தவுப்பு சிவமுமாச்சு
தருசுப்பு பணவிடையாற் றெருந்தமேற்றித்
தள்ளுவார் பிரளயமோர் கோடிகாலம்
சகலசித்தும் மூலவுப்பு தன்னிலாச்சே. ரு

ஆச்சப்பா மூலவுப்புக் கஞ்சுதீட்சை
ஆதியுப்புக் கப்படியே தீட்சையாகும்
மூச்சப்பா தசதீட்சை யார்தான்செய்வார்
மூலகுரு செய்வார்பின் னார்தான்செய்தார்

ஏச்சப்பா கொங்கணவர் தீட்சைமார்க்கம்
ஏற்றிவிட்டார் முப்பத்தி ரண்டாமென்று
பேச்சப்பா பேசினதி லாவதுண்டோ
பிண்டவுப்புக் கேழுவிதம் பேசலாமே. ௬

பேசுகின்ற வுப்பினுக்கு மேலே அங்கம்
பெருமையுள்ள சித்தர்கள்தான் செய்யுமார்க்கம்
வீசுகின்ற சூத்திரத்தின் துறைகளெல்லாம்
மிருசவில்லை மூன்றுநா லஞ்சாறனும்
பாஷையினா மெசான்றுகள் வெளிதோணாது
பாலனுக்குத் தோன்றுமிந்த நூலைப்பார்த்தால்
கூசல்மிஞ்சிப போடுமென்று என்றன்நூலைக்
குகைக்குள்மறைத் திட்டதினாற் கூறொண்ணாதே. எ

ஒண்ணான நூலாறு மிருநூற்றைந்தி
லோதிவைத்த கருத்தெரியு மிருபத்தைந்திற்
கண்ணாகு மிந்தநூற் பதிமூன்றுக்குள்
கருவையொரு கற்பமுறை காட்டிவைத்தேன்
* வண்ணானை யறியாத பேருக்கெல்லாம்
வாதியென்ற பேரேது வாதமேது
பெண்ணுடன் சுரோணிதமும் விந்துங்கண்டால்
பேரான பூரணத்தின் பெருமைதானே. அ

பெருமையென்ற காயசித்தி பண்ணவிட்டாற்
பேரான அடியோடு முடியும்போச்சு
அருமையென்ற குண்டலிக்குள் வராகிபூசை
அப்பனே கண்டமதி லங்கென் றாணா

புருவமையத் துள்ளேவும் மென்றுகும்பி
 போதமென்ற மவுனவித்தை கைக்குள்ளாச்சு
தருமவித்தை பிரகிருதி மூச்சாடாது
 சகஸ்திரத்தெண் மலர்ப்பதத்திற் சார்ந்துநில்லே. ௯

நில்லாத மூலிகையாற் காயசித்தி
 நிஷ்டைமவு னத்தாலே யோகசித்தி
கொல்லாத மூலமதில் அபானசுத்தி
 கூடாம லிருந்துவிட்டா லேதுமுத்தி
சொல்லாத வீசனுப்பு மதிசூதத்திற்
 சூட்டினேன் வெள்ளையென்ற சூடன்வித்தை
எல்லோரு மிநதவிதம் பாடமாட்டார்
 இதமான சூதகத்தின் வெடியுப்பாச்சே. ௧0

" எண்ணு யிரத்தி லிருநூறு மந்திரம்
அண்ணுவ சொன்னு ரடியே னறிநதேன்•
சொன்னூர் சிவப்பு சோர்பசசை ரூபம்
வண்ணு னறிவான்வகாரத் திரையமே." என்றும்

* திருமூலர் திருமந்திரத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்பார்த்துத் தெளிநதுகொள்ளவும்.

உப்பான வெடியுப்புச் செயநீராலே
 ஒருகோடி வித்தையெல்லா மாடலாகுங்
அப்பான கல்லுப்பு நீரினுலே
 ஆடலாந் துருசினுட அங்கமெல்லாம்
செப்பாத யோனிருது சேநீர்பட்டாற்
 சிவன்வேறு தானுண்டோ யிவனல்லாமல்
தப்பாமற் செய்வதென்ன சவுக்காரந்தான்
 சஷ்டமுதற் பவுரணையுந் தாக்கிப்பாரே; ௧௧

தாக்கிப்பா ராகாசஞ் சருவசாட்சி
சதாசித்தம் அந்தரமே சாடிநின்றால்
நோக்கிப்பார் வாயுலயப் படுவதற்கு
நூதனமாய் வன்னியத்திற் கூடவேணும்
மூக்கிற்ற ளோடுவது பிராணவாயு
மூலமெனும் வளையமது நகாரந்தன்னைத்
தூக்கித்தான் விட்டவர்க்கு யோகமெய்தும்
சூரியா னந்தனிவை சொல்லும்நூலே. ௩௨

செல்வதென்ன ரேசகத்தை வெளிவிடாத
துடியான பூரகத்தைப் பின்னிடாதே
வெல்வதென்ன கும்பகத்தை யடிவிடாதே
மேலேற்று மாத்திரையை மறந்திடாதே
செல்வதென்ன கற்பத்தை மறந்திடாதே
செந்தூரஞ் சேர்க்கையிலே சிதறிடாதே
கொல்வதென்ன அமுர்தயிலே பறக்குமிந்தக்
குளிகைக்குச் சாரணைசெய் குணமாமுற்றே. ௩௩

சூரியானந்தர் சூஸ்திரம்-௩௩ - முற்றிற்று.

ஞானக்கோர்வை மூன்றாம்பாகம் - முற்றிற்று.